தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௩௰	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௫—௮௰௬ சய புரட்டாசி—பங்குனி 1954 செப்டம்பர்—1955 மார்ச்சு.	மலர் ௬—௧௨

பொழில் அன்பர்களுக்கு...

பல்லாண்டுகளாகத் தமிழ்த் தாயின் திருவடிகளுக்குச் செவ்வி தளராமல் இட்டு மகிழ்ந்துவந்த பொழில் இதழ்கள் புரட்டாசித் திங்கள் முதல் இடையீடுபட்டமைக்கு வருந்துகிறோம். பொருள் முட்டுப்பாடு போற்றுவோர் குறைமுதலாகிய வெப்பங்களால் வாடாமல் மலர்ந்துவரும் பொழில் இதழ்கள் அச்சகமாற்றம், ஆணையாளர் ஒப்பம்பெற நீண்டகாலம், முதலிய சூறைக் காற்றால் அலக்கணுற்று இறுதியில் அனைத்தும் ஒன்றாக உருப்பெற்றுத் தமிழ்த்தாயின் பொன்னடிகளைச் சிறப்பிக்க வந்திருப்பதும் தமிழ்த்தாயின் திருவருளேயாம்.

இனிமேற் றொடர்ந்து அதற்குரிய உறுப்புக்களில் வழாமல் பூத்து மணம்வீசித் திங்கள்தோறும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்பர்களும் ஆதரவாளர்களும் மேலும் கையொப்பக்காரர்களைக் கூட்டி இதழ்களின் எண்ணிக்கையைப் பெருக்கும்படியாக அன்புரிமையோடு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தமிழ்ச் சங்கத்தின் தலைசிறந்த திங்கள் இதழாகிய பொழிலுக்குப் பல தமிழறிஞர்களும் வேறு பல கலைவல்லுநர்களும் எழுதிச் சிறப்பிக்கும் கதை, கவிதை கட்டுரை ஆராய்ச்சி வரலாறு நாடகம் முதலிய செய்திகளை மேலும் மேலும் எழுதித் தமிழ்த்தாயின் கருவூலத்தை நிரப்புவார்கள் என நம்புகிறோம். கருத்திலும் எழுத்திலும் கலப்படமிக்கு வெளிவரும் இக்காலத் தமிழிதழ் தோன்றுவதற்குமுன்னர்த் தூய எளிய இனிய செந்

தமிழால் வெளிவந்த நமது பொழிலுக்குக் கால வேறுபாட்டால் தற்கால நடைகளை ஒட்டிச் சிலர் கட்டுரை முதலியன எழுதியனுப் புகிறார்கள். பொழிலுக்குத் தகுதியுடையதென்று கருதும் கட்டுரை முதலியன எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றித் திருவாளர் தமிழவேள், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள் பழைய பொழிலில் வெளியிட்டுள்ள கருத்துக்களை இறுதிப்பக்கத்தில் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

இம்மன்மத ஆண்டு சித்திரை வைகாசி ஆனி இதழ்கள் ஒன்றாக வெளிவந்து பின்னர்த் திங்கள்தோறும் சரித்தகாலத்தில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தற்கால மாணவர் பொதுமக்களுக்கு ஏற்ற உறப்புநலங்களோடு தமிழ் மரபு சங்க மரபுகளுக்கு மாறுபடாமல் புதிய முறையில் வெளியிட எண்ணியுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

பொழிற்றொண்டர்.

கவிமணியவர்களின் மறைவு.

நாஞ்சில்நாட்டு நாகர்கோவிலுக்கருகில் தோன்றி நல்லொ ழுக்கத்தாலும் நாவன்மையாலும் பாவன்மையாலும் பைந்தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு, சந்தமும் கருத்தும் நிறைந்த தண்மையான பாடல்களால் தமிழ்த்தாயை மகிழ்வித்து வந்த மாபெருங் கவிஞரும், மக்கள் மன்றத்தில் கவிமணி என்ற பட்டம் பெற்றவருமான பெருங்கவிஞர் கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை 26—9—'55ல் பூத உடல் நீத்தமை எம்ம னோர்க்கு மட்டுமன்றித் தமிழகத்திற்கே பெரியதொர் ஈடுசெய்ய வியலாத இழப்பாகும். அமைதியும் அருளும் நிறைந்த அன்னா ரின் ஆசிரியத் தொண்டும் கலைத் தொண்டும் கவித்தொண்டும் தமிழகத்தில் அன்பு நீர்பாய்ச்சி அருள்கொடி தோன்றி ஆர்வ மாய்ப் பூத்தகாலைத் தமது முதுமைப் பருவத்தில் திருவாங்கூர் பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்காகத் தொண்டாற்றினார்கள்.

அன்னாரின் ஆவி குளிருப்படியாகத் தமிழகம் யாவும் அவர் வகுத்த நெறி யொழுகுவதோடு அவர் கண்ட கனவையும் நனவாக்கவேண்டியது கடமையாகும்.

அறிவியல் பேராசிரியை மறைவு.

1—3—55-ல் சிறந்த நாவன்மையும் ஆராய்ச்சியறிவும் வாய்ந்த பௌதிகப் பேராசிரியர் திருமதி ஈ. த. இராசேசுவரி அம்மையார் காலஞ்சென்றமை குறித்து மிக வருந்துகிறோம். அன்னாரின் பிரிவு அறிவியல் உலகத்துக்கேயன்றி அருந்தமிழ் இலக்கிய உலகத்துக்கும் உற்றதோர் பேரிழப்பாகும். இயல் பாகத் தமிழ்ப்பற்றுமிக்க நல்ல குடும்பத்தில் தோன்றித் தம் அறிவால் தமிழுக்குச் செய்த தொண்டினை தமிழ் மக்கள் என்றும் மறக்கவியலாது அன்னார் ஆவி ஆண்டவன் திருவடி நீழலில் அமைதியுறுவதாக!

பிரஞ்சிந்திய விடுதலை.

1954 நவம்பர் 1-ஆம் நாள் தமிழ் மக்களுக்குள்ளேயே நெடுங்காலம் அரசியல்காரணமாக இல்லாமலிருந்த ஒற்றுமையை இந்தியக் குடியரசுப் பிரதிநிதி கேவல்சிங்கும் பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதி பியரிலாண்டும் தீர்த்துவைத்துப் பாண்டிச்சேரி முதலிய பகுதிகளைச் சுதந்திரமாக்கியதுபற்றி பெருமகிழ்வுறுகின்றோம். இரு அரசாங்கத்திற்கும் எங்கள் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

19, 19, 20—2—55-ல் சென்னையில் நடைபெற்ற டாக்டர் **உ. வே. சாமிநாத அய்யர்** அவர்களின் **நூற்றுண்டு** விழாவில் பல பெருமக்கள் கூடி அன்னாரின் தமிழ்ப்பணி அறிவு ஒழுக்கம் பற்றி பேசினார்கள். ஒரு காலத்தில் அரசர்களால் மட்டும் தம்புகழ் பாடக்கேட்டு ஆதரிக்கப்பட்டுவந்த தமிழறிஞர்களை இன்று அரசாங்கமும் அறிஞர் உலகமும் பாராட்டும் நிலைக்கு வந்து கொண்டிருப்பது தமிழ்த்தாய்க்கு ஒரு நல்ல எதிர் காலம் உண்டு என்பதை அறிவிக்கிறது. அய்யர் அவர்களால் உயர்ந்த தமிழ்த்தாயின் திருவருளால் அவளால் உயர்ந்த அய்யரின் புகழ் என்றும் நிலைபெற்று வளர வாழ்த்துகின்றோம்.

தமிழால் வெளிவந்த நமது பொழிலுக்குக் கால வேறுபாட்டால் தற்கால நடைகளை ஒட்டிச் சிலர் கட்டுரை முதலியன எழுதியனுப் புகிறார்கள். பொழிலுக்குத் தகுதியுடையதென்று கருதும் கட்டுரை முதலியன எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றித் திருவாளர் தமிழவேள், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள் பழைய பொழிலில் வெளியிட்டுள்ள கருத்துக்களை இறுதிப்பக்கத்தில் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

இம்மன்மத ஆண்டு சித்திரை வைகாசி ஆனி இதழ்கள் ஒன்றாக வெளிவந்து பின்னர்த் திங்கள்தோறும் குறித்தகாலத்தில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தற்கால மாணவர் பொதுமக்களுக்கு ஏற்ற உறுப்புநலங்களோடு தமிழ் மரபு சங்க மரபுகளுக்கு மாறுபடாமல் புதிய முறையில் வெளியிட எண்ணியுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

பொழிற்றொண்டர்.

கவிமணியவர்களின் மறைவு.

நாஞ்சில்நாட்டு நாகர் கோவிலுக்கருகில் தோன்றி நல்லொ ழுக்கத்தாலும் நாவன்மையாலும் பாவன்மையாலும் பைந்தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு, சந்தமும் கருத்தும் நிறைந்த தண்மையான பாடல்களால் தமிழ்த்தாயை மகிழ்வித்து வந்த மாபெருங் கவிஞரும், மக்கள் மன்றத்தில் கவிமணி என்ற பட்டம் பெற்றவருமான பெருங்கவிஞர் கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை 26—9—'55ல் பூத உடல் நீத்தமை எம்ம னோர்க்கு மட்டுமன்றித் தமிழகத்திற்கே பெரியதோர் ஈடுசெய்ய வியலாத இழப்பாகும். அமைதியும் அருளும் நிறைந்த அன்னா ரின் ஆசிரியத் தொண்டும் கலைத் தொண்டும் கவித்தொண்டும் தமிழகத்தில் அன்பு நீர்பாய்ச்சி அருள்கொடி தோன்றி ஆர்வ மாய்ப் பூத்தகாலைத் தமது முதுமைப் பருவத்தில் திருவாங்கூர் பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்காகத் தொண்டாற்றினார்கள்.

அன்னாரின் ஆவி குளிருப்படியாகத் தமிழகம் யாவும் அவர் வகுத்த நெறி யொழுகுவதோடு அவர் கண்ட கனவையும் நனவாக்கவேண்டியது கடமையாகும்.

அறிவியல் பேராசிரியை மறைவு.

1—3—55-ல் சிறந்த நாவன்மையும் ஆராய்ச்சியறிவும் வாய்ந்த பௌதிகப் பேராசிரியர் திருமதி ஈ. த. இராசேசுவரி அம்மையார் காலஞ்சென்றமை குறித்து மிக வருந்துகிறோம். அன்னாரின் பிரிவு அறிவியல் உலகத்துக்கேயன்றி அருந்தமிழ் இலக்கிய உலகத்துக்கும் உற்றதோர் பேரிழப்பாகும். இயல்பாகத் தமிழ்ப்பற்றுமிக்க நல்ல குடும்பத்தில் தோன்றித் தம் அறிவால் தமிழுக்குச் செய்த தொண்டினை தமிழ் மக்கள் என்றும் மறக்கவியலாது அன்னார் ஆவி ஆண்டவன் திருவடி நீழலில் அமைதியுறுவதாக!

பிரஞ்சிந்திய விடுதலை.

1954 நவம்பர் 1-ஆம் நாள் தமிழ் மக்களுக்குள்ளேயே நெடுங்காலம் அரசியல்காரணமாக இல்லாமலிருந்த ஒற்றுமையை இந்தியக் குடியரசுப் பிரதிநிதி கேவல்சிங்கும் பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதி பியரிலாண்டும் தீர்த்துவைத்துப் பாண்டிச்சேரி முதலிய பகுதிகளைச் சுதந்திரமாக்கியதுபற்றி பெருமகிழ்வுறுகின்றோம். இரு அரசாங்கத்திற்கும் எங்கள் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

19, 19, 20—2—55-ல் சென்னையில் நடைபெற்ற டாக்டர் **உ. வே. சாமிநாத அய்யர்** அவர்களின் **நூற்றுண்டு** விழாவில் பல பெருமக்கள் கூடி அன்னாரின் தமிழ்ப்பணி அறிவு ஒழுக்கம் பற்றி பேசினார்கள். ஒரு காலத்தில் அரசர்களால் மட்டும் தம்புகழ் பாடக்கேட்டு ஆதரிக்கப்பட்டுவந்த தமிழறிஞர்களை இன்று அரசாங்கமும் அறிஞர் உலகமும் பாராட்டும் நிலைக்கு வந்து கொண்டிருப்பது தமிழ்த்தாய்க்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை அறிவிக்கிறது. அய்யர் அவர்களால் உயர்ந்த தமிழ்த்தாயின் திருவருளால் அவளால் உயர்ந்த அய்யரின் புகழ் என்றும் நிலைபெற்று வளர வாழ்த்துகின்றோம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழக

வெள்ளி விழா நினைவு மலர்.

தண்டமிழ் நாட்டின் தனிப்பெரும் பல்கலைக் கழகமாக விளங்குவது அண்ணுமலைப் பல்கலைக் கழகம். இற்றைக்கு இருபத்தைந்து யாண்டுகளாகத் தமிழ் நாட்டு மக்கட்கும் பிறநாட்டு மக்கட்கும் அறிவுத் துறையில் ஆற்றிய அரும் பணிகள் அளவிடற்கரியனவாகும். வெள்ளிவிழாக் கொண்டாடும் நாளில் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருந்தகை செட்டிநாட்டரசர், உயர்திரு. அண்ணுமலை செட்டியாரவர்களின் வேளாண்மையையும் தாளாண்மையையும் நினைத்துப் பாராட்டும் கடப்பாடுடையோம். செட்டியாரவர்களின் வழித்தோன்றலாகவிருந்து, பல்கலைக் கழகத்தைக் காலத்துக்கேற்றவண்ணம் குறைவறப் புரந்துவரும் செட்டிநாட்டரசர், முத்தையா செட்டியாரவர்களையும் எண்ணி வாழ்த்துகின்றோம். மேலும் பல்கலைக் கழகம் பாரினில் சிறக்க ஆட்சிபுரிந்த துணைவேந்தர்கட்கும், அறிவுரை ஈந்து அறிஞர் பலரை வெளிவரச்செய்த பேராசிரியப் பெருமக்கட்கும் வாழ்த்துரை கூறுகின்றோம். பல்கலைக் கழகம் தோன்றுதற்கமைந்த சூழ்நிலையினையும், செய்த தொண்டுகளையும், செய்ய இருக்கும் தொண்டுகளையும் எண்ணுவது சாலப் பொருந்துமென்று எண்ணுகின்றோம்:

செட்டிநாட்டரசர், வீரத்திரு. அண்ணுமலை செட்டியாரவர்களின் தமையனர் திரு. இராமசாமிச் செட்டியாரவர்கள் சிதம்பரத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவினர். தமையனர் இறந்ததும் அவ்வறத்தைப் பேணிக்காக்கும் பொறுப்பு திரு. செட்டியாரவர்கட்கு ஏற்பட்டது. எத்துறையில் இறங்கினுலும் அதனைச் செவ்வனியற்றவேண்டும் என்னும் உலையாவுள்ளமும் தளரா ஊக்கமும் செட்டியாரவர்கட்குக் கருவிலேயே அமைந்த திருவாகும். ஆகவேதான் வாணிகத் துறையிலும், வள்ளன்மைத்துறையிலும், கல்வித் துறையிலும் உலகமே வியக்கும் முன்னேற்றத்தைக் கண்டனர்.

கல்வித்துறையில் பல்கலைக் கழகத்தைவிடப் பெரிய, சிறந்த நிறுவனம் உலகில் இல்லை. ஊர்களிலெல்லாம் காணப்படும் உயர்நிலைப்பள்ளிகளுள் ஒன்றாக இலங்கிய பள்ளியைப் பல்கலைக் கழகமாக ஆக்கிய பெருமையை என்னவென்று கூறவல்லேம்! திரு. செட்டியாரவர்களின் வெளிநாட்டனுபவமும், தமிழ் நாட்டின் தேவையும் பல்கலைக் கழகமாகத் துணை செய்தது.

929-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 6-ஆம் நாளிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகமெனப் பெயரமைந்து நடை பெறத் தொடங்கியது காடும், செடியும், கல்லும், புல்லும் புதருமாக இருந்தாலும் தங்கள் ஊரிலேயே எல்லாம் அமைய வேண்டுமென்று வாதிடும் காலம் இக்காலம். அண்ணாமலையார் பிறந்தகம் தமிழ் நாட்டின் ஒரு மருங்கே வறிதே இருந்தாலும், தில்லையைத் தேர்ந்து கலைக்கோயிலமைத்த பெருமை பாராட்டற் குரியது. மன்னிய உயிர்களின் மலத்தைப் போக்கும் இறைவனிடங்கொண்ட தில்லைக்கோயில் ஒரு பக்கம். கலைத்துறை பலவும் நிலைபெற விளங்கும் கலைக்கோயில் மற்றொரு பக்கம். இவ்வாறு இம்மைப் பயனும் மறுமைக் குறுதியும் ஒருசேர ஓரிடத்தில் மக்களடைய அமைவது அருமையன்றோ! இறை நெறியால் சோழ மன்னர்கள்காலமுதற்கொண்டு சிறந்து விளங்கிய தில்லை நகரம், அண்ணாமலையாரால் கலை நெறியிலும் சிறந்து விளங்கத் தொடங்கியது. தமிழும் தமிழ்க் கலைகளும் தமிழக மட்டுமன்றிப் பாரெலாம் பரவவேண்டும்; அதற்காவன செய்ய வேண்டும்; என்றெல்லாம் நெடுந்தவம்புரிந்த நம் தமிழகம் செட்டியாரவர்களின் துணைகொண்டு பல்கலைக் கழகத்தைப் பெற்றது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், "வயலும், ஏரும், மழையும், எருவும், இருந்தும் விதைநெல் இல்லாது கலங்கியவனுக்கு விதைநெல் கொடுத்து உதவியவனை ஒப்ப, நம் பண்டைத் தமிழகத்திற்கெனப் பழம் பெருமையும் மதிப்பும், பெற்றிருந்தும் கலைபயில் கழகமின்றிக் கவன்ற நமக்கு அறிவின் ஊற்றாகிய பல்கலைக் கழகத்தைத் திறந்தருளினார்" என்று வாழ்த்துவது போன்று நாமும் வாழ்த்துகின்றோம்.

திரு. செட்டியாரவர்களின் திறமையைச் சுருக்கமாக எண்ணும்போது, அவர் உலகில் காணப்படும் செல்வர்போல

இயற்றவும் ஈட்டவும் மட்டும் தெரிந்தவரல்லர். அவருக்கு இயற்றவும் தெரியும். ஈட்டவும் தெரியும். இவற்றுக்கெல்லாம் மேலாக ஈட்டிய பொருள்களை அறநெறிகளில் வகுக்கவும் தெரியும் என்று உலகம் கூறப் பல்கலைக் கழகம் முதலான செயற்கருஞ் செயல்களைச் செய்துள்ளார்.

1930-ஆம் ஆண்டில் கல்லூரி முதல் வகுப்புத் தொடங்கப் பெற்றது. 1929-ஆம் ஆண்டு திசம்பர் திங்களுக்குள், பல்கலைக் கழகமாதற்கு வேண்டிய வளர்ச்சிகளைப் பெற்றுத் திகழ்ந்தது. பத்தாண்டுகளில், கல்லூரிக்கான வகுப்புக்கள், மீனாட்சி தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆய பிரிவுகள், மாணவர், ஆசிரியர் தங்கிப் பயிலவும், பயிற்றவும் பலவகையான விடுதிகள், வீடுகள் ஆயவற்றைப் பெற்றுச் சிறந்தது. செனட், சிண்டிகேட், அக்டமிக் கவுன்சில் ஆய குழுக்கள் 1928-ஆம் ஆண்டிலிருந்து பணிபுரியத் தொடங்கின. கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் பல்கலைக் கழகச் செனட் அவைக்கு ஒருவர் சென்று பல பணிகள் புரிந்துள்ளனர். சங்கத் தலைவராக இருந்த திரு. ஐ. குமாரசாமி பிள்ளையவர்கள், வித்துவான் என்று தமிழைப் பயின்றவருக்கு பட்டம் அளிப்பது தகாது "புலவர்" என்றுதான் வழங்கவேண்டுமென்று வாதிட்டு, பல எதிர்ப்புக் கிடையே "புலவ"ரெனப் பட்டம் கொடுக்கச் செய்தனர். இப்பொழுதும் சங்கச் சார்பில் உள்ள அறிஞர், திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்களும் பொதுவாகப் பல்கலைக் கழகத்தின் ஆக்கம் குறித்தும், சிறப்பாகத் தமிழ்த் துறைகளின் மேம்பாடு குறித்தும் ஆற்றிவருந் தொண்டுகள் பலவாகும்.

இவ்வாறு தொடங்கி வளர்ந்து சிறந்த பல்கலைக் கழகம் அறிவுத்துறையில், மாணவர்களைப்பயிற்றுவதில் மிகவும் முன்னேறியுள்ளது. தமிழொடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, செய்தவை போல செய்ய இருப்பவை சிறந்தனவாகவுள்ளன.

உரிமைபெற்ற இந்திய நாட்டில் அவரவர்களும் தங்கள் தங்கள் மொழிகளை வளம்படுத்தி, அரசியல் மொழியாகவும், பல்வகைக் கலையும் பாங்குறப் பயிற்றும் மொழியாகவும் ஆக்கிக் கொள்ள விரைந்து முயலுகின்றனர். நம்முடைய தமிழகத்

டாக்டர். நாவலர்.

ச. சோமசுந்தர பாரதியார் M. A. B. L.,

அவர்கட்குப் பாராட்டு.

முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் தம் புகழ்பாடித் தன்னவை வந்தோர்க் கன்றி மன்புகழ்தேடி அறநெறி பாடிய அரும்பெரும் நாவலர்களை அன்புடன் ஏற்றுப் பண்புறு மொழியால் மட்டுமன்றிப் பொன்னும் மணியும் புனைதேர் மாவும் வளனும் நிலனும் கவினுறத் தந்து புகழ்பெற்ற வரலாறுகளைப் பண்டை இலக்கியங்கள் நன்கு எடுத்தியம்புகின்றன.

இக்காலத்தும் மக்கள் ஆட்சியில் மாபெரும் புலவர்களை மக்கள் மதித்துப் போற்றுகின்ற செயல்களை நாம் கண்டு வருகின்றோம். தனிப்பட்ட அரசனாண்ட காலமுதல் மக்கள் ஒவ்வொருவரும் அரசராக ஆய இக்காலம் வரை நாவன்மையும் பாவன்மையும் புலமை வன்மையும் உடையோரைப் போற்றிப் புகழ்தல் என்பது கடமையும் மகிழ்ச்சியும் என்பது மட்டுமல்லாமல் வருங்காலத்தில் நாட்டைச் செம்மையும் சிறப்பும் அடையச் செய்யும் வழியாகும்.

[170-ம் பக்கத் தொடர்ச்சி]

திலும் இப்புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நெறியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பங்கென்ன? இத்துறையில் பல்கலைக்கழகம் பெரியதோர் முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். தக்க அறிஞர்களைக்கொண்டு ஆய்ந்து துறைதோறும் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்யவேண்டும். தமிழைப் பொறுத்தவரையில் எல்லாத் துறைகளிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழகத்துக்கு மட்டுமன்றி, இந்திய நாட்டுக்கே ஏன்? உலகத்துக்கே வழிகாட்டியாக விளங்கவேண்டுமென்பது தமிழ் மக்களின் நெடுநாளைய அவாவாகும். உரிமையோடு விரும்பும், இவ்விருப்பத்தையே வெள்ளிவிழாவின் வாழ்த்துரையாக விடுக்கின்றோம்.

பொழிற்றொண்டர்.

ஒரு புலவனுக்கு வேண்டிய நிலபுலன்கள் ஆடை அணிகள் பொன் மணிகள் இவை யாவையும் கொடுத்தாலும் அவன் உள்ளம் ஊக்கத்தால் உந்தப்படுதல் இல்லை. ஏன்? அவன் செய்த தொண்டுக்கும், கலை வளர்ச்சிக்கும், அவையாவும் ஈடாகமாட்டா. பின்னர் அவன் தன் தொண்டிற்குக் கைம்மாருக எதனை விரும்புகிருன்? சுவைப் போரையும பாராட்டுதலையும் விரும்புகிருன். கலைஞனுடைய கலையாகிய பயிர் பாராட்டுதல் என்ற நீர் பாய வளரும் என்ற உண்மையைப் பண்டைக் காலந்தொட்டுக் கண்டு வருகிறேம்.

இன்று நம்மிடையே தோன்றி நற்குடிப் பண்புகளும் தமிழ்ப் பண்பாடும் நிறைந்து வழக்கு நூலிற்றேர்ச்சியுற்று வகையான தமிழறிவும் சிறந்து விளங்கிப் பலதுறையில் தொண்டாற்றும் **நாவலர் சோமசுந்தர பாரதியவர்களை** அறியாதார் அறியாதாராவர். அன்னர் ஆராய்ச்சி அறிவும் கலையுணர்வும் இலக்கியப் பண்பும் மொழிப் புலமையும் நிறைந்தவர் என்பதைத் தசரதன் குறையும் கைகேயிநிறையும், திருவள்ளுவர், மாரிவாயில் - தொல்காப்பியப் பொருளதிகார உரை. இன்னோரன்ன செயல்கள் நெல்லிக் கனிபோல் காட்டும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அரசியலாருடன் மாறுபட்டு முதற்கண் இந்திப் போரில் குதித்த மாவீரருமாவார், அன்னுரை உள்ளத்தால் பாராட்டி வந்த தமிழகம் இன்று அண்ணுமலைப் பல்கலைக் கழக வாயிலாகப் பேரறிஞர் என்னும் பட்டம் சூட்டிப் பொன்ணுடை போர்த்துத் தன் நன்றியுணர்வைக் காட்ட முன்வந்து இராசா சர் முத்தையாச் செட்டியார் தலைமையில் தமிழகத்துப் பெருங் கவிஞர் பாரதிதாசனுர், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, திருவாளர். இராமசாமி நாயுடு முதலிய பேரறிஞர்களும் அண்ணுமலைப் பல்கலைப் பேராசிரியர்களும் எடுத்தியம்பப் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்பு பாராட்டிய செயல் மிகவும் போற்றத் தக்கதாகும். அன்னுர் இன்னும் நீண்ட ஆயுளைப் பெற்றுத் தமிழ் மொழிக்கு வேண்டும் பணிகளைச் செய்ய தமிழ்த் தாயின் திருவடியை வேண்டுகின்றேம்.

புலவர் கல்லூரி விழா.

1955 பிப்ரவரி 12-ம் நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களில் ஒன்றாகிய கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோ வடிகள் தமிழ்க் கழகம் 17-ஆம் ஆண்டுவிழா திரு. கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் சீரியதலைமையில் நடை பெற்றது. அதுபோது திருவாளர் இராமச்சந்திரபத்தரவர்கள் தமிழ் அரசியல் மொழியாவதற்குரிய தகுதியையும் அரசாங்க நிலையையும்பற்றி அரியதொரு சொற்பொருக்காற்றினார்கள். தலைவர் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மக்கள் தங்கள் வழிபாடு சடங்கு முதலியவற்றைத் தாய் மொழியாகிய தமிழில் ஆரம்பிக்க வேண்டும் என்றார்கள். அரசியலும் அப்பொழுது தமிழில் நடை பெறும் என்றும் அழுத்தமாகக்கூறி உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கிய நிலைபற்றிப் பேசினார்கள். திருவாளர் நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் நன்றிகூற தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது இரவு கல்லூரி மாணவர்களால் **புலவர் உள்ளம் II** என்ற கவிதைநாடகம் சிறப்பாக நடிக்கப்பட்டது.

நாடக ஆசிரியர். வித்துவான். ச. பாலசுந்தரம் அவர்களை யும் பங்கெடுத்துக்கொண்ட மாணவர்களையும் துணைத் தலைவர் வித்துவான். ந. இராமநாதன் அவர்கள் பாராட்டி நன்றி கூறினார்கள்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி விழா.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் R. P. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் விழா செவ்வனே நடைபெற்றது. இரவு மாணவர்கள் **"ஆய் அண்டிரன்"** என்ற நாடகத்தை அழகாக நடித்தார்கள்.

கட்டிட நிதி நன்கொடை

கூத்தாநல்லூர் பெருநிலக்கிழாரும், சைகோனின் பெரு வணிகருமான ஜனுப் **அப்துல் அஜீஸ்** அவர்களும் தமிழ வேளாளர்களின் உறவினரும் பெரு வணிகருமான **சுப்பிரமணிய பிள்ளையவர்களும்** பெருமுயற்சியுடன் சைகோன் முதலிய இடங் களில் தமிழர்களிடையேயும் தமிழன்பர்களிடையேயும் கல்வி

சிதம்பரம்

சி. பழநியப்ப முதலியார் தேவாரப் பாடசாலைப்

பொன் விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார்,

(தமிழ் ஆராய்ச்சிப் பகுதி, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.)

தெரிவிப்பதாவது :—

பாடசாலை நிறுவியவர் :—

"நாடெல்லாம் நீர் நாடு தனையொவ்வா நலமெலாம்" என்று சேக்கிழார் பெருமானுல் சிறப்பித்துச் சொல்லப்பெற்ற சோழ வள நாட்டிலே, கங்கையிற் புனிதமாகிய காவிரியாற்றின் வடகரைத் தலங்களுள் ஒன்ருயதும், காண முக்திதரும் தலமாகிய தில்லையம்பதி (சிதம்பரம்) க்குக் கீழ்பாலுள்ளதும், சிவநெறிக் குரவர்களால் பாடப்பெற்றதும், ஆகிய திருக்கழிப்பாலையென்னும் பழமையும் பெருமையும் வாய்ந்த பதியில், வேளாண்மையால் மிக்கிருக்கும் சைவ வேளாளர் குலத்தில் எழாம் பிரிவான தொண்டைமண்டல முதலியார் மரபில், சிவநெறிப் பற்றுச் சான்ற சிவசங்கர முதலியாரும், அவரது கற்பிற் சிறந்த மனைவியாராகிய சொர்ணத்தண்ணியாரும், நோற்ற நோன்பின் விளைவாய்த் தோன்றியவர், தேவாரப் பாடசாலையை நிறுவிய திரு. பழநியப்ப முதலியார்.

173ம் பக்கத் தொடர்ச்சி

நிலையங்களின் கட்டிட நிதிக்காக 102300 வெள்ளிகள் திரட்டி, இந்திய அரசியலாரின் முயற்சியால் ரூ. 14200 சங்கத்திற்கு அனுப்பியுதவினர். எஞ்சிய தொகை அவர்களிடமேயுள்ளது. இப் பேருதவிபுரிந்த அன்பர்களின் பெயரும் முகவரியும் iii பக்கத்தில் காண்க. திரட்டித் தந்த அன்பர்களுக்கும் உதவிபுரிந்த அன்பர்களுக்கும் எங்கள் மகிழ்ச்சிக்குரிய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

பொழிற்றெண்டர்.

"தந்தையினும் சத படங்கு தனயன்" என்னும் ஆன்றோர் வாக்கிற் கேற்பப் பழநியப்ப முதலியார் இளமையிலேயே சைவப்பற்று மிக்காராய், தம் தந்தையாருடன் தில்லையில் நடைபெற்றுவரும் ஆனி, மார்கழித் திருவிழாக காலங்களில் வந்து நடராசப் பெருமானை வணங்குவது உண்டு. அக்காலங்களில் தில்லை நகரத்தார் விழாக் காலங்களில் தேவாரப் பாராயணத்திற்காகத் திருவிடைமருதூர் நாகலிங்கம் பிள்ளை முதலான பேராசிரியர்களை அழைத்துத் திருவீதியில் பாராயணம் செய்விப்பது வழக்கம். அத்தகைய நிகழ்ச்சிகளில் பழநியப்ப முதலியார் கலந்துகொண்டு பெருமகிழ்ச்சி பெறுவதோடு, இந்நிகழ்ச்சி என்றும் நிலைபெற வேண்டும் என்று பெரு விருப்புடையவர்களாய், திருவருள் துணைகொண்டு 1903-ம் ௵ சோபகிருது௵ சித்திரை௴ 26௳ வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரத்தில் தேவாரப் பாடசாலையைச் சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில் தெருவில், அக்காலம் தேமணக்கும் தேவார நன்னூலைத் தங்கள் நாவும் மனமும் இனிக்குமாறு ஓதவல்ல ஸ்ரீ நடராஜ ஓதுவார்மூர்த்தி அவர்களை ஆசிரியராக நியமித்தும், பன்னிரண்டு மாணவர்களைச் சேர்த்தும், அவர்கள் கல்வி பயிலும் காலம் ஐந்து ஆண்டு என எல்லை கட்டியும், தேவாரத்தோடு இலக்கிய இலக்கணங்களையும் கணிதத்தையும் கற்பிக்கப் பெற வேண்டும் என்றும், அங்ஙனம் கற்கும் மாணவர்கள் நாடோறும் ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆலயத்திலும், பிரதோட காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் திருவீதிகளில் பாராயணம் செய்துவரவேண்டுமென்றும், தேவாரம் பயிலும் மாணவர்களுக்குப் பதிகம் முழுவதும் பயிற்றுவிக்க வேண்டுமென்றும், திட்டங்கள் வகுத்துத் தம் வாழ்நாள் முழுவதும், பாடசாலையைத் தமது கண்ணேபோல் பாதுகாத்து வந்தனர். தம் காலத்துக்குப் பின்னரும் பாடசாலை செழித்தோங்குமாறு நில நிவந்தங்களையும் பாடசாலைக் கட்டிடத்தையும், குறைவறச் செய்தருளினார்கள். இதைக் கண்ணுற்ற சைவ உலகம், திருமுறை கண்டெடுக்கப்பெற்றது தில்லையம்பதி, சேக்கிழார் பெருந்தகை பெரிய புராணம் பாடி அரங்கேற்றியது தில்லையம்பதி. இத்துணைச் சிறப்புடைய இப்பதியில் திரு. பழநியப்ப முதலியார் பாடசாலையை நிறுவி ஏனையோர்க்கும் வழிகாட்டியது, மிக மகிழ்தற்குரியது என்று, பாராட்டியது.

விழாவின் நிகழ்ச்சி :—

இங்ஙனம் திரு. முதலியாரால் நிறுவப்பெற்ற பாடசாலைப் பொன்விழா, பாடசாலையின் பின்பக்கம் உள்ள தோட்டத்தில், கண்டவர்கள் களிக்குமாறு, அமைக்கப்பெற்றதொரு மாபெரும் பந்தலில் விழாத் தொடங்கிற்று.

முதல் நாள் சிவபூசை விழா :— அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி பாடப்பெற்றது. அதன்பின் ஐம்பத்தெட்டு பேர்கள் சிவபூசையைப் பாடசாலையில் செய்து திருக்கோயில் சென்று வழிபட்ட காட்சி மாட்சியுடையதாய் இருந்தது. அன்று சரி யாய் பன்னிரண்டு மணிக்கு மகேசுவர பூசை நிகழப்பெற்றது. அன்று மாலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் துணை வேந் தர் சைவத்திரு. எ. இராமநாதம் பிள்ளை எம். ஏ. அவர்கள் தலைமையில் சீர்காழி பெருநிலக்கிழார் உயர்திரு. சி. இராமநாத முதலியார் சிவபூசை விழாவைத் துவக்கிவைத்து அரியதொரு விரிவுரையும் ஆற்றினார்கள். அதன்பின் தருமை ஆதீனப் பல் கலைக் கல்லூரித் துணைத் தலைவர், வித்துவான், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துத் திரு. தண்டபாணி தேசிகர், தாவர நூல் ஆசிரியர் திரு. சீனிவாசன், ஆகியோர் அரிய சொற்பொழிவு செய்தனர்.

இரண்டாம் நாள் பொன் விழா :— உயர்திரு. சர். பி. டி. ராசன், பார் அட் லா. எம். எல். ஏ. அவர்களின் சீரிய தலைமை யில் பொன் விழா தொடங்கிற்று. அதுபொழுது தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். இராமலிங்க ஓதுவார் ஐம்ப தாண்டு அறிக்கையை வாசித்தார்கள். பாடசாலைப் புரவலர் திரு. சிவசங்கர சின்னையா முதலியார் தலைவரை வரவேற்கு முகத்தால் அரியதொரு சொற்பொழிவு செய்தனர். பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலை வர் உயர்திரு. சித்தாந்த செந்நாவலர், திரு. ஜி. சுப்ரமணியப் பிள்ளை எம். ஏ. பி. எல். அவர்கள் பொன் விழாப் பிரசங்கத் தைச் செய்தருளினார்கள். பிற்பகலில் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் மதுரை எஸ். தருமலிங்க முதலியார் பாடசாலை நிறுவிய திரு. பழநியப்ப முதலியாரின் திருவுருவப்

படத்தையும், சிதம்பரம் அட்வோகேட் வைணவத்திரு ஸி. வி. ஸ்ரீநிவாசாச்சாரியார் பி ஏ. பி. எல். திரு. இராசரத்தின வேலு முதலியார் படத்தையும், சிதம்பரம் நகராட்சித் தலைவர் எஸ். வி. கல்யாணராமன் பிள்ளையவர்கள் பாடசாலை நிறுவிய வரின் பேரராகிய சி. பழநியப்ப முதலியாரின் படத்தையும் திறந்து வைத்தார்கள்.

அன்றே முன்னாள் கல்வியதிகாரி. உயர் சைவத்திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மெய்கண்டார் நூல் நிலையத் தைத் திறந்து வைத்தார்கள்.

அன்று இரவு வீரவநல்லூர் பாடசாலையின் பழைய மாணக் கரான சுந்தரமூர்த்தி ஓதுவார் திருநீலகண்டர் என்னும் பொருள் பற்றி கதாகாலக்ஷேபம் நிகழ்த்தினார்கள்.

மூன்றும் நாள்: தேவார ஆசிரியர் மகாநாடும், திருமுறை விழாவும்:— தேவார ஆசிரியர் மகாநாடும் திருமுறை விழாவும் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியரும், சொல் லின் செல்வருமாகிய உயர் சைவத் திரு ஆர் பி. சேதுப்பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் சீரிய தலைமையில் நிகழப்பெற்றது. அதுபொழுது சென்னை விவசாய அமைச்சர், கனம். எம் பக்த வத்சலம் பி. ஏ. பி. எல் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத் தார்கள். பின்னர், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. எஸ். பி. கே. ஆர். இராமநாதஞ் செட் டியார் அவர்களும் திரு. இராமலிங்கம் எம். ஏ. அவர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதன் பின்னர் பத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அன்று மாலை உயர்திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை தலைமையில் திரு, சச்சிதானந் தம் பிள்ளை பி ஏ. எல். டி. அவர்கள், திருவாளர் வித்துவான். க. வெள்ளைவாரணம் அவர்கள், திரு ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள் ஆகியோர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அன்று இரவு சென்னையிலுள்ள தருமபுரம் ஆதீனம் பிரசார நிலையத்திலுள்ள மாணவிகள் தென்னார்க்காடு ஜில்லா கலெக்டர் உயர்திரு. ஏ. உத்தண்டராமன் தலைமையில் ஞானசம்பந்தர் என் னும் நாடகத்தை, சுவைப்பட நடத்திக் காட்டினார்கள். பின் திரு. சிவசங்கரசின்னையா முதலியாரால் நன்றியறிதல் கூறப்பட் டது. இங்ஙனம் பொன்விழா சிறப்புடன், சிற்சபை பொலியத் திருநடம் இயற்றும் அற்புதக் கூத்தன் அருளால் தேவாரப் பாட சாலையை புரந்துவரும் அன்பர் திரு. சிவசங்கரசின்னையா முதலி யார் பல்லாண்டு வாழியர், என்னும் கரகோஷத்துடன் விழா இனிது நிகழ்ந்தேறியது.

அகம்.

[ஆ. பசுபதி, வித்துவான். இறுதிநிலை.]

அகம் என்பது தலைவனும் தலைவியும் அகத்துணர்வாலே நுகர்ந்த இன்பம் பிறரை ஞான்று இப்பெற்றிவாய்ந்ததெனக் கூற இயலாததாகும். தலைமக்கள் நுகரும் இன்பம் பிறர் அறியாதவாறு நிகழ்தலின் அகமெனவும் அமையும். அகம் என்பதை ஆகு பெயராக மோடல் சாலும் என்க. அகத்தை ஐந்திணையாகப் பகுத்து; முதல், கரு, உரி, என மூவகைப் பொருளாக வோதினர். இம்மூன்று பொருளும் கவிச் சுவையை மிகுதிப்படுத்த எழுந்ததாகும்.

அகத்தைக் கூறும் இலக்கியமெல்லாம் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்ற விதிப்படி, செல்வத்தாலும் அன்பினாலும் இன்னபிறவாற்றாலும் ஒத்தார் இருவர் கூடி காதல் வேட்கையால் புணர்ந்து வரைந்தார் எனவும்; இந்நிகரன வாகி சுவைபட வருவனவெல்லாம் தொகுத்துக் கூறுதலாம். கவிகள் தம்முடைய கற்பனையால் காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும், பல்வகைச் சுவைபட புனைந்துரைப்பதே அகப் பொருட் செய்யுளாம். இலக்கியங்களில் கூறப்படும் தலைமக்கள் அன்பு, ஒழுக்கம் இன்னபிறவும் ஞாலத்தைச் செம்மைபடுத்துவனவாம். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்து நிலங்களில் முறையே, கூடுவது, ஆற்றியிருப்பது, பிரிவது, ஊடுவது, இரங்குவது என்ற ஒழுக்கம் நிகழவேண்டும் என்னும் யாப்புறவு யாண்டும் இல்லையென்க. அவ்வவ் நிலத்திற்கு அவ்வொழுக்கம் சிறந்ததெனக் கோடலேசாலும். அகப்பொருள் உலகத்தில் இவ்வரையரைகள் காணப்படுகின்றன.

சிறந்த படக்காட்சியை அமைக்க விரும்பும் ஆசிரியன், காட்சிக்கினிய விரிபூஞ் சோலைகள், வெண் மணற் குன்றுகள், மலைப் படுகர்கள், கான் செறிவுகள், செக்கர் வானத்தின் சிறப்புகள்,

நிலவின் தோற்றம்; அழகு மாளிகைகள் இன்னபிறவற்றையும் தேர்ந்தெடுத்து அழகுபடச் சித்தரித்துக் காட்டுவான். அவ்வாறே இலக்கிய ஆசிரியர்களும்; காட்சிக்கினிமையும் சுவையும் நிறைந்த பகுதியையே தேர்ந்தெடுத்து இன்பம் தோன்ற அமைப்பர்.

முல்லைக் கலியில் ஏறுகளைப்பற்றிக் கூற நேரும்போது, மிகக் கவர்ச்சியான அழகிய ஏறுகளையே முதன்மையாகத் தேர்ந்தெடுத்துக் கோத்து; நம்மை இன்புறுத்துகின்றார். அந்திவானம் போற் சிவந்த உடம்பில், அந்தி வானத்தில் பூத்து விளங்கும் விண்மீன்களைப்போல்; வெண்ணிறப் புள்ளிகள் அமைந்துள்ளன, எனக் கூறுகின்றார். இத்தன்மைவாய்ந்த ஏற்றை நினைக்குங்கால் மனத்தின்கண் இன்ப உணர்ச்சி மலர்கின்றது.

பாலையைக் கூறுங்கால் நீரில்லாத அருஞ் சுரத்தையும், ஆறலைப்போர் கொடுமையும்; அதன் வெம்மையும் கூறிப்போந்தனர்.

“ அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுள்

துடியடிக் கயந்தலை கலங்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே”

“ அன்புகொள் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே”

“ இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே”

பொன்னாற் செய்த குழையினையுடையாய்! தலைவர் சென்ற கானகம் நெருப்புப்போன்ற வெம்மையால் அடிபொறுக்கும் அளவின்றிக் கடியவாய் இருக்குமென்றார்; அக்கானகத்தே யானைக் கன்றுகள் தாயும் தந்தையும் உண்ணவேண்டுமென்று கருதாது கலக்கிய சிறிய நீரைப் பிடியை ஊட்டிப்பின் களிறு தானுண்ணும் என்றும்; கானகம் பசுமையற்றமையான்; புறவுகள் தன் அன்பு கொண்ட பெடையின் வருத்தத்தைப் போக்க; தன் சிறகை விரித்து நிழல் தோன்றச் செய்து வெம்மையைத் தீர்க்கும் என்றும்; கலைமான்; இனிய நிழல் காணாது வருந்திய பிணைக்குத்

தான் நின்று நிழலைக் கொடுக்கும் என்று கூறுகின்றார். இப்பாட்டில் தலைவன் சென்ற நெறியில் விலங்குகளும் பறவைகளும் அன்புகொண்டு நிற்கும் நிலைமையும், பாலையின் வெம்மையும் ஆசிரியர் அழகுபடக் காட்டுகிறார். இவ்வாறு அகத்தின் தோற்றங்காட்டிச்செல்லும் சுவைதான் என்னே!

தலைவி தன்னலங் கருதி இரங்குதலைவிட; தலைவன் நலங்கருதி இரங்குதலே காதல் அன்பிற் சிறந்த நன் மகளிர்க்கு இலக்கணமாம். அதனால் தலைவன் நலங்கருதி இரங்குதலை முதன்மைகொள்ள வைத்து; தன்னலங் கருதி இரங்குதலை அதனுள் அடக்கிவோதினர் தலைவன் பொருள்வயிற் பிரிந்த காலத்தில்; தலைவி வானத்தை நோக்கி, ஏ! வானமே நீ வெண் மேகமாய் இருக்கின்றனை. தலைவன் சென்ற வழியில் நீர் சொரியாது நிறபதால் தலைவன் வெம்மையால் வருந்துவான் என உள்ளம் குழைந்து கூறுகிறார்.

“ தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கானம்
இறந்தைரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானம்! சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து”

“ஏ! மேகமே! என் தலைவன் போகிய கானத்தில் வெப்ப மிகுதியால் ஆண்டு நைகின்றனன்; அதனால் நீ ஒன்று செய்; தலைவன் பிரிவால் என் கண்களில் நீர் கடல்போல் பெருகின்றது. நின்னோடு நின்னினத்து மேகங்கள் எல்லாம் இக்கண்ணின் கடலில் எவ்வளவு வேண்டுமானாலும்நீரை முகந்துகொண்டு தலைவன் இன்னற்படும் கானகம் நண்ணி; அவன் செல்லும் இடங்களெல்லாம் நீர்த் துளியை வீசி வெப்பம் தணிவிப்பாய்” என்று தலைவி கூறும் காதல் அன்பின் சிறப்பினை நோக்குமின்! தலைவி தன்னலங்கருதி இரங்குவதை; அதாவது பிரிவால் ஆற்றியிருக்க முடியாத நிலையை மறைத்து, தலைவன் வருந்துவான் என்று தலைவன் நலங்கருதி இரங்கும் சிறப்புத்தான் என்னே! இவ்வாறு மற்ற நிலங்களைப்பற்றிக் கூறும் இலக்கியங்களை எடுத்தோதின் விரியும், எனவே விரிவஞ்சி விடுத்து மேற்கூறுவாம்.

[349ம் பக்கம் பார்க்கவும்

ஜெர்மன் கவியரசர் கதே.

[வேலூர். காரழகன்]

மேல்நாடு மேன்மை எய்தியமை அறிவியல் — கலையியல் வளர்ச்சியால் என்பதை ஏற்காதாரெவர்? முன்னேறிய நாடுகளைக்கண்டு பொருமைகொள்ளாமல் உள்ள குறைகளை நன்குணர்ந்து குறைகளைக் களைந்து நிறைவுறவைக்கும் நல்லியல்பு பெற்றவர்களே மேல் நாட்டவர்.

ஐரோப்பிய இலக்கியத்தினுயிராய் விளங்கிய டாண்டே 'டிவைன்காமெடி' என்ற பேரிலக்கியத்தையாத்து என்றும் குன்றுப் புகழெய்தினர்; ஐரோப்பிய இலக்கியத்தினுடலாயிலங்கும் ஷேக்ஸ்பியர் தன்னிகரற்ற நாடகங்கள் யாத்து இன்றளவும் அவருக்கு எவரும் போட்டியில்லை என்ற உவமையற்ற உயர் பெரும் புகழை எய்தியுள்ளார். இதாலியும் இங்கிலாந்தும் இலக்கியப் புகழெய்தி ஈடிலாப் பீடுடன் திகழ்ந்தன. ஜெர்மனிக்குத் தலைசிறந்த பேரிலக்கியமில்லை என்பதை நன்குணர்ந்து உருகாத ஜெர்மனியனில்லை. ஜெர்மனி மொழிக்கிருந்த இலக்கியமில்லாப் பெருங் குறையைக் களைந்தெறிய கதே என்னும் பேரறிஞர் 18-ம் நூற்றுண்டில் தோன்றினர்.

உள்ளம் விரும்பும் நல்லதோர் அமைப்பு சமுதாயத்திற்குத் தேவை என்பதை நன்குணர்ந்து அதற்கென அறிவுப்போரை எழுதுகோல் நடாத்திய காலத்தில் ஜெர்மனியில் அறிவு மலராக மலர்ந்தார் கதே. அமெரிக்காவிலும் பிரான்சிலும் அரசியல் அவலம் ஆட்சிபுரிந்த அதே காலத்தில் வரன்முறையையும் பழமையையும் எதிர்த்து அறிவியல் கிளர்ச்சி ஜெர்மனியருக்குச் சிந்தனையில் விடுதலை தந்து; சிந்தனையில் விடுதலையைக் கோரினும் செயல் முறையில் கோரினர்களில்லை. இவ்வறிவியல் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினவர் கதே.

இவர் ஆருவது ஆண்டிலே ஆண்டவனை எதிர்த்தார்; ஏழாவது ஆண்டிலே எடுத்துரைத்தார் நீதியிலே உள்ள ஐயங்களை;

எட்டாவது ஆண்டிலே பேகன் தத்துவத்தையும் கிறித்துவத்தையும் ஒப்பிட்டு லத்தின் மொழியில் கட்டுரை புனைந்தார்; பதினைரும் ஆண்டிலே ஏழு மொழிகளுள் பல்வகைத் தொகுப்புடைய நாவல் வரைந்தார்; பன்னிரெண்டாம் ஆண்டிலே தனிப் போரிட்டார்; பதினுன்காம் ஆண்டிலே அழுந்திய காதலில் அவலமடைந்தார்! எழுபத்தினுன்காமாண்டில் காதலில் சிக்குண்டார்; எண்பத்திரெண்டாமாண்டில் பெரியதோரிலக்கியப் பெரும் பகுதியை முடித்தார்.

1749-ல் பிறந்த கதே இளமையில் இல்லத்தில் நன்கு பயின்முர்; ஈன்ற நல்லறிவு நிரம்பப்பெற்று, பாத்திரங்களைக் கதையில் புகுத்தும் திறமையில் மிகுந்த வல்லவர். தாய் சேயுக்குக் கதைகள் கூறி பாத்திரங்களின் பண்புகளைப் பகர்ந்து மகனின் கருத்தறிந்து கதையமைப்பார். தந்தையோ இலக்கியப் புலமை நிரம்பப் பெற்று தூய ஒழுக்கம் மலிந்த சீரிய கட்டுப்பாடுடையவர். தந்தை மைந்தனைக் கற்பனையில் சிக்க வைக்காது அறிவியலில் பிணைத்து தனி அறிவு வளர வழிப்படுத்தினர். கூரிய அறிவுபெற்ற கதே உலகியலையும் சூழ்நிலைகளையும் நன்குணர்ந்து குடும்பப் பழக்கவழக்கங்களை உடைத்தெறிந்தார். பள்ளிப் படிப்பை வெறுத்தார்; ஆசிரியர்களை மதித்தாரில்லை; பள்ளியில் பயின்று தெரிந்துகொள்வதைவிட மக்கள் உறைந்து கிடக்கும் குடிசைகளில் பல அறிந்து கொள்ளலாமென்றறைந்தார். சமூகத்திலும்—கேளிக்கைகளிலும்—நாடக அரங்குகளிலும்—விருந்துகளிலும்—உலவிக்கொண்டிருப்பதிலும் காலம் பறந்தோடுகிறதென்று கூறினர். கதேவைத் திருப்புதலரிதென்றே அறைந்தனர். விலங்குகளையும் — மரங்களையும் திருப்பலாமெனினும் கதேவைத் திருப்புதலரிதென்றனர்.

இவர் வாழ்நாள் முழுவதும் மங்கையுடனும் மதுவுடனும் பிரிவின்றிப் பிணைந்திருந்தார்; புலனின்பத்திலும் அறிவின்பத்திலும் கலை இன்பத்திலும் தேங்கித் திளைத்திருந்தார்; தன் அனுபவங்களைக் கவி மாரியாகப் பொழிந்தார்; மக்களியலை நன்கறிந்து தனிமையைப் பெரிதும் விரும்பி இயற்கையிற்றோய்ந்து அவண் ஷேக்ஸ்பியரையும் — ஹோமரையும் நன்கு பயின்று கவிக் கனவில் தோய்ந்து திகழ்ந்து மகிழ்ந்தார். உயர்பெருந்

கவியாக இவர் விளங்கினரேயன்றி தந்தை விரும்பியவாறு வழக்கறிஞராக விளங்கினரில்லை. எண்ணிலாப் பொது நூல்களை நன்கு பயின்றூர். இவர்மீது மக்கள் பார்வை செல்லாமலில்லை. வணிகர்—கலைஞர்—புலவர்—மதத் தலைவர்—நடிகர்—ஆண்கள்—பெண்கள் ஆகிய ஏனையோரிடம் நன்கு பழகி ஒவ்வொருவரிடமும் அன்பும் தெய்வீகமுமில்லாமலில்லை என்றியம்பினர்.

நாடகத்தில் நிரம்பப் பற்றுக்கொண்டிருந்ததுடன் ஷேக்ஸ்பியர்மீது வரம்பிகந்த பெரும் பற்றுகொண்டு என்றும் பாராட்டியவண்ணமாயிருந்தார்; என்றாலும் ஜெர்மனிக்கு நாடக வாழ்வில்லை என்பதை உணர்ந்துருகினர். வளமையும் செழுமையும் மிகுந்த ஷேக்ஸ்பியரின் நாடக இயல்களாம் செந்நீரை நாடக வளப்பமும் செழுமையுமில்லா ஜெர்மன் நாடகத்திற்குப் பாய்ச்ச நிரப்ப முயன்றூர். இளமை மிகுந்த வன்மையால் ஜெர்மன் கலையில் புதுமைப் புரட்சி திகழப் பாடுபட்டதுடன் தன் நாட்டின் எண்ணத்திலேயே புரட்சி பிறங்க பாடுபட்டார்.

தன் நாட்டில் நிகழ்ந்த சில வெறுக்கத்தக்க முறைகளைக் கண்டித்து நலமுற வைக்கக்கருதி, வரம்பிகந்த தன்னறிவால் ஜெர்மனி வரலாற்றையறிந்து ஒப்பற்ற நாடகத்தை யாத்து அதில் மதவாதிகளையும் நிலச்சுவான்தார்களையும் எதிர்த்துச் சூரையாடும் ஒரு பாத்திரத்தையமைத்து அதில் கூறவேண்டியவைகளைக்கூறி, குன்றுப் புகழெய்தினர். இளைஞர்கள் உள்ளத்தை அந்நூல் ஈர்த்தமையால் அந்நூலை விவிலியமென்று பெரிதும் புகழ்ந்தனர்.

வெட்ஸ்லார் என்றவிடத்தில் சில காலம் தங்கியிருந்தார். எப்பொழுதும்போல் இவர் காதலில் மூழ்கியிருந்தார். லாட்சன் என்ற நங்கையை இவர் காதல் கொண்டிருந்தார். காதலித்த காரிகை கைநழுவி மாற்றானிடமிருந்தாள். கதே கலங்கினர். உள்ளம் உடைந்து மனம் அனலாகி அவலத்தில் மூழ்கி நலிந்தார். கவி பாடினும்—கட்டுரை வரையினும்—புரட்சியைப் பிறங்கவைப்பினும்—தோகையின் புறக்கணிப்பால் தொல்லை இவரைச் சூழ்ந்தது. நம்பிய நங்கை நழுவியதால் நலம் மிகக் குலைந்து உலகையே வெறுத்துத் தற்கொலை புரிந்துகொள்ள

திட்டமிட்டார். தலையணையடியிலே கத்தி வைத்துக்கொண்டு இறந்துபட எண்ணினார். காதல் கூரிய கத்தியாக மாறியது போலும்! தன் வாழ்வில் நிகழ்ந்த கைகூடாத துன்பக் காதல் நிலையை நூலாக யாத்து தன்னைத்தான் குத்திக் கொல்லுவதற்குப் பதிலாக கதாநாயகன் குத்திக் கொள்ளுவதை விளக்குகிறார். 'வெர்தரின் துன்பங்கள்' என்ற நூல்தான் முறிந்த காதலின் விளைவு. இந்நூலில் வரம்புகடந்த கயமை மலிந்து துலங்கினும் பேரழகு மிகவும் கொழுந்துவிட்டுத் திகழ்கிறது. உணர்ச்சி மிகுந்த கலைஞன் இல்லத்தில் இன்பம் பெறாது வயல்களிலே தனிமையாம் துணையைப் பெற்ற மிகவும் பொருத்தமில்லா வாழ்க்கையின் விளக்கமே இந்நூல்; என்றாலும் துன்ப வாழ்வின் துயரைக் கூறி மரணமே இன்பமெனக் கூறும் மிகுந்த துக்கமான அவல நூல். இந்நூல் இளைஞர்களிடையே மிகுந்த பரபரப்பை யுண்டாக்கியதால் ஜெர்மனியில் வெர்தரைப்போல் ஆடவர்கள் நீல நிறக் கோட்டையும் மஞ்சள் நிற உள் கோட்டையும் லட்சியைப்போல் அணங்குகள் வெள்ளாடையும் செந்நிற ஜாகெட்டையும் உடுத்தினார்கள். ஜெர்மனியில் நிரம்ப ஆதரவு இருந்ததோடல்லாமல் செய்தித் தாள்கள்போல் வீதி எல்லாம் விற்கப்பட்டன. சைனாவிலும் இந்நூலுக்கு நல்ல ஆதரவு நிரம்ப இருந்ததால் வெர்தரையும் — லாட்சின்னையும் பீங்கானில் சிலை செய்தனர். இந்நூலைப் படித்தவர்கள் மிகுந்த பெரும்பற்றுக் கொண்டு "அடக்கப்பட்ட வாழ்வின் வேர்தர் சங்கம்" என்று நிறுவினார்கள். கதை யாத்த இந்நூலுக்கு ஐரோப்பா முழுதும் அளித்த கைம்மாறு யாதெனின், தற்கொலைத் தொத்துநோய் யாண்டும் பரவியதன்றிப் பிறிதொன்றுமில்லை. இவர் யாத்த நூலால் இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததெனினும் இவர் முடிந்த முடிவைத் தேடிக்கொள்ளவில்லை. தன் பின்னால் காதலையும்—நூலையும்—பாராட்டுபவரையும் விட்டுவிட்டு புதுமைத் துறையில் சென்றார்.

நாட்டில் நிலவிய சடங்கு முறைகளை மிகவும் வன்மையாகக் கண்டித்தாரெனினும் அதிகாரத்திற்குப் பெரிதும் கட்டுண்டிருந்தார். மன்னன் இவருக்கழைப்பு விடுத்து அரச அவையிலிருக்கக் கோரியதற்கு இவர் உடன்பட்டுப் பெரிதும் மகிழ்ந்து

அரச மாளிகையினருகே 'பூங்கா இல்லத்தில்' இனிதே வீற்றிருக்கையில் அரசியலுக்கரைபாகமும் செய்யுளுக்கு அரை பாகமுமாகப் பிரித்து நன்கு ஆராய்ந்தவண்ணமாயிருந்தார். அபாலோ தெய்வத்தின் மதவாதியாக விளங்கியதோடல்லாமல் அரசனின் அடியாராகவும் விளங்கினர். கன்பூசியஸ் போன்று அரசனுக்காசானுய் விளங்கித் தன்னுரிமையை இழந்துவிட்டார்.

மன்னனுதரவு பெற்று வாழ்ந்து வருகையில் ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாகத் தன் உறைவிடத்தை உலக இலக்கியத்தின் தலைநகராகத் திகழவைத்தார். ஆண் மக்களையும்—பெண்மக்களையும் கொண்ட குழுவமைத்துத் தான் தலைவராக இருந்தார். இலக்கியம்—நற்பொருள்—காதல் இன்ன பிறவற்றை நன்காராய்ந்தனர். தலைசிறந்த நாடகங்களை வரைந்து அக்கலையை நன்கு வளர்த்தார். இளமை கழிந்ததும் அமைதி கண்டார், போராடுமியல்பிலிருந்து நற்பொருளையறியுமியல்பு பெற்றுர். எழிலுக்கும் — பொலிவுக்கும் இவர் பெரிதும் விழைந்தார். அழுக்கிலும் எழில் இருக்கவேண்டுமென்றும் — தாழ்விலும் தகவு இருக்கவேண்டுமென்றும் விரும்பினர். மக்கள் மிகமிகத் தாழ்ந்திருப்பினும் அவர்களையேதான் பெரிதும் விரும்பினர்; மன்னனை மதித்தே இவர் வாழ்ந்திருந்தாலும் எளியோர்களை என்றுமே வெறுத்தாரில்லை. வாழ்நாள் முழுவதும் கசாப்புக்காரர்களையும், மெழுகுவத்திசெய்கிறவர்களையும், ரொட்டிக்காரர்களையும் நேசித்தே வந்தார். "கடவுள் கண்ணெதிரில் தாழ்ந்தவர்களே மிகவும் உயர்ந்தவர்கள்" என்று கூறினர்.

பதினெட்டாம் நூற்றுண்டில் உவமைபற்ற உலகப் பேரறிஞர் இவர்தான். வளப்பமும் கூர்மையும் நுணுக்கமும் மலிந்த அறிவு நிரம்பியவர். இவர் ஒரு சிறந்த கவி; உயரிய ஓவியப் புலவர்: இசைவாணர்; கூரிய அறிவியலார். வேறுபட்ட பொருள்களிடம் ஒற்றுமை காண கவி என்ற முறையில் பெரிதும் முயன்றுர். நிறம், செடி, கொடி, எலும்பு (auotomy) ஆகிய இவைகளைப்பற்றி நன்காராய்ந்தார். செடிகளின் அடிப்படை மாற்றத்தைப்பற்றி (metamorphos) ஒரு நூல் வரைந்து அதில் மலர்களெல்லாம் புகழுடைய இலைகளென்று விளக்கினர்.

இலேகள்தான் கவிகளாக மாறுகின்றன என்றார். மனிதனுடைய மண்டையை ஆராய்ந்து அதிலுள்ள ஒரு எலும்பைக் கண்டு பிடித்து அவ்வெலும்புதான் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள தொடர்பை உண்டாக்குகிறது என்றார்.

பேராசையற்றவர்; மன்னனிடமிருப்பினும் மண்ணாசை இவருக்கில்லவே இல்லை. மன்னன், பிரான்சுக்காரருடன் போர் புரியும்பொழுது சிலர் கூடாரத்திலிருந்து போரைக் கவனிக் காமல் கற்களைப்பற்றியும், மலர்களைப்பற்றியும் நன்காராய்ந்தார் யுத்த வெறிமூட்டும் பாடல்களைப் பாடவேயில்லை; ஏனெனின் இவருக்கனுபவமில்லை; என்றாலும் காதலை நன்கனுபவித்திருந்த மையால் காதலைப்பற்றிக் கனிந்து பாடினார்.

கதேவினுடைய மத்தியகால வாழ்வு மிகவும் கனிவுடைய நல்வாழ்வு: வாழ்த்துபெற்ற வாழ்வென்றுதான் கூறவேண்டும்; காதல் மனைவி; அழகிய குழவி; உவமையற்ற நண்பன்; வல் பியஸ் என்ற மங்கையைச் சந்தித்துப் பல ஆண்டுகள் கழித்து முப்பத்தெட்டாமாண்டில் மணந்தார்; மணந்த மறு ஆண்டு ஆண் மகவு பிறந்தது; நாற்பத்து நான்காமாண்டில் சில்லர் என்ற வருடன் நேசங்கொண்டார்; இவ்விருவரும் வேறுபட்ட கொள் கையுடையவர்கள். கதே ஒரு தேவனெனலாம். ஆனால் சில்லரே ஒரு ஈரலிழந்த மாணமுறும் நோயாளி என்னலாம். கதே அழகை விரும்பும் பேகன் கொள்கையையுடையவர்; சில்லரே நீதியை விரும்பும் கிறித்துவக் கொள்கையுடையவர். வேறுபாட்டில் தொடங்கிய நட்பு கடைசியில் விட்டுக்கொடுத்து இருவரும் ஒருவராயினர். வளமையிலுழன்றார் கதே; வறுமை யிலுழன்றார் சில்லர். இருவரும் கலைப்போரில் நம்பினார்கள். கவிதான் இவர்களுக்குத் தெய்வீகம்; இவ்விருவரையும் உயர்வுற வைத்தது கவிதான். இருவரும் மனமொத்து ஒருவரை ஒரு வர் ஊக்கி உயர்த்தி உதவி அறிவைப் பெருக்க அரண் செய் தனர். பதினொரு ஆண்டுகள் நட்புகொண்டு மனமொத்து பழகிய பின்னர் சில்லர் நிலைத்த உறக்கமெய்தவே சிறு குழவி யைப்போல் கதே கதவை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதார். "என் பேர்பாதி வாழ்வு ஒழிந்தது; என் வாழ்வுப் பட்டியல் இன்றிலிருந்து காலியாய்விட்டதே; மற்றைய வெள்

லேத் தாள்கள் என்னுடைய காலியான வாழ்வை விளக்குகிறது" என்றார்.

கதே நெடுங்காலம் வாழ்ந்தார். நீண்டநாள் வாழ்வுக்குக் கைம்மாறு தனிமையன்றிப் பிறிதொன்றுமில்லை. ஒருவர்பின் ஒருவராய் காதலித்தவர் அனைவரும் மறைந்தனர்—நண்பர்கள் இறந்தனர்--தங்கையுமிறந்தாள்—மனைவி இறந்தாள்—கடைசியில் தன் ஒரேமகனும் இறந்தான். வரைந்தார் அறுபது நூல்கள் இவர் யாத்த நூல்கள் சீர்திருத்தம்—புரட்சி—காதல் இன்னபிற அடிப் படையாகக்கொண்டவை. 'என்றாலும் உலகப் புலவர்களுடன் வைத்து எண்ணும் பெற்றிமையை நிரம்பப் பெற்றார். கம்பர்—இளங்கோ—வள்ளுவர்—ஷேக்ஸ்பியர் — டாண்டே — மில்டன் இவர்களைப்போன்றே செவ்வியல் கவி (clarrical poet) இவர் களுள் சிலர் முக்காலக் கவியாக விளங்கினர்; பலர் அக்காலக் கவியாக விளங்கினர். கதே முக்காலக் கவியாக விளங்கினர்; உணர்ச்சியும் இனிமையும்—நயமும்—ஒளியும் இவர் கவியால் என்றும் நடனம் புரிந்துகொண்டே இருக்கின்றன. ஜெர்மன் மொழிக்கு கவியரசர் கதே எனில் மிகையாகாது. இவர் யாத்த மிகப்பெரிய நூல் பாஸ்ட். உலகப் புகழ் எய்தியுள்ளது. இங்கி லாந்தெனில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நினைவுக்கு வருகின்றன. பெர்ஷியா என்றால் உமர்காயம் யாத்த ருபாயத் நினைவுக்கு வரு கிறது; தமிழ் நாடென்றால் இளங்கோ –கம்பர் — வள்ளுவர் நினைவுக்கு வராமலில்லை; இதாலி என்றால் டாண்டே யாத்த டிவைன்காமடி நினைவுக்கு வருகிறது; இதே போன்று ஜெர்மனி என்றால் கதே யாத்த பாஸ்ட் நினைவிற்கு வராமலில்லை.

பாஸ்ட் :—

கடைசியில் தன் அறிவின் பிழிவாக மிகச் சிறந்த பாஸ்ட் என்ற பேரிலக்கியத்தை யாத்தார்; முதல் பகுதி வரை வதற்கு முப்பதாண்டுகளாயிற்று; இரண்டாம் பகுதி முடிப்ப தற்கு இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாயிற்று.

இந்நூலின் தலையாய நோக்கம் மக்களியலையளந்து, மக்க ளின் கடமைகளை வரையறுக்கவேண்டுமென்பதே. இந்நாடகம்

பாத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டுளது. மனித உயிரைப்பற்றி, கடவுளும்—பிசாசும் போரிட்ட வரலாறுதான் இந்நூல். பிசாசு இறக்கும் மக்களை மதிப்பதே இல்லை. அது எப்பொழுதும் மறுக்குமியல்பையே கொண்டுள்ளது. நன்றாக இருப்பதைவிட இல்லாமலிருப்பதே நல்லதென்று நம்பிக்கைக்கொண்டது. ஒன்று மில்லாத சுவர்க்கத்தில் உலகம் நம்பி அவ்வுலகம் பயனற்று சென்றுகொண்டிருக்கிறதென்று கருதுகிறது. ஆதலால் கடவுளாலமைக்கப்பட்ட உலகை ஒழிப்பதும் மனித நல்லியல்பை நசுக்குவதும்தான் பணி என்று பிசாசு கருதுகிறது! பாஸ்ட் என்ற நிரம்பிய அறிவுபெற்ற வைத்தியர் அந்தப் பிசாசை மயக்கினால் வெற்றிபெற இயலுமென்றார்.

மனிதன் பக்குவமடையாத குறைபாடுடையவனென்றும் அவன் அரை இருளிலிருந்து மீளுவதற்குத் துன்பப்படுகிறானென்றும் அதே நேரத்தில் வாழ்நாள் முழுவதும் பாவம் செய்துகொண்டிருக்கிறானென்றும் ஒளி காண்பதற்குப் பெரிதும் போராடிக்கொண்டிருக்கிறானென்றும் கூறுகிறது. இறவாத் தன்மையுடைய உயிரை பிசாசால் அழிக்க முடியுமா என்று பிசாசு முயற்சிக்கிறது.

வாழ்வில் பிசாசு, பர்ஸ்டை பொன்—பொருள்—அழகு—உணர்ச்சி இன்னபிறவற்றால் மயக்கி சோதிக்கிறது. பொறுப்பின்றியே காதலின்பத்தைத் துய்க்கும் சோதனையை உண்டாக்குகிறது. மார்கிரெட் என்னும் அணங்கை பாஸ்ட் உணர்ச்சியின் பெருக்கால் கெடுக்க பிசாசு அரண் செய்கிறது; பிறகு பாஸ்ட், அவ்வணங்கை விலக்கிவிடுகிறார். முதல் பகுதி முழுதும் பாஸ்ட் பிழை செய்கிறார் என்றாலும் ஒரு வினாடிகூட இன்பம் துய்க்கவில்லை.

மன்னனவையில் கதேவைப்போல் பாஸ்ட் இடம்பெற்று சீரிய தொண்டின் காரணமாகப் பெருமையும் புகழும் எய்தினாலும் இன்பம் எய்தவில்லை. மன்னனிடமிருக்கும் வாழ்வை வெறுத்து, கடந்த வாழ்வை எய்த விழைகின்றார். கிரேக்க நாட்டு ஹெலன் அணங்கை உயிர்பெற வைத்து அவளை மணக்க

விழைகையில் அவ்வணங்கு மறைந்திடவே பெரிதும் வருத்த முறுகிருர். இஃதே போன்று பாஸ்ட் ஒவ்வொன்றிலும் அனுபவம் பெற்று மற்றொன்றிக்குச் சென்று எந்த ஒன்றிலும் இன்பம் கண்டாரில்லே. அவருடைய வாழ்வு முழுக்க முழுக்கப் பெருந் தோல்வியாகவே இருந்தது. நன்மை செய்ய விழைந்த பொழுதும்–தீமை செய்யவிழைந்தபொழுதும் தோல்வியைத்தான் கண்டார். மன்னனுக்காகப் போராடி வெற்றியைத் தேடித் தந்தாரெனினும் யுத்தத்தில் மக்கள் மடிந்தனர். பிசாசு, பாஸ்டுக்கு நாடு—பொன்—பொருள்—அழகிய அணங்குகள் இன்ன பிற அளித்தாலும் நிறைவெய்தவில்லே. உள்ளம் அமைதியைக் காணவில்லே. இளமைக்கால இன்பம் — இடைக்காலத்தில் பெற்ற பலன்கள் இவருக்குத் தீமைகளே விளேவித்தன. இளமையிலே எண்ணிய எண்ணமெல்லாம் சாம்பலாயின—விழி இழந்தார்—கடைசியில்தான் விழைந்த இன்பத்தையும் இழக்கத் தயாராய் இருந்தார்.

விந்தை எதுவெனின் எந்த இன்பத்தை இழக்கத் துணிந்தாரோ அதே இன்பம் அப்பொழுதே கிடைத்தது. கடலருகே உள்ள சதுப்பு நிலங்களே மக்கள் வாழ்வுக்காகப்பெற்றதாகவும் அதை மக்களுக்களிப்பதாகவும் கருதி மக்களனேவரும் இந்தப் பரந்தவிடத்தில் பேரின்பத்துடன் உழைத்து இன்புறுவதாகத் திட்டமிட்டு சிந்தனேயில் பாஸ்ட் மகிழ்கின்ருர். தன்னலம் தகையப் பெரிதும் வாழ்நாள் முழுதும் துன்புற்றுக் கடைசியில் சமுதாயம் நன்மையுறுவதைக்கண்டு களிக்கின்ருர். கடைசியில் பிசாசு வெற்றி எய்துகிறது; பாஸ்டின் உயிரைப் பிசாசு வெற்றியின் காரணமாகக் கோருகிறது. தேவதூதர்கள் ரோசா மலரிடை இறங்கி பாஸ்டின் உயிரை விண்ணுலகிற் கெடுத்தேகுகின்றனர். பாஸ்ட் பெரிய தவறுகளேச் செய்திருந்தாலும் ஒளியைக் காணப் பெரிதும் பாடுபட்டுழன்ருர்.

விண்ணுலகில் முதல் முதலில் பாஸ்டை வாழ்த்தியது மார்க்ரெட் பாஸ்டால் மண்ணுலகில் பாவம் புரிந்தாள்; இவையனேத்தும் மன்னிக்கப்பட்டன. இவ்வணங்கு பாஸ்டுக்கு வழி காட்டவேண்டியவளாக விளங்கினள். விண்ணுலகில் ஆண் மகனேக் காப்பது அணங்கே.

பாஸ்ட் என்ற பேரிலக்கியத்தின் சிறு சுருக்கம் இதுவே.

இப்பெரிய நூலை வரைந்து முடித்ததும் கதே நிலைத்த உறக்கத்திற்காயத்தமானர். இவர்மீது பற்றுகொண்ட பேரன்பர்கள் எண்பத்திரெண்டாமாண்டில் இவரின் பிறந்த தினத்தைக் கொண்டாட விழைந்தனர். இவண் மன்னனும் இருவரும் பல ஆண்டுகள் தங்கியிருந்தனர். அங்கு இவர் சுவரில் பல ஆண்டுகளுக்கு முன் எழுதிய கீழ்க்கண்ட வரிகளைக் கண்டார் :—

"குன்றினுச்சிகளிலே நிறைந்த அமைதி நிலவியிருக்கிறது; மர உச்சிகளிலே நீ மெல்லிய இளங் காற்றைக்கூட நீ உணர்வது மிக அருமை; காட்டிலுள்ள சிறு பறவைகளும் அவைகளுடைய வாயைத் திறந்து ஒலி செய்யாமல் அமைதியை நிறுவியிருக்கின்றன. தற்போது பொறுமையாயிரு—மிக விரைவில் நீயும் அமைதியுறுவாய்".

ஷ வரிகளைப் படித்ததும் விழிகளிலிருந்து நீர் பெருக்கெடுத்தோடிற்று; கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "மிக விரைவில் நீயும் அமைதியுறுவாய்" என்று மீண்டும் கூறினர்.

திரும்பினர் இல்லம்; படுத்தார் படுக்கையில் 16-3-1832-ல்; கழிந்ததும் ஆறுநாள் கண்ணை மூடினர்; இவ்வுலகைக் கடந்து அவ்வுலகுக்கேகுகையில் 'அதிக ஒளி' என்று கடைசியில் கதறினர்.

பாரதி: யார்?

[சு. இராமச்சந்திரன் IV U. C.]

பாரதி வாழ்ந்த காலத்தை, தந்தை திரு. வி. க. அவர்கள் "பாரதி சகாப்தம்" என்று மொழிந்தார். ஏன் மொழிந்தார். எத்தனையோ, தமிழ்ப் புலவர்கள் தந்தையார் காலத்தில் வாழ்ந் தார்களே, அவர்களை எல்லாம் கொள்ளாது பாரதியை மட்டும் கொண்டு அக்காலத்தை அவன் மேலேற்றிய தென்னை?

''மிக உயர்ந்த உண்மையின் உறைவிடங்களாக இருப்பவை தான் கலையின் சிகரங்கள்" என்றான் ஜெர்மன் கவி கதே. எனவே அந்தக் கலையின் சிகரமாக பாரதி விளங்கினதினால்தான் அவர் வாழ்ந்த காலத்தை 'பாரதி சகாப்தம்' என்றார் தந்தை. சிலர் வினவலாம் ஓர் கவிஞன் கவிதை அனைத்தும் உண்மையின் உறைவிடமாக இருக்க முடியுமாவென முடியாதுதான். ஆனால் எப்பொழுது முடியாதுபிறரை வேண்டுமென்றே துதிபாடுதலும், கவிதையே தொழிலாகக்கொண்டு வாழ்க்கை நடத்தலுமாகிய, நிலைமையையுடைய கவிஞனாக இருந்தால் அவன் கவி உண்மை யின் உறைவிடமாக இருக்க முடியாது. ஆனால் பாரதி எந்த நோக்கத்தோடு கவி உலகில் புகுந்தான் "பொழுதெல்லாம் எங் கள் செல்வம் கொள்ளைகொண்டு போகவோ நாங்கள் சாகவோ" என்று குமுறிய நெஞ்சத்துடன் "சொந்த நாட்டில் பிறர்க் கடிமை செய்து துஞ்சிடோம் — இனியஞ்சிடோம்" என்று நாட்டு விடுதலைக் குறிக்கோளுடன் "பொய்யொழுக்கை அற மெனக்கொள்ளும் பழமையை ஒழிப்பதற்காகக் கவியுலகில் புகுந் தார். எனவே அவன் கவிதையில் பொய்மைக்கு இடமில்லை.

ஆகவேதான் பாரதியும் பாடினான் "நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதி ருத்தல்".

நமக்குத் தொழில் என்று கூறினாரே தவிர தனக்குத் தொழில் என்று கூறவில்லை. எனவே பாரதி நாட்டுக்குழைத்த லுக்கு, கவிதையைத் தொழிலாகக் கொண்டானேயன்றி தன்

வாழ்வுக்கு உறுதுணையாகக் கொள்ளவில்லை. எனவேதான் அவர் கவிதைகள் கலையின் சிகரங்களாகக் காட்சியளிக்கின்றன. இனி அவர் தெய்வங்களைப்பற்றிப் பாடியதையும் கற்பனைக் கதையாக எழுதியதையும்கொண்டு இவையெல்லாம் உண்மையின் உறைவிடமா என வினவலாம். எந்த மனிதனும் காலத்தைத் தாண்டி வாழ முடியாது. அக்காலச் சூழ்நிலையை ஒட்டித்தான் தன் கருத்தைப் பரப்பமுடியும். எனவே கவிஞரும் இவ்விதிக்கு விலக்கல்லர். எனவே இக்கருத்தையுட்கொண்டு பாரதியை நோக்கல் வேண்டும். ஆக அக்கால சூழ்நிலைக்குப் பொருந்த மக்கள் நல்வாழ்விற்கு, விடுதலைக்கு இன்றியமையாதவைகளை அஞ்சாது எடுத்துக் கூறினாராதலால் தந்தை திரு. வி. க. அவர் வாழ்ந்த காலத்தை "பாரதி சகாப்தம்" என்றார்.

க, "உலக விடுதலைத் தலைவன்" :—

அவன் பாடல்களில் பெரும்பகுதியும் சுதந்திரம் பற்றியும், புத்துலகக் கருத்தும் காணப்படுகிறது. அதனால்தான் நாமக்கல்லாரும் "சுப்ரமணிய பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுறுக்கென்றேறும்" என்றார். இனி அவர் காலத்தில் அவருக்கு நிறைந்த எதிர்ப்பு இருந்தன. ஒரு பகுதியார் மொழிந்தனர் "பாரதிக்குப் பண்டாரப் பாட்டுத்தானே பாடத்தெரியும்; இலக்கணம் சுத்தமாகப் பாடத் தெரியுமா? எனக் கேலி செய்தனர்" "கஞ்சாப் போதையில் உளறியதெல்லாம் கவியாகிவிடுமா?" என மெத்தப் படித்த புத்திசாலிகள் பகன்றார்கள். இனி "சமுதாயக் கட்டுப்பாடுகளை எதிர்த்த அராஜகவாதியென" எதிர்த்தார்கள் சனாதனிகள். ஆனால் அதற்கெல்லாம் பாரதி அஞ்சவில்லை. அவ்வாறெல்லாம் குமுறிப் புடைத்த பெருமக்கள் இன்று இருக்குமிடம் தெரியவில்லை. காரணம் அவர் மொழிந்த சுதந்திரக் கருத்தும், புதுமைக் கருத்தும் மக்கள் வாழ்க்கையில் புகுந்து "கலையுரைத்த கற்பனையை மண் மூடச் செய்துவிட்டது". ஆனால் நம்மிந்திய நாட்டைவிட அவர் கருத்துப் பிற நாடுகளில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் நிறைவேறி வருகிறது. எனவே பாரதி இந்திய விடுதலைத் தலைவர் மட்டுமல்லர். உலக விடுதலைத் தலைவன் என்றும் கூற

லாம். அவர் வாழ்ந்த காலத்தில் சுதந்திரம் பெற்ற அயல் நாடுகளை உள்ளத்தின் உண்மையொளியொடும் வாழ்த்தினர் வணங்கினர்.

உ. **இறையன்பு :—**

பாரதி பழமையை வெறுப்பதாலும் வருணசிரம கருத்துக் களை வெறுப்பதாலும் அவரைச் சிலர் நாத்திகன் என்று மொழி கின்றனர். அவர் நாத்திகரல்லர்; ஆத்திகர்தான். ஆனல் தனக்காகத் தன் குடும்பத்துக்காக வாழும் ஆத்திகரல்லர். பிற ருக்காக வாழும் ஆத்திகர், எனவேதான் பிற நாட்டார் இன்ப மடைந்ததற்குதான் இன்பமடைந்து வாழ்த்துகிருர்.

பெல்ஜியத்திற்கு வாழ்த்து :—

"அறத்தினல் வீழ்ந்துவிட்டாய்? அன்னியன் வலியனகி
மறத்தினல் வந்துசெய்த வன்மையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினற் புலியைக்காக்கு மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினல் எளிமையாகிச் செய்கையால் உயர்ந்து நின்ருய்".

பிற நாட்டாரை வாழ்த்தும்போதும் தமிழுணர்ச்சி வீறிட்டு நிற் கிறது. இங்குத் தன் நாட்டை மறவாது அயல்நாட்டை வாழ்த் தினன்.

"மாகாளி பராசக்தி உருஷிய நாட்டில் கடைக்கண் வைத்தா ளங்கே. ஆகா வென்றெழுந்ததுபார் யுகப் புரட்சி". உலகப் புரட்சி யெழுந்ததாம். இப்பாடலில் பாரதியின் ஆழமான கடவுள் உணர்ச்சி தெளிவாகத் தெரிகிறது. புரட்சியெழுந்த நாடு கடவுளை நம்பாத நாடெனப் பாரதிக்குத் தெரியும். தெரிந் தும் அதன் "மாகாளி" எனத் தொடங்கி குடிமக்கள் சொன் னபடி ஆட்சி நடப்பதாகவும் மொழிகிருரே அதுதான் அவ னுக்குச் சிறப்பு. அவன் ஆத்திகனக இருந்தாலும் நாத்திக நாடு என வெறுக்கவில்லை". எல்லோரும் இன்புற்றிருப்ப தல்லால் வேறென்றறியேன்" என்ற ஆத்திகனவான். ஆனல் அவனை இன்று நாத்திகனென்று கூறுதல் குறைந்துவந்துள்ளது. அதுமட்டுமின்றி அவன் தான் வணங்கும் தெய்வத்தைப்பற்றி பாடியதை வைத்து அவரை வேதாந்தியெனவியாக்யானம் செய்

கிறார்கள் சில பெருமக்கள். எப்படியாயினும் வசை பாடாமல் இருந்தால் நன்றுதான்.

ரு. **அன்புலகம் :—**

பாரதி கண்ட உலகம் எத்தகையது?

"முன்பு பின்பின்றி மூவுலகத்தினும் அன்பின் அல்லதோர் ஆதிக்கம் உண்டாகுமோ?"

"தக்க இன்ன தகாத இன்னவென்று ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள மக்களும் விலங்கே; என்று **கம்பன் கண்ட** அன்புலகத்தைப்பாரதி விரும்பினர்; அந்த அன்பால் எங்கள் முன்னோர்கள் ஆண்டார்கள். அந்த அன்பினல்தான் மக்கள் துயர் நீங்கும். அந்த இன்புலகம் வேண்டுமென முரசறை கிறார்.

"அன்புசிவம் உலகத் துயர் யாவையும்
அன்பினிற் போகுமென்ற—இங்கு
முன்மொழிந் துலகாண்டதோர் புத்தன்
மொழி **யெங்கள் அன்னைமொழி**" என்றும்

"அன்பு வாழ்கென்று அமைதியிலாடுவோம்"
"ஒன்றென்று கொட்டுமுரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டுமுரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானிலம் வாழ்ப வருக்கெல்லாம்" எனப் பாரதி அன்பு முரசுகொட்டி இந்தப் பாரத உலகம் மட்டுமின்றி நானிலத்து மக்களையும் ஒன்றுபட வைக்கிறார். வள்ளுவரும் "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார். இன்னும் பாரதி

"அன்பென்று கொட்டுமுரசே—அதில்
ஆக்க முண்டாமென்று கொட்டு முரசே".
"அன்பென்று——மக்கள் அத்தனைபேரும் நிகராம்"
"அன்பென்று——அதில் யார்க்கும் விடுதலை உண்டு"
என்று அன்புலகத்தில் ஒற்றுமை முரசு கொட்டுகிறார்.

ச. **நாட்டுப் பற்று :—**

"தாய் நாட்டுப் பற்றைக் காட்டிலும் வேறு எதன்மீதும் அதிகப் பற்று இருக்க முடியாதென" மொழிந்தான் **பிளேட்டோ.**

பிளேட்டோவின் கூற்று மொழிவழியாகப் பிரிந்த நாட்டு மக்கள் உணர்ச்சியால் புலனாகிறது. பல கட்சிகள், பல மதங்களாகப் பிரிந்து நின்றாலும், நாடு, மொழி என்றால் ஒன்று சேர்ந்து உயிரைத் தியாகம் செய்தார்களே அதனால் புலனாகிறது. அந்த உணர்ச்சியின் உச்ச நிலையில் விளங்கினான் பாரதி.

எனவேதான் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்": கன்னிப் பருவத்திலே என்றன் காதில் விழுந்த திசை மொழியெல்லாம் என்னென்னவோ பெயருண்டு அவையாவும் யழிவுற்றிறந்தன கண்டீர்". "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை". சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர். "திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணங்கச் செய்தல் வேண்டும்" எனும், தமிழ்ப் புலவர்களை "வாருங்கள், பழங்கதைகள் சொல்வதில் மகிமையில்லை, புத்துலகக் கருத்துக்கள் சமைப்போம்" என்றும் முரசறைந் தழைக்கிறான். பண்டு தொட்டு இன்றுகாறும் நல் தமிழ்ப் புலவர்களெல்லாம் தெய்வ பக்திக்கே முதலிடம் கொடுத்து வந்தனர். "ஆதிபகவன் முதற்றே" எனவும் "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" எனவும் தொடங்கினர். ஆனால் நம் பாரதியாரோ தெய்வ பக்தியில்லாதவரல்லர், இருந்தாலும் நாட்டிற்கே சிறப்புக் கொடுத்தார். எனவேதான்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினு நனிசிறந்தனவே" என்று தெய்வபக்தி நின்ற இடத்திலே **தேச பக்தியை ஏற்றிய முதல் தமிழ் கவி பாரதிதான்.**

இதனாலன்றோ "நாட்டன் பில்லார் நடைப்பிணம்" என்றார் நம் **சுந்தரம் பிள்ளை.** இதனால் தெய்வத்திற்கு இழுக்கென்று கருதல் வேண்டாம். நாடு, நாட்டு மக்கள் வாழ்ந்தால்தான் தெய்வம் வாழ முடியும். பாரதி நாட்டன்பைத் தலைமையாகக் கொண்டான். அடுத்து நாட்டு மொழியையே தெய்வமாகக் கொண்டாடுகிறான்.

"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி, நயம்புரிவாள் எங்கள் தாய். அவர் அல்லவராயின் அவரை விழுங்கிப்பின், ஆனந்தக் கூத்திடுவாள். புது வருட வாழ்த்தில் "வாழிய செந்தமிழ் வாழிய நற்றமிழர் வாழிய பாரத மணித்திரு நாடு" என்று தமிழையும் தமிழனையும் முதலில் கூறினார்.

ரு, **சுதந்திரம் ;—**

"மனிதனுடைய சுதந்திரத்துக்கும் நல்வாழ்வுக்கும் விரோதமாக விருப்பவை ஏகாதிபத்தியங்கள்" என்றான் **டாக்வெல்லி** என்ற அறிஞன். இதனை உணர்ந்தான் பாரதி. கிளர்ந்தெழுந்தான் "புல்லடிமைத் தொழில்பேணி—பண்டு, போயின நாட்களுக்கு இனி மனம் நாணி, தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத் தொண்டு நிலையைத் தூவெனத் தள்ளி—வந்தே மாதரமென் போம்" என்று அன்று நம்மை ஆண்ட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர் முரசு முழக்கினான் பாரதி. அந்தப் போர் முரசு நமக்கு வெற்றி முரசு முழக்கும்படி செய்தது. அந்த வெற்றி முரசை நேரிலிருந்து அடிக்க முடியவில்லை பாரதிக்கு.

சுதந்திரம் கிடைக்குமென்பதை உணர்ந்து "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்று பாடிச் சென்றான்.

இன்றும் பாரதி சுதந்திரத்தைக் கண்ணீரால் வளர்த்தோம் கண்ணீரால் காத்தோம் என உள்ளம் பூரிக்கிறான்.

"கண்ணீர் விட்டே வளர்த்தோம்? சர்வேசா!
இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ!"

வ. உ. சி. திலகர் போன்ற தலைவர்கள் சிறையில் நொந்து வாடுவதைக் கண்டு இறைவனை நினைந்து கண்ணீர் வடிக்கிறார்.

"மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலார்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையே".

இவ்வாறெல்லாம் புலம்பிய பாரதி, "சுதந்திரம் உறுதியாகக் கிடைக்குமெனத் துணிந்துதான்"

"காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணிநிலம் வேண்டும்" என ஆனந்தப் பள்ளுப் பாடினார். அந்தப் பள்ளு நீடு வாழிய! இறுதியில்

"இன்பச் சுதந்திரம் நின்இன் னருளால் பெற்றதன்றோ?
அன்பற்ற மக்கள் அதைப் பறித்தால் காவாயோ?
என்று சுதந்திரத்தைக் காக்கும்படித் தேசியத் தொண்டர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

கூ. "பெண்ணுரிமை"

உருஷ்யாவில் குடியரசு என்று உலகறியக் கூறினார்களாம். ஆக அங்கு அடிமைக்கு தளையில்லை யாருமிப்போதடிமையில்லை, அவ்விடம் கிருதயுகம் தோன்றியுள்ளது பெண்களெல்லாம் விடுதலை பெற்றார்கள். அதனை மகிழ்ச்சியோடு பேசி நாம், பாடுவோமாக என்று தமிழ்நாட்டுப் பெண்களை அழைத்துக் கும்மியடிக்கிறார். தமிழ் நாடு முழுவதும் குலுங்கும்படியாக கும்மிக் யடிக்கச் சொல்கிறார். இன்னும் பல அடிமைத்தளை அறுபடும் படியாகக் கும்மியடிக்கச் சொல்கிறார் பாரதி.

பின்னர் பாரதி சிறிது சிந்தனை செய்கிறார். "சென்ற தலைமுறைகளின் பரம்பரை வழக்கங்கள் இன்றைய மக்களின் மூளையை இமய மலைபோல் அமுக்கிக்கொண்டிருக்கின்றன" என்று **மார்க்ஸ் கூறினானே.** எனவே பரம்பரையில் ஊறியவர்கள் புதுமையை வெறுப்பார்களென்று நன்கு உணர்ந்தான் பாரதி.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி" என்று கூறியவர்.

இதனால் பெண்கள் ஆண்களை மதிக்கமாட்டார்களென ஒரு பகுதியார் எண்ணுவாரென்று கருதி, பாரதியார்

"வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டிவந்தோம் என்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்" எனவும்
"காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வோமடி"

என்று பழமைக்கும் அடிமைத்தனத்திற்கும் சவுக்கடி கொடுக்கிறார். இனி அதுமட்டுமின்றி

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்"

என்று ஆணும் பெண்ணும் நிகரெனக்கொண்டு, அறிவில் சிறப்புற்று ஐரோப்பாவில் ஓர் பகுதி வாழ்கிறது. அங்கு அறிவும் வளர்கிறது, ஒழுக்கம் வளர்கிறது. அறிவும் ஒழுக்கமும் சிறப்புறுவதால் "ஈவோரும் இரப்போருமில்லாத உலகமாக அது விளங்குகிறது. அந்த உலகைத்தான் முப்பது கோடி சங்க முழுமைக்கும் விரும்புகிறான் பாரதி. "பெண்மையைப்போற்றினால்தான் அந்த உலகு உருப்பட முடியுமென மொழிந்தார்". "இல்லோர் கையற, வாழ்ந்த பெரியார்". எனவே பாரதியும்

"துன்பம் தீர்வது பெண்மையினாலடா!"
"வலிமை சேர்ப்பதுந் தாய் முலைப்பாலடா!"
"உயிரினுக் குயிராயின்ப மாகிடும்
உயிரினுமிந்தப் பெண்மை யினிதடா!"
"நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி கைப் பணியிலே!"
"காற்றிலே விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே!"

"அன்னமூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணைக் காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத்தே முத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கரங்களைப் பாடுவோம்"

எனப் பெண் சக்தி எவ்வளவு இன்றியமையாதென முழங்குகிறார். இந்த முழக்கங்களெல்லாம் இப்பொழுதுள்ள தேசியவாதிகளில் ஓரிருவருக்காவது தெரியுமா என்பது ஐயமே! பாரதி கூற்றைக் கொண்டு பெண்மைக்கு உரிமைதர விரும்பாதவர்கள், நம் தெய்வங்கள் பெண்மைக்கு எவ்வாறு சிறப்புக் கொடுத்துள்ளன என்பதை ஓர்வாராக.

எ. சாதிக் கொடுமை.

சாதி ஒழிப்புப்பற்றிச் சிறு குழவிகள் வழியாக பாரதி படம் பிடித்துக்காட்டுகிறார். "சாதிகளில்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என மிகவும் அழகாகவும் பக்குவமாகவும் பாரதி குழந்தைக்குப் பால் ஊட்டுவதுபோல் ஊட்டுகிறார்.

"ஆயிரமுண்டிங்கு சாதி எனில்—சகோதரரன்றோ!"

எனவும் "சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்—என்றும்
நிகரென்று கொட்டுமுரசே"

என்று பாரதி சாதிக்கொடுமைக்கு இரங்கலும், அன்பு வாழ்வுக்கு வாழ்த்துப் பறையும் ஒரே முரசத்தில் முழக்குகின்றார்.

பார்ப்பனரிடையில் பாரதி பிறந்தவர் ஆயினும் "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!" என மகிழ்ச்சிப் பள்ளு பாடுகிறார்.

இனிக் கொள்ளைக்கே சென்றாலும் வஞ்சஞ் செய்து கூசாமல் வாங்கிடுவான் லஞ்சம்"; என்றும், பேராசைக்காரனடா பார்ப்பான் பெரிய துரையெனில் உடல் வேர்ப்பான் யாரானாலும் கொடுமை செய்வான், பணம் அள்ளியிடயில்லை எனில் வைவான், என்றும் மறவன் பாட்டில் பார்ப்பனியத்துக்கு சவுக்கடி கொடுக்கிறார். இறுதியில்

"சாதியிரண் டொழிய வேறில்லை என்று
தமிழ் மகள் சொன்ன சொல்லமிழ்தம் என்போம்"

என்று நாட்டு விடுதலைக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் சாதியொழிப்பு இன்றியமையாததெனை உணர்ந்து ஔவையின் வாக்கை அமிழ்தமெனக் கொண்டாடுகிறார்.

அ. **பாரதி யார்!**

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்று பாரதி கூறினார். அதனைக்கொண்டே பாரதியை ஆராயலாம். பாரதி ஓர் சர்வ தேசீயவாதி, எனவே பாரதி ஓர் நாட்டுக்கு உரியவரல்ல, அவரது உள்ளத்தின் ஒளியை விரும்புகின்ற எல்லா நாட்டுக்கும் உரியவன். அவன் அவ்வாறு உரியவன் என்பது பிற சுதந்திர நாடுகளை வாழ்த்திய சிறந்த நிலையினின்றும் நாம் அவரைத் தெளிவாக அறியலாம். சர்வதேச கண்ணோட்டமுடையவர் அரசியல் விடுதலையைத்தான் விரும்புவர். அதாவது அடிமை அரசியல் நீங்கி, மக்கள் அரசியல் விரும்புவர் அந்த முறைப்படி, பாரதி, ஏகாதிபத்தியத்தின் அடிமைத் தளையை நீக்கிப் போராடினார். இறுதியில் அறிஞர்களுக்குண்டான நியதிப்படி வறுமையில் வாடி வதங்கினார் இறுதியில் தான் விரும்பின குடியாட்சியை காண முடியாது மண்ணுள் மறைந்தார்.

"உயிரோடு இருந்த காலத்து உதவாத பெருமக்கள் இறந்த பிறகு மண்டபங் கட்டினார்கள். அண்ணல் காந்திஜியிடம் பாரதியை அறிமுகப்படுத்த வெட்கப்பட்ட பெருமகனார் வான வூர்தியில் போந்து பாரதியின் மண்டபத்தை திறந்துவைக்க வந்துவிட்டார். திறந்தும்விட்டார். இப்பொழுது அம்மண்டபம் பாழடைந்து கிடக்கின்றது.

பாரதி எந்த அளவுக்கு நாட்டு விடுதலைக்காக செந்நீர் சிந்தப் பாடினாரோ, அந்த அளவுக்கு சாதிக் கொடுமைகளையும், ஆணிவேர், பக்கவேர், சல்லி வேராகப் பிய்த்து எறிகிறார். "சாதிகளில்லையடி பாப்பா" எனச் சிறு குழந்தைகளுக்கு அறிவுறுத்தும்பொழுது, எவ்வளவுதான் வைதீகத்தில் ஊறியவர்களா

யிருந்தாலும் ஓர் உணர்ச்சியுண்டாகும்படி அன்புக் கிள்ளல் கிள்ளிப் பாடுகிறார். பாரதி மக்கள் நல்வாழ்க்கைக்காகப் போராடிய தலைவராதலால், மக்கள் நல்வாழ்க்கையின் எதிர்காலத்தைப் பற்றிப் பாடினார். எனவேதான் அவர் பாட்டு கற்பனையல்ல, உண்மையின் உறைவிடம் என்றேன். உண்மை என்றும் அழியாது, பாரதி கவியும் என்றும் அழியாது நிலை நிற்கும். பாரதிக்குப்பின் தோன்றிய சில புலவர் தன் புகழுக்காக அரசியல் தலைவர்களைப் புகழ்ந்து, புகழ் பெற்றார்கள். ஆனால் பாரதியோ அவ்வாறு பாடவில்லை. கொள்கை அடிப்படையில் இருந்து உண்மையான உள்ளத்தோடுதான் பாடினார் என்பது தேசியக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நன்கு புலனாகும். எனவே பாரதியின் கவிதைகள் கலையின் சிகரங்கள். பாரதி மக்கள் நல்வாழ்க்கைக்குப் போராடிய ஓர் அறிஞர். அவர் வாழ்க!

இறுதியாக அவர் கவிதையின் அமைப்பைப்பற்றி ஓர் அறிவிப்பு. கவிதையென்றால் ஒளி தெளிவு, குளிர்ந்த நடை, ஆகிய இம்மூன்றும் சிறந்திருக்க வேண்டுமென்பது கம்பர் எண்ணம். அவ்வெண்ணம்கொண்டு பாரதி கவி புனைந்தாராதலால் அவர் கவிதை துள்ளி விளையாடுகிறது.

அடுத்து "சிறந்த எழுத்தாளர் என்றால் மனிதனுடைய எண்ணத்தைச் செம்மைப்படுத்தும் சிற்பியாக இருக்கவேண்டுமென ஸ்டாலின் மொழிந்தார். அம்மொழிப்படி பாரதி மனித எண்ணத்தைத் துருவித் துருவி செம்மைப்படுத்தும் சிற்பியாக விளங்கினார். எனவே பாரதி சிறந்த எழுத்தாளருமாவார்.

வாழ்க பாரதி தமிழ்.

“இறப்பிலும் இன்பம்”

[P. பட்டுசாமி IV U. C.]

அம்மா! பூங்கோதை! இந்த அமைதியான நள்ளிரவில், உன் விடுதிக்கு ஏன் வந்தேன் என்று எண்ணுகின்றாயா? அமைதி எல்லோருள்ளங்களிலுமா குடிகொண்டிருக்கிறது? ஒரு புடை புயலால் தாக்கப்பட்டு, சீறியெழும் அலையொடு கூடிய பேரொலியைக் கேட்கிறோம். மற்றொருபுறம் கற்றுத்தெளிந்தவர் நெஞ்சம் போல் கலங்காது நிற்கும் கடலைக் காணுகின்றோமல்லவா? உலகத்திலும் அப்படித்தான் சிலருக்கு இன்பத் தென்றல் நறுமணமளைந்து நெளிந்தோடி வருகிறது. பலருக்குத் துன்பச் சூறுவளி சாவொலியை எழுப்பிக்கொண்டு வருகிறது.

வியப்படைகிறாயா பூங்கோதை! அல்லது துயிலுங் காலத்தை வறிதே போக்குகிறேனென்று வருந்துகிறாயா? வருந்தாதே! நீள் துயிலளிக்க மருந்து கொண்டுவந்திருக்கிறேன் ஆமம்மா! மருந்து ஔவை யுண்ட நெல்லிக்கனி போல நீண்ட நாள் வாழச் செய்யக்கூடியதல்ல! உயிர்க் கொல்லி மருந்து இதோபார் நஞ்சு!

நெஞ்சங் கலங்குகிறாயா? கண்ணே! கலங்காதே! உன்னைப் பெற்றெடுத்த உரிமை எனக்கில்லாவிட்டாலும், பெட்புடன் பேணி வளர்த்த உரிமை எனக்குண்டல்லவா? அந்த உரிமையின் பரிசைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். மறுக்காதே உவப்புடன் ஏற்றுக்கொள்.

நமது சிற்றன்னை இந்த நேரமல்லாத நேரத்தில் பார்க்க வந்திருக்கிறாள். நன்மையும் தீமையும் அகால நேரத்தில்தான் உருவாகும் என்பார்கள். படரவேண்டிய பசுங்கொடி நாம். அதற்கேற்ற பசுங்கொம்பு பார்த்து வந்திருப்பாள் நமது சிற்றன்னை, என்று எண்ணியிருப்பாய். படரவேண்டிய கொடியைத் துண்டிக்க வந்திருக்கிறேன். ஆமம்மா! உனக்கும் உலகத்திற்குமுள்ள

தொடர்பைக் கத்தரிப்பதற்குக் கத்தரிக்கோல் கொண்டுவந்திருக்கிறேன்.

மரக் கோடுகளிலே பூக்கும் மலர்கள், அவ்வளவும் காயாகிக் கனியாகி விடுவதில்லை. இடையிலே பறவைகளாலுண்ணப்பட்டனவும், காற்றலைப்பால் உதிர்க்கப்பட்டனவும் போக, முதிர்ச்சி பெற்றுக் கனியாவன மிகச் சிலவே. மக்களின் வாழ்க்கை நிலையும் அப்படித்தானேயம்மா அமைந்திருக்கிறது. முற்ற வாழ்ந்தவர்கள் நூற்றுக்கு ஓரிருவர்கள்கூட இருப்பார்களோ என்னவோ?

உனது தாய்! என்னுடைய அக்கா! நீ பிறந்த அன்றே இறந்தாள். உன் தந்தை என்னை மணந்தார். உன்னை வளர்க்கும் கடமையும் பொறுப்பும் எனக்குண்டாயிற்று. நாளுக்கு நாள் உனது வளர்ச்சியின் மாட்சியும், தளர் நடையின் காட்சியும் எனது உள்ளத்தைக் குளிரவைத்தன. உனது தங்கை மலர்க்கொடி என் வயிற்றில் பிறந்தாள் என்ற வேற்றுமையல்லாமல் உங்களிருவரிடையே நான் எந்தவித பேதமும் பாராட்டவில்லை. சீர்பெற வளர்த்தேன். ஆனால் இன்று கண்களில் நீர் வடிய நிற்கிறேன்.

நீ சிரித்து விளையாடும்போது, உனது கறையற்ற நெற்றியிலே விழும் வளைவுக் கோடுகள்; செந்நிறக் கன்னங்களில் தோன்றும் குழிகள்; குருதியைப் பழிக்கும் கொவ்வையிதழ்களின் மலர்ச்சி; ஆமம்மா! உனது அழகைக் கூறுவதற்கு நான் கம்பனாகிவிடுவேன்; உன் அப்பா காளிதாசனாகக் காட்சியளிப்பார். அழகின் உச்சியிலே இருந்த நீ அடிவாரத்திற்கு தள்ளப்பட்டாய். அம்மை நோயால் பீடிக்கப்பட்டு, கலை முற்றிய முழுத் திங்களென ஒளிவீசிய உனது குளிர் முகத்தில், அம்மைத் தழும்புகள் அடைக்கலம் புகுந்தன. அழகோவியமாக விளங்கிய நீ வெறுப்புணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இன்று விளங்குகிறாய்.

பெண்கள் பிறந்த இடத்தில் வளர்ந்து, வாழ்க்கை இன்பத்தை நுகர, வேறோரிடத்திற்குப் போகவேண்டியவர்கள்.

இவை இயற்கையின் அமைப்பு. இங்நியதியில் நீயும் மலர்க்கொடியும் இருக்கிறீர்கள். உன்னினும் இரண்டாண்டிற்கு இளையவள் தான் மலர்க்கொடி. ஆனல்!.........

என்னவென்று கேட்கிருயா பூங்கோதை! சில நாளாக மலர்க்கொடி முறையாக உணவு உட்கொள்ளாது உடல் மெலிவதைப் பார்த்திருக்கிருய். நீ ஒருநாள் வற்புறுத்திப் பாலையும் புகட்டிப் பார்த்தாய். குடித்தாளில்லை. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத்தான் பாலும் புளிக்கும் பருவரற் படுவாள் "பாலு முண்ணுள் பழங்கண் கொண்டு" என்று இலக்கியச் சுவைப் படக் கூறி, நீ, அங்நிலையிலுள்ளவளல்லவே என்று கூறிச் சிரித்தாய். மலர்க்கொடியின் நிலை, இலக்கியத் தலைவியின் நிலைமையிலேயே யுள்ளதென்பதை நீ அறியமாட்டாய். கண்ணற்றவன் காட்சிகளைக் கண்டு களிக்க இயலாவிட்டாலும் கண்ணுள்ளவனுக்குத் தடையாக இருக்கக் கூடாதல்லவா? பூங்கோதை! நீ இப்போது மலர்க்கொடியின் கண்களை கருந்துணியால் மறைத்து நிற்கிருய்.

கேளம்மா! பூங்கோதை! உன்னெழிற்கேற்ற கொழுநனை அமையவேண்டும். அதை என்னிரு விழிகளால் அள்ளிப் பருக வேண்டும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியிருந்தேன். உன்னை மணக்கோலத்தில் காண என்னுள்ளக் கடலில் எழுந்த ஆசை அலைகள் கொஞ்சமல்ல! என்ன செய்வது? யாழிடம் நரம்பிருந்தாலன்றே இசையை எழுப்பப் பலரும் முன் வருவர்.

பிறந்த அன்றே பெற்றுளைப் பிரித்தாள் என்று ஊரார் உன்னைப் பழிதூற்றினர். வெறுத்தேனில்லை. மாருக அன்பு காட்டினேன். ஈன்ற தாயினும் மேலாக ஓம்பினேன். கண்ணே! மணியே! என்றழைப்பதில் தனியின்பங் கண்டேன். இப்போது ஆட்டுக் கிடாவை வளர்த்து ஆண்டவனுக்குப் பலியிடும் பூசாரியாக மாறிவிட்டேன். ஆமாம் பூங்கோதை! இதோ பார் நஞ்சுருவில் கொடுவாள்.

"காதல்" இரண்டு அன்புள்ளங்களின் நெஞ்சப் பிணைப்பு. "செம்புலப் பெயல்நீர்" போலப் பிரித்துப் பார்க்க முடியாத

பெற்றி வாய்ந்தவை. என்று ஒருநாள் மலர்க்கொடியுடன் பேசிக் கொண்டிருந்தாயல்லவா? இப்போது நினைத்துப் பாரம்மா! அந்த அன்புள்ளங்களை அறுத்து விடலாமா என்று. அதற்காக எனதுயிரை மட்டும் போக்கிவிடலாமா? என்று நினைப்பாய். நீ இறந்தால் பழியில்லை. மலர்க்கொடி இறந்தால் என்றென்றும் நீங்காத பழி நிலைத்து நிற்கும். ஆமம்மா! மகள் மேலுள்ள பற்றுதலல்லம்மா நான் கூறுவது.

உன் தந்தையின் தங்கை மகன் இளங்கோ: ஆம் பூங் கோதை! அவன் தேடிவரும் கொண்டல். வாடிய பைங்கூழ்; மலர்க்கொடி! ஆனால் உன் அப்பா புயலாகவல்லவா மாறி விட்டார்.

இளங்கோ; மலர்க்கொடியை மணஞ்செய்து தரவேண்டு மென்று உன் அப்பாவைக் கேட்டான். பூங்கோதையை ஏற் றுக்கொள் என்றார். இளங்கோ மறுத்தான். மூத்தவருக்குத் திருமணம் நடைபெறும்வரை, இளையவளைப்பற்றிய பேச்சே எழக்கூடாது என்று கூறியதுமட்டுமல்ல! எப்போது பூங் கோதையை ஏற்றுக்கொள்ள மறுத்தாயோ இனி என் வீட்டு வழியும் வரவேண்டாமென்று வெறுப்புடன் விரட்டிவிட்டார்.

இன்று மாலை மலர்க்கொடி வாந்தி எடுத்தாள். ஒரு நோயு மில்லாத மலர்க்கொடி வாந்தி எடுக்கக் காரணமென்ன! இளங் கோவின் தொடர்பு உன் தங்கையின் வயிற்றிலே ஓருயிர் வளர் கிறது. இந்நிலையில் மலர்க் கொடிக்குத் திருமணம் நடைபெறா திருந்தால் நிலைமை என்னவாகும். மலர்க்கொடி கெட்ட நடத்தையுடையவள், விபச்சாரி, என்றெல்லாம் ஊரார் கூரம் பினுங் கொடியதாகிய கடுஞ் சொற்களை வீசுவர். உன் தந்தைக் குத் தெரிந்தால், அவரால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ என்றெல்லாம் எண்ணித்தானம்மா இங்கு வந்தேன். அன்பு மொழி புகலவல்ல! ஆருயிரைக் கேட்பதற்கு.

தவறியவள் மலர்க்கொடி. அவள் வாழ ஒன்றுமறியாத என்னுயிரை ஏன் கொடுக்கவேண்டுமென்று எண்ணுகிறாயா பூங்கோதை! மலர்க்கொடி இறந்தால் கெட்ட நடத்தையால்தான்

இறந்தாள் என்ற பழிச்சொல் வருமே என்றுதானஞ்சுகிறேன். அந்தப் பழிச்சொல் வாராதிருக்கவும், நமது நாட்டிலே உயிரினும் மேலாக மதிக்கப்படுகின்ற "மானமும்" காப்பாற்றப்பட வேண்டுமானால், உனதுயிரை இழப்பதனால்தான் முடியும். கடல்வாழ் இப்பியும் பிறரை அழகுபடுத்த முத்தை யீன்று தன்னுயிரைத் தியாகம் செய்கிறது.

உணர்ச்சி ஒவ்வோருள்ளத்திலும் ஊடுருவி நிற்குந் தன்மை வாய்ந்தது. உனக்குமிருக்கிறது. மறுக்கவில்லை. ஆனால் அதைத் தணிவிக்கத் துணிவுடையோர் யார். மலர் நிறையத் தேனிருந்தாலும் அதைச் சுற்றிச் சிலந்தி வலை பின்னியிருந்தால் சுரும்பு நெருங்குமா? அதுபோலத்தானம்மா உனது அழகும் அம்மைக் கொப்புளங்களால் மறைக்கப்பட்டுவிட்டது. அதற்கு ஈடு செய்யவேண்டுமானால் நிறைந்த பொருள் வேண்டும். அது தான் நல்லியல்புடையாரிடம் அமைந்து கிடக்கும் நற்பண்பற்ற தாயிற்றே.

சேயின் நோய் நீங்கத் தாய் மருந்துண்பதுபோல; நீ இந்த நஞ்சையுண்டு நமது குடிக்குவரவிருக்கும் பேராபத்தாகிய நோய்களை நீக்கவேண்டுமம்மா! என்று கூறிக்கொண்டே எடுத்து வந்திருந்த பாலுடன்; நஞ்சையும் கலந்து கொடுத்தாள்.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த பூங்கோதையின் முகம், செங்கதிர் வரவுகண்ட செந்தாமரைபோல மலர்ந்தது. நாட்டைக் காப்பாற்ற கிருஷ்ணவேணி நஞ்சு குடித்து உயிர்விட்ட வரலாறு அவள் நினைவுக்கு வந்தது. அவள் மிக்க அழகைப் பெற்றதால் உயிரைத் துறக்க நேர்ந்தது. நாம் அழகற்ற காரணத்தால் உயிரை விடுகிறோம். நமது செயல் அவ்வளவு செயற்கரிய செயலன்று; ஆயினும் இருப்பதால் விளையும் தீமையும், இறப்பதால் விளையும் நன்மையும் எண்ணி மகிழ்ச்சியுற்றாள். இறப்பிலும் இன்பம் இருப்பதாக உணர்ந்தாள். கற்சிலைபோன்று எதிர் நின்ற சிற்றன்னையைப் பார்த்து, புன்முறுவல் பூத்தபடியே, பசி வேட்கையுடையான் பழச்சாறு அருந்துவதுபோல அந்நஞ்சைக் குடித்துவிட்டு அமர்ந்தாள். ஏதோ திடீரென்று நினைத்தவளாய் தனக்குப்பின் புறமிருந்த

மாதவி

★

வித்துவான், ஆ. சிவலிங்கனுர்,
மயிலம்.

சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திராபதி யென்ற நாடகக் கணிகைபால் மகளாகப் பிறந்தவள் மாதவி. சிறந்த அழகுடையவள்; ஆடல் பாடல்களில் நன்கு தேர்ந்தவள். ஒருகால் சோழன் கரிகால் வளவன் அவைக்களத்து ஆடரங்கு ஏறித் தன் ஆடலைத் திறம்படக் காட்டி யரங்கேற்றினுள்; அரசன் மகிழ்ந்து பச்சை மாலையொன்றும், ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன்னும் தரப்பெற்றுள். அம்மாலையைக் கூனியொருத்தியிடம் கொடுத்து இம்மாலையை ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்துப் பெறுவோர் மாதவிக்குக் கணவனுவார்'' என்று கடைத்தெருவில் விலையிடச் சொன்னுள். ஆங்கு வந்த கோவலன் அதனைத் தான் விலைகொடுத்து வாங்கி மாதவிக்கு மணுளன் ஆனுன். அன்றுமுதல் தன் மனைவியாம் பெறலருங் கற்பின் திருவினளாகிய கண்ணகியை மறந்தவனுகி மாதவி மனையிலேயே மகிழ்ந்துறைவானுனன். இக்காலத்தில் அவனுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அதன் பெயர் மணிமேகலை யென்பதாம்.

[206-ம் பக்கத் தொடர்ச்சி]

சுவற்றைத் திரும்பிப் பார்த்தாள். அதில் பூங்கோதையாலேயே வரையப்பட்டிருந்த:

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்''

என்ற வரிகள் அம்மெல்லிய விளக்கு வெளிச்சத்திலும் தெரிந்தன. அவைகளை நீ ஏன் பார்க்கவேண்டும் என்பதுபோல இமைகள் அக்கண்களை இறுகப் பிணைத்து நின்றன.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றது. அவ்விழாவில் மாதவி நாடக அரங்கேறி, பல்வகைப் பட்ட பாடல்களைப் பாடியும் பதினேருவகை ஆடல்களை ஆடியும் மக்களை மகிழ்வித்தாள். மாதவியின் அழகு, ஆடல் பாடல்களைப் பிறரும் துய்ப்பது கண்ட கோவலன் ஊடல் குறிப்புக் கொண்டான், அவன் அது நீங்கி உவக்குமாறு பலவகையில் தன்னைப் புனைந்து அவனை மகிழ்வித்தாள் மாதவி. அவள் அவன் கூடல் காரணமான ஊடல் கொண்டான் என்றே எண்ணினுள். அதனுல் அவனை அவ்வாறு மகிழ்விக்க முயன்றுள். பின்னர்க் கடற்கரை சென்று ஓரிடத்தில் தனித்திருக்கையில் யாழ் ஒன்றினைக் கோவலன் கையில் கொடுத்து இசைக்க வேண்டினுள். கோவலனும் அகப்பொருட் சுவை ததும்பப் பாடி இசைத்தான். அவன் பாக்கள் அகப் பொருட் சுவை மிக்கனவாய் இருக்கவே அவன் வேறு ஒருத்திபால் எண்ணங்கொண்டான்போலும் என்று மாதவி நினைத்துவிட்டாள். உடனே அதற்குப் புலந்தவளாகத் தான் அவ் யாழினை வாங்கித் தானும் வேறு குறிப்பு உடையவள்போல அகச்சுவை ததும்பப் பாடினுள். அது கேட்ட கோவலன், 'இவள் வேறு ஒருவன்பால் எண்ணம் உடையவள்போலும்' என்றெண்ணி அவளை விட்டுப் பிரிந்தான். பிரிந்தவன் அன்றிரவே கண்ணகியுடன் சிலம்புவிற்றுப் பொருள் தேட மதுரை நோக்கிச் சென்றுன். மதுரையில் சிலம்பு விற்கச் சென்றபோது ஒரு வஞ்சகன் பொற்கொல்லனுல் குற்றம் சாட்டப்பட்டு அரசனுல் கொலைப்படுத்தப்பட்டான். கண்ணகியும் பாண்டியனைப் பழிவாங்கி மதுரையையும் எரியூட்டிச் சேரநாடு சேர்ந்து விண்ணுலகடைந்தாள். இவற்றைக் கேட்ட மாதவி தானும் உலகை வெறுத்து மாதவத்தை மேற்கொண்டாள். மகள் மணிமேகலையையும் துறவுக்கோலம் கொள்ளச் செய்தாள்.

மாதவியின் வரலாற்றை நமக்கு நன்கு விளக்கிச் சென்ற இளங்கோவடிகள் அவளது குண மாண்புகளை ஆங்காங்கே காட்டிச் சென்றிருக்கின்றுர். அவற்றுள் கூறுமற் கூறிச்சென்ற ஒன்றே நம் சிந்தனையைக் கிளரச் செய்கின்றது. கோவலன் பாடிய கடற்கரைப் பாடல், அவன் வேறொரு குறிப்புடையவன்

போலத் தோன்றியது என்று கொண்டு மாதவி தானும் வேறொரு குறிப்புடையவள்போலத் தோற்றும்படிப் பாடியது பொருந்துமா? அப்படிப் பாடக் காரணம் யாதாம்? இவ்விரண்டுமே நாம் காண வேண்டுவன.

உண்மையில் மாதவிக்குக் கோவலனையன்றிப் பிறன் ஒருவன்பால் மனம் நாடியதே யில்லை. அவள் எச்செயலையும் கோவலன் பொருட்டே செய்துவந்தாள். கோவலனை மகிழ்விப்பதே அவள் உள்ளக் குறிக்கோள்.

> நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
> கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
> கோலங் கொண்ட மாதவி. (சிலப்பதிகாரம் 4, 31–4)

என்றார் இளங்கோவடிகள். தான் நாடகக் கணிகையாதலின் ஆடலும் பாடலும் கொண்டு பிறரை மகிழ்விக்கும் செயலையும் விடாது போற்றிவந்தாள். அம்முறையிலேயே இந்திர விழாவிலும் அரங்கு ஏறிப் பாடியும், ஆடியும் மக்களை மகிழ்வித்தாள். இவ்விடத்தில் உயர்திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தமது சிலப்பதிகார ஆராய்ச்சி என்ற நூலில் கூறுவனவற்றைக் காண்பாம்.

“இந்திர விழாவில் இம்மாதவி அரங்கேறி, திருமாற்குரிய தேவபாணிமுதல், திங்களைப் பாடும் தேவபாணி யீறாகப் பல வகைத் தேவபாணி பாடி, பாரதி, கொடுகொட்டி, பாண்டரங்கம் முதலாகவுள்ள பதினொரு வகைக் கூத்தும் ஆடி மக்களைக் களிப்பிக்கின்றாள். அவளுடைய பாடலும் ஆடலும் அழகும் மக்கள் மனத்தை யின்புறுத்தக்கண்டு கோவலன் ‘ஊடற் கோலம்’ உறுகின்றான். இங்கேதான், அவன் மாதவியைப் பிரிதற்குத் தோற்றுவாயாகிய மனப் பிளவு தோன்றுகின்றது.

இதனை மாதவி தெளிய உணராது, வாளாது கூடற்குரிய உடலென்றே கருதியொழிகின்றாள். அவனுவக்குமாறு தனது கூந்தல் முதல் சீறடி யீறாகப் பலவகையுறுப்பும் அழகு திகழப் புனைந்துகொள்ளுகிறாள். இக்கோலம் கொண்டது அவன்

உவக்குமாறேயன்றித் தன்னைக் காண்பார் மகிழுமாறு அன்று என்பதை அடிகள், "ஊடற்கோலமொடிருந்தோன் உவப்ப (கடலாடு 75) என்றும், "கூடலும் ஊடலும் கோவலற்களித்துப், பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்" (கடலாடு 109—10) என்றும் நன்கு வற்புறுத்துவதனால், இம்மாதவி, நாடகமகளாயினும் குல மக்கட்குரிய கற்பும் பொற்பும் உடையளாய் இருந்தமை தெளிய விளங்குகிறது" (சிலப்பதிகார ஆராய்ச்சி பக். 66—67).

இப்பெரியார் மாதவியைப்பற்றிக் கூறியன மிகவும் உண்மையாகும். ஆயினும் ஓர் குறைபாடும் மாதவிபால் உண்டு என யாம் கருதுகின்றோம்.

கணவன் பரத்தமை கொண்டவனாயின் அவனை மனைவி புலந்துகொள்வதும், பரத்தையை வெறுப்பதும் செய்வள். அவ்விரண்டும் செய்யாதவளே கற்புடைய மகளிருள்ளும் மிகச் சிறந்தவளாகக் கருதப்படுவாள்.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி, செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

என்ற கோவலன் கடற்கரைப் பாடலும் இதை உட்கொண்டது தானே. கண்ணகி அத்தகையவளே. மாதவியையும் பழித்தவளல்லள்; கோவலனையும் வெறுத்தவளல்லள். தீதிலா வடமீனின் திறம் உடையவளாதலின் அவ்வாறான குணம் பெற்றிருந்தாள்.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து"

என்று ஒருத்தி கூறினள் என்றூர் வள்ளுவர். அவளையும் விஞ்சியவள் கண்ணகி. கணவன் போற்ரு ஒழுக்கம் புரிந்த தாகக் கருதினுளேயன்றி அதுபற்றி அவனைப் பழிக்கும் எண்ணமோ ஒரு சிறிதும் கொண்டிலள். அதனுலன்றே குல மகளிருட் சிறந்தவளானுள். கண்ணகி போன்றவளா மாதவி?

மாதவி கோவலனையன்றிப் பிறனை நினையாதவள்தான். கோவலன் கொலையுண்ட செய்திகேட்டுத் துறவுக்கோலம் கொண்டதே அதனை வலியுறுத்தும். கோவலனும் கண்ணகியைப் பிரிந்தவன், மாதவியிடத்திலேயே தங்கிவிட்டான். ஆதலின் அவன் கண்ணகியைப்பற்றிய நினைப்பே கொண்டிலன். அன்றியும் வேறு பரத்தையையும் கருதினுனல்லன். எனவே அவனும் மாதவியால் பழிக்கப்படற்குரியவனல்லன். மாதவியும் தான் பரத்தையாதலின், குல மக்களைப் பழிப்பது பரத்தையர்க்கியல்பு' என்ற நிலையினையும் அடைதற்கு வாய்ப்பு இல்லாதவளானுள். இந்நிலையில் கடற்கரைப் பாடலில் கோவலன்பால் குற்றம் கண்டவள் செயற்பாலது யாது? அதுகாலை ஊடல் கோடல் முறையேயன்றித் தானும் வேறு ஒருவன்பால் விருப்புடையள் போன்று வலிந்து பாடியது அழகோ? "நீயென்னையன்றி வேறு ஒருத்தியை விரும்பியதால் யானும் நின்னையன்றி வேறு ஒருவனை விரும்பினேன்; தவறு என்னை"? என்று ஒருத்தி பரத்தமைகொண்ட தன் கணவனைக் கேட்பாளேயானுல் அவளைப்பற்றி உலகம் என்ன நினைக்கும்? அவளுக்கும் மாதவிக்கும் வேற்றுமை யாது? குலமகள் ஒருத்தி அவ்வாறு கூறுவாளோ? கூறின் குலமகளாவாளோ? உலகம் ஏற்குமோ? எனவே மாதவி எவ்வளவுதான் சிறந்தவளானுலும் இவ்வகையில் குறைபாடுடையவளேயாவாள். தான் வேறு ஒருவன்பால் எண்ணம் உடையவள்போலப் பாடுவது குற்றம் என்று எண்ணவில்லை. அதற்குக் காரணம் யாது? காரணம் குலப் பிறப்பே என்னலாம்.

மாதவி குலம் கணிகையர் குலம். மாதவியின் தாய் சித்திராபதி கண்டவர்க்கெல்லாம் காமக் கழிகலனுக இருந்த கணிகை. அவள் ஒருவனுடன் வாழும் வாழ்வை விரும்பாது பொருள்

தருபவனுடன் வாழும் வாழ்வை விரும்பியவள். மணிமேகலையைக் கணிகைக்குரிய தொழிலில் ஈடுபடுத்த மாதவியைப் பன்முறையும் வேண்டினுள் என்று மணிமேகலை கூறுகின்றதன்றோ? அத்தகையவள் மகள் மாதவியாதலின், அவள் குணம் மாதவியிடமும் எஞ்சியிருக்குமன்றோ? அக்குணமே கடற்கரைப் பாட்டில் மாறுபட்ட நிலையை மேற்கொள்ளச் செய்தது என்னலாம்.

* "தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்பது வள்ளுவர் வாக்கு. தன் வினைப்பயத்தால் பெற்ற நற்குணங்களையும் அறிவையும் கொண்டு கோவலனுடன் குலமகளைப்போல ஒழுகி வந்திருந்தாலும் குலப் பிறப்புக் குணமும் அதாவது தன் தாயின் குணத்திற் சிறிதும் உடையவளாய் இருந்தவளாதலின் அவ்வாறு பாடினுள் என்க. தாயின் குணம் அடங்கிக்கிடந்து செயலறவுபட்டதாய் இருப்பதன் மற்றைக் குணங்கள் மேலோங்கி மாதவியை மாண்புறச் செய்தன. கடற்கரைப் பாட்டில் மட்டும் ஊழ்வலியும் உடன் தூண்டக் குலப் பிறப்புக்குணம் தலைதூக்கி கோவலன் பிரிவுக்குக் காரணமாகிப் பின்னர் அடங்கியது என்னலாம். அதனுல்தான் எவ்வாறு பாடுவது என்பதையறியாது தவறிழைத்தாள் மாதவி. எனவே மாதவியின் கடற்கரைச் செயல் பண்டைக் குலமகளிர்க்கில்லாத தொன்று என்க.

---

* எச்சம் என்பதுபற்றிய கட்டுரையினைத் தமிழ்ப் பொழில் துணர் 29, மலர் 11, 12, பக். 19, 105ல் காண்க.

தூ=க்=க=ம்.

"வளவன்"

1

தேச யாத்திரை செய்ய நாள், நட்சத்திரம், போக்கு வரத்து வசதிகள், செலவுக்கு பணம் என்ற இந்த விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தைரியமாகப் பிரயாணம் செய்கின்ற கூட்டத்தில் திடீரென்று இந்த நான்காண்டு காலத்திற்குள் சில ஆயிரம் மக்கள் சேர்ந்தார்கள்!—அவர்கள் யார்?—கைத்தறி நெசவாளிகள். அவர்களில் ஒருவன்தான் தங்கசாமி.

தங்கசாமி!—அவனுடைய உடலிலே ஒரு குண்டுமணி எடை பொன்கூட ஒட்டியிருக்கவில்லை; ஆனல் அவன் உள்ளம் மட்டும் அவன் பெயரைப் போலவே தங்கமாக இருந்தது. அதோடு அவன் மனைவி தங்கத்திற்கும் அவன் சாமியாக இருந்தான்.

பணத்திற்கு மதிப்புத் தருகின்ற உலகத்தில் அவன் குணத்திற்கு யார் மதிப்புத் தரப்போகிறார்கள்? அதனல்தான் அவன் தேச யாத்திரை செய்யப் புறப்பட்டுவிட்டான் பெண்டு பிள்ளை சூழ!

நூல் கிடைக்காததால் தங்கசாமி தனக்குத் தெரிந்த ஒரே தொழிலான நெசவுத் தொழிலை விடவேண்டியதாயிற்று. வாழ வேறு வழியோ, துறையோ தெரியாத காரணத்தால் அவனும் இந்தக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டான்.

மழையை நம்பிப் பயிரிடும் உழவனைப்போல் நூலை நம்பி தறியிலே உழைத்தவன்தான் தங்கசாமி. அவனது பொருள் சில தறிகள், ஒரு சிறிய வீடு ஆக இவ்வளவுதான். இந்த ஆஸ்திகளோடு அவன் தன் உழைப்பையும் மூலதனமாக வைத்துக் கொண்டு வயிறு வளர்த்து வந்தான்.

நூல் கட்டுப்பாடு வந்தது;—மாதத்திற்குச் சில நாட்கள் உண்ணு நோன்பிருக்கக் கற்றுக்கொண்டான். நூலே கிடைக்கவில்லை— அதனுல் தறிபோடவில்லை, அதைத் தொடர்ந்து தங்கசாமியின் வாழ்க்கைத் தேரும் அசைய மறுத்துவிட்டது. தேர் ஓடாது என்று தெரிந்துகொண்டதும்தான் அவனும் அவன் மனைவியும் தங்கள், தங்கள் கால்களை நம்பிப் பயணத்தைத் தொடங்கினுர்கள்.

அவர்கள் துவக்கிய பயணத்தில் திட்டமோ குறிக்கோளோ இருக்கவில்லை. எங்கெங்கோ சுற்றினுர்கள்; கிடைத்ததைச் சாப்பிட்டார்கள். சத்திரம், சாவடிகளிலே அதைக் கட்டி வைத்த புண்ணியவான்களைக் வாழ்த்திக்கொண்டு குடியிருந்தார் கள்.

ஊரிலே நன்ருக வாழ்ந்த காலத்தில் சிறுசிறு விஷயங்களுக் கெல்லாம் பக்கத்து வீட்டாருடன் பெரிதாகச் சண்டை போட் டுக்கொண்டிருக்கிருர்கள் தங்கசாமியும், அவன் மனைவியும்; ஆனுல் இப்பொழுது நடந்துவிட்ட எவ்வளவோ பெரிய தவறு களையெல்லாம் பொறுத்துக்கொண்டு சகித்திருந்தார்கள். காலம், அவர்களுக்கு சகிப்புத் தன்மையை மட்டும் கற்றுக்கொடுக்க வில்லை. இன்னும் எவ்வளவோ பெரிய விஷயங்களைக் 'காலம்' என்ற ஞான போதகர் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத் திருந்தார்.

சமய வழியிலே உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பாகு பாடுகள் காட்டாமல், பொருளாதாரத் துறையிலே பணக்காரன்— ஏழை என்ற பிரிவினைகள் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந் தார்கள். "**ஒன்றே குலம்—ஒருவனே தேவன்**" என்ற உய ரிய தத்துவம் தெரிய வந்தது "**யாதும் ஊரே—யாவரும் கேளிர்**" என்ற பரந்த மனப்பான்மை பழக்கத்தில் வந்தது.

காலம் கற்றுக்கொடுத்த இந்த உண்மைகளை எப்பொழுதும் கடைப்பிடிப்பார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. பின்னுல் அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும்பொழுது காலம் கற்றுக்கொடுத்த இந்த உயர்ந்த பண்பாட்டை சிறந்த பழக்கங் களை மறந்தாலும் மறப்பார்கள். ஏன்?......மனம் அப்படிப் பட்டது.

மனித மனம் ஒரு நூலறுந்த காற்றாடியைப் போன்றது, சந்தர்ப்பம், சூழ்நிலை என்ற சூறாவளிக் காற்றுகளையெல்லாம் அது தனக்கு சாதகமாக்கிக்கொள்ளும். அந்தச் சூறாவளிக் காற்றுகள் தன்னை எங்கே கொண்டுபோய் விடும் என்ற கவலையே அதற்கு கிடையாது.

ஒருகாலத்தில் தங்கசாமி பத்துத் தறிகளுக்குச் சொந்தக்காரன்; அவன் பதினாறு தொழிலாளிக்கு வேலை கொடுத்து வந்தான். ஊம் .... அதையெல்லாம் நினைத்துக்கொண்டால் இந்தவேளைப் பசி போகுமா? அதனால்தான் அவன் நடையை எட்டிப் போட்டுக்கொண்டிருந்தான். பக்கத்தில் உள்ள கிராமத்தை நோக்கி.

தோளுக்கு ஒரு குழந்தையாக அவனுடைய குழந்தைகள் இரண்டும் வாகனமேறியிருந்தன. அவைகள் இரண்டும் சுற்றுப்புறக் காட்சிகளைக் கண்டு கைகொட்டி சிரித்து மகிழ்ந்தபடியே இருந்தன பாவம்! ... அவைகளுக்குத் தெரியுமா தன்னைப் பெற்றெடுத்தவர்களின் பரிதாப நிலைமை?

தங்கசாமி தன்னுடைய கஷ்ட காலத்திலும் அந்தப் பசலைகள் வெம்பிவிடாதபடி பாதுகாத்து வந்தான். இனிமேல் அவர்களை எப்படிப் பாதுகாப்பது என்பதுதான் அவனுக்குப் பெரிய புதிராக இருந்தது.

இந்தவேளைப் பசியை எப்படிப் போக்குவது என்ற பிரச்சனையில் மூழ்கியவாறே நடந்துகொண்டிருந்ததால் அவன் முதுகில் தொங்கிய கந்தல் துணி மூட்டையின் பாரம் கூட அவனுக்குத் தெரியவில்லை. தன்னுடைய கோலத்தைக் கண்டு குலைக்க வரும் நாய்களை விரட்டுவதற்காக கையில் வைத்திருந்த குச்சியை ஊன்றிக்கொண்டே கிராமத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தான்; ஆனால் அவன் மனைவி தங்கமோ நெடுந் தொலைவு நடந்த களைப்பினால் சோர்ந்துபோனவளாய் பின்தங்கி வந்துகொண்டிருந்தாள். தங்கத்தோடு சேர்ந்து போவதற்காக குடைபோல் விரிந்து குளிர்ந்த நிழலைத் தந்துகொண்டிருந்த ஆலமரத்தின் நிழலில் குழந்தைகளை இறக்கிவிட்டு, பாரம் குறைந்ததனால்

வெளிவந்த பெருமூச்சை விட்டுக்கொண்டே உட்கார்ந்தான். அப்பொழுது சூ...சூ...சூ... என்ற சப்தம் பக்கத்தில் இருந்த தென்னந் தோப்பில் இருந்து வந்தது. சத்தம் கேட்கும் திசையைப் பார்த்தான் தங்கசாமி. பத்துப் பன்னிரண்டு குரங்குகள் இளநீர்க்காய்களைத் திருடிக்கொண்டு தென்னந் தோப்பிலிருந்து ஆலமரத்தை நோக்கி ஓடிவந்தன. அதைப் பார்த்த அவன் இந்தக் குரங்குகள் செய்த பாக்கியம்கூட நாம் செய்யவில்லையே என்று எண்ணி நொந்துகொண்டான். உண்மையில் அவன்நிலை குரங்கைவிட மோசமாகத்தான் இருந்தது.

குரங்கு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி மனிதனாக மாறியதாக டார்வின் என்ற பெரியார் கூறியிருக்கிறார்; ஆனால் அந்த முன்னேற்றத்தினால் என்ன பிரயோஜனம்? மனிதன் குரங்கைவிட மோசமாகச் சில சமயங்களில் மதிக்கப்படுகிறானே!

குரங்குகள் தன் பசியைத் தீர்த்துக்கொள்வதற்காக இளநீர்க்காய்களைத் திருடியது. அதைக் கண்ட தோட்டக்காரன் ......சூ ......சூ......சூ என்று அவைகளை விரட்டியடித்தான்? அவ்வளவுதான், குரங்குகள் திருடிய அந்த இளநீர்க்காய்களைத் திரும்ப அடைவதற்கு அவன் எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆனால் தங்கசாமி தன் பசிக்காக — வேண்டாம்; குழந்தைகளின் பசிக்காக ஒரு இளநீர்க்காயை பறித்துவிட்டால் சும்மா விட்டு விடுவானா தோட்டக்காரன்?

குழந்தைகள் இருவரும் குரங்குகளைக் கண்டு சந்தோஷ மிகுதியால் கைதட்டிக்கொண்டு குதித்தார்கள்; ஆனால் தங்கசாமி மாத்திரம் கல்லை எடுத்துக்கொண்டு எதிர்த்திசையில் இருந்து வேகமாகக் குரங்குகளை விரட்டினான். எங்கிருந்து அவனுக்கு அவ்வளவு சக்தி வந்ததோ தெரியவில்லை. — அவ்வளவு வேகமாக ஓடிக் குரங்குகளை விரட்டினான். பசி அதிகமாக இருக்கும் பொழுது சக்தியும் அதிகமாக இருக்குமோ என்னவோ!.

சிறிது தூரம் குரங்குகள் இளநீர்க்காய்களைத் தூக்கிக் கொண்டு ஓடின. தங்கசாமியும் அவைகளை விடுவதாக இல்லை, தொடர்ந்து விரட்டினான். இப்பந்தயம் சுமார் அறுபது, எழுபது

கெஜ தூரம் நடந்திருக்கும். ஆபத்து அண்மையில் வந்துவிட்டதை உணர்ந்த குரங்குகளில் சில இளநீர்க் காய்களைப் போட்டுவிட்டு ஓடின. அவ்வளவுதான்! தங்கசாமியின் முகம் சந்தோஷத்தால் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தைவிட பிரகாசமாகியது.

இளநீர்க் காய்களையெல்லாம் ஒன்றுசேர்த்தான் எண்ணிக்கையில் அவைகள் ஏழாக இருந்தன. தலைக்கொன்றாக வைத்துக்கொண்டாலும் மூன்று மிச்சம் இருந்தது. அதனால் கொஞ்சம் தாராளமாகவே இளநீர் குடிக்கலாம் என்ற ஆசையில் கக்கங்களில் இரண்டும் கையிலே ஐந்துமாக எடுத்துவந்தான். அப்பொழுது ஆலமரத்தடிக்கு வந்துசேர்ந்த தங்கம் அவனை ஆச்சரியத்தோடும் சந்தோஷத்தோடும் பார்த்தாள். நடந்த வேடிக்கையைக் கூடச் சொல்லாமல், தங்கசாமி பக்கத்தில் இருந்த கருங்கல்லில் இளநீர்க் காய்களை மோதி அதன் மட்டைகளை நீக்கி இளநீரைப் பகிர்ந்து குடும்பத்தோடு குடித்தான்.

வெயிலில் நெடுவழி கடந்து நாவரண்டுபோன சமயத்தில் நல்ல இளநீரும் குளிர்ந்த மர நிழலும் கொடுத்த இன்பத்தில் பல மாதங்களுக்குப் பிறகு அவர்கள் அனைவரின் முகங்களும் மலர்ந்தன.

கிராமத்தின் எல்லையில் இருந்த அந்த ஆலமரத்தின் நிழல் அவர்களுக்கு அதிகமாகப் பிடித்துவிட்டதால் தங்கசாமி தன் கந்தல் துணிக் கூடாரத்தை அங்கேயே போட்டான். பிறகு கிராமத்தில் வேலைதேடி இரண்டு மூன்று நாட்கள் அலைந்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. பக்கத்தூரில் இருக்கும் பஞ்சாலையில் வேலைக்கு ஆள் எடுப்பதாக யாரோ சொன்னார்கள். வழியை விசாரித்துக்கொண்டு பஞ்சாலையை நோக்கி பசியையும் பொருட்படுத்தாமல் போனான். ஒருமைல் நடப்பதற்குள்ளாகவே அந்தப் பஞ்சாலையின் பிரம்மாண்டமான பெரிய உருவம் கம்பீரமாகத் தெரிந்தது. இவ்வளவு பெரிய உருவம் நம்மோடு போட்டியிட்டால் நம்மால் எதிர்த்து நிற்கமுடியுமா என்ன? — என்று உள்ளம் தளர்ந்து பெருமூச்சுவிட்டான் தங்கசாமி. ஆம்! அவ்வளவு பெரிய போட்டிதான் கைத்தறி துணிக்கும், மில் துணிக்கும்

மார்க்கெட்டில் நடந்தது. இறுதியாக அந்தப் போட்டியில் வெற்றிபெற்றது யார்? ......

பூஊம்......ம்......ம்.. ....என்று அப்பொழுது அந்த ஆலே யில் சில நிமிஷ நேரங்கள் தன் வெற்றிச் சங்கநாதத்தை ஊதியது. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் அதன் அழைப்பை ஏற்றுக் கொண்டு உள்ளே போனூர்கள். தங்கசாமியும் போனுன். ஆனல் அவனைக் காவலாளி தடுத்து வாசலிலேயே நிறுத்திவிட்டான். தங்கசாமி தான் வந்த விஷயத்தை விளக்கமாகச் சொல்லி தன்னை உள்ளே விடுமாறு வேண்டினுன். அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த காவலாளி வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனல் அவன் தலைக்குமேல் தொங்கிக்கொண் டிருந்த ஒரு போர்டைச் சுட்டிக் காட்டினுன். தங்கசாமியைப் போன்று ஆயிரமாயிரம் பேர்களுக்கு பதில் சொல்லி அவர்களை அனுப்பிவைத்த அந்த அழகான போர்டு தங்கசாமியின் கண்க ளில் தென்பட்டது. அந்தப் பச்சை நிற போர்டில் இரத்தச் சிவப்பு வர்ணத்தால் எழுதப்பட்ட "வேலை காலி இல்லை" என்ற மூன்று வார்த்தைகளும் பளபளத்தன. வார்த்தைகளின் பள பளப்பு தங்கசாமியின் கண்களைக் கூசின; கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு திரும்பி நடந்தான் தங்கசாமி.

வயிறு காய்ந்தது; மழலைகளின் சிரித்த முகம் வாடியது; பசிக்கு அதிகப் பழக்கமில்லாத தங்கம் சோர்ந்துபோனுள். நிலைமையைச் சமாளிக்க மானத்தைவிட்டு, வெட்கத்தைவிட்டு யாசகம் கேட்கச் சென்ருன் தங்கசாமி. யாசகமும் கிடைக்க வில்லை; ஆனல் "ஆளைப் பாரு! ஆறடி இருக்கிருயே! உழைத்துப் பிழைக்கக்கூடாதா ?" என்ற வசைவுகளும், திட்டுகளுமான வாச கங்கள் நிறைய கிடைத்தன. தங்கசாமிக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. கையை மோவாய்க்கு முட்டுக் கொடுத்துக்கொண்டு யோசித்துக்கொண்டே இருந்தான். அப் பொழுது அவனுக்கு பக்கமாக காக்கைகள் கூட்டம் ஒன்று கரைந்துகொண்டிருக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த் தான். அங்கே ஒரு பிச்சைக்காரக் குழந்தை தான் பொறுக்கி வந்த எச்சிலைகளில் ஒட்டியிருந்த பருக்கைகளை உதிர்த்துக்

கொண்டு இலைகளை விட்டெறிந்துகொண்டிருந்தது. அந்த எச்சிலைக்குத்தான் அப்படி அடித்துக்கொண்டன காக்கைகள்.

அந்தக் காட்சியைப் பார்த்த தங்கசாமியின் உள்ளத்தில் ஒரு எண்ணம் உதித்தது. உடனே துள்ளியெழுந்தான். உள்ளே ஓடினான், ஒரு கிழிந்த வேட்டியை எடுத்துப் பை போல் கட்டி பசிக்கு ஆலம்பழம் பொறுக்கித் தின்றுகொண்டிருந்த தன் மகனை இழுத்துவந்து அவன் முதுகிலே தொங்கவிட்டான். பசியால் சோர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மூன்றுண்டுகள் நிரம்பிய தன் மகனை — அந்த இளந்தளிரை எழுப்பினான். அந்தக் குழந்தை தூக்கக் கலக்கத்தில் இமைகளை மூடி மூடித் திறந்தது. கலயத்தில் இருந்த நீரில் தன் மேல்துண்டை நனைத்து குழந்தையின் கண்களைத் துடைத்து தூக்கத்தைத் தெளியவைத்தான். பிறகு தன் எதிரே இரு குழந்தைகளையும் நிற்கவைத்து பாட்டு சொல்லிக்கொடுத்தான். அந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் பாட ஆரம்பித்தன.

"ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீதா ராம்"

இன்னும் சில அடிகளைச் சேர்த்துத்தான் தங்கசாமி சொல்லிக்கொடுத்தான். ஆனால் அந்த மழலைகள் இந்த இரண்டடிகளைத்தவிர மற்ற அடிகளைச் சொல்ல மறந்தன.

இவ்வளவாவது வந்ததே என்ற எண்ணத்தோடு அந்த இரண்டடிகளையும் பலமுறைப் பாடச்சொல்லி பழக்கப்படுத்தினான். இறுதியில் தான் பெற்றெடுத்த அந்த அன்புச் செல்வங்களை, அழகுத் தெய்வங்களைத் தொட்டு முத்தமிட்டு தன் கண்கள் வடிக்கும் நீர் முத்துக்களைத் துடைத்துக்கொண்டு தைரியம் கூறி வழியனுப்பி வைத்தான்.

அந்தப் பசுந் தளிர்கள் பழக்கமில்லாத காரணத்தால் தயங்கித்தயங்கி திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றன. அந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல் குமுறிவந்த அழுகையை, நீர் சொட்டும் கண்களை திரும்பி மறைத்துக்கொண்டான். அப்பொழுது சற்று தூரத்தில் பாத்திரம் துலக்கி சம்பாதித்த காசில்

குழந்தைகளுக்கு "இட்டலி" வாங்கிவரும் தன் மனைவியைக் கண்டான். அவளிடம் இந்த ஈனச் செய்கையைச் சொல்ல தைரியம் இல்லாதவனுய் அவள் அருகே வந்ததும் அழுதேவிட்டான். தங்கசாமியின் வாயிலாக கொஞ்சம் கொஞ்சமாக விஷயத்தைத் தெரிந்துகொண்ட தங்கம் அவன் செய்தது சரிதான் என்று கூறி தங்கசாமியைச் சமாதானப்படுத்தினுள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓடேந்திச்சென்ற அந்த ஓவியக் குழந்தைகள் ஒன்பது காசும் வட்டியில் சிறிது சோறும் பையில் கொஞ்சம் அரிசியும் கொண்டுவந்தன. அதை நிரந்து சாப்பிட்டு அன்றையப் பொழுதைக் கழித்தார்கள்.

தங்கசாமிக்கு தான் ஒரு ஆண் மகனுக இருந்துகொண்டு மனைவியையும் மக்களையும் வெளியே அனுப்பி அவர்கள் சம்பாதித்து வருவதைச் சாப்பிட வேண்டியிருக்கிறதே என்ற அவமானத்தை அவனுல் தாங்க முடியவில்லை. பலவிதமான எண்ணங்கள் அவனுள்ளே படமெடுத்து ஆடின......

குழந்தைகள் பிச்சை எடுக்க சென்ற இடத்தில் "எந்தப் பாவிமகன் உங்களைப் பெற்று இப்படி நடுத்தெருவில் பிச்சை எடுக்கவிட்டானே; ஐயோ பாவம்!" என்று ஊரார் குழந்தைகளைப் பார்த்து கண்டன இரக்கம் பேசுவதுபோல் ஒரு பிரமை.—பைத்தியம் பிடித்தவன்போல் தலை மயிரைப் பிய்த்துக்கொண்டான் தங்கசாமி!

தன் மனைவி வேலைசெய்ய சென்ற இடத்தில் அவள் அழகை வேற்று ஆண்கள் ஏற இறங்கப் பார்ப்பதுபோன்ற ஒரு தோற்றம். அவ்வளவுதான்! தங்கசாமியால் தாங்க முடியவில்லை. எழுந்தான். எங்கேயோ ஓடினுன். கால் போன போக்கில் களைத்துச் சோரும்வரை ஓடினுன்.

* * * * *

2

பிச்சை எடுக்கச்சென்ற குழந்தைகள் பெரியவர் ஒருவர் பின் தொடர வருவதைக் கண்டாள் தங்கம். எழுந்து நின்று வரவேற்று விசாரித்தாள்.

அதற்கு, வந்தவர் தான் அந்த ஊரில் உள்ள இந்து அனுதை ஆசிரமத்தின் தலைவர் என்றும் குழந்தைகளை ஆசிரமத்தில் சேர்த்துக்கொள்ள அனுமதி கேட்கவே வந்ததாகவும், தங்கம் விரும்பினுல் ஆசிரம வேலைகளைச் செய்துகொண்டு ஆசிரமத்திலேயே இருக்கலாம் என்றும் கூறினுர்.

இதைக் கேட்டதும் தங்கத்திற்கு உண்டான ஆச்சரியத்தில் பேச்சே வரவில்லை. இந்த விஷயத்தைத் தங்கசாமியிடம் சொல்லுவதற்காக மரத்தடிக்கு ஓடினுள். ஆனுல் அவன் அங்கே இருந்தால்தானே!.......

விஷயத்தை ஊகித்தறிந்துகொண்ட பெரியவர் "கலங்காதேயம்மா! நான்தான் தங்கசாமியை என் நண்பரிடம் அனுப்பியிருக்கிறேன். அவனுக்கு நல்ல வேலையும் நிறைய சம்பளமும் கிடைக்கும்" என்று சொல்லித் தேற்றி அவர்களை ஆசிரமத்திற்கு அழைத்துப்போனுர். ஆசிரமத் தலைவர் தங்களைத் தேடி வந்து உதவிசெய்வது எதனுல் என்பது தங்கத்திற்கு தெரியப்போகிறதா என்ன?.........

* * * * *

3

வழக்கம்போல அன்று அதிகாலையில் எழுந்த ஆசிரமத் தலைவர் காவேரியில் நீராட ஆலமரப் படித்துறைக்குப் போனுர். ஆனுல் அங்கே அவர் கண்டது என்ன?.........

அந்த ஆலமரம் வழக்கம்போலத்தான் தன் விழுதுத் தோரணங்களைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தது. ஆனுல் அவற்றிலே ஒரு விழுதிற்கு மிகுந்த பேராசை போலிருக்கிறது. விரைவாக வளர்ந்து நிலமகளினைத் தீண்டுவதற்காக அருகே வந்த ஒரு மனிதக் கொடியைச் சுருக்கிட்டு முடிந்துகொண்டு நீளமாக வளர்ந்திருந்தது. அவனும் அதன் அன்புப் பிணைப்பிலே மயங்கியவனுய் தூங்கிக்கொண்டிருந்தான். தென்றல் தன் நீண்ட கரங்களை நீட்டிப் பறவைகள் இடும் சப்தத்தால் அவன் விழித்துக்கொள்ளாமல் இருப்பதற்காக அவனைத் தாலாட்டிக்கொண்டிருந்தது. காதிற்கு இனிமையான ஜலதரங்க தாலாட்டுப் பாட்டை இசைத்தவாறு காவேரி ஓடிக்கொண்டிருந்தது. இவ்வாறு தென்றலின் மிருதுவான அசைவும், காவிரியின் தாலாட்டும் கிடைத்துவிட்டால் இடி இடித்தாலும் தெரியாதவாறு எந்த மனிதன்தான் தூங்கமாட்டான்?.

அவன் தூங்கிய விதம்தான் விநோதமாக இருந்தது. நின்றபடியே தூங்கிக்கொண்டிருந்தான். இதைவிட அழகாக அதிக வசதியோடு இயற்கை அன்னையால் தொட்டில் கட்டித்தர முடியுமா என்ன? நின்றபடியே தூங்குவது முதலில் சிறிது சிரமமாக இருந்திருக்கலாம் ஆனல் இப்பொழுது........!

அவனும் எவ்வளவோ முறைகள் தன் வாழ்நாளில் தூங்கி யிருக்கிறான்' ஆனல் இதுபோன்ற இயற்கைத் தூக்கத்தின் சுகத்தை இதற்குமுன் ஒன்ருவது அவன் அனுபவித்திருக்க முடியுமா?

ஆசிரமத் தலைவர் அவனைப்பற்றிய தகவல்களையெல்லாம் சேகரித்தார். அவன் தறிகார தங்கசாமி என்று தெரியவந்தது.

"பாவம்! உலகத்தோடு போராட இவனுக்கு சக்தி இல்லை.— பயந்து பின்வாங்கியிருக்கிறான். உலகம் கொன்றுவிட்டது" என்று எண்ணி இரக்கப்பட்டு அவனை அடக்கம்செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அப்பொழுது தூரத்தில் இருந்த படியே பூஊம்...ம் என்று தன் வெற்றிச் சங்கநாதத்தை ஊதித் தீர்த்தது ஆலை.

பிறகுதான் ஆசிரமத் தலைவர் தெருவில் ஓடேந்திவந்த குழந்தைகளை அழைத்துக்கொண்டு தங்கத்தைக்காண வந்தார்.

* * * * *

தங்கத்திற்கு தன் சாமி எப்பொழுது வருவார் என்று தெரிந்துகொள்ள ஒரே ஆவலாக இருந்தது. ஆவலை அடக்க முடியாமல் கேட்டும் விட்டாள். பலவிதத் துன்பங்களால் துளைக்கப்பட்டு புண்ணுன அந்த மென்மையான நெஞ்சத்தை மேலும் துன்புறுத்த விரும்பாத அந்த நல்ல மனம் "நிறைய சம்பாதித்துக்கொண்டு ஒரு மாதத்தில் திரும்பி வருவான்" என்று சொல்லிவைத்தது.

தங்கமும் மனதிற்குள் "அப்பனே முருகா! அவருக்கு கஷ்டங்கள் வராமல் நீதான் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள்.

வஞ்சப் போர்.

வித்துவான். ச. பாலசுந்தரம், விரிவுரையாளர், புலவர் கல்லூரி,

[முற்றொடர்ச்சி துணர் 30, மலர் 5, பக்கம் 162]

மங்கையருக் கெவ்வளனும் கணவ னின்றேல்
மகிழ்ச்சியினைச் சிறிதேனும் அளிப்ப துண்டோ?
இங்குறையும் உறவினருள் கணவன் ஒப்பார்
ஏந்திழையார்க் கில்லைபிறர் தமையி ழந்தால்
அங்கவர்க்கு மற்றவரை அடைவு காட்டி
ஆறுதலைச் செய்திடலும் ஆகும் அந்தோ?

கொண்டானிற் றுன்னியதோர் கேளிர் இல்லை
கோதையர்க்குத் தெய்வமும்வே றில்லை என்று
கொண்டார்நம் தமிழ்மக்கள் பெண்கு லத்தின்
குணக்கடலாய் வந்தவள்எம் கோதை ஐயோ!
கண்டால்என் உணர்வொடுங்கி உளம்ப தைத்துக்
கருத்தழிவேன் என்செய்வேன் பெரியோய்! என்றும்
தொண்டாவேன் தங்களுக்குத் தூயோய்! தங்கை
துயர்களையும் வகையினைநீர் சொல்லல் வேண்டும்.

அரசி : பொங்கும் எங்கள் துயர்துடைத்துப் போக்கவேண்டும்
பொன்னறும்வரைத் திருவடிக்கா ளாவோம் தேவா!
உங்கள் தவ வலிமையினல் மாற வர்மர்
உயிர்பிழைப் பார் என்று ......

முனி : (நகைத்து) ... ... ஆமாம் கோதை எங்கே?
இங்கழைத்து வாருங்கள்

அரசி : (அழைத்துவந்து) வந்தாள் கோதை.

முனி : என்னைப்பார்த் தன்பாக அழைநீ... அத்தான்

[தாடியைக் கழற்றுகிருன் வாய்க்குள்ளே கோதை அத்தான் என்று கூறிப் பின் ஆர்வத்தோடு உறக்க அழைக்கிருள்.]

கோதை: சங்கையில்லை என் அத்தான்! அத்தான்........!!

மாற: (தழுவிக்கொண்டு) .... கோதை
சாவாமல் உன் தலைவன் பிழைத்தான்

கோதை: அத்தான்!

[இவைகளைக் கவனித்து கோபமுற்றவனைப்போல்]

அரசன்: வஞ்சித்தாய் சடைமுடியை வைத்துக் கொண்டு
வாயுரையால் என்னுளத்தை மாற்றி விட்டாய்.

மாற: (அமைதியாக) வஞ்சந்தான் ஆனாலும் பிறர்க்குத் தீங்கு
வாராமல் வாழவகை அதனாற் செய்தேன்

அர: பஞ்சத்தால் வாடவிட்டாய் பகைவர் நாட்டைப்
படுகொலைகள் செய்தாய்உன் நெறிபி றழ்ந்தாய்

மாற: கொஞ்சத்தில் அவ்வாறு நினைக்கவேண்டாம்
கொலையின்றிப் போரின்றிப் பகையை வென்றேன்

அர: இவை எல்லாம் நாடகமா?

மாற: மன்னிப்பீர் நீர்
இவ்வுலகே நாடகத்தின் மேடை தானே

அர: சுவைமலியப் பேசுகிறாய் ஆனால் நீயோ
சொல்லியசொற் பொய்த்து விட்டாய்........

மாற: என்ன மன்னா?

அர: அவையிலன்று பகைவனை நும் அடியிற், சேர்ப்பேன்...

மாற: ஆமரசே மறக்கவில்லை ஈண்டுப் பாரும்

[வேங்கைமன்னர் தூதுவனுடைய வேடம் மாறி அரசனிடம் வந்து வணக்கமுடன்]

வேங்: புவியரசே வணக்கம்!

அர: ஆ! வேங்கை மன்னன்?
புதிராக இருக்கிறதே! விந்தை; ஆமாம்

[மாறவர்மனைப் பார்த்து]

சமரிட்டுத் தோற்காமல் இவரை என்ன
தந்திரத்தால் இங்கழைத்தாய்

வேங்: அவர் என் நண்பர்
தமதறிவால் எனைப் பிணித்தார்

மாற : அரசே! நீர்என்
தவருமல் திறைய ளக்க வில்லையென்று.....

வேங் : எமதென்று கருதாமல் எனதென் றெண்ணி
இதுவரையும் ஆண்டுவந்த வேங்கை நாட்டை
உமதென்று யாவருக்கும் உரிமை செய்தேன்
உங்களுக்குத் திறையளக்க என்ன செய்வேன்
மக்கள் தமக் காகஅர சின்றி இங்கு
மன்னர்தமக் காகமக்கள் இல்லை யன்றே
மிக்கதொரு புகழ்விரும்பி செல்வம் வேண்டி
வீணுக்கே படைதிரட்டி வீரமென்று

கொக்கரித்து மக்களினல் மக்கட் கொன்று
கொடுமைசெய்த தன்றியிங்கு மன்னர் செய்த
தக்கசெயல் யாதுளதாப்? உலகில் நாப் தாம்
தனியுடைமைக் கொடுமைதனை வளர்த்தோம் நாளும்.
ஊக்கமுடன் உழைப்பவருக் குணவுப் பஞ்சம்
உடைப்பஞ்சம் இப்படியே உலகம் சென்றல்
ஏக்கமுடன் வாழ்வோர்கள் எழுச்சி கொள்வார்
இன்பமெனப் பிறர்வருத்தி வாழ்வோர் எல்லாம்

தீக்கதிர்முன் பஞ்சாவார் சிந்தித் தாலித்
தீமைஎலாம் சிலர்வஞ்ச வாழ்வாலன்றே
ஆக்கமுள்ள இவைபோன்ற மொழியால் என்றன்
அறிவுநிலை திருந்தியதிந் நண்ப ராலே..........

அர : நன்றியறி வுடையபெரும் மன்னு! நண்பா!
நாடாமல் செய்தபிழை பொறுக்க வேண்டும்
[காவலரைப் பார்த்து]
இன்றுமுதல் இந்நாடும் மக்களுக்கே
எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆவார்
என்றுபறை சாற்றுங்கள் உலக மக்கள்
எல்லோரும் சமமென்று பறை தட்டுங்கள்

மாற : } நின்றுபுகழ் எய்தியன்பு நேர்மை மேவி
வேங்: } நிலவுலகம் போரின்றி நீடு வாழ்க!

தெய்வம் எங்கே?

"வளவன்"

மாலை நேரம். நண்பர் அழகனைப் பார்த்து வரலாம் என்று பூங்குளம் கிராமத்திற்குச் சென்றேன். நண்பர் கிராமப் புன ரமைப்பு வேலையில் பங்குகொண்டு பெரிதும் உழைத்தவாறு இருந்தார். கிணறு வெட்டும் திருப்பணிதான் நடந்துகொண் டிருந்தது. வேலை முடிந்ததும் ஓய்வுநாடி சோலைப்புறம் வந்தார். சந்தித்தேன் "பொய்யா மொழியார் எங்கே"? என்றேன்.

"சிறுவர்களோடு செடிகளுக்கு நீர் ஊற்றிக்கொண்டிருக் கிறார்" என்றார்.

" தளர்ந்த உடலாயிற்றே தாங்குமா? என்றேன்.

"முடிந்தவரையில் உழைக்கவேண்டும்" என்ற சீரிய நோக் கத்தை அவர் எப்பொழுதும் செயலில் கடைப்பிடிப்பவர் என்றார். இதைக் கேட்டதும் நான் பொய்யா மொழியாரின் இனிய குணங்களை, இலட்சிய கொள்கைகளை எண்ணி வியந்த வாறு சிறிது நேரம் இருந்தேன். அழகன் வியர்வை உலா உலவிக்கொண்டிருந்தார்.

பொய்யா மொழியார்—பெரிய புலவர். ஆண்டிலே பழுத்து அனுபவத்தில் கனிந்தவர். சுருங்கச் சொன்னால் கறைபடாத வாழ்வு வாழக்கூடியவர். "எல்லா இன்பங்களும் இங்கே, இந்த உலகத்தில்தான் இருக்கின்றன" என்பதில் அசையாத நம் பிக்கை கொண்டு அந்த இன்பங்களை யெல்லாம் மக்கள் பெற வேண்டும் என்பதற்காக கிராமங்கள் தோறும் இளைஞர்களோடு புனரமைப்பு வேலையில் ஈடுபட்டு மக்கள் வாழ்வில் நலங்காணத் துடிப்பவர். அரசாங்க உதவியோ, அன்பர்களின் பொருள் உதவியோ இல்லாமல் உழைப்பை மூலதனமாகக் கொண்டு புன

ரமைப்புத் தொழிலை நடத்திவந்தார். அந்தத் தொண்டர் படையிலேதான் என் நண்பர் அழகன் இருந்தார்.

" அழகன்! தஞ்சைப் பெரிய கோவிலுக்கு போகலாமா?... எனக்கு அதன் நிர்மாண அழகை சிற்ப சித்திர வேலைப்பாடுகளைக் கண்டு மகிழ பலநாளாக ஆவல்! .... உங்களை அழைத்துப் போகலாம் என்றுதான் வந்தேன் " என்றேன்.

"வருந்துகிறேன் வளவன்; எனக்கு இப்பொழுது ஓய்வில்லை என்றார்.

" உயிர்பெறும் சித்திரங்களும், உணர்வை அள்ளும் ஓவியங்களும் நிறைந்த கலைக்கோயிலை!; தலைநிமிர்ந்து நிற்கும் கோபுரம் காட்டும் தமிழரின் தலைசிறந்த கலைத்திறனை கண்டுமகிழ ஆசை இல்லையா அழகன்?

இல்லை வளவா! இல்லவே இல்லை!. அங்கே கலைஞன் கல்லை தன் கைத்திறத்தால் அழகுறச் செதுக்கி உயிர் உள்ள உருவம் போல அமைத்திருக்கிறான். ஆனால் இங்கே காலம் உயிர் உள்ள உருவங்களை உதிர வாய்க்கால் ஓடும் உடல்களை பசி, பிணி என்ற உளிகளால் அங்க அழகுகளையெல்லாம் சிதைத்து உயிரைப் போக்கிக்கொண்டிருக்கையில் கலையை, கைத்திறத்தை, கற்பனை உயர்வைத், தமிழனின் தனிவீரத்தை, தலைசிறந்த பண்புகளைக் கண்டு மகிழ்ந்து இன்புற்றிருக்கும் நேரமா இது? கலை வேண்டியதுதான்! ஆனால் எப்பொழுது? உண்டு உடுத்தபிறகு, உல்லாசமாக இருப்பதற்கும், வாழ்வு கசக்காமல் இருப்பதற்கும் தன் கலையும் அதன் குழந்தைகளான சிற்ப சித்திரங்களும்.

பசி! ...... ஏழைகளின் சிறுகுடலைப் பெருகுடல் விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் பெரியகோவிலைக் கண்டு, அது காட்டும் கலைக் கண்காட்சியை, காவியப் படப்பிடிப்பை, கராசராசன் கண்ட கற்பனைக் கனவு, நனவாக உருவாகி உயர்ந்த விதத்தை, அந்த எழிற்கோவிலில் இன்ப நடம் புரியும் இதிகாசச் சிற்பங்களை யெல்லாம் கண்டு இன்புற முடியுமா வளவன்?

பெரிய கோவில் — பெருமையில் மட்டும் அல்ல! உருவத்திலும், உயரத்திலும் பெரியது. அதனால்தான் அங்கே ஆயிரத்

தெட்டு சிவலிங்கங்கள் இருக்கின்றன! அவைகளுக்கெல்லாம் அந்திமகால பூசை நடக்கிறது. பாதாதிகேசமாக நெய்யும் பாலும் வழிந்தோடுகிறது! அதைப் பார்த்து கடவுளின்பால் பக்தர்கள் கொண்டிருக்கும் தெய்வீக அன்பை என்னால் நினைக்கவே முடியாது! நினைத்துப் பாராட்ட என் நாக்கு மறுத்துவிடும். ஆனால் என் நினைவெல்லாம் எங்கிருக்கும் தெரியுமா? பூங்குளம் கிராமத்தில், பொற்கலசமில்லாத என் கோவிலில் நெய்யையும், பாலையும் நினைத்தறியாத நடமாடும் தெய்வங்களை, உயிரும், உணர்வும் உள்ள உண்மைத் தெய்வங்களை வழிபட்டு நிற்கும் **சுவாமி விவேகானந்தர்** என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"ஏழைகள்தான் நான் வணங்கும் கடவுள்" என்கிறார். அது மட்டுமா? "கடவுளைத் தேடி எங்கே செல்கிறீர்கள்? ...... ஏழைகள், துன்பப்படுவோர், பலவீனர்கள் எல்லோரும் கடவுள்கள் இல்லையா? அவர்களை ஏன் நீங்கள் முதலில் தொழக்கூடாது" என்கிறார்.

காந்தியார் கண்ட முடிவு என்ன தெரியுமா?

"கடவுள் தெய்வலோகத்திலும் இல்லை, பாதாளலோகத்திலும் இல்லை! ஒவ்வொரு மனிதனிடத்திலும்தான் குடிகொண்டிருக்கிறார்; அதனால்தான் மனிதவர்க்கத்திற்கு சேவை செய்வதன் மூலமாக நான் கடவுளைக் காண முயன்றுகொண்டிருக்கிறேன்" என்றார்.

என்று ஒரு பெரிய விரிவுரை நடத்தி முடித்தார் அழகன். அப்பொழுது பொய்யாமொழியார் செடிகளுக்கு நீரூற்றிவிட்டு திருக்குறள் வகுப்பு நடத்த போய்க்கொண்டிருந்தார்.

"வணக்கம்" என்றேன்.

"வாழ்க" என்று கூறிவிட்டுச் சென்றார். நானும் நண்பரிடம் விடைபெற்று அறைநோக்கி வந்துகொண்டிருந்தேன். தூரத்தில் எங்கோ ஆலய மணி அடிக்கும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. என் உள்ளம் **"தெய்வம் எங்கே?"** என்ற வினாவை எழுப்பி விடைகாணத் தவித்துக்கொண்டிருந்தது.

வரலாற்றில் நாம்.

[இரா. பெரியசாமி III. U. C.]

இற்றைக்கு நான்காயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஓர்நாள் நைல் நதியிலே முதலை ஒன்று ஞாயிற்றின் ஒளியில் தன் வாயைப் பிளந்துகொண்டிருந்ததாம். அதன் இரு கடைவாய்களிலும் சிறு சிறு புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தனவாம். அப் புழுக்களைச் சிறு பறவைகள் கொத்தித் தின்றுகொண்டிருந்தனவாம். அன்று நைல் நதிக்கரையில் இத் தோற்றத்தைக் கண்ட எகிப்திய அறிஞனான ஹிரோதோஸ் என்பான் தான் கண்ட தோற்றத்தைக் கண்டவாறே குறித்துவைத்தானும். இதுவே வரலாற்றின் தொடக்கமென்று மேலை நாட்டு வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென்று பல அறிஞர்களால் கருதப்படும் நம் தமிழ் நூலான ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தில் அன்று வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுபோன்ற வரலாற்றுச் செய்திகள் காணக்கிடக்கின்றன. எனவே வரலாற்றைப் பற்றி மேலை நாட்டவரும், மற்றையோரும் அறிந்துகொள்ளு முன்பே தமிழன் தான் செய்த நூல்களில் வரலாற்றுச் செய்திகளைக் குறித்து வைத்துள்ளானென்பது தெற்றென விளங்குகிறது.

பன்னூறாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஞாயிற்றினின்றும் சிதறிய சிறு பொறியே இம்மண்ணுலகமென்றும், முதலில் அனற் பிழம்பாக இருந்த இது பின்னர்ச் சிறிது சிறிதாகக் குளிரத் தொடங்கியது என்றும், அவ்வாறு குளிர்ந்து மக்கள் வாழ முதன் முதலில் தகுதியாக அமைந்த இடம் இலெமூரியாக் கண்டமென்றும், இலெமூரியாக் கண்டத்தைக் கடல் கொண்டபின் அதற்கு வடக்கே சில நாடுகள் மேலெழுந்தன வென்றும், இன்றுள்ள தென்னிந்தியாவும், சாவகம் முதலிய தீவுகளும், கடலுள் மூழ்கிய இலெமூரியாக் கண்டத்தின் சிறு பகுதிகளென்றும் நில

நூல் வல்லுநர்கள் கருதுகின்றனர். மேற்கூறிய செய்தியால் நம் தமிழகம் மிகவும் தொன்மையான நாடென்பதை அறிகிறோம். மேலும் நம் சங்க இலக்கியங்களின் வாயிலாக கடல் கோளினால் அரும்பெரும் தமிழ் நூல்கள் பலவற்றை நாம் இழந்துவிட்ட செய்தியை அறிகிறோம். இதனால் கடலுள் மூழ்கிய இலெமூரியாக் கண்டத்தில் தமிழ்மொழி வழங்கிய தென்பது தெள்ளிது. இன்றுள்ள தமிழகத்திற்குத் தெற்கில் நீண்டதூரம் நம் தமிழ் மக்கள் பண்டு பரவியிருந்து பாரோர் புகழ பற்பல காவியங்களியற்றி வாழ்ந்த நல்வாழ்வை அந்தோ! கடல்நீர் மறைத்துவிட்டது. இது பற்றியே நம் புரட்சிக் கவிஞர் "தென்றிசையைப் பார்க்கின்றேன் என் செய்வேன் என் சிந்தையெலாம் தோள்களெல்லாம் பூரிக்குதடடா" என உள்ளமுருகப் பாடியுள்ளார்.

கிரேக்கப் பெரு மன்னனான அலெக்ஸாண்டர் வட இந்தியாவின்மீது படையெடுத்த காலமாகிய கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்துதான் இந்திய வரலாறு தேதி வரையறையுடன் எழுதப் பட்டுள்ளது. இந்திய வரலாற்று நூலில் நம் தமிழகத்தைப் பற்றி ஒரு சில இடங்களில் விளக்கமில்லாத செய்திகளைக் காண இயலுகின்றதேயன்றி, தொடர்ச்சியானதொரு தமிழக வரலாற்றைக் காண இயலவில்லை. வட இந்தியாவில் மௌரியர்கள், குப்தர்கள், முகம்மதியர்கள் போன்றோர் பேரரசு செலுத்திய காலத்தில் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்களென்ற தமிழக மன்னர்களின் அரசியல், பொருளியல், சமூகவியல் போன்றவற்றை அறிந்துகொள்ள இந்திய வரலாற்றில் சிறிதும் இடமில்லை. எனவே இந்திய வரலாற்று நூலிலே தமிழகம் ஒரு இருண்ட நாடாகவே காணப்படுகிறது.

இந்திய வரலாற்று நூலிலே தமிழகத்தைப்பற்றிச் சில செய்திகளே குறிக்கப்பட்டிருப்பினும், சங்க காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களின் வாயிலாகவும், பின்னர் தோன்றிய கல்வெட்டு, பட்டயம் முதலியவற்றின் உதவியினாலும் உண்மையானதும், தொடர்ச்சியானதுமோர் தமிழக வரலாற்றை நாம் அறிய இயலுகின்றது. ஏறக்குறைய இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வட இந்தியாவில் மோகஞ்சோதரோ என்ற இடத்தில் மிகுந்த நாகரீகத்துடன் வாழ்ந்த மக்கள் பேசிய

மொழியில் தமிழ் சொற்கள் நிறைந்துள்ளனவென்று வரலாற்று வல்லுநரான ஹீராஸ் பாதிரியார் கூறுகின்றார். ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வட இந்தியாவில் தமிழ்மொழி பேசிய மக்கள் நல்ல நாகரிகத்துடன் வாழ்ந்தனரெனில் அன்று தமிழகத்தில் தமிழர்களின் மொழி, நாகரிகம் ஆகியவைகள் உலகம் போற்றுமளவுக்கு உயர்ந்திருந்தது என்பது தெள்ளிது.

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழர்கள் அரேபியா, ரோம் போன்ற மேலை நாடுகளுடன் வாணிகம் செய்தனரென்பதற்கு, இன்றும் அந்நாடுகளில், அரிசி, மயில்தோகை போன்ற பொருள்கட்கு தமிழ்ப் பெயர் வழங்குவதொன்றே போதிய சான்றாகும். தமிழர்கள் கடல் கடந்து வாணிகம் நடாத்தினரென்பதற்குச் சங்கச் செய்யுள்களில் வரும் "பெருநீர் ஓச்சுநர்" என்ற சொல்லே போதிய சான்றாகும். மேற்கூறிய செய்திகளால் பண்டைய தமிழர்கள் மிக்க புகழுடன் வாழ்ந்தனரென்பதை வரலாறு விளக்குகின்றது.

கடலுள் ஆழ்ந்த இலெமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதியாகிய தென்னிந்தியாவே இன்றுள்ள நிலப் பகுதிகளில் மிகப் பழமை வாய்ந்தது. எனவே தென்னிந்தியாவினின்றும் தொடங்கப்படும் வரலாறுதான் உண்மையானதும், சிறந்ததுமாகுமென்று வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். மேற்கூறிய கருத்தைக் "கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி" என்ற தமிழ் மக்களைச் சிறப்பிக்கும் புறப்பொருள் வெண்பா மாலையின் அடிகள் வலியுறுத்துகின்றன. எனவே வரலாற்றைத் தென்னிந்தியாவில் தொடங்கித் தமிழக வரலாற்றையும், இந்திய வரலாற்றையும், உலக வரலாற்றையும் தொடர்புபடுத்திக் கோவையாக ஒரு வரலாற்று நூல் எழுதினால் இன்றுள்ள தமிழர்களும், எதிர்கால தமிழர்களும் நல்ல பல நன்மைகளைப் பெறுவரென்பது திண்ணம்.

நம் தமிழர்கள் பண்டு பல்வகையிலும் மேன்மையுடன் வாழ்ந்ததை வரலாற்றின் வாயிலாக அறியும் நாம் நமது இன்றைய நிலையை எண்ணினால் உள்ளம் மிகவும் வருந்துகிறது. முடியுடை மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்ட அந்நாளிலே

தமிழ்மொழி அரசியல் மொழியாகப் போற்றப்பட்டு மிக்க ஏற்றம் பெற்றிருந்தது. ஆனால் குடியரசின்கீழ் வாழும் இன்றோ அன்னிய மொழிகளாம் ஆங்கிலமும், இந்தியும் தமிழகத்தில் அரசோச்ச நம் தாய்மொழியாம் தமிழ்மொழி தாழ்ந்த நிலையில் கிடக்கின்றது. பண்டு தமிழை நன்கறிந்த புலவர்களை முடியுடை மூவேந்தர்கள் தங்களினும் மிக்கோரெனக் கருதி அவர்கட்குற்ற வறுமையை நீக்கி அவர்களை நல்ல நிலையில் வாழச் செய்தனர். ஆனால் இன்றோ தமிழகத்தில் தமிழல்லாத வேற்று மொழியைக் கற்றவன் ஏற்றமுடன் வாழ்வதோடு மக்களால் மதிக்கவும் படுகிறான். தமிழ் மொழியை நன்கு கற்றவன் வறுமையில் வாடுவதோடன்றி சில மக்களால் இகழவும் படுகிறான். பண்டு உரிமையுடனும், தன்மானத்துடனும் வாழ்ந்த தமிழன் இன்று உரிமையிழந்து, மானமிழந்து வாழ்கிறான். அறம், மறம். காதல் முதலியவற்றுடன் பண்டு நல் வாழ்க்கை வாழ்ந்த தமிழன், இன்று பொய், பொறாமை, வஞ்சகம் முதலிய தீய குணங்களுடன் வாழ்கின்றான். பண்டைய தமிழகத்தின் வடவெல்லை வேங்கடமென்றும், தெற்கெல்லை குமரியென்றும், கிழக்கிலும், மேற்கிலும் கடலே எல்லையென்றும் இலக்கியங்களின் வாயிலாக உணர்கிறோம். ஆனால் அந்தோ! இன்று தமிழகத்தின் வடவெல்லையாகிய வேங்கடத்தைத் தெலுங்கரிடமும், மேற்கே நாஞ்சில் பகுதியை மலையாளிகளிடமும் விட்டுவிட்டு கூனிக் குறுகிப்போன தமிழகத்துடன் உணர்வின்றி தமிழர்கள் வாழ்கின்றனர்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டின் தமிழக வரலாற்றை நாம் நன்கு உணர்ந்து, ஏனைய தமிழர்கட்கும் உணர்த்தி நல்லுணர்ச்சியூட்டி நம் தாய் மொழியாம் தமிழையும், தமிழகத்தையும் நல்லதோர் நிலைக்குக் கொண்டுவர அல்லும் பகலும் உழைத்தலே உண்மைத் தமிழனின் கடமையாகும். அவ்வாறு செய்வதனால் நம் மொழியும், நாடும் நன்னிலைக்கு வருவதோடு வரலாற்றுலகிலே நமக்கு அழியாததொரு அங்கத்தைத் தேடிக் கொள்ளவும் இயலும்.

நான் கண்ட
"கலையமுதம்".

இத் தலைப்பின்கீழ் எனது கருத்துகளைப்பற்றிப் புகல நீண்ட நாளாகக் குறிப்புகள் எடுத்துவந்தேன். பல்வேறு தொழிலாலிடர்ப்பட்டு எனது வாழ்க்கைச் செல்ல நேர்ந்தது. அதற்குக் காரணம் முற்பிறப்பில் நான் ஈட்டிய வன்மங்களேயாம்.

இருப்பினும் கல்வியின் பெருக்கத்தில் அடிக்கடி ஆழ்ந்த கருத்தை செலுத்துவேன். அதற்காக இந்தியாவின் நாற்புறமும் ஓர் முறைக்கு மும்முறையாகச் சுற்றிப் பார்த்து வந்தேன். பிறகு எனதுள்ளத்தே தோன்றிய எண்ணங்களையே திரட்டிக் "**கலையமுதம்**" என்ற தலைப்பின்கீழ் வழங்கலாயினேன்.

படிக்கும் நண்பர்கள் யாவரும் தங்கள் எண்ணங்களைக் காலந் தாழ்த்தாது வழங்கினால், பெரிதும் உவந்தேற்றுத் தக்கன ஆங்கே செய்வேன். அன்னோர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையனவேன்.

இங்ஙனம்,

வித்துவான். த. பொ. தண்டபாணி, பி. ஏ.
தலைவர்,
ஸ்ரீ ஜெயராஜன் பள்ளிக்கூடம்,
1, காமாட்சி அம்மன்கோவில்வீதி, புதுச்சேரி.

மக்கள் ஈடேறும் வண்ணம் இறைவன் ஈந்த நெறிகள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்ப. அவற்றுள் வீடொன்றே என்றும் அழியாததாய், தன்னிலையிற் சிறிதும் மாறுததாய் எல்லாமுந் தானேயாய், பால் வண்ணம் ஒன்று பசுக்கள் பல நிறம்போல், நானு மதந்தொறும் ஒன்ருய் மருவி நின்று தன்னை அடைந்தாரைத் தானுக்குந் திறத்தில் தலை சிறந்து நிற்பதால் ஏனைய மூன்றும் அதனைப்பெற உதவும் வழிகளேயாம். அவை முறையே ஒன்றுக்கொன்றுஉயர்வுடைத்தென்க அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் இடம், பொருள், ஏவல் இம்மூன்றுடையார்மாட்டே நனி சிறக்கும் இயல்பின. ஆனல் வீடோ யார் மாட்டுத் தங்கு தடையின்றித் தானே தன்னைச் சிறக்க வழங்கும் தன்மையது. சிற்சில சமயங்களில் மக்களுக் குற்ற மனமுதலிய பூதங்களின் வயப்பட்டும், ஆணையேற்றுப் பணிசெய்துங் கிடக்குந் தலைவிதி அறம்; பொருள், இன்பம் இம்மூன்றிற்குண்டு. ஆனல் வீடோ, எஞ்ஞான்றும் பூதங்கள் தமக்கெல்லாம் அடைக்கலந் தருவதோடு அவற்றின் அகங்காராதிகளையும் அழித்துவிடும். நாலடிப் புலவரும் ஈரடிப் பெருமானும் அவற்றின் இருபயன்களை மிக விரிவாகக் கூறியுள்ளார்கள். எனவே வீட்டையடைய அம்மூன்றின் துணை இன்றியமையாதது எனப்பெற்ரும்.

உலகில் தோன்றிய உயிர்கள் பல. அவைகள் உழலும் வழிகளும் எண்ணில. ஒவ்வொரு ஆன்மாவும் தனக்கெனவோர் நிகழ்வினை முன்வினை சுழலைப் பெற்றுள்ளது. அதனை அழிக்க அல்லது வளர்க்க வேண்டப்படுவது அறிவு. அவ்வறிவும் வீடுபேற்றை எய்த உதவுவதாக இருப்பின் மிக மேலாம். அத்தகைய சிறந்த இறையறிவை வரப்பெறயாது செய்தல் வேண்டும்? எல்லாம் வல்ல பெருந்தகைப் பெருமானும் தெரிந்தே நமக்கு “ஆருவது அறிவை” வான்போல வழங்கியுளன். அவ்வறிவின் விசேடம், இறையாம் பெரும் பொருளை நாம் கண்ணுரக் கண்டு அக்காட்சியில் விளையும் இன்னமுதையுண்டு, அதுவும் நாமுங் கலந்த ஓர் ஒப்பற்ற நிலையில் இருந்தபடி இருக்க அது ஓர் ஆருக (வழியாக) இருப்பதே என்க. அந் நல்வழி காட்டும் அறிவினை மக்கள் மனம்போன போக்கெல்லாம்

தத்தம் கன்மங்கட்கேற்பச் செலவிட்டு வாடியும் வதங்கியும் ஏங்கியும் மங்கியும் குலேகின்றனர். அவர்களுடைய மனமாசு தீர, இதுவரை உலகில் உயிர்த்துறை இறங்கிய பெரியார்களும் உலகின் உண்மை வளர்ச்சியை வேண்டிய சிறந்த அறிஞர்களும் எண்ணற்ற அறிவுரைகளும் அருட் செயல்களும் தகுந்த வழிகளும் கோலி நின்றனர். எதிர்த்தோர்களை வென்றும், கொன்றும் இறையறிவின் மேன்மை விதைகளை நந் நாவலந்தீவில் நட்டனர்.

அவைகள் செழித்தோங்கிய காலத்தில்தான் திராவிடர்கள் உலகெங்கும் தங்கள் நாகரிகக் கதிர்களைப் பரப்பினர். அவர்கள் வாழ்ந்த பெருநிலங்களே இன்று ஐந்து கண்டங்களாகப் பிரிந்துள. திராவிடர்கள் பிறக்காத இடமே உலகில் கிடையாது. அவர்கள் வாழாத இடமும் இல்லை. "ஆரியர்" என்பவர்களும் மிகப் பழைய காலத்தே வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே என்க. கோல்ஸ், திராவிடர், ஆரியர் என்ற வகுப்பு வாதங்கள் எல்லாம் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் இல்லை என்க. அவ்வளவு பெருமை வாய்ந்த நமது இந்தியர்கள் எதனுல் அப்பெருமையை எய்தினர் என்றால் தொன்றுதொட்டே அவர்கள் விண், மண், நீர், காற்று, நெருப்பு ஆய பிறவற்றைப் போற்றித் துதித்து வாழக் கற்றமையேதான்.

எனவே அம் மிகப்பழைய காலத்தேயும் எழுத்தறிந்து வாசித்திருந்துளர் என்பது மிகையாகாதென்க. "எழுத்தறிவித்தவன் இறைவனுவான்" என்ற பழமொழி அன்று முதலாக நிலவ ஆரம்பித்தது. அன்றைய நாகரிகங்களை அறிய விரும்பின் தகுந்த அளவில் சான்றுகள் கிடைக்கா. கால மாறுதலே அதற்குக் காரணம் இருப்பினும் சுமார் 2500 அல்லது 2750 ஆண்டுகளுக்குமுன் இருந்த நமது மூதாதியோர்களின் அறிவியல், அரசியல் ஆய பிறவெல்லாம் கிடைக்கின்றன. கிடைத்துக் கொண்டேயும் உள. திருமூலர் காலம் கி. மு. 2550 முதல் கி. பி. 450 என்கிறார்கள். அவர்கள் காலத்தில் கலைக்காட்சி எவ்வாறிருந்தது? தமிழின் தொன்மை, பரப்பு முதலியன எவ்வாறிருந்தது என்பதைப்பற்றிச் சிறிது பார்ப்போம். அவர்கள்

வாயிலாகவே "தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமாமே" என வெளிவரும் சொற்களிலிருந்து தத்துவந் தோய்ந்தது தமிழ் என்றும் அத்தமிழ் பரவிய மண்டலங்கள் ஐந்தென்றுங் காண் கிறோம். நிலப் பரப்பிலும் மக்கள் எண்ணிக்கையிலும் கண்டத் தைக்காட்டிலும் அதிகப்படுவது மண்டலம். கண்டம், மண்ட லம், அண்டம், சராசரம் இவ்வார்த்தைகளின் பெரும்பொருளை முறையே உணர்வோமாயின், கண்டத்திலும் மண்டலமே பெரி தெனப்படும்.

தத்துவங்கள் நிறைந்த எம்மொழியும் பழமையானதென்றே கூறலாம். சிறப்பாக சைவ மதத்தில் காணப்படும் தத்துவ விளக்கத்தைப்போல் அடியேன் வேறு யாண்டும் காண்டதில்லை. அவ்வாறு கலையமுதானது இறைவனும் உயிரும் ஒன்றேயாகப் பெருந் தோழமைகொண்டு ஓங்கி வளர்ந்த காலத்தில்தான் கலை கள் மதிப்படைந்தன. மக்களும் உள்ளஞ் செழிக்க வாழ்ந் தனர். எண்ணியவாறெல்லாம் எய்தினர்.

பின்னர், புத்தர், ஏசுநாதர், திருவள்ளுவர் போன்ற பெரி யார்கள் உலகில் உதித்து கலையின் பயனை நன்குணர்ந்து, "அறத்தாறிதுவென வேண்டா; சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை" என்ற குறளுக்கிணங்க வாழ்ந்து போயினர்.

பிறகு, கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடதேவர், மாணிக்க வாசகர் முதலியவர்கள் முறையே தோன்றி தம் முன்னோர்கள் வளர்த்த வழியிலேயே கலையின் பயனைத் துய்த்தின்புறுவாரா யினர். இதற்குள் காலம் கி. மு. 2550 லிருந்து கி. பி. 282-க்குக் குறைந்து வரலாயிற்று.

வடிவ கணிதத்தில் (Geometry) 29 ஆவது பாடத்தில் கண்ட தத்துவத்திற்கு ஆசிரியர் "பித்தாகொரஸ்" என்பவரே என நாம் படிக்கின்றோம். ஆனால் பாக்டட் மாநகரச் சிலா சாசனங்கள் அதனை கி. பி. 500 அல்லது கி. பி. 758 ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்திருந்த அறிஞர்களின் ஒளி மிகுந்த தெய்வ அறிவின் விசேடப் பிரசாதமாக இருந்திருக்க வேண்டு மென முடிவுக்கு வருகின்றனர். இம்மேற்கோளால் தெய்வ

அறிவின் விசேடமும் அவ்வறிவின் வளர்ச்சியாவது ஏனைய அறிவு நிலைகளையும் செப்பனிட்டுக்கொள்ளுவதே என்ற முடிவை நன்கு காண்கின்றோம்.

பிறகு சிரியன் (இவர் கிருத்தவர்களைச் சைவர்களாக்கல்) அப்பர் சுவாமி, மகேந்திரவர்மன் திருஞான சம்பந்தர், சுந்தரர், சேதிராயர், கருவூர்த் தேவர், சேக்கிழார், இராமானுசர், குலோத்துங்கன் I முதலிய பல பேரறிஞர்கள் தோன்றுவாராயினர். இவர்கள் யாவரும் காலத்தாற் பிற்பட்டவர்களே. இவர்கள் யாவரும் கலை வல்லவர்களே எக்கலையில்? தெய்வத் திருவருட் கலையில், உலகானுபவம் நிறைந்தவர்களாகி மண், பெண், பொன் ஆகியவற்றை வளர்க்கும் அறிவுத் துறைகளை எல்லாம் செப்பனிட்டுக்கொண்டு அவற்றின் பயனாய "இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்" என்ற செம்பொருளுண்மைக்கு இலக்கணமாய்த் தங்களையே பண்படுத்தி வாழ்ந்தனர்.

இப்போதுங்கூட, நமது இந்தியர்கள் ஆன்ம கலையில் போதிய எண்ணிக்கை இன்றி அளவில் குறைபட்டே இருக்கின்றனர். மன்னர்களும் அப்படி, மக்களும் அப்படி. முறைப்பட, திட்டந்திட்டமாக, படிப்படியாக, ஆன்மபெற்றியை அடைந்தின்புறலாம் என ஆன்மார்த்த நூல்கள் கூறுமேனும், அந்நூல்களுள் ஆங்காங்கே வெறுக்கத்தக்கவாறு பதிந்து கிடக்கும் ஆணவ நிறைந்த சிற்சில சொற்றொடர்கள் இனம், மதம், நிறம் இன்னன பிறவற்றிற்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்திருப்பதால், இந்திய மக்கள் பெரும் எண்ணிக்கையில் கற்றோர்க்கெல்லாம் தாம் வரம்பாக ஆதற்கில்லாமல் இருந்து வருகிறது.

இது இவ்வாறாக, இந்துக்கள் முக்கியமாகப் போற்றும் ஆன்ம நூல்களில் இறையறிவுக்குக் கொடுத்திருக்கும் முழு கவனம், அன்பு, ஈட்டம் முதலியவற்றை வேறு நாட்டு ஆன்ம நூல்களில் காணற்கில்லை. (2-ம்) திருக்குறளையும் கீதையையும் ஒருபக்கம் எடுத்துக்கொள்ளுங்கள். மற்றோர் பக்கத்தில் "தெய்வக் கொரான்" "விவிலிய வேதம்" என்பவற்றைக் கவனியுங்கள். பிறகு என் கருத்து உங்களுக்கு விளங்கும். இதனை

மேனாட்டும், கீழ்நாட்டும் உள்ள என் நேயர்கள் யாவரையும் கவனித்துக் கூறுமாறு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

பழைய காலத்தில் பாண்டிய தேசத்திய அறிஞர் ஒருவர் "ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனைப்பற்றிக் கூறுகிறார். அந்நெடுஞ்செழியன் என்ன செய்தானும். கல்விக்காக தனது அரசியல் அதிகாரம், முதலிய எல்லாவற்றையும் ஒல்லும் வாயெல்லாம் செலவு செய்தானும்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" (புறம்) என்பன அவ்வடிகள். "கற்றல் நன்றே" என்ற சொற்றொடர்க்குப் பொருள் மாறு கக்கொள்ளாதிருக்கும்படி என் நண்பர்கள் யாவரையும் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். "ஈசனுக்கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பிலார்" என்றார்கள் நம் முன்னோர். இக்காலத்திய அன்பின் பெருக்கும், போக்கும், அதன் விரிவையும் சிறிது ஒப்பிட்டுப் பாருங்கள். வறுமையும் வெறுமையும் நங் நாவலந் தீவுக்கு ஏன் வந்தது? நம்மால்தான். எப்படி? உண்மைப் பொருளை ஓர்ந்தோமில்லை. அல்வழிப்பட்டு, ஆசைக் கயிற்றால் நமது இந்திரியங்களைச் சுழற்றிவிட்டு களித்து வருகிறோம். அவற்றையெல்லாம் நீக்கிக் கொள்ளும்நாள் கிடைக்குமாக. அவ்வாறே கற்கத் தகாத காணவுந்தகாத பொருள்களை எல்லாம் கற்கின்றோம். ஓய்வில்லை. பட்டங்கள் பெற்றும் பயனில்லை. எனவே எவ்வாறு எதனைக் கற்றல்நன்று என்பதை முதலில் அறிவோமாக. "More skilled to raise the wretch than to rise" என்ற ஆங்கில அறிஞர் 'ஆலிவர் கோல்ட்ஸ்மித்' அவர்களின் வாய்ச் சொல்லைக் கவனியுங்கள்.

இன்னும் பார்ப்போம். பொருந்தில் இளங்கீரனார் என்பவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். புறநானூற்றில் இவரைக் காணமுடிகிறது. இவர்கள் கபிலன் என்ற பெருநூல் வல்லவரிடம் அன்புடையார் போலும்! கபிலரைப் பற்றி முக்கியமாக அவரது கலையமுதச் செழிப்பைப் பற்றி நாமுஞ் சிறிது அறிந்துள்ளோம். எனினும் பொருந்தில இளங்கீரனார் கூறுவ கேட்டு மகிழ்வோமாக.

திரு அரவிந்தர் இம் மண்ணுலகை அமரலோகமாக்க முடியும் என்கிறார். இவர் கூற்றுப் புதியதல்ல. எப்படி? இவ்வுலகம் நிலையற்றதென்ற சழக்கறிவிற் செல்லாது இவ்வுலகம் அறிவின் மலர்ச்சிக் கிருப்பிடமானதென்றும், அவ்வறிவும் தெய்வத்திற்குற்ற பேரியல்புகள் யாவையும் பெற்றிருக்கிறதென்றும், அத்தகைய அறிவிற் சிறந்த, புகழ் நிறைந்த, ஆன்ம ஒளிநிறைந்த புலவர் பெருமக்கள் பலராய்த் தோன்றி இக்குவலயத்தை அமரலோகமாகச் செய்திருக்க, நாம் அதனை உணராது பொய்படுகிறோமென்றும் அறிந்துகொண்டால், இவ்வுலக வாழ்வு ஓர் பெருஞ்சுகமாக மாறி நித்திய இன்பம் அளிக்கும். அப்போது ஏழைகள் கூறுகின்ற "உலக வாழ்வு மிகவும் சிரமம்" என்றது பொடிபடுகிறது. அப்படிப்பட்ட ஒப்புயர்வான அறிவை வளர்க்க யாது செய்தல் வேண்டும்? செய்யுள் செய்ய வேண்டுமாம். இது பழைய காலத்திய முறை. செய்யுள் என்றால் இலக்கண வழுவற்ற சொற்றொடர்களின் தொகுதி என்க. மேலும் எழுத்துச் சொற்பொருள் அணி இந்நான்கும் உடையது. காலத்திற்கேற்ப நாம் செய்யுளே செய்யவேண்டும் என்ற நியதியைத் தள்ளிவிடலாம். ஆனல் அதற்குப் பதிலாக வேறு ஏதேனும் செய்தாக வேண்டும். செய்யுளும் நீர்வீழ்ச்சியைப் போல வருதல் வேண்டும். பொன்னுக்கும், பெண்ணுக்கும், மண்ணுக்கும், மதிப்புக்கும் ஊன்றிய சுயநலத்தின் சார்பில் நமது நாக்கு செய்யுட்களைப் பாடக்கூடாது.

இவ்வியல்புகளுடன் செய்யுள் இயற்றிய பெரும் புலவர் பெருமான்தான் "கபிலன்" என்பவன். எனவே அப் புலவன் இருப்பானேயாயின், அவன் வாழும் நாட்டில் யார்தான் சென்று வாழார்? அமெரிக்கா எங்கே? புதுவை எங்கே? ஏன் அங்கிருந்து திரு. அரவிந்தரை நாடிப் புதுவைக்கு வருகின்றனர்? ஆன்மப் பெரியார் திரு. அரவிந்தர். அதைப் போலவே கபிலரும். இதைக் கண்ட பொருந்தில் இளங்கீரனர் என்ற புலவர் கூறுவதாவது :—

ஒளியோர் பிறந்த இம்மலர்தலை உலகத்து வாழேம் என்றலும் அரிதே, தாழாது செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் இன்றுளனாயின் நன்றுமன்", என்பதே.

இதனுள் கிடைக்கும் விழுமிய பொருள்களையும் பொருந்திய இளங்கீரனைப்போல பொருத்தமான புலவர்கள் எங்குளர் என் பதையும் தமிழ் மக்கள் நன்குணரின் கலையமுதத்தின் பெற்றியை அக்கணமே அனுபவிப்பர். இது திண்ணம்.

ஆழத்தைக் கொண்டே கனத்த கப்பல்களை மிதக்கவிடுகின் றனர். ஆழம் மிகவும் உடைய காரணத்தால் ஆழி என்ற பெய ரும் கடலுக்கு வந்தது. அட்லாண்டிக் மகா சமுத்திரம் ஆழத் திற்குப் பேர்போனது. ஆதலின் அது மிகவும் கனமான கப்பல் களை மிதக்கச் செய்கிறது. கப்பற் பயணமும் அந்த சமுத்திரத் தில் ஆபத்தாக முடியவில்லை. அதைப்போல் நமது அறிவும் ஓர் கப்பல்தான், இறைவனும் ஓர் ஆழிதான். ஞானசம்பந்தர் சீகாழிப் பதிகத்தில் கடவுளைக் கடலுக்கு ஒப்பிட்டுக் (கடலானு்) கூறியிருக்கிறார். இறைவன் என்ற கடலில் உயிர்களாகிய கப்பல் கள் ஏன் மிதக்கின்றன? தத்தமக்குற்ற மலங்களைக் கழுவிக் கொள்ளும் பொருட்டென மணிவாசகர் கூறுகிறார். "தங்கள் மலங்கழுவார் வந்து சார்தலினால்" என்பது அவர் வாய்ச்சொல். திருவெம்பாவையில் இவ்வடி வந்திருக்கிறது.

எனவே இறையறிவை முதன்முதலாக அறிவதே எல்லா வற்றினும் சிறந்ததென்றும், "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் நாம் உண ரக் கிடக்கின்றது. இறையறிவின் ஆழத்தில் அனேக மதித்தற் கரிய முத்துக்களான ஆன்மாக்கள் பதிந்துகிடக்கின்றன. பூமி யின்கீழ் இடப்பட்ட வித்துக்கள் முளைத்தெழுந்து பயனளித்து மீண்டும் மாய்வபோல, அவ்வான்மாக்களும் இறைவன் ஆணை யேற்று உலகில் உதித்து நின்றழியுந் திறத்தின. இம்மறைப் பொருளை அல்லது கருப்பொருளை நாம் நன்குணருமிடத்து ஆன்மலாபம் கிடைக்காது போகாது. மேலும் பல கிளைகள் உடைய மரங்களே மிகவும் வேண்டப்படுகின்றன. அஃதொக்க பல்வேறு அவஸ்தாத்திரயங்கள் உடைய இவ்வுலகமே மிகவும் வேண்டப்படுகிறது. கிளைகள் எப்படி மரத்திற்கு உரி அல்லது சினைப் பொருளோ அவ்வாறே உலக அறிவும் ஓர் உரிப் பொருள் என மேதாக்கள் கூறுகின்றனர். எனவே இறை + உயிர் + உல-

கம் இம் முப்பொருளை முறைப்படி அறியும் அறிவே சிறந்ததென்கின்றார்கள். அதற்கு மாறாகத் தலைகீழாகப் பேசுவோர்களின் முறைத்திட்டம் நமக்கு வேண்டாம். இதுவரையிலுங் கூறிய எனது கருத்துக்களை ஒட்டி அகத்திணை இயல் கூறுகிறது. இறை + உயிர் + உலகம் என்பதற்குப் பதிலாக முதல் + கரு + உரிப் பொருள் என்ற மூன்றை அங்கே கூறுகின்றார்கள்.

சிந்திக்குமிடத்து உயிர்க் குருதி தாத்தக்கச் செய்யுள் அமைய வேண்டின் முதல் கரு உரிப் பொருள் என்ற முறை வைத்து அம்முறைக்கீழ்ப் பாடவேண்டுமென அகத்திணை இயல் சட்டங் கூறுகிறது. "முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே நுவலுங்காலை முறைசிறந்தனவே பாடலுட்பயின்றவை நாடுங் காலை" என்பதுதான் அது.

இவ்வாறெல்லாம் நம் முன்னோர்கள் ஊன்றிய கருத்தோடு ஆழ்ந்தகன்ற அறிவோடு விளங்கினர். நாமோ இக்காலத்தில் எவ்வெவ்விதமோ செய்யுள் செய்து ஐம்புலன்களுக்கும் விருந்தாகுகின்றோம்

மேலுங் கவனிப்போமாக.

சங்க காலத்திய கல்வியின் திறமானது கலையமுதத்தை எவ்வாறுதான் வழங்கிற்று என்பதைக் கவனிப்போமாக. மிகவும் அரிய முயற்சிசெய்து நல்ல முறையில் அவர்கள் பயின்றனர். தங்கள் மொழியின் செம்மையையே குறிக்கோளாகக் கொண்டனர். இந்தக் காலத்தில் ஆங்கில மொழியை நாம் போற்றுகின்றோம். ஏன்? அது மிகவும் பெருந்தன்மையுடையது. எல்லா மொழிகளையுந் தழுவிக்கொள்ளுகிறதல்லவா? இதர மொழிகளில் இருந்தும் பற்பல சொற்களைத் தனதாகக்கொண்டு மகிழ்கிறது. இன்ன பிற காரணங்களால் அதனை நாம் மெச்சுகிறோம்.

ஆனால் தமிழனிடத்தும் அத்தகைய பெருந்தகை இருந்தது. இப்போதும் அவ்வாறு அப்பெருமையினைக் குறைக்காது காத்துவர வேண்டுமென வெகுபலர் பாடுபடுகின்றனர்.

முதன் முதலில் இலக்கணங்கண்டார்கள். இலக்கணம் போன்றிருந்த இலக்கணப் போலிச் சொற்களேயும் ஆமோதித்தனர். சோழநாடு என்றது சோணுடு என மருவி வந்த சொல்லைப் போன்ற மரூஉச் சொற்கள் பலவற்றையுங் கொண்டார்கள். குறவர்களும் கள்குடிப்போர்களும் கள்ளை "சொல் விளம்பி" என்கிருர்கள். அத்தகைய குழுவினர் கூறும் சொல்லைக் குழூஉச் சொல்" எனப் பெயரிட்டு ஏற்றனர். இடக்கர் அடக்கல், மங்கலம் என்பவற்றையுங் கொண்டனர்.

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்ற மூன்றையுஞ் சேர்த்து இயல்பு வழக்கென்றும், இடக்கரடக்கல், மங்கலம் குழூஉச் சொல் மூன்றையுஞ் சேர்த்து தகுதி வழக்கென்றுங் கூறுவர். இங்கே நான் கூறவிரும்பியதியாதெனில் இலக்கணப்போலி முதலாக குழூஉச் சொல் ஈருகக் கூடிய ஐந்தும் பல்வேறு மொழிகளைப் பேசிய மக்களின் கலப்பால் உண்டானவை என்பதே. அத்தகைய கலப்பு மொழிகளைப் பேணிய காரணத்திஞல்தான் தமிழ் சிறந்திருக்க வேண்டுமென நான் ஊகிக்கின்றேன்.

எனவே செந்தமிழின் இயற்கையானது நான் மேற்கூறிய வழக்குஞ் செய்யுளுமாகத் திரண்டு விளங்கிற்றுப் போலும்! "செந்தமிழ் மாலைகளே கடவுளைக் காட்டும் கண்ணுடிகள்" என்று நம் வாகீசர் "திருவாரூர்" திருவிருத்தத்தில் கூறுகின்ருர்கள். எனவே கலையின் வளர்ச்சியே அவ்வளவு பரிசுத்த அறிவின் செழுமையினைப் பெற்றிருக்குமாஞல், அக்கலையின் பயன் ஏன் அளவற்ற நன்மைகளை மக்கட்குக் கொடுத்திருக்கக் கூடாது? இக் கருத்தையே பின்வரும் செய்யுள் கூறுகிறதென்று நினைக்கிறேன்.

> "வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்
> செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
> முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
> புலந் தொகுத் தோனே போக்கறு பனுவல்"

இவ்வாறெல்லாம் கலையமுதச் சிறப்பினை ஓர்ந்தால்தானே இறை

வனை வழிபட எண்ணுமாறு எழும். கலித்தொகையில் ஓர் பாட்டு ஞாபகம் வருகிறது. அதனையும் கவனிப்போமாக.

ஓர் மரப்பெட்டி இருக்கிறது. பூட்டில்லை. சாவி எப்படி இருக்கும்? அதை யாருந் திறக்கலாம். விலையுயர்ந்த பொருள் களை அதில் வைக்கமாட்டார்கள். இரும்புப் பெட்டி வாங்குவோ மாயின் நல்ல இடத்தில் பாதுகாப்புடன் வைத்துக்கொள் கிறோம். ஏன்? காரணம் யாவரும் அறிந்ததே. இரும்பினும் உயர்ந்த வைடூரியம், இரத்தினம், கோமேதகம் முதலிய பல வயிரங்களையும் பொன் - வெண்காசுகளையும் அதனுள் வைத் திருந்தால் யாரும் கவரார் அல்லவா? எளிதில் அதன் கதவு களைத் திறக்கவோ வேறு சாவி உபயோகிக்கவோ முடியாதல் லவா? எனவே, அதுபோலவே கலையமுதம் என்ன அறிவிக் கிறது தெரியுமா? கவனிப்போமாக.

காற்றடைக்கும் பைகள் இக்காலத்தில் பலவாய்த் தோன்றி யுள. அவற்றின் உபயோகமும் நமக்கு நன்கு புலப்படு கிறது. 8000 அடி ஆழமுள்ள முந்நீரில் (சமுத்திரத்தில்) அஞ் சாது மூழ்கிப் பாய்ந்து நீராடிக் களிக்க உதவுகிறது. 28000-30000 அடி உயர்ந்து பறக்குங் காலத்தில் கீழிறங்க மிகவும் (Parachuts) பயன்படுகிறது. இன்னன பிற நன்மைகள் எண்ணிலவாய்க் கிடைக்கின்றன. ஆனால் அப் பைகள் எல்லாம் வெப்பதட்ப நிலைக்குத் தக்கவாறு ஆக்கப்படுகின்றன. அதாவது குளிர்ந்த பாகங்களில் காற்றடைத்த பைகள் அதிக உயரத்தில் பறப்பனவல்ல. மேலும் வெப்பமான பாகங்களில் அதிகமாக தாங்கவியலாது வெடிக்கின்றன. மேலும் காற்றிலும் பல்வேறு பிரிவுகள் உள. பிராண வாயு, கரியமில வாயு, அபான வாயு, தனியன் புகை, ஆவி என்றெல்லாம் பிரிந்துள. ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே கனபரிமாண அளவு ஏற்பட் டிருக்கிறது. இவைகள் எவ்வாறாயினும் ஆதுக. ஆனால் ஒன்று. காற்றுள்ளவரைக்குந்தான் அதனைப் பெற்ற கருவிகளுக்கு மதிப் பும் செயலும் நிகழ்கின்றன. மேலும் அவ்வவ் வாயுக்கள் அடங்கியுள்ள கருவிகள் "கால் உதைப் பந்தாயினும் சரி,

வானிழி கருவியாயினும் சரி" ஓர் சிறிதும் ஓட்டை யில்லாமலும் வீறல் கீறல் முதலியன அற்றும் இருந்தாக வேண்டும். இன்றேல் காற்று அதனுள் (அக்கருவிகள் ஒவ்வொன்றிலும்) தங்காது இழிந்து வெளியாகும். ஆதலினாற்றான் தற்காலத்திய தொழில் வல்லவர்கள் தோற்பைகள், காற்றடைத்து விளையாடுவதற்காகச் செய்யும்போதெல்லாம், நல்ல உயரிய முறைகளைக் கையாளுகின்றனர். ஆனால் இதுவரையிலும் ஓட்டை, கீறல் வீறு முதலிய குறைகள் அமைந்த பைகளுள் காற்றடித்து அக்கருவிகளுள் அக் காற்று நிற்கக் கண்டு உபயோகித்து மகிழ்ந்தவர்கள் யாருமே இவ்வவனியில் இருக்கிறதாக நாயேற்குத் தோன்றவில்லை. அன்பர்கள் அறிந்திருந்தால் உடனே எடுத்துரைத்துதவலாம்.

எனவே இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. ஆனால் மிகப் பழைய காலத்திருந்தே கீழ்நாட்டுப் பேராசிரியர்கள் முக்கியமாக ஆன்ம வளர்ச்சியில் மேம்பாடுற்றோர்கள், துவாரங்கள் நிறைந்த பையில் காற்றடைப்புண்டிருந்து, வேண்டிய அளவுக்கு கருமானுபோகங்கள் நுகர்ந்திட உதவியிருப்பதைக் கண்டுள்ளார்கள். அப்பைக்குத்தான் "உடம்பு" என்று பெயர். "காற்றடைக்கும் பையடா, இது காயமே எனக் கொள்ளடா" என்றார் ஓர் சித்தர் பெருமானார். அவ்வுடம்பினுள் தங்கியிருக்கும் காற்றுக்குத்தான் உயிர் என்று பெயர். உயிர் எவ்வளவு அருமையான காற்றென்று யாவருக்குந் தெரியும். ஏன்? பிராணன் இன்றேல் பிணமெனப் பெயர் பெறுகிறோம். ஆவியார் போவதுமே அகத்தார் கூடி அழுகின்றனராம்.

இவ்வுயிர் நவத்துவாரங்கள் உற்ற நமது உடலில் தங்கும் வியப்பே வியப்பு. எல்லா வியப்புகளுக்கும் இதுவே தலையாயது என்க. இது தங்கும் உடம்பைத்தான் கலித்தொகை என்ற தமிழ் நூல் "உயிர்ப்பொதி" என்கிறது. "உயிரடங்கிய பெட்டி" என்ற பொருளைக் கொள்க. இதனை எப்படித் திறப்பது? இவ்வினாவுக்கும் பதில் அக்கலித்தொகையில் உண்டு.

கணவனைப் பிரிந்த நங்கைவாயிலாகப் பதில் வருகிறது. கவனிப்போம். உடம்பினிடத்துள்ள உயிரானது எப்படி உடம்

பினை நேசிக்கிறதோ அவ்வாருகக் கணவன் தன் காதலியை நேசிக்கவேண்டுமென திருவள்ளுவர் கூறுகிருர் "உயிரிடை எம்மிடை நட்பு" என்பதே. பெண்கள் பேதமையிற் சிறந்தவர் கள்தான். எனினும் சிற்சில பண்பாடுகளில் தலையாக நிற்கின் றனர் என்பதும் மிகைப்படாது. காதலைப் பேணும் செயலில் கற்புடைய மங்கையர்கள் பிறழ்ந்ததாகக் கண்டேனில்லை. எல் லாரும் இப்பண்பினைப் பெற்றிலரே என்று என்னைக் கேட்க வேண்டாம். அதற்காகவே கற்பெலாம் சிறந்த கன்னியர்களே காதலைப் பேணுவர் என்றேன். வேசிக்கும் தாசிக்கும் இது பொருந்தாது.

நிற்க, கலித் தொகையைக் கவனிப்போம். உயிர் அடங் கிய இப்பை அல்லது பொதியை அவிழ்க்க ஓர் கருவியை அளித் திருக்கிறது. அதுவே காலையாகும். நீண்ட தோகை அமைந்த பெண்களின் உடம்பினுள் வயிரத்தினுஞ் சிறந்ததாகக் கொள்ளப் பட்டு அடைக்கப்பட்டுள்ள உயிருக்கொப்பான கணவனின் மேன்மைகளைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிய பெருந் திறவுகோலாக இருப்பது காலைதான் என்கிறது அக்கலித் தொகை. காலைக்குற்ற பெருமையை நாம் நன்குணர்ந்துள் ளோம். இம் மறைபொருளை அறியாதவர்கள்தான் மாலை என் பார்கள் என்று அக்கலித்தொகை இடித்துணர்கிறது.

உயிரும் அருவப் பொருள். அது அடங்கிக் கிடக்கும் ஆக்கையோ அநித்தியப் பொருள். அநித்தியப்பொருளால் அருவப் பொருளுக்கு ஆவதொன்றுமே இல்லை. எனவே மனைவி பெருமையுற வேண்டின் "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்ற கருத்தின்படி வாழ்தல் வேண்டும் அவள் பொதியாகவும் அவன் பிராணனுகவும் இருக்கவேண்டும். இந் நிலையை நன்குணர்த்தப் பகலவன் எழுகின்ற காலை நேரந்தான் தேவை எனப்படுகிறது.

இப்போது அக்கலித்தொகையின் அடிகளை வழங்குகிறேன்.

"வாலிழை மகளிர் உயிர்ப்பொதி அவிழ்க்கும்
காலை யாவதறியார்
மாலை என்மனுர் மயங்கியோரே"

என்பதே இலக்கியப் பொருளின் கண்கொண்டு இதனை நோக்குக. நோக்குவோமாயின் "காலை" என்பது எழாம் வேற்றுமை உருபாய் முடியும். எனவே இலக்கியங்களால் ஆம் பொருள்கொண்டு நோக்குமின், அதாவது பெண்ணியல்புகள் அத்தனையும் மிகக் கனம் உடையன என்றும் அக்கனத் தன்மையைப் பெருமைப்படுத்த ஆண்களே இறைவனால் ஆக்கப்பட்டுளர் என்றும் கருதுவது குண கோளார்த்தத்திற்கே பொருத்தமாகுமென நினைக்கிறேன்.

சூரியன்—கணவன்.

இரவி இருளை அகற்றும், பல்வேறு பொருள்களைப் பல்வேறுவிதமாகச் செப்பனிடும். இரவியை வெறுப்பனவும் உள. ஆனால் இரவியை வேண்டாதார் மக்கள் குலத்தில் யாருமிலர். உலகம் ஓர் உருண்டை வடிவமானது. கனமுடையது. அகல நீளம் பெற்றது. உயரமும் ஆழமும் உடையது. மக்கள் திரள் அனைத்தையும் தாங்கி நிற்பது. இருளும் ஒளியும் பெற்றது. சுருளும் வேகமும் உடையது.

இப்பாரிய உலகினை இயக்குவது எது? அதுதான் இறை. எல்லாம்வல்ல கடவுள். சித்தி விளாகச் செம்மல் அவரே. அவ்வுலகிடைத் தோன்ற வேண்டின், நமக்கு ஓர் உருவம் வேண்டும். பிறகு பெயர் வேண்டும். இடம் வேண்டும். உயிரானது நுட்பமானது. காணற்கரியது. கருதுவதற்குரியது. அது உலகு போன்று ஓயாது சுழன்று சுழன்று வருகிறது. ஏற்ற உடல்கள் எண்ணில. ஏற்கும் உடலும் எண்ணற்றன. "Concyclic" என்பர் ஆங்கிலத்தில். அவ்வாறு வட்டாடல்போல் சுழன்று வருவதுதான் உயிரின்வேலை. உலகில் வரும்போது ஓர் உடலையே குறித்து வருகிறது. அதனுள் சிலகாலந் தங்குகிறது. இதுபற்றியேதான், நாம் போற்றும் வள்ளுவர் நாணுடைமை என்ற அதிகாரத்தில் "ஊனைக் குறித்த உயிர் எல்லாம்" என்றார் போலும்.

உடல் இல்லையானால் உயிரின் தன்மையை இன்னதென்றறிதற்காகாது. எனவே உடல் அவசியம் எனப்பட்டது. இங்கே

ஓர் கேள்வி பிறக்கிறது? என்ன அது? உயிரானது எந்த உடலை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுகிறதா? அல்லது அங்கேயும் ஓர்முறை உண்டா? என்பன.

முறை உண்டு. மலபரிபாகம் என்ற சட்டத்தின்கீழ் உயிர்க்குற்ற வினையாதிகளின் வரவு செலவுக்கேற்ப, ஓர் உடல் தேவைப்படுகிறது. இவ்வாறு ஆன்ம நூல்வல்லோர் கூறுகின்றனர். அன்பர்கள் ஆராய்வார்களாக.

எனவே உயிரின் போக்கையும் அதன் வளர்ச்சியையும் கண்காணிக்க ஓர் இயமானன் தேவை என்ற முடிவுக்கு வருகின்றோம். அப்பெருமான் யார்? அவனே கடவுள். எனவே சூரியன்முன் சுழலும் உலகைப்போல, இறைவன்முன் உயிர்கள் உடலேற்றுச் சுழல்கின்றன.

உயிர்க்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தத்தைக் கவனிப்போம். உடலுள் உயிர்தான் செல்கிறது. உற்ற வேலை முடிந்ததும் அவ்வுடலை விட்டுவிட்டு வெளியேறுகிறது. உடலுக்குள் செல்லும்போது பிறப்பென்றும், உடலை விடும்போது இறப்பென்றுங் கூறுகின்றோம். இவ்விரண்டு வேலையும் உயிர் செய்கிறது. அதனைக் கண்காணிப்பதுதான் கடவுளின் வேலை. எனவே உடலுக்குச் சுதந்திரம் இல்லை. உயிர்க்குத்தான் சர்வ சுதந்திரம் உண்டு. ஆதலின் தலைவன்—தலைவியைக் கவனித்தால் தலைவி தலைவனுக்கு அடங்குபவளே. தலைவன் தலைவிக்குள் அடங்கி மடிபவன் அல்லன். இந்நியாயத்தையே திருவள்ளுவரும் தலைமேற்கொண்டொழுகி உள்ளார். "மனையாளை அஞ்சும் மறுமை இலாளன், வினை ஆண்மை வீறு எய்தல் இன்று" என்று கூறியுள்ளார். ஆகவே உயிருக்கும் உடலுக்கும் உள்ள இணைப்பினைக் கவனித்தால் நாயகன்—நாயகியின் சம்பந்தம் எத்தன்மைத்தோ அத்தகையது என்று தோன்றுகிறது. இது பற்றியே திருவள்ளுவரும் "உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன; மடந்தையொடு எம்மிடை நட்பு" என்ற பொய்யில் மொழியையுங் கூறுவோர் ஆயினர்.

இங்கே ஓர் வியப்புக்குரிய வினா எழுகிறது?

இதுவரையிலுங் கூறிய உண்மை, மேனாட்டுக் கேற்குமா? அல்லது கீழ்நாட்டுக்கு மட்டுமா? என்பன.

மேனாட்டின் நாகரிகத்தையும் கீழ்நாட்டு நாகரீகத்தையும் ஆன்ம ஒழுக்கத்தில் எடுத்துக்கொண்டால் ஒன்றே எனப் புலப் படுகிறது. ஒழுக்க வரலாற்றை யாரும் எந்நாட்டவரும் சிதறின தாகத் தெரியவில்லை. நெப்போலியனின் தாய் தந்தையரை எடுத்துக்கொள்ளுங்கள். மேனாட்டவர்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை. தாய் கருவுற்றிருந்தபோது தந்தை சண்டையில் சேர்ந்தார்; உடனே கர்ப்பத்தின் கஷ்டத்தையும் பாராது கண வனுடன் பல்வேறு போர்க்களஞ்சென்று உடன் வதிந்தாள். இது ஓர் மறுக்க முடியாத உண்மை. இவ்வுண்மையினை மறுப் பவர்களே இக்காலத்தில் அதிகப்பட்டு வருகின்றனர். அவர்கள் மத்தியில் "கலை புகழ்ந்தோதும் கற்பெலாம் நிறைந்த கன்னியர் இருவர்பால் மகிழ" என்ற முதலடி உள்ள திருப்போரூர் சந்நிதி முறையில் வருஞ் செய்யுளை எப்படி ஓத முடியும்?

இவ்வாறிருக்க நெப்போலியன் அன்னையார் கற்பினை வளர்க் கவில்லையா? நம் நாட்டில் அளவுகடந்த பெண் சிங்கங்கள் உள. எனவே திருவள்ளுவரின் கலையமுதப் பொன்மொழிகள் எவ் வுலகங்களுக்கும் எக்காலத்துக்கும் உண்மைப்படுவனவாயின. அதன் வாயிலாக உயிர்க்கும் உடலுக்கும் உள்ள இணைப்பினை உணர்ந்தோம். எனவே உடம்பானது ஓர் "பொதி" யாக ஆகிறதே தவிர வேறில்லை. இதை அறிந்த கலித்தொகை ஆசிரியர்கூட "உயிர்ப் பொதி" என்று கூறுவாராயினர். பொதிக்கு மதிப்பு உள்ளே இருக்கும் பொருளால்தான். பொதிக் கென ஓர் தனி மதிப்பிருப்பதாக அடியேன் அறியவில்லை. அதைப்போலவே நிறம், இனம், இடம் முதலியவற்றால் சூழ்ந்த உடலுக்கென ஓர் மதிப்பு உண்டென அடியேன் கூற அஞ்சு கிறேன். எனவே பெண்களைப் பொருத்தமட்டில், கணவனைக் கூடி அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனுக்கு அவள் ஓர் பொதி யாக, உறைவிடமாக இருக்கவேண்டுமென்றும், அதுவே முறை யும் ஒழுக்கமும் ஆகிறதென்றும், அதற்கு மாறாக நடப்பவர்கள் யாவரேனும் அவர்கள் அனைவரும் தகாதவர்களே என்றும் இந் நூல் வாயிலாக மீண்டும் நாம் அறியக்கிடக்கின்றோம்.

அவர்களும் நாளடைவில் தங்கள் போக்கின் முடிவில் "இறைவனை"க் காணற்கியலவில்லை என்று உணருவார்கள். திருந்துவார்கள் அப்போது நல்ல வழியைப் பின்பற்றுவார்கள் என்று தான் அடியேன் நினைக்கிறேன். அதற்கிணங்க ஆங்கிலப் புலவர் ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவர் "If goodness lead him not, yet weariness, May loss him to my breast" என்று கூறியிருப்பதையும், திருவள்ளுவர்

"ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

எனக் கூறியிருப்பதையும் சான்றாகக் கூற விரும்புகிறேன்.

கலையமுதப் போக்கினை இன்னுங் கவனிப்போம். பெருந்தன்மை உடையார்களே பணிந்து வாழ்கின்றனர். சங்கு சுட்டாலும் வெண்மைதரும். அதுபோல இடுக்கண் வரினும் அவர்களின் பணிவும் இனிமையும் குன்றாதென்க. அவர்கள் நமக்களித்திருப்பன இரண்டு. அவையாவன :— (1) நாணம் (1) அச்சம் "அச்சம் வேண்டும்" "அஞ்சாது தனிவழியே செல்ல வேண்டாம்" என்றும் படித்துளோம். ஏன்? தீயவை அகற்ற வேண்டுவதற்காகத்தான் நாம் அஞ்சவேண்டும். நாணமும் வேண்டும்? ஏன்? பழி பாவங்களினின்றும் விலகுவதற்காகவும் ஊர் அலர் நீங்கி இன்புறவும் நாணம் அவசியமாகிறது. எனவே பெருந்தன்மை எனப் பொருள்படும் "சால்பு" என்ற தன்மைக்குப் பெரிதுந் துணை செய்வது நாணம் எனக் கிடைக்கப்பெற்றோம். இக்கருத்தினையே வள்ளுவரும் தமது வாழ்நாளில் கண்டு அதனையுங் கூறிச் சொல்வாராயினர்.

அதாவது :— "ஊனைக்குறித்த உயிரெல்லாம் (அதுபோல) நாண் என்னும் நன்மைக் குறித்தது சால்பு" என்பதாம். "எவ்வுயிர்க்கும் ஊனாகி நின்றதோர் உத்தமியே" என்று அபிராமிபட்டர் மீனாட்சி அம்மைக் கலிவெண்பாவில் கூறுகிறார்.

இனி சால்பினைப்பற்றி நன்றாக அறியவேண்டிய அவசியம் வருகிறது. ஏன் என்றால் "மக்களே போன்ற கயவர்"களும் இருக்கின்ற காரணத்தினால், குவியல் குவியலாகக் கொட்டிக்

கிடக்கும் பழக் கூட்டத்திலிருந்து இனிய பழங்களை மட்டும் சுட்டிக்காட்டிச் சொல்லவோ, எடுத்து அப்புறப்படுத்தவோ வேண்டுமாயின் எவ்வளவு சிறந்த கண்காணிப்புந் திறமையுந் தேவையாகுமோ, அதைவிட, சால்பின் தன்மையை சிறப்பித்துக் கூறுவதில், மிகச் சிரமந் தோன்றுவது சகசந்தான். இது நமது கடமை" என்று முடிவுசெய்துகொண்டு பார்ப்போமாயின் எல்லாம் எளிதாகிறது.

எண்ணற்ற அறிஞர்கள் இச்சால்பின் தன்மையை நன்கு ஆராய்ந்துள்ளார்கள். வேதங்கள் முதலில் ஆராய்ந்தன. அதற்கு முன்பே தமிழ் மறைகள் ஆராய்ந்தன. பின்வந்த ஆகமங்களும் உபநிடதங்களும் ஆராய்ந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் படித்து இளைப்புற்ற வள்ளுவப் பெருமானார்கூட சால்பின் தன்மையை ஆராய்ந்திருக்கிறார். அதனையே அடியேன் இங்கு விவரிக்க முடிவு செய்திருக்கிறேன். உள்ளங்கை நெல்லிக்கனி போல அது அமைந்திருக்கிறது.

உலகில் நம்மை சந்தோஷப்படுத்துங் கருவிகளை எல்லாம் எண்ணிப்பாருங்கள். உண்மையான சந்தோஷத்தை எதுவும் தருவதாக எனக்குப் புலப்படவில்லை. ஏன்? எப்படி? பதிலைக் கவனிப்போமாக மின்சாரம் மிக விளக்கம் உடையது. மகிழ்ச்சி. தப்பித்தவறி அதன்மேல் விழுந்துவிட்டாலோ நமது உயிரையே அது விழுங்கிவிடுகிறது. வாடிய பயிர்களுக்குற்ற மழையைக்கண்ட குடியானவனின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. அதே மழை அளவு மீறி வெள்ளம் புரளப் பெய்யுமேல், அக்குடியானவனின் கண்கள் அழுது மாய்கின்றன. இவ்வாறே பிறவும் என்க, ஆனால் நான் கூறுவதைக் கவனிப்பீர்களாக.

DehraDun, கேதாரம், வைகை, பொதியமலை, கொச்சின் முதலிய இடங்களில் நமது பிள்ளைகள் சென்று படிக்கின்றனர். விடுமுறைக் காலங்களில் நம்மிடம் வந்துசேர விரும்புகின்றனர்? ஏன்? நம்மிடத்துள்ள தலையாய அன்புதான் காரணம். "கண்டதும் முகங்கோணுது மெல்லச் சிரிப்பார். நம் மன்னர்பிரான் அவர்களைப் பார்ப்பதும் மிக்க எளிது" என்றொரு அரசன்

இருப்பானேல், அவன் விண்ணகத்தே இருப்பினும், அன்றி பாதாளத்தே இருப்பினும், அதுவுமன்றி திபெத்து, ஆல்ப்ஸ் ஒல்பரைஸோ போன்ற மலைகளுக்கருகே இருப்பினும், அவனைப் பார்த்துவர மக்கள் ஏகுவர். ஏன் எனில் அவரை அணுகின உடன் அவர் செல்வோரிடத்துக் காட்டும் அன்பே காரணம், பிணத்துக்கும் என்புதோல் உண்டு. நமக்கும் என்புதோல் உண்டு. நம்மைப் பிணம் என்றால் நமக்குக் கோபம் வருகிறது. ஏன்? பிணத்துக்கு உயிர் இல்லை. எனவே பகுத்தறியும் அறிவும் அங்கே இல்லை. நமக்கு உயிர் உண்டு. பகுத்தறியும் அறிவு தொழிற்படுகிறது. அப்படி இருந்தும் அன்பைப் பூரணமாக வளர்க்கிறோமா? என்றால், இல்லை என்றுதான் முடிவுகட்ட வேண்டும். உண்மை அன்பு நம்மிடத்தே இருக்குமானால் நாமே தேவனாக வாழ்த்தப்படுகின்றோம். இதை நன்குணர்ந்தேதான் திருவள்ளுவர் "சால்புக்கு" முதல் முதலாக அன்புமேவண்டும் என்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் சால்பினை ஓர் பெருங் கட்டடமாக உருவகித்துப் பேசுகின்றார்கள். ஆயிரங்கால் மண்டபம், பதினாயிரங்கால் மண்டபம் ஆக இவை எல்லாம் நமது இந்தியாவின் தென் பாகத்தில்தான் அதிகம் உண்டு. உலகெங்குஞ் சென்று பார்த்த பிறகுதான் இவ்வுண்மையை யாரும் மறுக்க மாட்டார்.

வேறு தேசங்களில், மிகப்பழைய காலங்களில், சிறந்த தூண்கள் அடங்கிய கட்டடங்களைப் பார்க்கக்கூடும். ஆயினும் 1000 கால் மண்டபமும், பதினாயிரங்கால் மண்டபமும் அங்கெல்லாம் காணுவதற்கியலாது. அவ்வளவுதூரம் சிற்ப அறிவில் மட்டுமல்ல, ஏனைய அறிவிலுங்கூட த் தலைசிறந்த நாகரிகத் தொல் புகழ்வாய்ந்த நம் வள்ளுவனார் சால்பிற்கு ஐந்து பெருந்தூண்களை ஏற்பாடு செய்துள்ளார்கள் அருவப் பொருளை விளக்க வேண்டின் உருவப் பொருள்கள் அவசியமாகின்றன.

ஆனால், திருவள்ளுவர் தந்த மொழிகளில் "சால்பு" என்ற அருவப்பெருங் கட்டடத்திற்குத் தூணாக நிறுவப்பட்ட ஐந்து பொருள்களும் அருவமாயின. உலக விந்தை எல்லாம்

ஒருபக்கமும், வள்ளுவனாரின் இக்குறளை மற்றோர் பக்கமும் பொலிய விடுவமேல், ஏனைய விந்தைகள் எல்லாம் இதன்மாட்டு உயிர்பிச்சை கேட்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அத்தூண்களின் பெயர்களைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

அவையாவன :— (3) அன்பு (1) நாண் (3) ஒப்புரவு (4) கண்ணோட்டம் (5) வாய்மை இவ்வருவப் பொருள்களை யாரே காணவல்லவர்? உளரேல் அவரே எம் தலைவர் என்று ஏற்க வல்லேன். அன்பு முதலிய ஐந்து பண்புகளையும் திருவள்ளுவரே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் அதிகாரங் கொடுத்து விளக்கியுள்ளார்கள். எனவே முழுவிளக்கம் அன்பர்கள் படித்துத் தெரிந்துகொள்வார்களாக.

அன்புடையோரை ஆன்மார்த்த அறிவில் ஒருபடி உயர்ந்த மக்கள் என்றும், அத்துடன் நாணம் உடையோரை இரண்டுபடி உயர்ந்த மக்கள் என்றும் அவற்றுடன் "ஒப்புரவு" பெற்றோர்களை முப்படி உயர்ந்த மக்கள் என்றும், அவற்றுடன் "கண்ணோட்டம்" என்றுங் கழிபெருந்தன்மை உடையோர்களை நான்காம்படி சென்ற மக்கள் என்றும் அவற்றுடன் வாய்மையுடையவர்களை ஐம்படி உயர்ந்த மக்கள் என்றும், அவற்றுடன் "சால்பு" என்றதையும் பெறுகின்ற மக்களையே "ஆறறிவு பெற்ற மக்கள்" என்றும் அடியேன் கூறுகின்றேன். இவ்வளவுதூரம் கலையின் சிறப்பினை ஓர்ந்த நம் வள்ளுவர் கலையின் அமுதமாகவே அக்குறளை ஆக்கியிருப்பதாக அடியேற்குப் படுகிறது. இனி அவர் கூறிய குறள் என்ன என்று பார்ப்போம், வாருங்கள் :—

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு) ஐந்து சால்பு ஊன்றிய தூண்" என்பதுதான் அக்குறள்.

இக்குறளுள் கண்ட 6 பண்புகளையே வேதாகமங்களும் தமிழ் மறைகளும் சேர்ந்து "மக்கள் பண்பு" என்று அழைக்கின்றன. "மக்கள் பண்பு" என்ற சொல்லை முழுவதும் திருவள்ளுவர் ஒத்துக்கொள்கிறார். (தொடரும்)

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர்

வித்துவான். மு. சடகோபராமானுசம் பிள்ளை,
விரிவுரையாளர், புலவர் கல்லூரி.

பாய்பரியோன் தந்தபர 'மானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

பேரன்புமிக்க பெரியோர்களே; சிவஞானச் செம்மல்களே; வணக்கம். அடியேன் பேச எடுத்துக்கொண்ட பொருள் 'மாணிக்கவாசகர்' என்பதாம். இப்பொருளைப்பற்றிப் பேசுவதற்கு முன்னர் பழங்காலப் பெரியார்கள் வகுத்துக் காட்டிய நெறியின் (சமயத்தின்) முறையைச் சிறிது நோக்கிய பின்னரே எடுத்த பொருள்மேற் செல்வேன். நம் நாடு, மொழி அனைத்துமே சமயத்தை, கடவுள் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது நாட்டு வரலாறும், இலக்கியவுலகை எட்டிப் பார்த்தவர்களும் கூறும் உண்மை. பெரியோர்களே; இப்பொழுது நம் கண்முன் காட்சியளிக்கும் சங்ககால இலக்கியங்களுக்கு இலக்கணமாகப் பன்னெடுங்காலத்துக்குமுன் தோன்றிய தொல்காப்பியத்திடத்தே பல இடங்களில் கடவுள் மணங் கமழ்வதைக் காணலாம். இங்ஙனம் ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றிய இலக்கணத்திடத்தே இவ்வாறு காணப்பெற்றால் இலக்கியத்தைப்பற்றிப் பேசுவானேன். எட்டுத் தொகையுள் ஒன்றான பரிபாடல் சமயத்தையும், கடவுள் தன்மையையும் விளக்கவந்த நூலென்றே சொல்லிவிடலாம். கலித்தொகையோ வென்னில் தெய்வக் கொள்கையைத் தெளிய வைக்கின்றது என்று சொல்லிவிடலாம். பத்துப் பாட்டுள் திருமுருகாற்றுப் படை முருகன் வழிபாட்டை முடியவுணர்த்துவதோடு மற்றைய பாட்டுகளும் சமயத்தை வெவ்வேறுருவில் தெளிய வைக்கின்றன.

இந்நிலையில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்து வருகின்ற இலக்கியங்களில் எல்லாம் இறைவன் நிலை பல படியாகப் பேசப்பெறுவதனைக் காண்கிறோம். இங்ஙனமாகப் "பிற்கால இலக்கியங்கள் தாம் கடவுள் கொள்கையை வற்புறுத்துகின்றன" என்பார் கூற்று "தாய் மலடி" என்றாற் போன்றது.

இங்ஙனம் பல்லாண்டுகட்கு முன்பிருந்தே தொடர்ந்துவந்த சமயம் பல வடிவில் தன் கொள்கையை வற்புறுத்தி வந்திருக்கிறது என்பது ஊன்றி நோக்குவார்க்குப் புலனாம். மூன்றாம் நூற்றாண்டில் எழுந்த மணிமேகலையில் சாத்தனார் புத்தக் கொள்கையைப் போற்றி ஏனைய சமயங்களைத் தூற்றுகிறார் என்பது வெளிப்படை. நம் நாட்டுக்குள் ஒன்றையொன்று தூற்றுவதற்குக் கால்கோள் விழாக் கண்டவர் இவரே. புத்தமதம் நம் தென்னாட்டுச் சைவ, வைணவ சமயங்களைத் தூற்றுவதிலிருந்தே நம் சமயத்தின் பழமை புலனாம். இவ்வாறு பழம் பெருமை கொண்ட நம் சமயம், நாட்டிற்குச் செய்த சேவைகள் பலவாம். சுருங்கக் கூறின் நாம் இப்பொழுது மக்களாக—ஒழுக்கமுடையவர்களாக வாழும் வாழ்க்கையெல்லாம் சமயஞ் செய்த தொண்டு என்னின் மிகையாகாது. சமய வாயிலாகச் சிறந்த பண்பாடுகளை வளர்த்த சமயப் பெரியோர்கள் சமயம் வாய்த்தபோதெல்லாம் தம் நாட்டை, தம் மக்களைப் பெருமைப்படுத்திப் பேசாத இடமுண்டோ? "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன" என்றே அவர்கள் கருதியது. அவர்கள் நாட்டு மக்களுக்குச் செய்த சேவையில் பதினாயிரத்தொன்று தானும் பொதுத் தொண்டாற்றும் புண்ணிய மூர்த்திகளில் பலர் இப்பொழுது செய்கின்றார்களா என்பது ஐயப்பாடே. "தன்னெஞ்சறிவது பொய்யற்க" என்ற தமிழர் தம் மரபில் தோன்றிய தோன்றல்களன்றோ.

ஆதீனத்தின் தொண்டு.

நம் நாட்டில் சமயத் தொண்டைப் பல்லாயிர மக்களிடையே பரப்பிய பெரியோர்கள் பலர். அவர்களிடையே சைவ சமயத்தைப் பரப்புவதில் தலைசிறந்தார் நால்வர். அவர்களால் சிறப்பாகப் பேசப்பெற்றுப் போற்றி வளர்த்த சமயத் தொண்டினை

வளர்த்த பெருமை, பிற்காலத்தில் நம் ஆதீனங்களுக்கேயுரியது. இவ்வாதீனங்களின் தொண்டு முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இல்லையானல் நாமெல்லாம் வேற்றவர்களாகக் காட்சியளிப்போம். எடுத்துக்காட்டாக ஒன்றை நினைவிற்குக் கொண்டு வருகிறேன். தெற்கிலிருந்து வந்திறங்கிய கிறித்துவம் வடக்கில் எதுவரை சென்றிருக்கும். மேற்கிலிருந்து இறக்குமதியான முகமதியம் இன்னும் எவ்வளவு வேலை செய்திருக்கும். இவைகள் தமிழகத்தில் மிகுதியும் பரவாமல் தடுத்துத் தக்க தொண்டினைச் செய்தவர்கள் ஆதீனத் தலைவர்களே எனின் அது மிகையாகாது.

இங்ஙனம் பல்லாற்ருனும் தொண்டாற்றி நாட்டுக்கு நன்மை செய்த பெரியோர்களை, சமயத் தொண்டு நிலைத்திருக்க எதிர் காலம் நோக்கி ஏற்பாடுசெய்த ஆதீனங்களை நன்கு தெரிந்தறிதல் வேண்டும். பெரியோர்கள் தொண்டு, ஆதீனம் செய்த சமய நூல், வெளியீடு, இலக்கண இலக்கியத் தொண்டு ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளாத இளைஞரிற் பலரும், பெரியாரிற் சிலரும் சமயப் பெரியோரையும், ஆதீனங்களையும் தூற்றுகின்றனர். இவர்கள் சமயம், மடம் முதலியவற்றின் பெருமையறிந்துகொள்ளச் செய்யவேண்டியது நம் கடமை. நிற்க இனி எடுத்துக்கொண்ட பொருளின்மேல் செல்வேன்.

மாணிக்கவாசகர் தோற்றம்.

நால்வருள்ளும் மிக்க மேம்பாடுடையவர் மாணிக்கவாசகர். இப்பெரியார், "பாண்டி நாடே பழம் பதி" எனச் சிறப்பாகப் பேசப்பெறுகின்ற செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் சைவ மணங் கமழும் திருவாதவூரில் ஆதிசைவ அந்தணர் குலத்துத் தோன்றினர். அமாத்திய பிராமண குலத்துத் தோன்றினர் என்றும் சொல்லுப. இரண்டாயிரம் ஆண்டென்றும், ஆயிரத்து நூறுண்டென்றும் இவர் காலத்தைத் தேய்புரி பழங்கயிருக்குவர் சமயப் பெரியார். அது நிற்க,

மக்கள் அறிவொளி மங்கி அஞ்ஞானந் தலையெடுக்குங் காலங்களிலெல்லாம் ஆண்டவன் தன்னை மறைத்து வேறு வடிவத்தில் உலகில் தோன்றியும், தன் சக்திகளைத் தோன்றும்படிச்

செய்தும் மக்களைச் செம்மைப்படுத்துவான் என்பது சாத்திரங் கண்டவுண்மை. இம் முறையில் நிகழ்ந்ததே மணிவாசகப் பெருமான் தோற்றமும் "குடமுழ நந்தியீசனை வாசகனுக் கொண்டாய்" என்றார் பெரியாரும். இவர் தோற்றத்தைக் கடவுள் மாமுனிவர் "உலகில் மாயப் பொங்கிருள் அகல அன்பர் இதய கமலம் மலர எம்மையாளுடையரான ஞான திவாகரர் உதயஞ் செய்தார்" என்றார். "இங்ஙனம் உலகங்களாகிய தாமரைகளெல்லாம் மலரும் பொருட்டுத் தேவகியாகிய கிழக்குச் சந்நிதியில் ஸ்ரீமந் நாராயணனாகிய சூரியன் உதித்தருளினன்" என்ற விண்டு புராணமும், "1. ஆதித்ய 2. ராமதிவாகர 3. அச்யுதபானுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி, 4. சோஷியாத பிறவிக் கடல் வற்றி, 5. விகஸியாத போதிற் கமலம் மலர்ந்தது. * வகுள பூஷண பாஸ்கரோதயத்திலே" என்ற ஆசாரிய ஹிருதயமும் இங்கு நோக்கத்தக்கன.

இவர்தம் நூலின் சிறப்பு.

நம் அடிகள் வரலாற்றுப் பரப்பும், பெருமையும் பேசி, எழுதி முடிக்கும் தரத்தன அல்ல; ஆதலின் அவற்றை விட்டு அவர் திருவாய் மலர்ந்தருளிய வாசகங் கோவையை வாயாரப் பேசத் தொடங்குவாம். இவர் செய்த நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்பன. இவற்றுள் திருக்கோவையே முற்பட்டதென்பது பலர் கொள்கை. "பாவை பாடிய வாயினல் கோவை பாடுக என்றனர்" என்றதனைக்கொண்டு பின்னாகக் கூறுதலுமுண்டு. எதுவாயினும் சிறந்த—அரிய—பெரிய நூல்கள் இவை என்பதில் யார்க்கும் வேறுபாடில்லை. இரண்டும் இரண்டு கண்கள். சமய உலகக் கண் திருவாசகம்; இலக்கிய உலகக் கண் திருக்கோவையார். இவையிரண்டில் திருவாசகத்தை முன்னர்க் கூறித் திருக்கோவையாரைப்பற்றிப் பின் சில கூறுவல்.

இவர்தம் அருளறம்.

இறைவன் தமக்குத் திருப்பெருந்துறையில் அருளிய அருள் ஞானத்தைப் பெற்று அருள்ஞான வழியாகத் தாம் கண்ட

---

* வகு...லே = நம்மாழ்வார் பிறந்தவுடன்.

1. சூரியன்; 2. இராமனாகிய சூரியன்; 3. கண்ணனாகிய சூரியன்; 4. வற்றாத; 5, மலராத.

அநுபவ ஞானம் உள்ளடங்காமைப் பொங்கி வழிந்ததே திருவாசகமெனுந்தேன். "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்றபடித் தம் அநுபவத்தை உலக மக்களுக்கெல்லாம் வாரி வழங்க ஆண்டவன் அருள்வழி நின்று திருவாசகமென்னும் தெளிதேனை வழங்கினர். உலகப் பற்றை அடியோடு துறந்து இறைவன் அருட்செல்வம் பெற்ற பெரியார், தமக்கு ஆண்டவன் அருளிய ஈடும் எடுப்புமில்லாப் பேரின்ப நிலையைத் தாம் நுகர்ந்த அளவில் நின்றுவிடாமல் மக்களுக்கெல்லாம் பயன்பட வேண்டுமென்று உபகரிக்க நினைந்த அருளறத்தை நாம் என்றென்றும் வாழ்த்துவோமாக.

உலக நிலையாமை.

நம் அடிகள் மேற்கொண்டுள்ள சமய நெறி சரியை முதலாய நெறிகட்கு மேலாய **சன்மார்க்க** நெறியாம். இந்நெறி நின்ற நம் அடிகள் அமைச்சுத் தொண்டு பூண்டு உலகியலை நன்குணர்ந்தார். பின்னும் அவ்வியல்புகளை நன்கு உய்த்துணர்ந்து கண்ணுக்குப் புலனுகும் பொருள்களெல்லாம், தத்தமக்குரிய எல்லையில் அழிந்தொழியும் என்னும் உண்மையையுணர்ந்தார். உயிர்கள் செய்த செயலுக்குத் தக்கபடி பொருள்களைப் படைத்துக்காத்து, மறைத்துத் திருவிளையாடல் புரியும் பேராற்றல் வாய்ந்து, காலமும் கணக்கு நீத்து நிற்கும் கடவுள் ஒருவர் உண்டென்பதனை மனத்துக்கொண்டார். ஆண்டவன் தன் அடியடைந்தார்கட்குத் தண்ணிய நிழலாய் பேரின்ப வடிவாய்த் திகழுந் தன்மையன் என்பனவாதியவற்றை ஐயந்திரிபற வுணர்ந்தார். உணர்ந்த நம் அடிகள் இறைவன் தமக்குக் குருந்த மர நிழலில் இருந்து காட்டி உபதேசித்த உபதேசத்தால் தாம் அடைந்த பேரானந்தப் பெருஞ் செல்வத்தைத் தமது பேரருளால் திருவாசகம் என்னும் தெளி தேனைப் பொழியும் அருள் முகிலாயினர். திருவாசகப் பாசுரங்கள் அனைத்தும் அடிகள் அனுபவ நிலையில் பொங்கித் ததும்பி வழிந்த அமுத வெள்ளம் எனின் மிகையாகாது.

---

1. சரியை முதலிய நால்வகை நெறியையும் அரும்பு, மலர், காய், கனி என்பர் தாயுமானர்.

பிற்காலப் பெரியோர்கள் கருத்து.

இவ்வாறு அவர் தமது அனுபவ வாயிலாக வெளியிட்ட திருவாசகத் தெளி தேனைப்பற்றிச் சமய வுலகில் தலைசிறந்து விளங்கி அனுபவ வாயிலாகத் தங் கருத்தை வெளியிட்ட பெரியோர்கள் பலர். அவர்களுள் ஒருவராய தாயுமானுர்

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே

என மாணிக்கவாசகரது அன்புகனிந்த திருவுள்ளத்தைப் போற்றினுர். அடுத்தபடி "வாதவூரையன் அன்பை வாஞ்சிப்பதென் நாளோ" என வெளிப்படையாகப் பெயரையும் அமைத்துக் கூறிய திறம் சிந்திக்கத் தக்கதன்றே.

படிப்போர், கேட்போர் பரவசப்பட்டு உள்ளங்கனியும் வகையில் கவிமழை பொழிந்த இராமலிங்கனுர், திருவாசகமென்னுந் தெளி தேனைச் செவி மடுத்தார். அதன் விளைவாகப் பயனளித்த பின் வரும் பாடல்களைக் காண்க,

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந் துயிர்கலந் துவட்டாம லினிப்பதுவே.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கிழ்ப்பறவை சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னின் நானடைதல் வியப்பாமோ.

எனக் கூறிய பாக்களின் பொருள்கள் சுவைக்கத்தக்கன. பாடல்களைப் படிப்போர், பாட்டு வேறு தாம் வேறு என்ற வேறுபட்ட நிலையின்றி ஒன்றுபட்டு ஒரு நிலையடைதல் வேண்டும். இந்நிலையில் ஒன்றுபட்டுப் பாடியவர் இவர். இதனை "நான் கலந்து பாடுங்கால்;' என்பதனுல் அறியலாம். ஊன்கலந்துயிர்கலந்து உவட்டாமலினிப்பது" திருவாசகத்துக்கேயுரிய தனிச் சிறப்பாம். உயிரிற் கலந்து தன் வயமாக்கிக் கனியவைக்கும் தன்மை

இந்நூலுக்குண்டு என்பதனைத் "திருவாசகத்துருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழியும் மெய்ப்பிக்கும். இனிய இசையில் பாடுங்கால் பறவை, விலங்குகள் தம்மை மறந்து இசையில் ஈடுபாடுடையனவாம் என்பதனைப் பாகவதத்தும் ஆயனுர் புராணத்தும் பரக்கக் காணலாம். ஆண்டவன் இசைபோன்றினியவன். இதனை "முன்னல் யாழ் பயில் நால் நரம்பின் முதிர் சுவையே" "நுடங்கு கேள்வியிசையென்கோ" என்பவற்ருல் அறியலாம். 'சாமகானப் பிரியன்' என்று இறைவனுக்கு ஒரு பெயருமுண்டன்ரு. "வான் கலந்த மாணிக்க வாசக" என்ற தொடர் மாணிக்கவாசகர் என்ற பெயர் நம் அடிகட்கு இறைவனுல் கொடுக்கப்பெற்றது என்ற வழக்காற்றுக்கு ஒற்றுமையுடையது.

இனிக், கற்பனைக் களஞ்சியமாய சிவப்பிரகாசர்

வாதவூ ரன்பர் மலர்வாய்ப் பிறந்த
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றையோ ரிலரே.

எனத் தமது ஆழ்ந்த உணர்ச்சிப் பெருக்கில் ஊறிவந்த அன்புப் பெருக்கை வெளியிட்டார்.

இசைப் பாடல்.

மக்கள் மனத்தை எளிமையில் தன் வயமாக்குந் தன்மையுடையது இசை. இவ்விசையைத் தத்தமக்குரிய மொழியில் கூறி யின்பமடைவர் பலர். இத்தகைய இசையினை வேற்று மொழியில் கூறின் துன்பமேயாம். இவற்றை மோகன வித்தை யென்பர் மேலோர். மோகன வித்தையாய இசைக்குக் கொழு கொம்பு போன்று பற்றுக் கோடாக நிற்பன பாடல்கள் "கவிப்பா வமுதம் இசையின் கறியொடு கண்ண னுண்ணக், குவிப்பான் குமரி கொண்கன்" என நம்மாழ்வாரைக் குறிப்பித்தார் கம்பர். இசையின் பெருமையைச் சுவைகனிந்தப் பாடல்களிலன்றி

வேறெங்குக் காணமுடியும். இவ்வாறுள்ள இசை வளர்ந்த காலமொன்றுண்டென்றால், அது தேவார திருவாசக திருவாய் மொழி முதலாய சமய நூல்கள் தழைத்தோங்கிய காலமெனல் மிகையாது. "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" எனக்கூறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக் கால் அக்காலத்துத் தமிழும் இசையும் சிறப்புற்று வளர்ந்தன என்பது வெற்பிடை விளக்காம். இங்ஙனம் தமிழும் இசையும் வளர்வதற்குச் சங்ககாலப் பண்ணுர் பாடல் (பரி பாடல்) முத லியன கருவி நூல்கள் எனலாம்.

திருவாசகம்.

சிவ புராணம்.

மணிவாசகப் பெருமான் திருவாசகத் தெள்ளமுதினைச் "சிவபுராணம்" முதல் "அனுபவவாயிலறியாமை" யீருக ஐம்பத்தொரு பகுதியாகப் பகுத்துக்கொண்டார். இங்ஙனம் பகுத்துக்கொண்டவற்றுள் தம் அன்பு நெறி, சன்மார்க்க நெறி என்பவற்றிற்கேற்ற முறையில் பல பொருள்களை அவற்றின் கண் அமைத்துக் கூறுகிறார். திருவாசகத்துத் தோய்ந்தவுள்ள மும், கூர்ந்த மதியுமுள்ள பெரியோர்கள் கூறிய வழி நின்று மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகக் கடலுள் நிறைந்து ஒளிவிட்டு விளங்கும் மணிகள் பலவற்றுள்ளும் என் சிற்றறிவிற் கெட்டிய சிலவற்றை நுங்கட்கெடுத்துக்காட்ட முற்படுகிறேன்.

திருவாசகம் :— திரு = செல்வம், அழகு; வாசகம் = சொல். ஆக அழகிய சொற்களால் அமைந்த நூல் என்பதாம். இது இம்மை மறுமை இரண்டையும் அளிக்கும் நூல் எனப் பொருள்படும். இப்பெயர் நம்மாழ்வார் செய்த திருவாயிரத் திற்குத் திருவாய் மொழி என்பது போன்றது. சுவை இனிமை, இசை நயம், பொருளாழம் என்பனவற்றால் அழகுபெற விளங்கு வதால் திரு என்ற அடை கொடுக்கப்பெற்றது. வீடளித்தற் குக் காரணமாய அருள்மொழி நூலென்றுங் கூறல் தகும். இத்தகைய நூலகத்து முதற் கண்ணுள்ளது. **சிவபுராணம் :—**

இப்புராண முதலாய எல்லாவற்றையும் இறைவன் தம்மை ஆட் கொண்டு அவன் உணர்த்த உணர்ந்த பின்னர் தாம் அருளியதாக அடிகளே பலவிடத்தும் கூறுகிறார். உயிர்கள் அறியாமை வயப் பட்டனவாதலான் அவன் உணர்த்த உணரலாமேயன்றித் தங் களால் உணர முடியாது என்பதனைக் காட்டுகிறது. இச்செயல் இக்கருத்தினை "நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை, ஏறுத லெளிதோ" வீறுபெறு துறக்கம், "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற பாக்களாலும் "காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல" என்கிற சிவஞானபோத நூற்பாவாலும் நுனித்தறிக. இம்முறையில் அவன் அருள் பெற்றெழுந்தது சிவபுராணம். சிவனைப்பற்றிய பழைய வரலாறு என்பது இதன் பொருள். முதற் குருவாய் வந்து மார்ச்சால சம்பந்தமாய்த் தமக்கு உபதேசித்த கருணையங் கடலாகிய இறைவன், உயிர்கள் மாட்டு அன்புகொண்டு பல்லூழிக்காலம் செய்துவரும் செய லைத் தொகுத்துக் கூறுகிறார் இதனுள்.

நமச்சிவாய வாழ்அக நாதன் தாள் வாழ்க.

இப்புராணத்து முந்தற முன்னம் "நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க" என இறைவன், பேராயிரத்துச் சிறந்த தான தூல பஞ்சாட்சரத்தையும், அவன் அருட் சத்தியையும் வாழ்த்துதல் காண்க. நமச்சிவாய என்பதற்கு எழுத்துப் பொருள் கொள்ளும்பொழுது ந—மறைப்பு, ம—மலம், சி—சிவம், வா—அருள் சத்தி, ய—உயிர். ஆணவத்துட் கிடக்கும் உயி ரினைப் பிறவிக் கட்டினுட் படுத்தி உலகியலிற் செலுத்தியும், ஆணவம் நீங்குதற்குரிய பக்குவம் வந்தபோது, கட்டுக்களை யறுத்து அருட்சத்தி வாயிலாகத் தன்பால் வீடு பெறுவித்தும் உயிர்கட்கு நன்மைபுரியும் இறைவன் பெருந்தகைமையைத் திரு வைந் தெழுத்து விளக்குதலால் நாதன் நாமம் நமச்சிவாயவெனப் பட்டது. தாள் என்பது பல பொருளொரு சொல்: சத்தி என்ற பொருளில் இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞான சத்தி அருட் சத்தி எனச் சத்தி வேறுபாடுகள் பலவற்றுள்ளும் இங் குத் தாள் என்றது அருட் சத்தியைக் குறித்தாம் (அருளாற்றல்)

இம்முறையிலேயே பட்டர்பிரானும் பிராட்டியோடு கூடிய பெருமானை "வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்

கையும் பல்லாண்டு" என வாழ்த்துவர். துவயம் என்ற மந்திரமும் "ஸ்ரீமந் நாராயணாய சரணௌ ஸரணம் ப்ரபத்தியே" என்றமை காண்க. இங்ஙனம் சிவனும் சிவகாமியும், பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியே சேதனர்கள் வணக்கத்திற்குரியதாம். இதனை விளக்கவந்த நம் பெரியார்கள்—"நீரிலே நெருப்புக் கிளருமாப்போல இறைவனது குளிர்ந்த திருவுள்ளத்தில், சேதனன் செய்யும் அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக" என்பர். மேலும் "இவள் தாயாய் இவர்கள் கிலேசம் பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்தினியாய் இனிய விஷயமாய் இருக்கையாலே கண்ணழிவற்ற புருஷாகாரம்" எனவுங் கூறுவர், "தம் தாமக்கள் அழுது சென்றால் தாய்மாராவார். தரிக்ககில்லார்" என்றபடியே தாய்மாராவார் தங்கள் மக்களுக்கு ஆவனவற்றைத் தந்தைக்குச் சொல்லி முடிக்குமாபோலேயாயிற்று. பிராட்டியின் அருட் செயலும்; ஆகவே இறைவன் அருட் சத்தியோடு கூடியிருந்தே அருள் புரிகின்றான் என்பதும், அவ்வருள் தானும் இறைவியின் புருஷகாரத்தால் தோன்றுகின்றதென்பதும் தெளிவு. இவ்வாறு ஆண்டவன் இறைவியோடு கூடியிருந்தே அருளுகின்றான் என்பதனை,

> துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
> பிரியாது நிற்கின்ற பெம்மான்—துரியத்தைச்
> சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
> மாக்கியிடு மன்பர்க் கவன்.

இப்பாக்கொண்டுத் தெளியலாம்.

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.

கண்மூடித் திறக்குங் காலங்கூட என்னை விட்டு நீங்கான் இறைவன் என்றதால் "அவனின்றி ஓரணுவும் அசையாது" என்ற பழமொழி வலியுடைத்தாதல் காண்க. சீவாத்மாவோடு பரமாத்மா, கூடி நின்றே எல்லாச் செயல்களையும் செய்து கொள்கின்றான் என்பது சாத்திரங்கள் கொண்ட முடிபு. இறைவன் உயிர் இரண்டையும் எப்பொழுதும் பிரிக்கமுடியாது. கரந்த

சில்லிடந்தொறு இடந்திகழ் பொருள்தொறும் உடன்மிசையு யிரெனக் கரந்தெங்கும் ஒழிவின்றிப் பரந்துளன்; ஆதலால் நெஞ்சைவிட்டு எவ்வாறு நீங்கமுடியும்! நெஞ்சினுள் இறைவன் எழுந்தருளுதற்குரிய நிலையை அடிகள், "சீருறு சிந்தை எழுந்த தோர் தேனே" எனப் பின்னுங் கூறுவர். "மன்னகமல மற மலர் மிசையெழுதரும்" என்றார் பெரியாரும்.

தாள் வாழ்க.

தாள் = திருவடி முன் அவன் திருநாமத்தினையும் அருட் சத்தியையும் வாழ்த்தியவர், இங்கு அவன் திருவடியை வாழ்த்து கின்றார். பெரிதும் பாராட்டத்தக்க பொருளமைதியினையுடை யது திருவடியாதலான் அதன் சிறப்பினை நோக்குவாம். "சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்" எனக் கல்லாடர் கருதிக் கூறிய வள்ளுவப் பெரியார், தம் நூலின் கடவுள் வாழ்த்துள் முதன் முதல் "ஆதிபகவன்" என அவன் திருநாமத்தையும், "பொருள்சேர் புகழ்" எனப் புகழையும், "பொய்தீர் ஒழுக்கம்" என உலகிற்கு அவன் நடத்திக் காட்டிய ஒழுகலாற்றை இருகுறட்பாவால் சிறப்பித்தும், ஆறு குறட்பாவால் அவன் திருவடியருளும் பேற்றினைப் பரக்கப் பேசியும் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என விதிமுகத்தானும், மறை முகத்தானும் பயன் சொல்லித் தலைக்கட்டுகிறார். அங்ஙனமே நம் அடிகளும், முதலில் நமச்சிவாஅய எனப் பெயர் கூறிப் பின் னர் பல அடிகளால் அவன் அருட் செயல் பலவற்றையும் விளங்க உரைத்து இறுதியில்

> சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக் கீழ்ப்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து

என இப் பகுதியால் இறைவன் அடிக்கீழ் அமர்ந்து இன்புறுவர் என விதிமுகத்தானும், சொல்லார் சிவனடிக் கீழ்ச் சேரார் எனக் குறிப்பாக மறைமுகத்தானு முணர்த்தினர். இத் திருவடியின் சிறப்பினைச் சமயக் கண்கொண்டு பார்த்தல் நன்று. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் தலைசிறந்ததான சிவஞான போதத் துள் திருவடியின் தன்மையை வற்புறுத்தும் சூத்திரத்துள்

"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பின் அரன் கழல் செலுமே."

"அயற்சியில்லாது ஒன்றித்து நின்று செய்யும் அன்பானே அரன் திருவடி கிட்டும்" என்ற போதத்தின் பொருளுரையும் "அரனடியை அகன்று நிற்பது என்றது அரனடியை விட்டுத் தனித்து நின்றறிவது எங்கே! ஓரிடத்தும் இல்லை என்றபடி" என்ற பாடியமும் இங்குச் சிந்திக்கத்தக்கன. மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடலின் கருத்துக்களே போதத்துள் மிளிர்கின்றன. கோயில்களில் ஆண்டவன் வடிவத்தில் ஒரு கை திருவடி நோக்கியும், மற்றொன்று எதிரில் நீண்டும் காணப்பெறும். அவற்றை அபயாஸ்தம் (அஞ்சல் கை) வரதாஸ்தம் (அருளல் கை) என்னும் இங்கிலை, ஆண்டவன் திருவடியை அடைந்தால் அருள்புரிவான் என்பவற்றைக் குறிக்கின்றது என்றும் கூறுவர் ஆக இங்ஙனம்

பல்லாற்றானும் சிறப்புற்ற திருவடிகள் தமக்கு எவ்வெவ் வகையில் இன்பந் தந்தன என்பதனை நம் **சொற்கோ,**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே.

என ஐம்புலன்களும் ஆரத்துய்க்குந் தன்மையில் இருந்தன திருவடி நிழல் என்பதனைக் குறித்தார். தாபத்திரயத்தால் வருந்தும் ஆன்மகோடிகள் ஒதுங்கி நின்று இளைப்பாறுதற் கேற்ற இடமன்றே அவன் திருவடி நீழல்.

இவ்வாறு ஆன்மகோடிகள் அவன் திருவடியைப் பற்றுவதனை வைணவர்கள் சரணாகதி என்பர். சரண + ஆகதி = திருவடியைப் பற்றுதல் "சரணாகதி வேறோர் சாதனத்தைப் பற்றின் அரணாகாது" என அதன் தன்மையை வலியுறுத்துவாராயினர். இதனைப் **பிரபத்தி மார்க்கம்** என்றும் கூறுவர். "துயரறு சுடரடி தொழுதெழன் மனனே" என்பர் நம்மாழ்வார்.

சமயப் பெரியார் ஒவ்வொருவரும் இவ்வாறு திருவடியை முன் கூறுதற்குரிய தக்க காரணத்தை நம் முன்னோர்கள் அழகாக விளக்கிக் கூறியுள்ளார்கள். அவை: ஸ்தனஞ்சயப்ரஜை தாய் முலையிற்கண் வைக்கு மாப்போலே" என்றும், 2. சேஷி பக்கல், 3. சேஷபூதன் இழியும் துறை அதுவாகையாலே முன்னர்க் கூறினர்" என்றும் பலபடியாக விளக்குவாராயினர். இன்னும் யாம் முன்னங்கூறிய ஸ்ரீமந் நாராயணுய சரணௌ ஸரணம் ப்ரபத்தியே" என்ற துவயப் பகுதிக்கு மணவாள மாமுனிகள் கண்ட வுரையும் சிந்தித்துப் போற்றுதற்குரியது. "ஸ்ரீமத் பதத்திலே 4 புருஷகாரபூதையாகச் சொன்ன பிராட்டியும் அவள்தானே 5 "சிதகுரைக்கிலும்" என்னடியாரது செய்யார்" என்னும்படி நாராயண பதத்திற் சொன்ன 6 குண விசிஷ்டனன அவனும் கைவிடிலும் திருவடிகள் தன் 7 வைலக்ஷண்யத்தாலே 8 துவக்கிக் கொள்கையாலே கைவிடாது. "வண்புகழ் நாரணன் திண் கழல்" என்கிறபடியே பற்றினரை நழுவவிடாத திண்மையுடைத்தாயிருக்குமென்கை".

உருவ வழிபாடு

இறைவன் உடன்மிசையுயிரெனக் கரந் தெங்கும் பரந்துளன் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. அங்ஙனம் பரந்த பொருளைத் தம்முள் காண்பது எண்வகைச் சாதனத்தாலன்றி இயலாது. யோகப் பழக்கம் எல்லார்க்கும் எளிவந்த செயலன்று. அதன் அருமை நோக்கியே அதனைவிட்டு உருவ வழிபாட்டுடன் கூடிய பத்திநெறியைக் கைக்கொண்டனர் பெரியார். இந்நெறியே எல்லாராலும் கைக்கொள்ளத் தக்க எளிய நெறியாம். இப் பத்தியைச் செலுத்துதற்குரிய இடம் உருவமே எனக் கண்ட நம் மேலோர் உருவ வழிபாட்டை அமைத்தனர். ஆவினுள் எங்கும் பால் நிறைந்திருப்பினும் அப் பாலை மடியானன்றி வேறெவ்வுறுப்பால் பெற முடியும். ஆண்டவன் தன்மை எங்கும் நிறைந்திருப்பினும் ஒரு குறியின்

[1. முலைப்பாலுண்ணுங் குழந்தை 2. தலைவன் 3. அடியவன் 4. உதவி செய்வதில் உறைத்து நிற்பவன் 5. குற்றம் 6. கலத்தல் 7. சிறப்பு 8. அணைத்துக்கொள்ளும்.]

வழியேதான் வெளிப்படும். அதனுனே நம் முன்னோர் ஒரு வடிவத்தில் வைத்து வழிபடுவாராயினர். இவ் உருவம் எப்படியிருப்பினும் பொருத்தமுடன் இறைவன் தனக்கென ஒரு வடிவு கொண்டானில்லை. அன்பர்கள் இட்ட வடிவாகவேயிருந்து அருள்புரிவான். "மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே" என்றார். இக்கொள்கையை வலியுறுத்தியே, பெரியோர்கள்,

தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர் — தமருகந்த
தெவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும் [பொய்கையாரும் கூறினர்]

ஆக, இறைவன் தனக்கென வடிவம் இல்லாதவன் அன்பரிட்ட வடிவே வடிவாகயுள்ளவன். அவர்களிட்ட பெயரே பெயராகவுள்ளான் என்பவற்றையும், உருவவழிபாடே மக்கள் உய்வதற்கேற்ற வழி என்பதனையும் நாம் உணர்தல் வேண்டும்.

இனி இவ்வாறு சிறந்த உருவவழிபாட்டு முறையை நம் அடிகள் எங்ஙனம் கொண்டுள்ளார் என்பதனை நோக்குவாம். இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் வழிபாட்டிற்குரிய அருள் வடிவத்தே அவன் ஆற்றல் வெளிப்படும் என்பதனைத் தம் அனுபவ முறையிற் கண்டவர் முதலில் அவன் எங்கும் நிறைந்த தன்மையை

பார்பதம் அண்டமனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர்
படரொளிப் பரப்பே

எனவும், அப் பாவின் பிற் பகுதியில், இறைவன் அருள் வடிவமாகத் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ளான் என்பதனை,

"சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே திருப்பெருந்துறை யுறை சிவனே" எனவும் போற்றுவாராயினர். பல்லாற்றானுந் தெளிந்து ஒளிவிட்டு விளங்குந் தம் உள்ளக் கமலத்தைச் "சீர் உறு சிந்தை" என்றார் இங்கு "மலர்மிசை ஏகினன்" என்ற குறளும், "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தே அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேர்ந்தான் இறைவன்" என்ற அக் குறளின் உரைப் பகுதியும் குறிப்பிடத்தக்கன.

ஆண்டவன் குணங்களை ஆறென்பர். அவற்றுள் ஒன்று (எளிமை) மிகப் பெரியவன் மிகத் தாழ்ந்த நிலையில் எளிமை யாக எல்லோரும் வழிபடற்குரிய அருள் வடிவத்தோடு திருக் கோயிலில் எழுந்தருளியுள்ளான். இதுதான் அவன் எளிமை. இதனை அர்ச்சாவதாரம் என்பர். இங்ஙனம் கூறிய சௌலப் பியத்துக் கெல்லை நிலம் அர்ச்சை. முன் யான் கூறியபடி இறைவன் நிலைகள் பரத்துவ முதலாய ஐந்தனுள் சிறந்தது அர்ச்சையே என்றனர். இவ்வர்ச்சையை "ஆற்று மடுக்களில் தேங்கிய நீர் என்றனர்.

இங்ஙனம் இறைவனுடைய குணங்குறியுள்ள தன்மையை யுணர்ந்த நம் பெரியார் "உயர்வறவுயர் நலமுடையவனெவன்" என்றார். ."நிர்க்குண மென்பாரை மிடற்றைப் பிடிக்குமாப் போலே ஆழ்வார் உயர்வறவுயர் நலமுடையவன் என்கிறார் அதனுரையாசிரியர்.

இறைவன் அருள் வடிவத்தோடு நின்று மக்களுக்கு அருள் புரிகின்றான், அவனுக்குக் குணமுண்டு என்பன வாதியவற்றைச் சிவஞான போதம் பதினொன்று பன்னிரண்டாம் சூத்திரங் கொண்டும் அறியலாம்.

அவை, "ஏகனாகி இறைபணி நிற்பார்க்கு அறிவு இச்சை செயல்கள் விடயித்தறிதலில் வழி புத்தர் கூறும் ஆலய விஞ்ஞானம் போலச் சூனிய மாமெனப்பட்டுக் குணஞ் சூனிய மாகவே குணியுஞ் சூனியமாகலான்". என இறைவனுக்குக் குணமுண்டென்பதனை வற்புறுத்தியும்

செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

"அயரா அன்பின் அரன்கழல் சென்ற முத்தர்க்குச் சீவன் முத்தி நிலைக்கண் அவ்வறிவு இச்சை செயல்கள் ஓரோவழி

[அர்ச்சை = கோயிலிலுள்ள இறைவன் வடிவம்].

வற்புறுத்துச் செல்லுங்கால் அவை செல்லுமிடம் இவை என்ப துணர்த்து முகத்தான் வாக்குமனாதீதமாய்ப் பத்தியினுன் மறவா தேத்த நின்ற முதல்வனை வாக்கு மனக் கோசரமாம் படித்தெளியக் கண்டு வழிபடுமாறுணர்த்துதல் இப்பன்னிரண் டாம் சூத்திரத்தின் கருத்து. "என இறைவனுக்கு வடிவ முண்டு. அதனை வழிபடல் வேண்டுமென்பதனை வற்புறுத்தி உரைத்த பகுதிகள் இங்கு இயைபு நோக்கி இன்புறத்தக்கன.

இங்ஙனம் ஆண்டவன் அருள் வடிவத்துடன் திருக்கோயில் களில் இன்று காட்சியளிக்கின்றான் என்பது கண்டோம். இவ் வாறு அவன் எளிய முறையில் விலங்காதியபல் பொருட்கட்கும் முகங் கொடுத்து எல்லோரும் கண்டு அனுபவிக்க எக்காலத்தும் இருக்கிறான் என்பதனை ஒருவமை வாயிலாக வெளிப்படுப்பார். அஃதாவது மாமனாக வந்து வழக்குரைத்தான், நரியைப் பரி யாக்கினான் என்றால் இவ்வொவ்வொரு திருவிளையாடலும் அக்காலத்துள்ளாராலே அனுபவிக்க முடிந்ததே ஒழிய பிற் காலத்தார்கு அவை கிட்டியன ஆகா. இச் செயல் ஆற்று வெள்ளத்திற்கு ஒப்பாம். ஆறு பெருக்கெடுக்குங்கால் அப் பொழுது ஆங்குள்ளார்க்கு அப்பெருக்கு நீர் உதவுமேயன்றி யேனையோர்க்காகாது. இவ்வாறு ஒவ்வொரு காலத்து ஆண் டவன் மனித வடிவந் தாங்கி வருவதனை **விபவாவதார மென்பர்.**

பிறப்பினால் பெருமை இல்லை.

சாதி குலம் பிறப்பு முதலியவற்றை நம்மரும்பெறல் அடிகள் துச்சமாகக் கருதினார்கள். அவற்றை

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்
கோதிலமு தானானைக் குலாவுதில்லைக் கண்டேனே [துக்

என்ற பாசுரத்தால் தெளிய வைத்தார். மணிவாசகர், சாதி குல முதலியவற்றால் செருக்குண்டு திரிந்த என்னை அவற்றி னின்றும் நீக்கியாண்டான் எனத் தன்மேல் வைத்துக் கூறினும்

பொதுவாக அடியவர் திறத்து இவை கூடாவென்பதும் அடியவர் பிறப்பின் உயர்வு தாழ்வை யாராய்தல் கூடாதென்பதும் அவர் கருத்தாம். இக் கருத்தினை ஆழ்வார் பாசுரம் கொண்டும் அறியலாம்.

குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தெம் மண்ணல் மணிவண்ணற்கு
[ஆளென்றுள்
கலந்தா ரடியார் தம்மடி யாரெம் மடிகளே.

[நம்மாழ்வார்] உயிர்த்தாரையிற்புக்கு உறுகுறும்பாம் ஒரு மூன்றனையும் செயித்தார். [சட — அந்தா] "பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுகுடம்பாம்" எனக் கூறினர் சாதி, குலம், பிறப்பு முதலியவற்றைப் பற்றிய நம்பூர்வர்கள் வியாக்கியானப் பகுதியையும் சிறிது காண்பது பொருத்தமாம். "பயிலும் சுடரொளி" என்று தொடங்கும் பத்துப் பாசுரமும் அடியவர் சிறப்பினைச் சிறப்பித்து கூறுவனவாம். அவற்றுள் ஒரு தொடர்; "எவரேலுமவர் கண்டீர்" என்ற பகுதிக்கு உரை மிக மிக நயமானவை; "ஜன்மங்வ்ருத்த ஜ்ஞானங்களால் வரும் அபிமானம் பகவத் க்ஷேத்வத்துக்கு விரோதியாகையாலே அதில்லாதாருத்தேஸ்யரென்கிறார், "ததீயர்" என்றே தங்களை நிரூபிக்க வேண்டும்படியாய், வைஷ்ணவத்வ விரோதியான ஜந்மாதிகளால் வரும். அபிமானம் இல்லாதார் நமக்குத் தேட்டமென்கிறார். அவர்கள் எத்தனை நாளைக்கு உத்தேஸ்யரென்ன பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும் பரமர்கள்" என்ற உரைப் பகுதியும், "ம்லேச்சனும் பக்தனானால் சதுர்வேதிகள் அனுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதெய்வத்தோடு ஒக்கப் பூசை கொண்டு பாவன தீர்த்த ப்ரசாதனும் என்கிற திருமுகப் படியும்" என்ற மாறன் மனப்பகுதியும் நோக்கியறிக. இங்குக் கூறிய பாசுரமும் வியாக்யானப் பகுதியும் அடியவர்கள் இலக்கணம் கூறவந்தனவாயினும் இறைவனடியவர்கள் இவற்றை (சாதி, குலம், பிறப்பு) யொரு பொருளாகக் கொண்டிலர், என்பதும் இரு சமயத்தவர்க்குங் கருத்தொன்று என்பதுங் காண்க.

14

அடிகள் கூறிய "யானெனதென்னுரைமாய்த்து" என்ற பகுதியுள் "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகும் புகும்" என்ற அருமைக்குறளின் கருத்தமைதி ஒளிப்பது காண்க. அகங்கார மமகார மடியாய்ப் பிறக்கும் பல இன்னல்களினின்றும் தன்னைத் தடுத்தாண்ட நிலையை நோக்கி "யானென தென்னுரை மாய்த்து" என்றார். "நீர் நுமதென்றிவை வேர் முதன்மாய்த்திறை, சேர்மினுயிர்க் கதன், நேர்நிறையில்லே" என்ற பாசுரம், மணிவாசகரது பாசுரத்துக்கு உரையெழுதியது போன்றது காண்க.

உபதேசம்.

ஒவ்வொருவனும் உலகப்பொருள்களின் பற்றினை விட்டால் அப்பொருள்கள் ஒவ்வொன்றானும் வரும் துன்பம் அவனைச் சாராது அவனுந் துன்புறான் என்ற கருத்தினை வள்ளுவர்

> யாதனின் யாதனி னீங்கியா னோதல்
> அதனி னதனி னிலன்

எனக் கூறினர். இம்முறை ஒரு வகையில் பற்றுதற்கேற்புடைத்தாயினும் பலமக்களும் நன்மை அடைதற்குத் தடையாகத்தானிருக்கும். இம் முறையைச் சற்று மாற்றித் "தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற முறையை பின்பற்றியவர்கள் சமயப் பெரியோர்கள். தாம் பெற்ற இறையருளை ஏனைய மக்களும் அடைந்து அனுபவிக்கவேண்டும் என்ற பெரு நோக்குக் கொண்ட நம் அடிகள்

> 'காலமுண்டாகவே காதல் செய்துய்மின்'
> மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

என உலகத்தவரை நோக்கி அழைப்பாராயினர். இவ்வாறு அவர் அன்புடன் அழைத்த அழைப்பிற்கிணங்கி வரமாட்டாத மடவோரைக் கண்டார். என்னே! இவர்கள் அறியாமை என்று அவர்கட்கு உலக நிலையாமையை உணர்த்து முறையால் அஞ்சுவித்தாயினும் அழைத்து அருளார் அமுதினை ஊட்டுவேன்

என்னுந் தடங்கருணையால்" நிற்பார் நிற்க, நில்லாவுலகில் இனி நாம் நில்லோமே" என அச்சுறுத்துக் கூறுவாராயினர். இம் முறையில் நம் ஆழ்வார்,

"திருநா ரணன்றாள் காலம் பெறச் சிந்தித் துய்ம்மினோ"
"நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணாராத் துயர்விளைக்கு மிவையென்னவுலகியற்கை'

எனக் கூறிய பகுதிகள் ஒப்பிடத் தக்கன.

நம் அடிகள், உலகியலைக் கடந்து மாற்ற மனங்கழிய நின்ற மாமறை யோனாய இறைவன் அருள் வெள்ளத்துள் மூழ்கிப் பேரின்ப நிலையில் நுகர்ந்த உண்மைகள் எல்லாம் மனத்தால் நினைக்க, வாயால் கூற அரியன. ஆயினும் தெள்ளிய முறையில் சுவைமிக்க பாடல்களால் அம்மானை பொற்சுண்ணம் இடித்தல், உந்தி, சாழல், தெள்ளேணம் முதலிய மகளிர் விளையாடல்களில் வைத்து அவர்தம்முள் உரையாடு முகமாகப் பல வுண்மைகளை வெளிப்படுத்தினார். இப்பகுதிகள், அறிவிற் குறைந்தாரும் அறிந்துகொள்ளும் முறையில் அமைந்தன.

எல்லாம் இறைவன் வடிவம்.

உலகப் பொருள்கள் எல்லாம் இறைவன் வடிவமாக அமைந்தன. "நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோராதார், கற்கின்றதெல்லாம் கடை" என்ற முறையில் நம் கண்முன் தோன்றும் பொருள்கள் அவன்மயமாக வுள்ளன என்றே யுணர்தல் வேண்டும். நம் அடிகள் குயிலை முன்னிலைப் படுத்தி இறைவன் அருங் குணங்களைப் பாடுக எனவும், வண்டுகளை நோக்கிக் கூறுவன மாகவுள்ளவற்றை நோக்கின் "ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே" என எல்லாவற்றையும் இறைவனாகக் கண்டார். திருமங்கை மன்னன் பெரிய திருமொழி இடத்தும் இங்ஙனமே குயில் முதலியவைகளை முன்னிலைப் படுத்து "அவன் புகழ் பாடுக, கூவுக" என்ற பகுதிகளைப் பார்க்கலாம். இவ்வாறு ஒத்த பகுதியாக வருவனவெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துப் படியெடுத்துக்கொண்டார் எனல் வேண்டா. தக்க பண்பாடும், நூற்பயிற்சியுமுடைய பெரியோர்கள் திருவுள்ளத்துக் கருத்

துகள் ஒத்துவருதல் இயல்பன்றே. ஆங்கிலக் கவியாய சகசிற்பியார் நூலில் காணும் பல பகுதிகள் கம்பராமாயணம் போன்ற தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் காணக்கிடக்கின்றன வென்பர். அண்மையில் காந்தி இறையடி யெய்திய பொழுது நேரு ஆங்கிலத்தில் பேசினார். அப்பேச்சு நந்தா விளக்கனைய நாயகமே நானிலத்தோர் தந்தாய் தனியறத்தின் தாயே தயா நிலையே, எந்தா யிகல்வேந்தரேறே யிறந்தனையே, அந்தோ வினி வாய்மைக்காருளரோ மெய்யுற்றார்." என்ற கம்பராமாயணம் பாடலை மொழிபெயர்த்தாற் போன்றிருந்த தென்பர். இத் தமிழ்ப் பாடலை நேரு படித்திருக்க முடியாதென்பதுறுதி. இது நிற்க.

இருதலைக் கொள்ளி எறும்பு.

இப் பழமொழியினை நம் அடிகள் மிக அழகாகத் தம் நீத்தல் விண்ணப்பத்தில் அருளிச் செய்தார். எல்லாசிரியரும் இருதலைக் கொள்ளி எறும்பென்றே எடுத்தாண்டனர். இம்முறையில் அதனை ஒரு துளிமாற்றி "உள்" ளெறும் பொத்து" என்று "உள்" என்ற ஏழாம் வேற்றுமை இடப் பொருளுருபைப் பெய்துவைத்தார். இவ்வொரு துளி பெருங்கடலாய பெரும் பொருளைத் தந்தது. அது அணுவைத் துளைத்து எழ் கடலைப் புகட்டியது போன்றது. ஆகப் பல்வகையானுமுயர்ந்தது திருவாசகம் இதன் பொருட்பரப்பு சிறப்பெல்லாம் **கதிர்மணி விளக்கங்** கண்டு தெளிக.

பொருள்களின் தோற்றம்

உலகப் பொருள்களின் தோற்றத்தினையும், அப் பொருள்கள் ஒவ்வொன்றாக மாறி வளர்ச்சியடைந்த நிலையையும் எவ்வளவு நுணுகியாய்ந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள் என்பது சிந்திக்தற்குரியது. ஆங்கிலம் படித்த அறிஞர்களால் பேசப்படுகிற **தார்வின் நூற்** கொள்கையை எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்பே நம் முன்னோர்கள் கண்டுள்ளார்கள். நின் பெருஞ்சீர், பொல்லாவினையேன் புகழுமாறென்றறியேன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாஅய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகிமுனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாஅப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்றுவீடுபெற்றேன்

என்ற இப் பகுதி உயிர்ப் பொருள்கள் வளர்ச்சியடைந்த நிலையைத் தொகுத்துக் கூறுகின்றது. இவற்றை "எம் பெருமான் பல்கல்லாய்ப் புல்லாகிப் பூடாய் மரமாகிச் செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் புழுவாய்ப் பல்விருகமாகி மனித ராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுராகி முனிவராய்த் தேவ ராய்ச் செல்லா நின்ற விச்சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்" எனப் பொருள்கோள் படுத்துக் காண்க. உலகத் தோற்றத்தில் கற்பாறை, அணுக்களின் அடங்கிக் கிடந்து பின் புல்லாகியும், மரங்களாகியும் படைக்கப்பெற்றுப், பல்கோடி நிலையியற் பொருள்களுள்ளும் புழு, பாம்பு முதலிய ஊர்வன வாயும் பறவை முதலிய பறப்பனவாயும் பூதகணங்கள் முதலா கப் படைக்கப் பெற்று இயங்குகின்ற பல்கோடி இயங்கி இயற் பொருள்களுள்ளும் படைக்கப் பெற்று இளைத் தொழிந்தேன் என்கிறார். 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி" என உலகப் படைப்பிற்குக் கல்லே முதல் தொடக்கம் என்பதனைத் தமிழன் கண்டனன். அதனையே நம் அடிகளும் உட்கொண்டு கூறுகிறார்.

இங்ஙனம் நம் அடிகள் எல்லாப் பிறப்பும் பிறந்தேன் எனக் கூறுவதற்கு அடிப்படையில் ஒரு கருத்திருக்கவேண்டும். இவர் உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் தன்னன்பு கனிந்த அருள் அமைந்த திருவுள்ளத்தால் காண்பவராதலின் உலக மக்களும் அவ்வுயிர்ப் பொருள்களிடத்தில் அன்பு காட்டவேண் டும், அதுவே மக்கள் யாக்கை பெற்றதனால் பெற்ற பயன் - என்பனவே அமைய வேண்டும் என்பது இவர் கருத்து அன்ப கத்தில்லாவுயிர் வாழ்க்கை வன்பாற்கண், வற்றல் மரந்தளிர்த் தற்று எனக் கூறினர், வாய் மொழிப் புலவரும்

இனிக் கோவையாரை நோக்குவோம்.

திருக்கோவையாருக்குத் திருச்சிற்றம்பலக் கோவையென வும் பெயருண்டு. திருச்சிற்றம்பலமுடையார் தம் திருக்கைக் கொண்டு எழுதினமையின் அதன் உயர்வு கருதி ஆர் விகுதி கொடுத்தனர். "ஒருவரைக் கூறும்" என்ற சூத்திரத்து மிகை யால் உயர்திணைக்குரிய ஆர் விகுதி கொடுக்கப் பெற்றது. நாலடியார், திருக்களிற்றுப்படியார் என்பதுங் காண்க இதனை

> திருக்கோவை யாரினைச் செப்பின ரஃதை
> இருக்கினுஞ் சிறந்ததா வேற்றெம் பெருமான்
> திருக் கரங் கொண்டு தீட்டிய தன்றியும்
> அழகிய திருச் சிற்றம்பல முடையான்
> எழுதிய தெனநெட் டெழுத்திட் டருளினன்.

எனக் கூறுமாற்றானும் அறியலாம். கூத்தப் பெருமான் தன் கையால் எழுதற்கு ஒரு காரணமுமுண்டு; தான் செய்த களவியல் நூலுக்கு இலக்கியமாக, இந்நூலை மணிவாசகர் வாயி லாக அமைத்துக்கொண்டதினால் தன் கை கொண்டெழுதினன் என்பர் ஒரு சாரார்.

இதன் சிறப்பைப் பலபடியாகப் பலர் புனைந்துரைத்தனர். அப் புனைந்துரைகளில் ஒன்றாய சாமிநாத தேசிகர் தாம் செய்த இலக்கணக் கொத்துள்,

> "பல்கால் பழகினுந் தெரியா வுளவேல்
> தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவை
> மூன்றினு முழங்கு மாண்டு மிலையேல்
> வடமொழி வெளிபெற வழங்கு மென்ப

திருக்கோவைக்கும் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற் கலந்து அருமைத் திருக்கையால் எழுதினர். அப் பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதிகாரம்

மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேள் மாக்கதை முதலிய வற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடு ஒன்றாக்குவர். தேவாரம் முதலிய இலக்கியங்களையும் ஒருபொருளாக எண்ணாது நன்னூல், இலக்கணங்களையும், இராமன் கதை ...... முதலிய இலக்கியங் களையும் ஒருபொருளாக எண்ணி வாணாள் வீணாள் கழிப்பர். அவர் இவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின் ? பாற்கடலுள் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போல அவரதியற்கை யென்க" எனக் கூறுவாராயினர்.

இக்கோவை பிற்காலக் கோவைகட்கெல்லாம் மேல் வரிச் சட்டமாக அமைந்தது. கோவையாவது தமிழ்நாட்டு ஐந்திணைக் குரிய மக்கள் ஒழுகலாற்றினைத் தொடர்ச்சியாக ஒரு வரிசைப் பட அமைத்துப் புலனெறி வழக்கால் கூறுவது. கோவை = வரிசை. இது திருச்சிற்றம்பலக் கோவை; இன்பத்துறையில் இலக்கியமாக அமைந்தது போற்றோன்றினும் இதன் ஒவ்வொரு பாவும் உடனிலைச் சிலேடை வகையால் சிற்றின்பமாகவும், பேரின்பமாகவும் பொருள்கொள்ளும் நிலையில் உள்ளது.

பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த இத் திருக்கோவையார்க் குத் திண்ணிய பொருளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வதாய உரையொன்றுண்டு. இவ்வுரை பரிமேலழகர் உரை போன்று சிறப்புடையது. இதன் திறம் விரிப்பின் பெருகும். இவ் வுரையை நச்சினார்க்கினியர் உரை யென்றனர் பலர். சேனா வரையர் உரை யென்றார் ஒருவர். நச்சினார்க்கினியர் உரை என்போமாயின் அவர் உரை கண்ட தொல்காப்பியம், சிந்தா மணி, பத்துப் பாட்டு ஆய நூல்களில் காணப்பெறும் முறை வேறு. அவர் சொற்றொடருக்குப் பொருள் காணும் முறையே தனிப்பட்டது. அவர் செய்த உரைநூலைத் தொகுத்துக் கூறும் வெண்பாவில் இந்நூல் வந்துளது. சொற்களைக்கொண்டு கூட்டி அமைத்துப் பலவகையாக உரை காண்பதில் மிக்க விருப்ப முடையார். இவ்வுரை அம்முறையே அன்று. ஆதலால் நச்சர் உரை என்று துணிய இயலாது; சேனாவரையர் உரையோ மிக்க நயமுடையது, அவர் தொல், சொல்லுக்குத்தான் உரையெழு

தினர். அவ்வுரைப் போக்கைக் கண்டு பார்ப்போமாயின் அதுவும் இடர்ப்பாடுடையதே. பேராசிரியர் உரையென்பவர் இராகவையங்கார். இப்பொழுது தொல்பொருள், மெய்ப்பாடு முதலிய நான்கியலுக்கே அவர் உரைகாணப் பெறுகின்றது. அவர் செய்யுளியல் உரை கொண்டு பொருளதிகார ஏனைய இயல்கட்கும் உரைகண்டிருக்கிறார் எனத் தெரிகிறது. அவ்வுரையின் நடை, உரை வகுக்கும் முறை ஆயவை இவ்வுரைக்கு முற்றும் முரணனவை. அவையன்றியும் "பாநிலை வகையே கொச்சகக் கலியென, நூனவில் புலவர் நுவன்றறைந்தனரே" என்ற செய்யுளியல் சூத்திரத்தின் உரைப் பகுதியில் "இனிக் கோவையாக்கி எழுத்தெண்ணி அளவியற் படுத்துச் செப்பினும் அவையே யாம்" என்ற பகுதிக்கு "காண்பா ல்" என்ற செய்யுளை மேற்கோள் காட்டினர். இவராக இருப்பின் திருக்கோவையார் செய்யுளைக் காட்டாதிரார். இன்னும் "களவொழுக்கத்தினை ஒரு மாலையாக உட்கொண்டு உருவகமாய்ப் பாட்டால் உணர்த்தினர் என்பது" என்று ஒரு தொடர் உள்ளது கோவையில் இத் தொடரில் "உருவக வாய்ப்பாடு" என்ற பகுதி பேராசிரியருக்கு உடன்பாடன்று. "இவற்றைப் பிற்காலத்தார் உருவகமாக்குவர்" என்ற உவமவியல் தொடராலும் இவர் வேறு அவர் வேறு என்பது தெற்றென விளங்கும். பேராசிரியர் பெயர் உள்ள பலர் காணப்பெறுகின்றமையின் இப் பெயருடைய வேறொருவர் உரை இதுவெனக் கொள்ளலே பொருத்தமுடைத்து. நிற்க திருக்கோவையார் உரையைச் சிறப்பித்து இராகவையங்கார், "பெரிய புராணம் போன்ற ஒரு புராணமும் திருக்கோவையார் உரை போன்ற ஒருரையும் இல்லாமை வைணவத்துக்கு ஒரு குறை" யென்பராம் "திருவாய்மொழியின் ஈட்டுரை போன்று சைவத் திருமுறைகட்கு ஓருரை இல்லாதிருப்பதும் ஒரு பெருங் குறை" என்பர் சைவப் பெரியார் பண்டிதமணி.

இக் கோவையுள் துறைகள் பல. அவற்றுள் ஒன்றான "பாங்கன் வினுதல்" என்ற துறையைத் துருவுவாம். இவன் கற்றறி பாங்கன் ஆவான். பின் "கற்றறி பாங்கன் கழறல்" என்பதால் இவனை இங்குக் கற்றறி பாங்கனாகவே யாம் கொண்

டாம். கற்றதனோடு அமையாது கற்றவற்றை நன்கு அறிந்தவன். கற்றறிந்தாங்கும் ஒழுகுபவன். இத்தகைய சிறப்பியல்புகள் பாங்கனுக்கு இருக்கவேண்டும் என்பது நம் முன்னோர் கொள்கை. பாங்கன் நட்பன் தோழன் என்பன ஒரு பொருட்கிளவி. "நகுதற்பொருட்டன்றி நட்டல் மிகுதிக் கண், மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்ற தன்மையை மேற்கொண்ட பாங்கனன்றோ வினவுகின்றவன். அவ்வினவை அடிகள் பாக் கொண்டு பார்ப்பாம்.

> சிறைவான் புனல் தில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவா னுயர்மதில் கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழின்
> துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
> இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே

என்றார். இப் பாவின் நயம் பல்காலுஞ் சொல்லிச் சொல்லிச் சுவைக்கும் பான்மையதன்றோ. அவற்றுள் சில; கருணைத் தடங் கடலாய இறைவன் தன்மையை எடுத்துக் காட்டி மக்களைச் செம்மைப் படுத்தவே இந்நூல் எழுந்ததாகலின், பாட்டுடைத் தலைவனாய அழகிய சிற்றம்பல முடையானது எளிமைத் தன்மையைச் சிறப்பித்து முதலடியில் "சிற்றம்பலத்தும், என் சிந்தையுள்ளும் உறைவான்" என்றார். சிற்றம்பலம் எவ்வளவு உயர்ந்தது, எவ்வளவு தூய்மையானது, எவ்வளவு அழகானது. அவ்வளவுக் கவ்வளவு முற்றும் மாறானவை என் குணஞ் செயல், அங்ஙனமிருந்தும் சிற்றம்பலத்தோடு சிந்தையோடு வாசியற ஒக்கவைத் தெண்ணி என் சிந்தையில் உறைவான் என்பதற்குக் காரணம்: அவன் அறப் பெருங்கருணையும், அறப் பெரும் எளிமையுமே யன்றோ? "வாயிலோர் இன் சொல்லில்லை மனத்திலோர் தூய்மையில்லை" என்றாங்குத் தம் மனத்தும் தங்கிய திறம் நினைந்து "என் சிந்தை" என்றார், "என்" என்ற ஒலிக் குறிப்பாலும் "சிந்தையுள்ளும்" என்ற வும்மையாலும் அடிகள் தம்மைத் தாழ்வுபடுத்துக் கூறியமை புலனாம். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின்" எனத் தன்னை இறைவன் ஆட்கொண்ட நிலையை அடிகளே கூறுவதுங் காண்க. "பத்துடையடியவர்க் கெளியவன்" இறைவன் என்பதனைத் திருவிளையாடலில் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு முதலியன

கொண்டும் அறியலாம். இறைவன் அடியவர்களிடத்து எளிமை யாகவுள்ளோன் என்பதனை இறைவனே உமாபதி சிவத்துக் கெழுதிய சீட்டுக் கவி யொன்றில்

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் — படியின் மேல்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை.

எனத் தன் மடைப் பள்ளிக்கு நாள்தோறும் விறகு போட்டு வந்த பெத்தான் சாம்பானுக்கு உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை சிறிதும் கருதாமல் முத்தி கொடுக்கை முறை யென்றதால் கூத்தப் பெருமானின் கருணைத் திறமும், எளிமையும் இயம்புந் தரத்தனவோ.

இனியடுத்த படியாகத் தனிமைப் பட்டுக் கூட்டுமொழி யின்றி நின்று பல்லூழிக் காலம் நிலவி வரும் நம் தாய்மொழி யாய தமிழினைக் குறிப்பிடுகிறார். மூன்று சங்கத்து மிருந்த நுண்மாண் நுழைபுலமிக்க புலவர்களால் ஆராய்ந்த தமிழ் பல மொழி பேசுகின்ற பலநாட்டு மக்களாலும் நன்கு அறியப்பட்ட தமிழ், தமிழ் தழுவிய சாயலவள் என்றாங்கு இனிய ஓசை நயம் மென்மை வாய்ந்த தமிழ் என்பன வாதிய சிறப்பினைக் கொண்டது தமிழ் என்பதற்காகக் "கூடலினாய்ந்த ஒண்தீந் தமிழ்" என்றார். இங்கு "ஆய்ந்த" என்றது; மேலும் மேலும் நூல்களைச் செய்து பரப்புவதாற் பயனில்லை, தொன்று தொட்டு வந்த நூலை நன்கு ஆராய்ந்து அவற்றின் சிறந்த கருத்துக்களை மக்களறியச் செய்யவேண்டுவதே பயனெனக் கண்ட நம் அடிகள் இச் சொல்லைப் பெய்து வைத்தார் என்பது. இன்னும் இச் சொல்லை, தமிழ், தீந்தமிழ், ஒண் தமிழ் ஆய்ந்த தமிழ் எனப் பலப்படியாகப் பிரித்துப் பொருள் நயங் காண்க. இனி யடுத்து, "துறைவாய் நுழைந்தனையோ" என்றது: அகத்துறை புறத்துறைகளை. இத்துறைப் பாகுபாடுகளில் புறத்துறைப் பாகு பாடுகள் தமிழிற்கேயுரியன. வேறெந்த மொழியினும் காணப் பெறாத பகுப்பென்பர். வேற்றுமொழியும் வல்லார். அகத்துறை சிறிது வேற்று மொழிகளில் இருப்பினும் இங்ஙனம் கோவை

யாகச் சொல்லுந் திறம் அவற்றுள் இன்மை மலையிலக்கே மேலும் பொருளிலக்கணம் பெருங் கடல் போன்று பரந்த பகுதியே ஆதலின் அதன் சிறப்பு நோக்கி இங்ஙனம் கூறினரு மாம். "ஏழிசைச் சூழல்" ஏழிசை:— குரல் துத்தம் முத லாயின' சூழல் — குரல் முதலாயவற்றால் ஆய பண் அமைந்த பாடலை என அறிக. "பண் சுமந்த பாடல்" என வாசகத் துங் கூறினர். இவ்வேழு இசையும் சூழ்ந்து அமைந்த பாடலைச் சூழல் என்றது கருவியாகு பெயர். செவி கருவியாக நுனித் தறிய வேண்டிய கலையாதலின் அதன் அருமைப்பாடு நோக்கி ஏழிசைச் சூழல் என்றார். எனவே இப்பாவில் தமிழின் இயல், இசை இரண்டினையும் சிறப்பித்துக் கூறினருமாம்.

என்ற இப் பகுதியால் தலைவன் தோட்கு மெலிவு நேர்ந்த தனைக் கற்றறி பாங்கன் வினவுகின்றான். இவ்வாறு பல அரிய பெரிய பொருள்களையமைத்து நமக்கு விருந்தளித்த மணி வாசகப் பெருமானை என்றென்றும் மறவாது வாழ்த்துவோ மாக.

கண்ணயந்துரைத்தல்.

மக்கள் தங்கள் சிந்தையுள், எவ்வெப் பொருளை அமைத்து இடைவிடாது சிந்திக்கின்றார்களோ அவ்வெப் பொருள்கள் தாம் அவர்கள் உயிர்விடும் காலத்துத் தோன்றும். ஆதலால் மக்கள் உறுதிபயக்கத் தக்க பொருள்களையே எப்பொழுதும் மனத்தகத்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது மேலோர், நூலோர், பாலோர் ஆயவர்கட்கெல்லாம் ஒப்ப முடித்த செய்தி. இப் பகுதியினைத் திருக்குறள் மெய்யுணர் தல் அதிகாரத்தால் அறியலாம். அவற்றுள் ஒன்றினை நுங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். வீடு அடைதற்கு நிமித்த காரணமாகவுள்ளது முதற்பொருள். அப் பொருளை வுணர்வதற்குபாயம் மூன்று. அவை:— கேள்வி, ஆராய்ச்சி, கண்டு தெளிதல் என்பன. இவற்றை முறையே "கற்றீண்டு" "ஓர்த்துள்ளம்" "பிறப்பென்னும்பேதமை" என மூன்று குறளால் மொழிந்தார் வள்ளுவர். அங்கு இறுதிக் குறளில் "செம் பொருள் காண்பதறிவு" என்ற பகுதியில் செம்

பொருளைக் காண்பதே அறிவு என்றார். செம்பொருள் இறைவன் அப் பொருளைக் காண்கையாவது, உயிரின் தன் அவிச்சை கெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது கண்டு தெளிதல். இதனைச் *சமாதி யென்பர். உயிர் உடலி னின்றும் நீங்கும் காலத்து அவ்வுயிரால் யாதொன்று கண்டு தெளியப் பட்டதோ அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லாச் சமய வாதிக்கும் உடன்பாடு; ஆகலின் வீடு அடை வார்க்கு மரண காலத்துப் பிறப்பிற் கேதுவாய உலக நினைவுகள் கெடுதற்பொருட்டு இறைவனையே தியானிக்க வேண்டும்; ஆத லால் இறைவன் தியானத்தைத் தொடர்ந்து பழகுதலாய இத னின் மிக்க உபாயமில்லை என்றறிய வேண்டும்; எனவே இக் கூறியவாற்றால் இடைவிடாது இறைவன் பாவனை வேண்டு மென்பது தெளிவு. ஆக இக் கருத்தை நினைவில் வைத்துக் கொண்டால் நம் அடிகள் அருளிய இத்துறைப் பாவின் உவமை யின் கருத்துக்கள் புலனும்.

இக் கருத்தை அடிப்படையில் வைத்து இறைவன் தியா னமே இடைவிடாது பழகி வந்தவராதலால் கண்ணின் தன்மை களுக்குக் கூறிய உவமைகள் பலவும் இறைவனைப் பற்றித் தாம் சிந்தித்திருந்த கருத்துக்கள் புறம் பொசிந்தவையாம் என்பதனை இப் பாசுரத்திற் காணலாம்.

> ஈசற்கி யான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
> பாசத்திற்காரென் றவன் தில்லையின்ஒளி போன்ற
> [வன்றோள்
> பூசத்திருநீ றென வெளுத் தாங்கவன் பூங்கழல் யாம்
> பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே

இப்பாவில் கண்ணிற்குச் சிறப்பாய அகலம், கருமை, ஒளி, வெண்மை, நீளம் ஆயவை பேசப் பெறுகின்றன. இவைகட்கு உவமையாக எவற்றைக் கொண்டார் என்பதே இங்குச் சிந்திக் கத் தக்கது. தாம் இடைவிடாது கண்டுத் தெளிந்த கேவலப் பொருளிடத்துத் தாம் கொண்ட அன்பு இறைவன் தன்னிடத்

---

* சமாதி — பொறிபுலன்களடங்கியிருக்கும் நிலை.

திருந்து விலக்கிய பாசம், அவன் உறைவிடமாய தில்லையின் ஒளி, அவன் திருமேனியில் பூசுகின்ற திருநீறு, திருவார்த்தை என்பனவாம். ஆக இவற்றால் தாம் கண்ட வுண்மைப் பொருள் களையே வுவமையாக அமைத்தார். பேசு திருவார்த்தை யென்னுது யாம் என்றது பேசும் அன்பர் பலராகலான் இங் ஙனம் கூறினர். "தோள் கண் முலையென மூவழிப் பெருகி" என்ற கலித்தொகைக் கேற்ப கண்ணின் பெருமையைப் பின் னரும் பேசினர். தலைவன் கண்களால் பெரிதும் இடர்ப்பட் டானுதலானும், தோழியைத் தனக்குக் காட்டித் தந்த பேருதவி யையுடையவனுகலானும், முன்னர்க் கண் மலர் செங்கழுநீர் என்றும் அமையாது பின்னுங் கூறினன்.

இப் பாவுடன் ஒப்பிட்டு நோக்கி இன்புறத் தக்க பாடல் ஒன்று காரைக்கால் அம்மையின் வாக்கிலிருந்து காணலாம். அம்மை வைகறை எழுந்து நீராடி வழிபாடாற்ற குணதிசை நோக்கினர். கதிரவன் தன் ஒளி முழுவதனையும் விட்டு அத் திக்கில் தோன்றினன். இவ்வாறு காலையில் தோன்றிய கதிரவன் ஒளியைக் கண்டார் அடுத்து வந்த நண்பகலைக் கண்டார். மாலையை இரவையுங் கண்டார். இடைவிடாது ஆண்டவன் திறத்து அன்பு பூண்டு அம்மை, அவன் மேனியின் தன்மையையே சிந்தித்துக் கொண்டிருந்த அம்மை தன் பண்பட்ட வுள்ளத்துச் சிந்திப்பன, கண்ணிற்றேன்றுவன எல்லாம் அவன் வடிவங்களன்றி வேறென் தோன்றும்! அன்பர்களே; இவ்வாறு கண்ட காலை முதலிய நான்கினை சிந்தையில்பழுத்துத் தோன்றிய நான்கு பொருளோடு உவமையாக வைத்துப் பேசுந் திறம்

காலையே போன்றிலங்கும் மேனி; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கு வெண்ணீறு — மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக் கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலுமிடறு.

என்ற பா பல்கால் பயின்று இன்புறத் தக்கதன்றே.

தமிழுக்கேயுரிய சிறப்பு எழுத்துக்களைக் கொடுத்து இனிய

ஓசை அமைத்துக் கூறிய பா ஒன்றனை எடுத்துக் காட்டி இதனை முடிப்பல்.

> யாழு மெழுதி யெழின் முத்தெழுதி யருளின் மென்பூச்
> சூழுமெழுதியோர் தொண்டையுந் தீட்டி யென் தொல் [பிறவி
> ஏழு மெழுதா வகைசிதைத்தோன் புலியூரிளமரம்
> போழு மெழிதிற்றோர் கொம்பருண்டேற் கொண்டு [போதுகவே

இதனுள் சிறப்பெழுத்தாகிய ழகரம் மிகுதியும் பயின்று வருதல் காண்க. இதனைப் பாடி ஒரு வடமொழிப் புலவரை வென்றதாகக் கூடக் கூறுவம்.

ஒரு பெண்ணின் குரல், பல், இதழ், கண் முதலிய உறுப்புக்களை அழகிய செந்தமிழ்ச் சொற்களால் விளக்கும் திறம் சாமானிய கவிகட்கு இயல்வதொன்றன்று. பார காவியம் செய்யும் பண்புடைப் பெருங் கவிகட்கேயுரியது இச் செயல். இப் பாவைப் பலகால் படித்துச் சுவைத்து அதன் நயமுணர்வதே சிறப்பாம். இதன் திறம் விரிப்பின் பெருகுமாதலின் விரிவஞ்சி விடுத்தனம்.

இக் கட்டுரை, திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலயாத்திரைக்குச் சென்றபோது எழுதிப் படிக்கப் பட்டது.

புரவலர் உள்ளம்.

[கவிதை நாடகம்]

வித்துவான். ச. பாலசுந்தரம்,

விரிவுரையாளர் கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

காட்சி 1.

[அதியமான் நெடுமானஞ்சி உலாவிக்கொண்டிருக்கிறான் நீண்ட சிந்தனை......அப்பொழுது அமைச்சர் வருகிறார். வந்து]

அமைச்சர் :— மன்னவ! என் வணக்கம் உரித் தாக... ..

அதியமான் :— வாரும்

மதியமைச்சே! வந்த செய்தி?

அமை :— மன்னர் மன்னா!

என்ன பெருஞ் சிந்தனையோ?

அதிய :— ஏதுமில்லை

இவ்வுலகில் பிறந்த உயிர் யாவினுள்ளும்
சின்னஉயிர் மக்களெனல்......

அமை :— சிறந்த உண்மை

அதிய :— திருவருளால் பகுத்தறியும் திறமி ருந்தும்
பன்னலமும் மொழியறிவும் படைத்திருந்தும்
பாங்குடனே வாழாமல் பகையும் போரும் (1)
பேராசை யாலுமிவை பிழைபு ரிந்து
பேதைமையால் மாய்வதனை எண்ணி எண்ணி

அமை :- தீராத சிக்கலிது மன்னா......இந்தச்
சிந்தனையால் மனங் குழம்பும்......

அதிய :- ஆமாம்

அமை :- சற்றே

ஊரோரம் சென்றுவரு வோமே அங்கே
உளமமைதி பெறக்கூடும்......

அதிய :- மாலை நேரம்

காரேற மலையருவி வீழுஞ் சாரற்
கடுகிமலை வளங்கண்டு வருவோம் அங்கு (2)
பிறந்தபயன் துய்த்துவளர் பறவை, வாழ்வின்
பெரும்பயனை நுகர்விலங்கு, தென்றல் யாவும்
சிறந்ததொரு நல்லமைதி சேர்க்கும்

அமை :- ...ஆயின்

செல்வோம்நாம் மலைச்சாரல்......

அதிய :- அங்குச் சென்று

திறந்தவெளி உயர்ந்தமலை இவைகள் கண்டால்
சிறுமைமனம் சிறிதளவு விரியு மன்றே
அறந்தழைக்கப் பாடுகின்ற அவ்வைப் பாட்டி
அருகிருந்தால் எவ்வளவு அமைதி; வாரும் (3)

[அமைச்சர் காப்பாளர்களுடன் மலைவளங் காணச் செல்கிறுன்]

காட்சி 2.

[பிற்பகல் மலைச் சாரலில் அதியன் வீற்றிருக்கிறுன். காவலர்கள் அப்பால் இன்பமாய் இயற்கை யின்பத்தைத் துய்க்கிறுர்கள் அமைச்சனும் அதியனும் பேசுகிறுர்கள்.]

அமை :- உள்ளமதிற் பேருவகை ஊற்றெடுக்க
உணர்ச்சியிலே இன்பஅலை பாயத் தென்றல்
மெள்ளவந்து மேனியிலே படிந்து நம்மை
மெய்ம் மறக்கச் செய்கிறதே...

அதிய :- மலர்க்கிண்ணத்தில்

கள்ளெடுத்துத் தளிர்க்கரத்தைக் காட்டி நம்மைக்
கருதிவர வேற்பதென்னே !

அமை :- சோலை வண்டு

பொள்ளனவே இசையெழுப்பக் குயில்கள் பாடப்
பொன்மயில்கள் ஆடுவதைப் பாரும் மன்னு ! (4)

அதிய :- அவைக் கிசைய மலையருவி தாளம் போட
அழகுநங்கை கொலுவிருக்கும் காட்சி என்னே !

சுவைக்கினிய கனிகொடுக்கும் மரங்கள் - உள்ளச்
சோர்வகற்ற நற்சுனையில் அமுதத் தேக்கம்

அமை :- அவைக்கினிய புலவரைப்போல் பறவைக் கூட்டம்
அனுபவிக்க மக்களுக்கிங் காயுள்வேண்டும்!

அதிய:- கவிக்கினிய செந்தமிழால் கவிதைபேசிக்
களித்துவிளையாடுகின்ற கிள்ளைகள் பார்! 5
உருக்கியசெம் பொற்குழம்பால் ஓவியத்தை
உயர்வான மேற்றிசையில் இயற்கை அன்னை
வரிக்குவரி அழகொழுக வடிக்கின்றாளே!
வண்ணமலர்க் கொடியிடையாள் மலர்சிரிப்பைப்
பெருக்குகிறாள்......

அமை :- வான் பறவை சிறகு கொட்டிப்
பெருமரங்கள் தோறுமிசைப் பாட்டிசைக்க
உறக்கமுடன் கீழ்த்திசையில் உடுக்கள் மேனி
ஒருசிறிது திறந்தொளிரும் காட்சி என்னே! 6

அதிய:- செங்கதிரோன் மேல் வானில் செல்லல் நோக்கிச்
சிறிதளவு வெண்முகிலின் பின்னே தோன்றிப்
பொங்குநிலா மங்கைமுகங் காட்டுகின்றாள்

அமை :- புதர்கள் தோறும் விலங்கினங்கள் விழிக்கும் நேரம்
எங்ககன்றார் ஏவலர்கள்?

அதிய:- [ஏவலர் வருகிறார்] இங்கே பாரும்
என்ன இது? செம்மணியா? மரத்தின்மீது

அமை :- அங்குசென்று பார்ப்போமே......

ஒரு வீரன்:- அரசே! யாரும்
அணுகுதற்கு மிகஅரிய இடமாம் அங்கே 7
செல்வதற்குப் பேரச்சம் கொள்வார் தீங்கு
செய்யுமிந்த விலங்குகளுக் காக அல்ல
நல்விதமாய்ச் செல்லவழி இல்லை; பாறை

நடுவினிலே பெரியவிடர், புதர் நிறைந்த
கல்விடரில் நஞ்சுகக்கும் உயிரினங்கள்,
காற்றின்விசை மிக்கிருக்கும், கால் வழுக்கும்
பல்விதமாய்ச் சொல்வார்கள் பழங்காலத்தில்
பற்றகன்ற முனிவரங்கு வாழ்ந்ததாக... 8

[அப்பொழுது ஒரு முனிவர் வருகிறார்]

அதிய :- தனியாக அங்கொருவர் வருகின்றாரே
தவமுனிவர் போலுள்ளார் — வணக்கம் சுவாமி

முனி :- நனிவாழி அரசே! யுன் நாடுவாழி!

அமை :- நல்லதொரு சமயத்தில் வந்தீர் அங்கே
இனிதாகக் காணுகின்ற..........

முனி :- [முனிவர் அத்திசை நோக்கி வியந்து] ஆ! ஆ! நீங்கள்
என்ன தவஞ் செய்தீர்கள் இதனைக்காண
கனியாக உருவெடுத்த அமுதம் இந்தக்
கருநெல்லிப் பழமுண்டால் காலன் வாரான் 9

அதிய :- பன்னாட்கள் இவ்விடத்தில் பயின்றும் இந்தப்
பழத்தினை யாம் கண்டதில்லை இதனைப் பற்றிச்
சொன்னவரும் இல்லைஇதன் பெருமை தாங்கள்......

முனி :- சொல்லுகிறேன் அரசேஇக் கானகத்தில்
முன்னாளில் தவஞ்செய்த முனிவர் எங்கள்
முதலாசான் இக்கனியை எனக்குத் தந்தார்
"பொன்னாலும் மணியாலும் வலியினாலும்
புனிதமுள்ள இக்கனியைப் பெறவொண்ணாது 10
அருளாலும் அன்பாலும் ஒழுக்கத்தாலும்
அறிவாலும் சிறந்தவர்க்கே அடைதல்கூடும்
மருளாத மனமுடையோர்க் கன்றி இந்த
மருவில்லாக் கனிகாண முடியா" தென்றார்
இருளாத மனத்தோன்நீ அதனாற் கண்டாய்
இப்பழம் ஓர் நூற்றாண்டிற் கொன்று தோன்றும்
அருளேனும் மனத்தவர்கள் உண்டால் ஆயுள்
ஆயிரமாம் அவர் உடலும் அழியா தோங்கும் 11

அறிவுநிலை தளராமல் இருக்கும் நானே
அனுபவிக்கும் உண்மையிதைப் பெற்றுவாழ்க !

அதி :- நெறியுடைய பெரியோய்நும் திருவடிக்கு
நீங்காத அன்புடையேம் வணக்கம்

முனி :- [எல்லோரும் வணங்க] வாழி !

அமை :- இறையருளால் இவ்வமுதைக் கண்டோம் என்னே !
எம்பெருமான் திருவுள்ளம் அரசே தங்கள்
குறையாத வள்ளன்மை குவலயத்தில்
குடியிருக்க வேண்டுமென்ற எண்ணம் போலும் 12

அதி :- (தனியே)
எவ்விதமாய் நெருங்கியதைப் பெறலாம்? பாலம்
இட்டுசெலச் சின்னாளாம் 'கனி' அதற்குள்
செவ்வி கெட்டுப் போய்விட்டால்? திடமாய் இன்னே
சேர்ந்ததனைக் கொணர்வதுதான் திறமையாகும்
அவ்விடத்துத் தழைத்துள அம் மூங்கில் மேலே
ஏறிவளைந்தால்அணுகக் கூடும் ......நீங்கள்
இவ்விடத்தே இருங்களிதோ வருவேன்......

அமை :- [தடுக்கும் கருத்துடன்] மன்ன !

அர :- எதிர்மொழியே வேண்டாம் நம் பக்கம்வெற்றி 13

அமை :- விடர் கடந்து சென்றால் அப் புதர்கள்......?

அதி :- என்றன்
மேற்கவசம் பூண்டுசெல்வேன் ......

அமை :- மெச்சத்தக்க
சுடர்வீசும் கனிகொணர்ந்தால் துன்பமில்லை......

அதி :- தோல்வியினை ஒருபொழுதும் எண்ணான் வீரன்
இடர் நோக்கிச் செயல் தவிர்வோர் கோழையாவார்
இன்பதுன்பம் ஒருருளின் ஆரை, ஞானத்

தொடர்புடையோர் கடனுணர்வோர் வீரர் எல்லாம்
துன்பம் வரின் மகிழ்வுடனே ஏற்றுக்கொள்வார் 14

அமை:- தங்களுளத் தகைமையினை என்ன சொல்வேன் !
தமிழ் வேந்தே! யாமுமுடன் வருகின்றேம்...

அதி :- நீர்
இங்கிருந்தால் நன்மை;யொரு கனியை வேண்டி
எத்தனைப்பேர் செல்வதங்கு? வேண்டாம், நானே
திங்களிந்த வான்நடுவே சேர்வதற்குள்
சென்றதனை கொணர்வேன்...

எல்லோரும்:- எம் மன்னர் வெல்க!

[அரசன் மிக அரிதாக ஒரு மூங்கிலின்மேல் ஏறி வளைத்து விடரைத் தாண்டி நெல்லி மரத்தின் மீதேறிக் கனியைக் கொய்து கொண்டு மீண்டும் ஒரு மூங்கில் வழியாக வந்து பள்ளத்தில் விழுந்து ஒரு கொடியின் உதவியால் ஏறி வந்துசேருகிறான்.]

வீரர் :- செங்கனியைக் கொய்துவிட்டார் மன்னர்! பாரும்!
திரும்பிவிட்டார்......

அர :- [வந்துகொண்டே] வெற்றி வெற்றி

எல்லோ:- வாழ்க! மன்னர்! 15

அமை :- அன்புமிக்க எம்மரசே! வணக்கம்......காலம்

அதி :- ஆமமைச்சே அரண்மனைக்குச் செல்வோம்

அமை :- மன்னா!
மன்பதைக்குக் கிட்டாஇக் கனியை நந்தம்
மன்றத்தார்க் குரைத்தவர்கள் மகிழ்ந்து வாழ்த்தத்
தின்பதுவே நலமென்று கருது கின்றேன்

அதி :- சிறிதள்வாய் எல்லோரும் உண்ணவேண்டும்
என்பதுவே என்னுளத்தின் விருப்பம்...

அமை :- தங்கள்
இயம்பரிய கருணையினை வியக்குகின்றேன் நான் 16

அதி :- "மன்னவனே மண்ணுலகின் உயிர்"என் பார்கள்
மக்கள்நலம் பேணுவதென் கடமையன்றோ
தன்னலத்தைக் கருதியிதை யானே உண்ணல்
தகவாமோ ? தாய்நாட்டைக் காப்பதற்குச்
சொன்னவுடன் போர்புரிவோர், உறுதிச் சுற்றம்,
துணைபுரிவோர், தொழில்புரிவோர், இவர்கள் எல்லாம்
இன்னலுக்கு மட்டுந்தான் துணையா வாரோ ?
இன்பத்தும் பங்குதரல் நீதியன்றோ ? 17

அமை :- எண்ணரிய மக்களிங்கு நாளும் நாளும்
இம்மலைக்கு வருகின்றார் ஆனால் அன்னார்
கண்ணகத்தில் இதுகாறும் கனியைக் கண்டு
களித்தவரை யாம் கண்டதில்லைக் கிட்டா
விண்ணமுதம் ஆகுமிந்த மேன்மருந்தை
விழிமகிழப் பார்த்ததுவும், வெற்றியோடு
நன்னியதைப் பெற்றதுவும் தாங்களன்றோ
நடுவாகச் சிந்திக்கவேண்டும் மற்றும் 18
தங்களுக்கே புலப்படலோர் மூலம் வேண்டும்
தமிழ்காக்கும் நீர்இந்த தரையின் மேலே
செங்கதிர்போல் வாழ்வுறுதல் வேண்டும் என்றே
திருவருளின் விருப்பமென எண்ணுகின்றேன்,

அதி :- பொங்குகின்ற அன்புளத்தால் கூறுகின்றீர்
பொறுமையுடன் சிந்திக்க வேண்டும்......

அமை :- மன்னா !
அங்கையுளே நெல்லியிதை ஆய்வதற்கு......

அதி :- அமைதியுடன் நாளைநன்கு ஆய்வோம் வாரும் 19

காட்சி 3.

[புள்வேளூர்ப் பூதனுடைய பெருமனையில் தங்கியிருக்கும் ஔவையார் நாடுகளைச் சுற்றித் தமிழ்த் தொண்டு செய்ய எண்ணுகிறார்.]

ஔவையார்;- [தனியே]

மண்ணுலகில் தோன்றியவை மறையும் என்று
மதிவல்லார் கூறுகின்றார் உண்மை உண்மை!
திண்ணமுற எத்தனைப்பேர் மடிந்தார் என்றன்
சீரிளமை தேய்ந்ததுநற்சிற்ப மோடு
வண்ணமுறும் ஓவியமும் அழியும் ஆனால்
மறையாத பொருளொன்றே மண்ணில் ஆழ்ந்த
எண்ணமுடன் தீட்டிய சொல் என்றும் மக்கள்
இதயமெனும் பேரரங்கில் நடனஞ் செய்யும் 20

திசையகன்ற திரைகடல்வெண் திங்கள், தென்றல்,
செங்கதிர் நன் மணமலர்கள், செக்கர் வானம்,
வரையகன்ற ஓவியமாய் வாய்ப்ப தில்லை
வான்யாற்றின் சலசலப்பைத் தீட்டுவோர் யார்?
இசைவதிலை சிற்பியினுக் (கு)எழுமடங்காய்
எழில்பெறும்நன் நாவலரின் இசையில், இன்னும்
அசைதலிலாப் பொருளசையும், காண ஒண்ணா
அத்தனையும் அகக்கண்ணில் அழகுகாட்டும் 21

காலவுணர் வுள்ளளவும் கவிதைச் செல்வி
காலனுக்குப் படியாள்நற் கலைகள் இங்கே
சாலவுளவெனினுமவை உன்னுந்தோறும்
தண்மையொடு நல்லறிவு மகிழ்வமைதி
சீலமிவை தருதலிலை செந்தமிழ்ப்பா
செய்யுமொரு உணர்ச்சியினைச் சிந்தனைக்குக்
கோலமுற எக்கலையும் கொடுத்த தில்லை
குன்றாத இளமைபிற வற்றிற் கேது? 22

நான்முகனார் படைத்த உடல் நலியும் மாயும்
நற்புலவர் சொல்லுருவம் மாயா தோங்கி
வான்புகழால் மிளிருமன்றே? வள்ளுவன் சொல்
வையமெலாம் விளங்குவதைக் காணார் யாரே?
தேன்கமழும் கவிதைகளைச் செய்து நாட்டைச்
செம்மை செய்வதென்கடமை சிறிதுநாளில்
யான்மடிதல் உறுதியன்றோ நலிவதன்முன்
ஞாலத்திற் கென்பணியை ஆற்றவேண்டும் 23

ஓரறிவு வாய்ந்தனவும் உலகம் உய்ய
ஒல்லும் வகைக் கடமைசெயத் தவற வில்லை
ஆறறிவும் பெருவளனும் காலம் மூன்றை
அறியுணர்வும் அமைந்துவளர் மக்கள் மட்டும்
பாரினுக்குத் தான்பிறந்த பயனைச் செய்யார்
பலகாலும் ஆசையெனும் கடலில் மூழ்கி
சீரியநல் லறஞ்சிதைய நடப்பார் என்னே!
தெரிந்தவரை முடிந்தவரை, சிதையும் இந்த 24

உடலிருக்கும் சிறுபொழுதில் செய்தா லென்ன?
உயிர்விடுங்கால் எச்சமென எதைக்கொள் வார்கள்?
கடலளவு செல்வமொடு, கரைகாணுத
கல்வி, மலை யளவுவலி பெற்றி ருந்தும்
நடனமிடும் உயிர்ப்பிணம்போல் வாழ்கின்றுரே!
நாணுளும் இளமை முதல் கழிதல் கண்டும்
படருகின்ற தன்னலத்தை அழித்தா ரில்லை
பாவமெனத் தீச்செயலைத் தீய்த்தாரில்லை 25

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தல்" என்றேன்
ஐயையோ! அறிவிலியான் மக்களைப்போல்
பெரியதொரு பேதைமைகொள் உயிரே இல்லை
பேச்சினிலே அறமென்பார் பிழையே செய்வார்
அரியசெயல் ஆற்றும்வலி தமக்கிருந்தும்
அணுவளவும் அதைச்செய்யார் அவம்செய் வார்கள்
உரியசெயல் தெரிந்துமதை உடனே செய்யார்
ஊரார்மேல் பழிமொழிவார் உடல்வளர்ப்பார் 26

செழித்துவளர் பிறபயிர்க்குக் களைகள் வேருய்த்
தெரியுமதை முளைத்தவுடன் களைதல் ஆகும்
அழிக்குமொரு மானிடமாம் பயிரை அங்கே
அவ்வுருவில் தோன்றிவளர் களைதான் என்றுல்
விழிப்புடனே நல்லறிஞர் உணர வேண்டும்
வேருகத் தோன்றுத களையைக் கூர்த்த
மொழியெனும்நற் படையாலே களைதல் வேண்டும்
மூதறிஞர் கண்டநெறி அதுவே யாகும் 27

என்னாலாம் பணியையிந்த நாட்டினுக்கும்
எனைவளர்த்த நன்மொழிக்கும் இயற்றவேண்டும்
பொன்னான தமிழ்க்கவிதை இருக்கும்போது
புதுவழிகள் எனக்கெதற்குப் பொன்றுமட்டும்
என்னுணே; எளியதமிழ்ச் சொற்களாலே
இன்னிசைசேர் பாக்கள்பல தொடுப்பேன் நாடு
முன்னேறும் அறமுறைப்பேன் தமிழ்த்தாயே! நீ
முதுகிழவிக் குறுதுணையாய் வருக! வாழ்க! 28

[நேரே பூதனிடம் விடைபெறச் செல்கிறாள் அவன் எதிர்ப்பட்டு ஔவையை நோக்கி]

பூதன் : அழியாத செந்தமிழில் கவிகள் ஆக்கி
அகிலமெலாம் வழங்கும்ஔவைத் தாயே! தங்கள்
மொழிகேட்டு வாழுமொரு பேறு பெற்றேம்
முத்தமிழின் பெட்டகமே வணக்கம்......

ஔவை :- வாழ்க!
ஒழியாத அன்புடை பூதா! சின்னாள்
ஊர்ச்செலவு சென்றுவர எண்ணியுள்ளேன்

பூதன் :- விழியேலா முகம்போலென் அகம்வருந்த
வேறெங்குச் செல்லுகின்றீர்? வேண்டாம் அன்னாய் 29
இங்குமக்கு யாதுகுறை? இயம்பவேண்டும்.

ஔவை :- என்வரையிற் குறையில்லை ஆனால் என்னைத்
தங்கவைத்துக் காப்பதனால் தமிழ்நாட் டிற்குச்
சரியான குறை செய்தோன் ஆவாய்

பூத :- [வியந்து] என்ன?

ஔவை :- திங்களொடு கதிரவனைக் காற்றை நீரைத்
தீயொடுவான் பூமிதனைச் சிறைசெய் வார்யார்?
அங்கவைகள் ஒருவருக்குச் சொந்த மாமோ?
அவைபோன்றே அறிஞர்களும் பொதுச்சொத்தாவார் 30

பூத ;- இல்லைஎன்று சொன்னேன் யான்?......

ஔவை :- இன்னுங் கேள்நீ
எனைப்போல்வார் உலகமக்கள் உய்யவேண்டித்
தொல்லைபல உற்றேனும் தொண்டு செய்து
தூய்மைதனை விளைப்பதற்கே பிறந்துள் ளார்கள்
எல்லையற்ற வேலைஎனக் கிருப்ப தாலே
என்றைக்கும் ஓரிடத்தில் இருத்தல் கூடா;
செல்லுடலம் இருப்பதற்குள் சீர்த்திமிக்க
செந்தமிழை உலகமெங்கும் பரப்ப வேண்டும் 31

பூதன் :-தடுக்கவில்லை ஆனால்சின் னாட்கள் என்பால்
தங்கியிருந் தெனக்கறிவும் உணர்வும் தந்தால்
எடுத்தபிறப் பீடேறும் எனும்நி னைப்பால்

ஔவை :- என்றைக்கும் இவ்வுளமே எனக்கிருக்கும்
தொடுத்தவுடன் வாடுமலர் இங்கே பூக்கும்
சொந்தமுறும் யாவர்க்கும் மகிழ்வார். ஆனால்
உடுக்களொடு விரியுமொரு திங்கள் மட்டும்
உயர்வானில் தோன்றுவதேன்? எண்ணிப் பார்நீ! 32
அரியபொருள் எனக்கருதின் அதனைத் தாமே
அனுபவிக்க எண்ணுகின்ற பேர வாவே
சிறியசெயல் வளர்வதற்கு வித்தாம், வஞ்சம்
தீமை,பொய் களவிவைகள் அதனாற் றோன்றிப்
பெரியதொரு போர்க்களமாக் காய்த்து மிக்க
பிணக்காடாம் கனிவிளையும்; அதனால் அன்றோ
திரியுமொரு காற்றுடன்வான் மழைதீ திங்கள்
செங்கதிர்கள் ஒருவருக்கே கிடைக்கவில்லை. 33
புயவலியால் பொதுப்பொருளைத் தனதென்பாரே
பொல்லாங்கை விளைவிப்போர், பூவில் அன்னார்
நயவுரையால் திருந்துவதே இல்லை இங்கு
நடைபெறும்போர் அதனைவலி யுறுத்து மன்றே?
வயலொடுகான் கடல்மலையை இயற்கை இங்கே
வைத்ததுநாம் வருந்தாமல் வாழ்வ தற்கே
கயமையதை மறைத்துரிமைக் கனவு காணும்
காலமெனும் பெருமருந்தே அதனை மாற்றும் 34

விண்ணிடையே மின்னலென மக்கள் உள்ளம்
　வேறுபடும் இயல்புடைத்து நன்மை செய்ய
எண்ணியவப் போதேநாம் செயலில் மூழ்கி
　இயன்றவரை வெற்றியுடன் ஏக வேண்டும்
கண்ணிருக்கும் காலத்தே கதிர்வ ணக்கம்
　கருதியநற் பயனளிக்கும் மலர்ந்தபோதே
தண்ணொளிசேர் மலர்மகிழ்ந்து சூடவேண்டும்
　சருகானல் என்னபயன்? தமிழைக் கற்றோர் 35
உள்ளுணர்ச்சி தோன்றியஅப் பொழுதே மக்கள்
　உளம்பிணிக்கும் வகையில்நறுங் கவிதைமாலை
கள்ளொழுகத் தொகுத்துலகைக் கவரவேண்டும்
　கருங்கடல்போல் கருத்துமிகப் பெற்றிருந்தும்
துள்ளிவரும் ஆற்றினைப்போல் உணர்ச்சிமிக்க
　சொல்நிறைந்த கவிகளிலா இலக்கியத்தை
உள்ளத்தில் கொள்ளார்கள் உண்மை தோய்ந்த
　உணர்ச்சிகவிக் குயிராகும், கருத்தே கண்ணும் 36
இசையேநன் முகமாகும் எதுகை மோனை
　இயன்றசெலும் கால்கள்அணி உடம்பாம் மற்ற
அசையொடுசீர் தளைஇவைகள் தோளும் கையும்
　ஆகுமென்று பெரும்புலவோர் கூறு வார்கள்
திசைதோறும் செல்லஉளம் கொண்ட போதே
　சென்றுதொண்டு நான்புரிய வேண்டும் - மீண்டும்
நசையோடு வருவேன்நீ வாழ்க! வையம்
　நன்மையுறு செயல்களையே நாடி வாழ்க! 37

பூதன் :- அறிவுடைய மூதாட்டி தங்கள் எண்ணம்
　　அதுவானல் தடைசெய்யேன்...

ஔவை :- அன்பா! வாழ்க!

பூதன் :- அறமுடைய அன்னாய்! என் அகத்தில் மீண்டும்

ஔவை :- அண்மையிலே வருவேன் யான்

பூதன் :- வணக்கம்

ஔவை :- வாழ்க!

[பிரியா விடைபெற்றுச் செல்லுகிறவள் மக்களின் அன்புணர்ச்சியை வியந்து தன்னுள்ளே பேசுகிறுள்]

அறியாமை அன்புணர்ச்சி ஆசைநட்பு
ஐயமென்ற பலவகையால் மக்கள் செய்யும்
சிறியபெரும் பிழைகள்பல என்னே! நாடு
சிந்தித்துத் தெளிந்துசெயல் புரிவ தெப்போ? 38

அன்பென்ற சிறுகயிற்றுல் உள்ள மென்னும்
அளப்பரிய பெருமலையைக் கட்டி ஈர்த்தான்
இன்புதரும் சொற்களெனும் கள்ளை வார்த்து
என்னறிவைச் சிறுகுடிலில் அடைத்து விட்டான்
மன்பதையோர் புகழுமொரு பூதன்! ஆ ஆ!
மக்களுக்கு நான்புரியும் கடன் மறந்தேன்
முன்புசெய்த வினைப்பயனுல் விழித்தேன், இன்று
மூண்டெழும்நல் உணர்ச்சிஎன்றும் நிலைப்பதாக! 39

பூணளித்துச் சோறூட்டி இருக்கை தந்து
பொன்கொடுத்துப் புத்தாடை ஈந்தோர் என்னைக்
காணஇரு கைகுவித்துக் கனிவாய்ப் பேசிக்
களிப்படைந்தோர் புகழ்பாடிக் காலந் தாழ்த்தேன்
வீணுரையால் வேந்தர்களைப் பாடி வாழ்ந்தேன்
வீரமென்று போர்வெறியைத் தூண்டிவிட்டேன்
ஆணவத்தால் அரசர்புகழ் பாடி நின்றிங்
கடிமைகளை வளர்க்கவழி கோலினேன் யான் 40

வாய்ச்சோறு தருபவரை வள்ள லென்றேன்
வான்மழையைப் பாடவில்லை வயலில் நீரைப்
பாய்ச்சிபயிர் வளர்த்துலகின் பசியைப் போக்கும்
பாட்டாளி நலம்பாட மறந்தேன் மாவில்
காய்த்தவடு அத்தனையும் கனியாகும்மோ?
கவிகளிலும் அப்படியே, கனவின் செல்வம்,
பேய்த்தேர்எப் பயன்நல்கும்? பெருமை பேசிப்
பிதற்றுவதை இன்றுமுதல் மறந்தேன் அம்மா 41

காட்சி 5.

[அதியமான் சிந்தனையுடன் அமர்ந்திருக்கிறான் அமைச்சன் வரு கிறான்.]

அமை:- மழவர்குடிப் பெருமகனே வணக்கம்...

அதிய:- என்ன?

அமை:- மாண்புடைய புலவர்கட்கும் மக்களுக்கும்
முழுவிருந்து செய்வதற்கு முறையே எல்லாம்
முடிந்ததுநம் சுற்றமொடு நாளை இங்கே
அழகியதோர் கனியுண்ணும் விழாநடக்கும்
அனைவருக்கும் அழைப்பனுப்பிவிட்டேன்' ஆனால்
பழமுழுதும் தாங்கள்தான் உண்ணவேண்டும்
பலருண்டால் பயனில்லை......

அதி:- பார்ப்போம் ஆனால் 42
"விருந்துபுறத் திருக்கையிலே தனியே உண்டல்
சாவாத மருந்தெனினும் வேண்டாம்" என்று
பெரும்புலவன் கூறியுளான் நானே உண்டால்?

அமை:- பிழையில்லை எத்தனைபேர்க் காகும் ஈது?
வருந்தாமல் உண்ணுங்கள் தாங்கள் வாழ்ந்தால்
வளங்கொழிக்கும் இந்நாடு வாழும் என்போல்
திருந்தாதார் வாழ்வதனால் பயன்தான் என்ன?
தீவினையும் மனச்செருக்கும் விளைதல் இன்றி. 43

அதிய:- மாண்புடைய அமைச்சே! யான் மனத்தமைதி
மயக்கமுற்ற நிலையினிலே உள்ளேன் பின்னர்க்
காண்போம் நான் சிறிதளவு ஓய்வு பெற்றால்
கருத்தமைதி பெறக்கூடும்......

அமை:- ஆணை மன்னா.

[அமைச்சர் போகிறார் அதியன் தனியே]

அதிய:- பூண்பதுவும் புசிப்பதுவும் போர்புரிந்து
பொருந்தாதார் உயிர்போக்கி நாடழித்து

வீண்பெருமை கொள்வதன்றி என்னால் இங்கு
விளங்குகிற நன்மையொரு சிறிதும் உண்டா? 44

வள்ளலெனக் கூறுகின்றார் என்னை, என்றன்
வள்ளன்மை வாழ்வுறமென் றியற்கை இந்தக்
கொள்ளவொணாக் கனியை எனக் களித்ததாகக்
கூர்த்தமதி யமைச்சர்என்பால் கூறுகின்றார்
உள்ளபடி வள்ளன்மை என்றால் என்ன?
உயர்த்திபுகழ் பாடுகின்ற பாணருக்கும்,
கள்ளிருக்குஞ் சொற்புனைந்த கவிதை தம்மால்
கவிபாடும் புலவருக்கும், வறுமை என்று 45

கடைவாயில் நின்றிரக்கும் ஏழைகட்கும்
கடவுளது பெயர்சொல்லித் திரிபவர்க்கும்
தடையின்றித் தன்னிடத்தே உள்ளவற்றைத்
தருவதுதான் அதன்பொருளா? தனக்கு மிஞ்சும்
உடைமையினை இல்லாதார்க் குதவல் இங்கே
உயர்கொடையாய் சொலப்படுதல் உண்மை;யானே?
அடையமுடி யாதபொருள் ஆருயிர்க்கும்
அன்பான பொருள்கள்தமை யாரும் கேட்டால்
46

உளமுவந்து தருபவர்கள் உண்டா? முற்றும்
உடையவர்கள் ஒருசிறிது புகழுக்காக
வளமுடைய பொருள்களையும் வழங்கக் கூடும்.
வாய்மையினுக்காக பொருள் வழங்கி மாய்ந்தோர்,
இளகியதம் மனத்தமைதி பெறுதற்காக
ஈந்தவர்கள், எப்படியும் பயனை நோக்கி
அளியுடையார் ஆனார்கள் அன்றித் தன்னை
அருளுடனே ஈந்துயர்ந்த பாரியைப் போல் 47

வண்மையுடை யார், ஒருவர் இருவராவார்
வறியவரும் தனக்கதிக மாயி ருந்தால்
உண்மையுடன் பிறர்க்குதவல் கண்டோம் அன்றே
உலகநலம் ஒன்றேதன் எண்ணமாகத்
தண்மையுடன் உயிர்முதலாம் அரியவற்றைத்
தருபவரே மேலான வள்ள லாவார்.

திண்மையுடன் வாழவழி செய்யும் இந்தத்
தீங்கனியை யானுண்டால் என்ன நன்மை? 48

வேந்தர்களும் சிற்றரசர் தாமும் இங்கே
வீரர்களாய் வள்ளல்களாய் வாழ்ந்தார், ஆனால்
போந்தபயன் என்ன? அவர் வாணா ளெல்லாம்
போரிடுதல் ஏழைமக்கள் தம்உழைப்பைக்
காந்தமென உறிஞ்சிமன மகிழ்வுக்காகக்
கலையுடனே பகைவளர்த்துக் களித்தார் அன்றி
மாந்தருக்கு வாழும்வகைத் தம்வாழ் நாளில்
வாழ்ந்தமுறையால் செயலால் காட்டினாரோ? 49

ஆயுள்சிறி துடையவரே அவ்வாறானால்
ஆயிரம்யாண் டிதனையுண்டு வாழ்ந்தேனென்றால்
கோயிலிலே தெய்வமில்லை யான்தான் என்பேன்
கொடுஞ்செயலை இன்பமென வளரச்செய்வேன்
மேயபெரும் உலகைஎன்றன் கால்களாலே
மிதித்ததனை மகிழ்ந்துசெருக் கடைவேன் கற்ற
தூயவரைத் துரும்பாக மதிப்பேன் ஐயோ!
துன்பமின்றிப் பிறவிளையா யானே உண்டால். 50

தன்முனைப்பால் தருக்கிபல கொடுமை செய்யத்
தயங்காது மனிதஉளம்; தவமே செய்து
வன்மையினால் வரம்பெற்ற அரக்கர் எல்லாம்
வாழ்ந்ததனைக் கதைகளிலே கண்டோமன்றே?
நன்முயற்சி செய்தவரே அவ்வாறென்றால்
நலியாமல் பெற்றஇந்தக் கனியினாலே
நன்மைஎன்னால் தான்செய்ய முடியுமாமோ?
நடுநிலைமை இதனாலே தவறக்கூடும்! 51

இக்கனியை மக்களெலாம் உண்ணவேண்டின்
எவ்வழியாற் செய்வதென்று தெரியவில்லை
தக்கதொரு யுத்திசொல ஔவை (இல்லை) ஆ! ஆ!
தமிழ்த்தாயை எண்ணியயிப் பொழுதே ஞானம்
மிக்கதொரு சிந்தனை என் உளத்தினுள்ளே
விளங்கிஒளி பாய்கிறதவ் வாறே செய்வேன்

சிக்கலின்றி இவ்வமுதைச் செகத்தில் உள்ளோர்
தினந்தோறும் உண்ணுவதற் கிதுவே நன்று 52

[மணியடிக்கிருன் அமைச்சர் வருகிருர்]

அமை:- இறைபவனே வணக்கம் எனை...

அதி :- ஆம் அழைத்தேன்

இனியதமிழ் ஔவைக்குச் செய்தி சொல்ல

அமை;- முறையோடு தூதுவரை விடுத்தேன் ஆனல்
மூதாட்டி புள்வேளூர் விட்டகன்ருர்
பிறையாயிற்றென்றும்நம் நாட்டிற்குள்ளே
பெரும்பாலும் நாளைவரக்கூடும் என்றும்
அறிவித்தார்

அதிய:- அப்படியா நாளை நாமே
அரச மரியாதையுடன் அழைக்க வேண்டும் 53
ஆவனநீர் இப்பொழுதே விரைந்து செய்க!

அமை;- அவ்வாறே ஆகட்டும் அரசே

அதி :- நாளை

பூவுலகம் வியக்குமொரு அளவினுக்குப்
புகழ்மைதரும் விருந்தாக அமையவேண்டும்

அமை:- மாவிலைகள் தோரணங்கள் வீதியெங்கும்
மணங்கமழ...

அதி:- அப்படியா? மகிழ்ச்சி...

அமை:- மன்ன!

தேவருல கேய்ப்பநகர் விளங்கும் நாளை
தேவரென நீர்விளங்கும் நன்னளன்ருே? 54

[இருவரும் சிரிக்கிருர்கள் அமைச்சர் வணங்கி விடைபெறுகிருர்
அரசன் மனம் அமைதியுறுகிறது]

காட்சி 6

[மறுநாள் காலைமுதல் புலவர்களும் நாவலர்களும் பொதுமக்களும் பெருமக்களும் வந்து அரண்மனையில் நிரம்புகிருர்கள். அமைச்சர் அரசனிடம் சென்று]

அமை:- மன்னவ! நம் புலவரெலாம் கலைக்கூடத்தில்
மகிழ்ச்சியுடன் அமர்ந்துள்ளார் ஔவையார்தாம்
இன்னுமிங்கு வரவில்லை

அதி :- அவரை நானே
எதிர்கொண்டிங் கழைத்துவர எண்ணம்... வாரும்
கன்னலெனக் கவிதைதரும் அவளுக்கே இக்
கருநெல்லிக் கனியுரியதாகும்......

அமை:- (வியந்து) என்ன ?

அதிய:- தன்னலமே இல்லாத அவளுண்டால் என்
தவம்பலிக்கும் தமிழ்செழிக்கும் தரையும் உய்யும் 55

அமை:- நன்றாகச் சிந்திக்க வேண்டும் மன்னா!

அதிய:- நடுநிலைமை தவறாமல் எண்ணிப் பாரும்
என்றாவ தோர்நாள்யான் இறப்ப துண்மை
என்னாலிவ் வுலகத்திற் கென்ன நன்மை?
இன்றேநான் இறப்பதுவும் இன்னும் சின்னாள்
இவ்வுலகில் வாழ்ந்தபின்னர் இறப்பதுவ்வும்
ஒன்றேயாம் எத்தனையோ மன்னர் வாழ்ந்தார்
உருவாக உலகத்திற் கென்னசெய்தார்? 56

தண்ணளியோர் தவமுனிவர் தமிழ்ப்பா வாணர்
தாயைப்போல் தொண்டுசெயும் தகைமை யாளர்
உண்ணுவதற் குரியதென்ற முனிவர் கூற்றின்
உண்மையினை நீர்உணரவில்லை நன்றாய்
எண்ணியபின் இம்முடிவே செய்தேன் மண்ணில்
எல்லோரும் இதன்பயனை அடையவேண்டின்
நுண்ணறிவால் மக்களுக்குத் தொண்டு செய்யும்
நூலறிந்த ஔவையிதை உண்ண வேண்டும் 57

ஒருவிதையை மண்ணிலிட்டுக் கோடியாக
ஒருங்குவிளைத் ததன்பயனைத் துய்ப்ப தைப்போல்
பெறவரிய ஒருகனியால் உலகமக்கள்
பெரும்பாலோர் பயனடையச் செய்வதற்குப்

பெருவழியிங் கிதனைவிட வேறுண் டாமோ?
பீடுடைய தமிழ்க்கவியால் மக்கள் உள்ளத்(து)
இருளகற்றி இன்பமைதி அறத்தைப் பாய்ச்சி
இவ்வுலகப் பயிர்வளர்ப்பாள் ஔவைப் பாட்டி 58

நீடியதோர் ஆயுள்பெறும் ஆசை, இந்த
நிலவுலக இன்பமெலாம் துய்ப்பதற்கே.
தேடியவப் பொருள்களையே மீண்டுந் தேடித்
தின்றதையே தின்றுதினம் உறங்கி மாதர்
ஊடலிலே கூடலிலே மயங்கல் அன்றி
உண்மையிலே வேறுபயன் கண்டதுண்டோ?
காடியினுல் உண்டாகும் களிப்பைப் போல
கணப்பொழுதி மாய்ந்துபின்னர்த் துன்பந் தோன்றும் 59

அறத்தால்நல் ஒழுக்கத்தால் அன்பால் தூய
அருந்தொண்டால நருளுடையோ ருறவால் வாய்மைத்
திறத்தால் நற் காதலினுல் செம்மை மேவும்
தெய்வநெறி பேணுவதால், உள்ளத்தாலும்
புறத்தாலும் பெருமமைதி ஒன்றே வாழ்வின்
புனிதமுள்ள குறிக்கோளாம்; அதனை இங்கே
ஒறுத்தாளும் என்னாலே உண்டு செய்ய
ஒருபோதும் முடியாதே அதுதான் வாழ்வா? 60

வாழ்வடையச் செய்வதுநல் நாவல் லோர்கள்
வாயுரையே ஆகுமதை வள்ளு வன்போல்
தாழ்வகல உரைப்பதிலே ஔவையன்றித்
தமிழகத்தில் யாருமிலை அவளும் நம்போல்
ஊழ்வலியால் இறந்துவிடின் உலகத்திற்கோர்
ஒப்பில்லா இழப்பாகும் அதனால் இந்த
வாழ்வளிக்கும் கனியை யுண்டு வையம் வாழ
வண்டமிழால் உண்மைநெறிக் கனிவிளைப்பாள் 61

அமை:- பேரறிவு சான்ற எம தரசே வானும்
பெருமைகெட விரிந்தஉம துள்ளங் கண்டேன்
சீரியநும் மனப்படியே செய்க!

அதிய:- வாரும்
சென்றழைத்து வருவோம்... நாம்

அமை:- (தூரத்தில் ஔவை வருதல்கண்டு) மன்னு! அங்கே
வீருடன் விருதுகளும் ...ஆம்! ஆம் ஔவை!

[இருவரும் நெருங்கிக் கைகுவித்து]

அதிய:- விளக்கமுள்ள தமிழ்ப்பாட்டி வணக்கம்.

ஔவை:- வாழ்க!
ஏருடனே வளமோங்கி இன்பம் பொங்க
என்றென்றும் தென்றலென வாழ்க மன்னு! 62

அதிய:- செந்தமிழ்த்தாய் விரும்புமொரு சேயே! நல்ல
செய்யுள்மழை பொழிகின்ற முகிலே! எங்கள்
சிந்தனைக்கு விருந்தளிக்கும் செல்வி! உள்ளத்
திரையினிலே ஒளிருகின்ற நிலவே! சொற்கள்
பந்தமுறு கவிதைவளர் தருவே! பண்பின்
பைஞ்சுடரே வருக! தமிழ்க் கலையைத் தாங்கி
வந்தெமக்கு வாழ்வளிக்கும் ஔவைத் தாயே!
வருகஉம தடிவணங்கி வாழ்த்துகின்றேம். 63

[அரண்மனையில் வந்து எல்லோரும் அமருகிறார்கள்]

ஔவை: அன்புருவாய் வந்தபெரும் அரசே! இந்த
அகில்மெலாம் போற்றுமொரு வீரா! உற்றோர்
துன்பமெலாம் நீக்குகின்ற சுடரே! எம்மோர்
துயர்துடைக்கு நன்மருந்தே! படைமுகத்தில்
வன்புடனே வரும்பகைவர்க் கிடியே றொப்பாய்!
வாழ்த்திவரின் வானமழை ஒப்பாய்! என்றன்
எனபகமும் தண்மைகொளப் புகழ்ந்தாய் உன்றன்
எல்லையற்ற அன்புரையால் பிணித்து விட்டாய் 64
வாழியநின் செங்கோல்! உன் நாடுவாழ்க!
வரையாத வள்ளன்மை வாழ்க! வீரம்
வாழிய! செந் தமிழே போல் வளர்ந்து வாழ்க!

அதி:- வற்றாத தமிழ்க்கடலே அமரவேண்டும்

ஔவை: எழிசையோர் புகழுமொரு அதியா இன்றிங்(கு)
என்னவிழா ? எங்கேனும் போரில்....,

அதி:- இல்லை
தோழமைக்கோர் இலக்கியம்நீ மன்னு! நாடு

அதி:- துன்பமின்றி வாழ்கிறது

ஔவை: (முறுவலித்து) உன்றன், நாட்டில் 65
தீங்குசெயும் வறுமையறி யாமை வாழச்
சிறுமதியா? அஞ்சிக்கிங் கஞ்சியோடும்
நீங்கஎெலாம் இருக்கும்நிலை பார்த்தால் என்னை
நிச்சயமாய் எதிர்பார்த்து......

அமை:- ஆமாம் இன்று
தீங்கனிகள் உண்ணும்விழா தாங்கள் இன்றிச்
செவ்வையுடன் நிறைவேறு மாமோ?

அதிய:- வெற்றிப்
பாங்குடனே பழமுண்ணும் விழவால் எங்கள்
பழவினையை உண்டுவிட்டோம்.

ஔவை:- (புரியாதவளாய்) என்ன? என்ன? 66

அதி:- பஞ்சாகத் தலைநரைத்தாள் பாட்டி, யுண்ணும்
பழமெல்லாம் இங்கெடுத்து வாரும் அங்கே
எஞ்சாமல் யாவர்க்கும் கொடுங்கள்.. ...

அமை:- (வணங்கி) ஆணை
திரும்பிவந்து) எல்லோரும் உண்ணுகிறார்......

அதி:- (ஔவையைப் பார்த்து) இனிமேல்

ஔவை:- உண்போம்

[நெல்லிக் கனியை முதலில் உண்டு அதன் இனிய சுவைக்கு வியந்து]

நெஞ்சாரத் தந்தஇது கனியா? இல்லை
நெல்லியென்ற உருவினிலே அமுதம் தந்தாய்!

அஞ்சாத வாள்வீரா! அதியா இந்த
அருங்கனிபோல் ஆயுளில்யான் உண்டதில்லை! 67
நாவோடு நரம்பெல்லாம் இன்பம் பாய்ந்து
நவிலவொண்ணுப் பேருவகை பூத்தேன் தேவர்
சாவாத மருந்துமிதற் கிடா காது
தமிழை ஒத்த ஒருசுவையை இன்று கண்டேன்
கோவே!இக் கனியைப்போல் வேறென் றின்னும்
கொடு! நீயும் உண்ணுக......

அதி:- (புன்முறுவலுடன்) வேறின்னும் ஒன்று?
தாவாமல் நூறுண்டு சென்றால் அன்றே
தரமுடியும் இக்கனிபோல்......

ஔவை:- (வியந்து) என்ன?...

அமை:- ஆமாம் 68
அமுதமயமான இந்தக் கனியை உண்டால்
ஆயிரம்யாண் டாயுளென....

ஔவை:- (வியப்பும் திகைப்பும் ஒருசேர) ஆ ஆ! விந்தை
தமதுயிரை எனக்களித்த மன்னா உன்போல்
தரையினிலே யார்பிறப்பார்! தமிழுக்காக
எமனைவெலும் இதன்பெருமை தெரிந்தும் சொல்லா
தெனக்களித்தாய் நின்செயலை என்ன சொல்வேன்
தமதுயிரைக் கேட்டபின்னர் தருவார் வள்ளல்
தன்னுயிரைக் கேளாமல் தந்தோன் நீயே! 69
சொல்லால்உன் புகழ்பேச முடியா திந்த
சுடர்மதியம் உள்ளளவும் துலங்குவாய்நீ!
நில்லாத இவ்வுடம்பால் நிலைத்து நிற்கும்
நீண்டதொரு புகழுடம்பைப் பெற்றுவிட்டாய்

அதி:- கல்லாத சிறியேன் என் கடனைச் செய்தேன்
கனியுண்டு நீர் வாழ்ந்தால் உலகத் துற்ற
பொல்லாத அறியாமை நீங்கும் வாழ்வு
புனிதமுறும் தமிழ்த் தாயின் புகழ்மை ஓங்கும் 70

களங்கடந்த உனதரிய போர்த்தி றத்தைக்
கலங்கிமுது கிட்டவர், மூ வேந்தர் கண்டார்
உளங்கடந்த கொடைச்செயலே உலகம் முற்றும்
உண்மையிலே கண்டுகொண்டதின்று; நெஞ்சில்
களங்கமிலா அன்பதனுல் கடவுளொப்பாய்!
கனிந்தநற வேந்திவிருந் தேற்கும் செம்மால்
விளங்குக நின் குடிப்பெருமை! மேலோய் என்றும்
வீறுறுவாய் புலவரகக் கோயிலுள்ளே! 71
நிலவுலகந் தொழுதேத்தும் பெற்ருய்...

அதி:- (தன் புகழுக்கு நாணி) தங்கள்
நெடுமொழிக்குத் தகுதியுடை யேஞ வேனே?
உலகமெலாம் அமைதியுற உண்மை மேவ
ஒழுக்கமொடு கல்விநிலே உயரத் தூய
கலேவளர உம்மையலால் கவிஞர் யார்? இக்
கருத்திணையான் பெற்றதுவும் தங்கள் நட்பால்...

ஔவை:- வலமுறு செந்தமிழ் மகனே! வள்ளால்! உன்போல்
வையகத்தில் யாருமிலே அதிகமான் நீ! 72
நீரிருக்குஞ் செஞ்சடையோன் மதியைச் சூடி
நிறைநஞ்சைப் பிறர்வாழ உண்டோன் கொன்றைத்
தாரிருக்கும் தமிழ்க்கடவுள் தன்னு டம்பில்
தாரத்தைப் பாதிமகிழ்ந் துலகம் உய்ய
நேரிருக்கும் பெம்மான் பொன் மேனிகொண்ட
நீலமணி மிடற்றெருருவன் போல வாழி!
சீரிருக்கும் செந்தமிழிங் கிருக்குங் காறும்
செஞ்சுடர்போல் விளங்கி புகழ் செழித்து வாழ்க!

தமதுயிரைப் பேணுன் தமிழறிந்த ஔவைக்(கு)
அமுதநெல்லி ஈந்தான்! அதியன் இமயவரை
வாழ்சிவனின் வாழ்கவென வாழ்த்திஞள் மூதாட்டி
ஊழ்முறையால் நன்மை உணர்ந்து.

வளம்படு வாள்வாய் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லி தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே (புறம் 91)

"பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரும் பாற்பெண்ணை யாற்றினையும் — ஈங்கே
மறப்பித்தாய் வாழதிகா வன்கூற்றின் நாவை
அறுப்பித்தாய் ஆமலகந் தந்து"

வாழ்க அதிகமான்! வாழ்க ஔவை!
வாழ்க தமிழ்!

[என்ற பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வோரங்கக் கவிதை நாடகம் சித்தரிக்கப்பட்டது. இதனை ஆசிரியர் ஒப்பம் பெற்று நடிக்கவேண்டும்.]

உருவ வழிபாடு.

ச. பா.

1. உலக சமயங்கள் யாவும் – மக்கள்
உயர்வுக் குறுதுணையாகும்- இதில்
கலகமிடுவதற்கில்லை – உண்மை
காணாதலேயிதன் தொல்லை.

2. பெண்களும் ஆண்களும் ஒன்றே – உடல்
பெண்களின் கூறெனல் நன்றே – இங்குக்
கண்திறந் துண்மையைப் பாரீர் – என்று
காட்டும் சிவன் உருத் தேரீர் !

3. மண்ணுல கத்துள தோற்றம் – கண்டு
மகிழ்வது மக்களின் ஏற்றம் – என்ற
எண்ணமிங் கேய்ந்திடும் வண்ணம் – கொண்ட
இன்பவடிவமே கண்ணன்.

4. வீரர்க்கிலக் கணம் பொறுமை – அறம்
மேலவரைப்பணி பெருமை – நெஞ்சின்
ஈரத்துடன் விசுவாசம் – இவை
இராமன் திருவுரு பேசும்.

5. பொங்கும் அழகினில் இன்பம் – மிகப்
பூத்துத் தளிர்த்திடும் இன்பம் – (உலகு)
எங்கும் அழகெனச் சாற்றும் – எழில்
ஏற்ற முருகனின் தோற்றம்.

6. சிங்கமும் யானையும் வென்று – பெரும்
திண்மை படைத்தனம் என்று – சொல்லிப்
பொங்குறு வீரத்தின் படிவம் – சக்தி
பூவிற் சிறந்தநல் வடிவம்.

7. சத்தியம் ஓங்குநல் லருளே — அறம்
சார்வது வீட்டிற்குப் பொருளே — என
நித்தியம் ஓதுநல் லுருவே — புத்தர்
நிட்டையின் தோற்றமென்றறிவீர்.

8. அன்பிவ் வுலகினை ஆளும் — அருள்
ஆண்டவன் என்பதைக் கேளும் — என
இன்பச் சிலுவையைப் பேணும் — எழில்
இயேசு உருவினைக் காணும்.

9. கடனொடு நேர்மையும் நோன்பும் — நெறி
காட்டும் ஒழுக்கமும் மாண்பும் — நல்ல
திடமொடு றுதியும் போற்றும் — அருள்
சீர்நபி நாயகன் தோற்றம்.

10. உயிரினம் யாவுமிங் கொன்றே — பிறர்க் (கு)
ஊறு செய்யாஅறம் நன்றே — மனம்
செயிரிற்படாதநற் றின்மை — சினர்
சீரிய தோற்றத்தின் உண்மை.

11. உலக சமயங்கள் காட்டும் — பல
உண்மை வடிவினைக் கேட்டும் — இன்னும்
கலகம் விளைத்திடல் ஆமோ? — அவை
கருதும் பொருளின்றிப் போமோ?

12. உரைத்த குணங்களிலாது — மக்கள்
ஓங்கி வளர்தல் ஒல்லாது — இதன்
கருத்தை உணர்ந்திடின் வாது — செய்யும்
கட்சிகள் தோன்றலிங் கேது?

புயல்.

ஆசிரியர்:— செகப்பிரியர்

மொழிபெயர்ப்பாளர்:- புலவர். R. ஏகாம்பரநாதன்

நாடக பாத்திரங்கள்.

சயசீலன்	—	வஞ்சிநாட்டரசன்
அமணன்	—	அண்ணனைத் துரத்திவிட்டு வஞ்சியைப் பெற்ற இளவல்
இராசேந்திரன்	—	நாகையரசன்
இராசசிம்மன்	—	நாகையரசனின் இளவல்
வீரராசேந்திரன்	—	நாகையரசனின் மகன்
கோவிந்தமாறன்	—	வஞ்சிநாட்டு அமைச்சன்
ஆதிநாராயணன்	—	வஞ்சிநாட்டுப் பிரபு
பார்	—	,,
திருக்கு	—	வஞ்சிநாட்டுக் கட்டியக்காரன்
கணேசன்	—	வஞ்சியரசனின் அடைப்பைக் காரன்
மீகான்	—	வஞ்சி மன்னனின் கப்பல் தலைவன்
மாலுமி	—	வஞ்சி மன்னனின் கப்பலோட்டி
கூனி	—	நாகத்தீவில் உள்ள மந்திரக்காரி
கலியன்	—	கூனியின் மகன் அழகற்றவன் (மச்சாவதாரி)
காத்தவராயன்	—	நாகத் தீவில் உள்ள தெய்வ ஆவி
மாலினி	—	சயசீலனின் மகள்
கமலா	—	இராசேந்திரனின் மகள்
கூலா, போது	}	வாழ்த்துக்கூறியவர் .

புயல்

கதைச் சுருக்கம்.

சயசீலன் கலைவல்லான். அவன் வஞ்சியை ஆண்டான். குடிகளிடம் பேரன்புடையவன். அவனது கலைப்பற்று, அவன் ஆட்சிப் பொறுப்பும் நழுவுமாறு மிகுந்தது. அவனது கலை வன்மை ஆக்கவும் அழிக்கவும் வல்லதென்பதை நடைமுறையில் காண முயற்சித்தான். அவனுடைய இளவல் அமணன் என்பான் அண்ணனுக்கு முற்றும் மாறானவன். தீய எண்ணமுடையவன். அண்ணனைக் கொன்று அரசினைக் கைக்கொள்ள எண்ணினான். ஆனால் குடிகளின் பலம் அண்ணனுக்கு இருந்தமையால் நாகையரசன் இராசேந்திரன், அவன் இளவல் இராசசிம்மன் இருவருடைய உதவியையும் நாடினான். நாகைக்கு வஞ்சி இறை செலுத்தவும் உடன்பட்டான். மூவரும் செய்த சூழ்ச்சியின் முடிவாக சயசீலனும் அவனது சிறுமியும் ஒரு ஓட்டைக் கப்பலில் வைத்துக் கடலில் செலுத்தப்பட்டனர். அப்போது அரசனிடம் அன்புமிக்க கோவிந்தமாறன் என்ற ஒரு அமைச்சன் கலைச் சுவடிகளையும் உணவுப் பொருள் முதலிய அரசனுக்குரிய வசதிகளையும் அம்மூவருக்கும் தெரியாமல் அக் கப்பலில் வைத்து அனுப்பினான், கப்பல் நாகத்தீவை யடைந்தது.

மந்திரம் வல்ல கூனி என்பவள் வேறோரிடத்திலிருந்து தண்டனையாக அத் தீவில் குடியேற்றப்பட்டிருந்தாள். அங்கு காத்தவராயன் என்னும் தெய்வ ஆவி தன் இனத்தவருடன் இருந்தான். கூனிக்கு அக் காத்தவராயன் கீழ்ப்படியாமையின் அவனையும் அவன் இனத்தாரையும் தன் மந்திர சக்தியால் அத் தீவில் உள்ள மரங்களைப் பிளந்து அவற்றுள் சிக்கவைத்துவிட்டாள். அவர்கள் அவற்றில் நெருக்குண்டு துன்பத்தோடிருந்தனர்.

அக் கூனிக்குக் கலியன் என்ற ஒரு அழகற்ற மீன் முகப் பையன் ஒருவன் உளன். அவன் கடிய தொழில்களையெல்லாம் களைப்பின்றிச் செய்வான். ஆனால் நன்றியற்றவன். தாயை

இழந்து தனித்திருந்தான். அத்தீவையடைந்த சயசீலன் கலியனைத் தன் கையாளாகக் கொண்டான். காத்தவராயனையும் அவன் இனத்தையும் தன் கலைவன்மையால் மரப் பிளவுகளிலிருந்து வெளிப்படுத்தினான். காத்தவராயன் நன்றியறிவோடு சயசீலனுக்குத் தொண்டு செய்துவந்தான்.

நாகை அரசன் இராசேந்திரனுக்குக் கமலா என்ற ஒரு மகளும் வீராசேந்திரன் என்ற ஒரு மகனும் உளர். இரங்கூன் அரசனுக்குக் கமலா மணம் செய்து தரப்பட்டாள். இரங்கூனிலிருந்து திரும்பியபோது சயசீலன் புயலை உண்டாக்கிக் கடலைக் கொந்தளிக்கச் செய்தான். கப்பலில் உள்ளவர்கள் நடுங்கினர். சயசீலன் ஆணைப்படிக் காத்தவராயன் கப்பலை அத்தீவில் ஒதுக்கிக் கப்பலில் இருந்தவர்களுந் த அறிவின்றி அத்தீவிலேயே பல இடங்களில் அவர்களைப் பிரித்துத் தனித் தனிவைத்தான். புயலில் கப்பல் கலக்குற்றதைக் கண்ட மாலினி நடுங்கினாள். சயசீலன் மாலினியைத் தேற்றினான். அவனது ஆணையால் காத்தவராயன் வீராசேந்திரனை மாலினிமுன் சேர்த்தான். சயசீலனது கலைவன்மையால் இவர்களுக்கேற்பட்ட காதல் எல்லை மீறுகிறது. பின்னர் தானே முன்வந்து தடுத்துக் காதலுக்கு வரம்புகட்டினான்.

அமணனும், இராசசிம்மனும் இராசேந்திரனைக் கொல்லத் திட்டமிடுகின்றனர். காத்தவராயனால் அது விலக்கப்படுகிறது.

கலியன், கணேசனையும் திருக்கையும் அழைத்துச் சயசீலனைக் கொல்லத் தூண்டுகிறான். அதுவும் பழுதடைகிறது.

இராசேந்திரன், இராசசிம்மன், அமணன் கோவிந்தமாறன் முதலியோருக்கு ஒரு விருந்து நிகழ்கின்றது. விருந்தில் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் அரசர்கள் துன்புறுகின்றனர். தமது தவற்றினை உணர்கின்றனர். மேலும் சயசீலனது கலைவன்மையையும் அவனது நிலைமையையும் உன்னிய அமணனும் இராசசிம்மனும் சயசீலனிடம் மன்னிப்புக் கேட்கின்றனர். அமணன் வஞ்சி நாட்டினை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறான்.

இராசேந்திரன் தனது மகனை இழந்தமைக்கு வருந்துகிறான். சயசிலன் அவனது வருத்தத்தை நீக்கி அவனுக்கு மகிழ்வளிக்குமாறு அழைத்துச்சென்று தனது குகைக்குள் யாழ் மிழற்றிக்கொண்டிருக்கும் மாலினியையும் வீரராசேந்திரனையும் காட்டுகிறான். காத்தவராயன் விடுதலை பெறுகிறான்.

கடலில் காத்திருந்த கப்பலில் யாவரும் நாகையடைந்து மணமக்களுக்கு மணச் சடங்கு நிகழ்த்திப் பெருவிருந்தளித்து மணமக்களை வஞ்சி நாகை இரண்டிற்கும் உரியவர்களாக ஆக்குகின்றனர்.

ஆய்வுரை.

செகப்பிரியர் எழுதிய நாடக நூல்களுள் இதுவே கடைசி நூலாகும். தான் எழுதிய எல்லா நாடக நூல்களுக்கும் தனது மந்திர சக்தியே துணையென்பதையும், இதனை எழுதிய பிறகு தனது மந்திர சக்திகளை விட்டொழித்துவிட்டார் என்பதனையும் இதில் மறைமுகமாகக் காட்டுகின்றார் என்று பலர் எண்ணுகின்றனர். இது இறுதி நாடகமாக இருப்பதே இவ்வெண்ணத்திற்குக் காரணம் போலும்.

கலியன் மூலம் கயமைக்குணம் உடையவர்கள் போக்கினையும், சயசீலன் மூலம் சிறந்த மக்களது போராற்றலையும் குறிப்பிடுகிறார். மக்களே கயவரை அடிப்படுத்தி வேலை வாங்குதலையும் தெய்வ ஆவிகளைக் கட்டுப்படுத்தி ஆவன செய்துகொள்ளுதலையும் மேற்கொள்ள வல்லுநர் என்பதனையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் என்பது.

அமணன் இராசசிம்மனையும் தன்னைப்போல் செய்ய அவனது முன்னவனைக் கொல்லத் தூண்டினான். இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் படிப்போர் குறிப்பால் அறியுமாறு ஆசிரியர் இந்த நூலை அமைத்திருக்கின்றார். இங்கு தமது நாடு, பண்பு முதலிவற்றிற் கேற்பப் பெயர்களும், நிகழ்ச்சிகளும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்.

அங்கம் 1. களம் 1.

(கடல்) புயலால் கப்பல் தடுமாற்றம்

மீகான்:— யார்? யாரங்கே?

மாலுமி:— இதோ; என்ன பணி;

மீகான்:— அனைவருக்கும் அறிவி - புயல்; கப்பல் கரையில் மோதும் வேளை; தடுப்பு வேலை; விரைந்து செய்க.

மாலுமி:— (மற்ற வேலையாட்களைப் பார்த்து) மீகான் உத்தரவு கேட்டதா? கட்டவிழுங்கள், பாயை இறக்கிச் சுருட்டுங்கள். உங்கள் முழுக்கைவரிசையும் காட்டத் தக்க வாய்ப்பு இதுதான். வாழ்வில் வாய்ப்புப் பலதரம் வருவதில்லை. ம்; முனையுங்கள். அதோ மீகான் நிற்பது தெரிகிறதா? பரபரப்பைக் கவனியுங்கள். ம்; வேலை, வினை. வினையே ஆடவர்க்குயிர். ஏ வானமே! நன்றாகப் பெய்; கொட்டு; உன் முழுப்பலத்தையும் காட்டு. காற்றே, நன்றாக ஊது; வாயைத் திறந்து உன் வயிறு நோகும் வரை ஊது. எங்களுக்குப் பயம் இல்லை கடலிலே மிதக்கும் நாங்கள் உங்களுக்கா பயப்படுவோம். உங்களை எதிர்க்க முடியாதுதான், ஆனால் பயம் ஏது? பயந்து என்செய்வது?

(இராசேந்திரன், இராசசிம்மன் வீரராசேந்திரன், அமணன் பராந்தகன், ஆதிநாராயணன், கோவிந்தமாறன், வேறுசிலர்)

இராசேந்திரன் :— மாலுமி மீகான் எங்கே? யாரும் அஞ்சக்கூடாது. மீகான் எங்கே?

மாலுமி :— ஏன் இங்கு வந்தீர்கள்? கீழ்த்தட்டுக்கே செல்லுங்கள்.

ஆதிநாராயணன் :— கேள்விக்கு இப்படியா? மீகான் எங்கே?

மாலுமி :— குருடா? செவிடு கூடவா? அதோ நின்று உரக்கத்தான் எச்சரிக்கின்றாரே. நும் அறைகட்குப் போய்

விடுங்கள். வெளிப் புயலுக்கு உள்ளிருந்து உதவுவது உங்களுக்கும் அழிவைத் தேடிக்கொள்வதாகும். எம் வேலைக்குத் தடை செய்யாதீர்கள்.

கோவிந்த :— இல்லை. கொஞ்சம் பொறுமையாக ...

மாலுமி:— கடல் – காற்று இவற்றிடம் பொறுமை வேண்டலாம். இச்சூழ்நிலையில் நீர் பொறுமையைக்கொள்வது கேட்பது வியப்புத்தான்.

கோவிந்:— என்னுடன் இருப்பவர்கள் யார் என்று தெரிந்துகொண்டுதான் பேசுகிறுயா? சற்றுப்பார்.

மாலுமி — என் உயிரைப் பார்க்கிலும் பெரிதாக எண்ணிப்பார்க்க இவ்வுலகில் என்ன இருக்கமுடியும். என்னிடம் வீணில் நும் அதிகாரத்தைக் காட்டவேண்டாம். அலைகளுடன் சமாதானமாவது பேசமுடிந்தால் செய்யலாம். அதிகாரம் செலுத்தவோ சமாதானம் பேசவோ கடல் அலைகள் மக்கட் கூட்டமல்ல. உங்கள் சக்தியை எனக்குக் காட்டவேண்டும் என்ருல் இது நல்ல சமயந்தான். கொந்தளிப்பை அடக்குங்கள். முடியாவிட்டால் அறைகளில் உட்கார்ந்துகொண்டு தெய்வ நம்பிக்கை காட்டுங்கள். வேலையைத் தடுக்கவேண்டாம். யாரடா? என்ன வாய்பார்த்த தன்மை. கைவரிசை காட்ட இதுதான் சமயம். கயிற்றை இழுங்கள். பாயைச் சுருட்டுங்கள்

கோவிந்:— இந்த ஆளின் முகக்குறியில் நான் ஓர் உண்மைக் காணுகிறேன். இவன் கடலில் சாகான். தூக்கிடப்பட்டே சாவான். இவன் சாவின் முடிவே நமக்கெல்லாம் இப்போது சாவாமையைத் தரும் என்று நம்பவேண்டியுளது. ஏ, இழுக்கப்படும் கயிறே! உன்னைத்தான் வேண்டுகிறேன். நீயோ மற்ருெரு கயிருே, முடிச்சாகி அவன் கழுத்து முடிச்சை இறுக்கி இன்பம் துய்க்கப் போகிறதாக உணர்கிறேன். அதனுல் கப்பலில் உள்ள ஒருவருக்கும் கடலில் சாவில்லை. கயிறே நீ வாழ். இந்த மாலுமி தூக்குத்தண்டப் பேர்வழியாகாவிட்டால் என்பாடு ஆபத்துத்தான்.

மாலுமி:— கயிற்றைத் தளர்த்திப் பாயைத் தணியுங்கள். தனித்து நிறுத்துங்கள் காற்று மேலே போகட்டும்.

(இராசசிம்மன், அமணன், கோவிந்தமாறன் அறைகளுக்குச் செல்லாமல் மீகாமனை நோக்கி மேலே ஏறுதல்)

மாலுமி:— உப்புத் தண்ணீர் குடிக்க உங்களுக்குள்ள ஆசை கப்பலையல்லவா கவிழ்க்கும்போல் இருக்கிறது. விரைவில் அறைகளுக்குப் போய்விடுங்கள். பிறரைக் காப்பாற்ற உயிர்விடலாம். தம் சாவால் பிறர் சாக எண்ணி ஏன் திண்டாடுகிறீர்கள்?

இராசசிம்:— மாலுமி, என்ன தகாத சொல்லும் தீச்சொல்லும் காற்றுடன் கலந்துவிடுமாறு பேசுகிறாய்? மரியாதையில்லையே உன் தொண்டை அடைபடட்டும்.

மாலுமி;— அதிகாரம் மரியாதையெல்லாம் எப்போது? வாழ்வுக் காலத்தில் சமாதானக் காலத்தில்தான் — ஆபத்துக் காலத்தில் அல்ல. சட்டைப் பையில் கையை வைத்திருப்பதால் என்ன பயன்? உயிர்போய்விட்டால் பெருமை நிற்குமா? கையை வெளியில் எடுத்து எம்முன் வேலை செய்யுங்கள். யாரும் இப்போது அதிகாரப் பேச்சுப் பேசவேண்டாம்.

அமணன்:— ஏ நாய்! கப்பல் நாய் ஏன் குலைக்கின்றாய்? உனக்குத் தகப்பன் பெயர் தெரியுமா? அல்லது வளர்த்த தாயைத் தவிரப் பெற்ற தாயை — விற்ற தாயை யார் என்று தெரியுமா? நாங்கள் அரசர்கள் சாவுக்குப் பயப்படமாட்டோம். அதற்காக அஞ்சிக் குலைக்காதே.

கோவிந்:— இன்று யாருக்கும் சாவு கிடையாது. கடல் குமுறட்டுமே கப்பல் விண்ணை முட்டி முட்டி மீளட்டுமே. மாலுமி கடலில் சாகான். தூக்கில்தான் சாவான். அந்தப் பலமே நம்மையெல்லாம் கரை சேர்த்துவிடும்.

மாலுமி;— யாரடா அது? கப்பலைக் கரைப்பக்கம் செலுத்தாதே. கடல்பக்கம் விடு. இரண்டு டிகிரி உள்ளே செலுத்து.

வேலையாட்கள் :— (நனைந்துகொண்டே) போச்சு. கப்பல் சில விநாடிதான். பின்னர் எல்லாம் கடலுக்குள்தான். யாவரும் விருப்பமான தெய்வத்தை நினைத்துக்கொள்ளுங்கள்.

கோவிந்த:— அரசனும், இளவலும் பிரார்த்தனை செய்கிற பக்கமாக நாமும் போவோம்.

அமணன்:— ஐயோ; நமது உயிரை இக் குடிகாரப் பயல்கள் கையில் அல்லவா ஒப்படைத்துவிட்டோம். ஒவ்வொருவனுக்கும் வாயைப்பார் காதுவரை

கோவிந்:— கடல் துளிகள் ஒவ்வொன்றும் சப்தமிட்டு வந்தாலும் அவன் சாகான். சமுத்திரத்தால் அவனைக் கொல்ல முடியாது. அவனுக்காக கயிறு காத்திருக்கிறது. அதுவே நம்மைக் காக்கும். அவன் தூக்கில் சாகும்போது நாம் இருந்து காணுவோம். நான் கயிற்றையே வேண்டுகிறேன். யாரும் அஞ்சவேண்டாம்.

(கப்பலுக்குள் ஆரவாரம் – ஐயோ அம்மா, அப்பா, தம்பி அண்ணே, தெய்வமே, கடவுளே தண்ணி கழுத்துக்கு வந்து விட்டதே)

அமணன்:— வாருங்கள் யாம் அரசனைச் சூழ்ந்து அவருடனே மூழ்குவோம். நாம் வேறென்ன செய்யமுடியும்?

கோவிந்த:— நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஈரமான உடையுடன் அப்படியாவது எனக்கு அருவருப்பாக இருக்கிறது. இச்சமயத்தில் இக்கடல் முழுவதையும் பலருக்காவது தானம் செய்ய எண்ணம். வாங்கிக்கொள்ள ஒருவரும் இல்லையே என்பதுதான் சிறிது கவலை.

(பாலித்தீவு)

அங்கம் 1. களம் 2.

(சயசீலன் குடிசைக்கெதிரில் – சயசீலனும் மாலினியும்)

மாலினி:— அப்பா, நும் மந்திரத்தால் இப்புயல் கிளப்பப் பட்டிருந்தால் கொந்தளிப்பைச் சற்றுக் குறையச் செய்யுங்கள். விண்ணில் எவ்வளவு கருமை. கருப்புத் தாரினை மையினை விண் கொட்டுமானால் மண் எவ்வளவு கருப்பு ஆகும்? இத்தீவும் நாமும் எந்நிலையை அடைவோம். வெட்டும் மின்னலைப் பாருங்கள். கடலையும் மண்ணையும் பிளக்கின்றது இடியொலி அடேயப்பா, மண்ணையும் விண்ணையும் யார் தான் மோதவிட்டு வேடிக்கைப் பார்க்கின்றார்களோ? கடல் அலைகள் விண்ணைத் தொடுகின்றன. மின்னொளியை அணைக்க முயல்கின்றன. கப்பல் என்னபாடு படுகிறது. உள்ளிருப்போரை எண்ணினால் – ஐயோ அவர்களின் அழுகுரல் தங்கள் காதில் விழவில்லையா? நல்லோர்களும் இருப்பார்களே! அவர்களுக்குமா இத் தொல்லை. நினைக்கும் கேடு தனக்கென்பர். தாங்கள் முதல்; நான் தங்களின் எச்சமாகிய மகள். தாங்கள் அவர்களுக்கு நினைத்த கேடு – மந்திரத்தால் செய்த தொல்லை என்னையே வாட்டுகிறது. ஆனால் நான் ஒரு சக்தியுள்ள பெண்ணாயிருந்தால் இக்கப்பல் முழுகுமுன் உள்ளிருக்கும் அத்துணைபேரையும் காப்பேன். காக்க முடியாவிடின் அவர்களைப் பலியிடுவதன் மூலம் இக்கடலை எங்கேனும் ஒரு மூலையில் ஒடுக்கிவைப்பேன்; அல்லது மண்மேடாகவே செய்துவிடுவேன். ஐயோ! அவர்களின் ஆவி என்ன பாடு படும்?

சயசீலன் :— மாலினி, உன் எண்ணத்தைக் குழுற விடாதே. நீ காணாதன நிகழாதன என்று எண்ணமாட்டாயல்லவா? கண்டவையனைத்தும் நிகழ்ந்துவிட்டனவாகவே கருதிவிடாதே. அன்றியும் ஒரு நிகழ்ச்சியைக்கொண்டு பலனை அளக்கமுடியாது. நன்னிகழ்ச்சியில் கெட்ட பலனும் தீநிகழ்ச்சியில் நல்ல பலனும் உண்டாகலாம். நன்னிகழ்ச்சி, தீநிகழ்ச்சி

யென்பது உன்னளவில் உறுதிப்படுவதொன்றன்று. இந் நிகழ்ச்சியால் தீமை ஒன்றும் வராது.

மாலினி:— ஐயோ! இனி என் எதிர்காலத்தில் இந்த மாதிரி நாள் மற்றொருதடவை உண்டாகாதிருக்கவேண்டும்

சயசீலன்:— மாலினி இவ்வளவும் உன் நன்மைக்காகவே நிகழ்ந்தன. நீ யாரென்பது உன்னால் அறிந்துகொள்ள முடியாத நிலையில் என்னை எவ்வாறு நீ அறிவாய்? நீ எனது ஒரேமகள். நான் உனது தந்தை. நான் எங்கிருந்து வந்தேன்? எப்போது வந்தேன்? ஏன் வந்தேன்? எப்படி வந்தேன்? இக்குடிலைத் தவிர வேறு எனக்கு இவ்வுலகில் ஏதேனும் உண்டா? இவை யெல்லாம் நீ எப்படி அறிவாய்? அறியும் பக்குவத்திற்கு முன் அறிவிப்பதும் தவறாகவன்றோ ஆகும். என்னிடமிருந்து நீ எவ்வளவு தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றன? அவைகளைக் கூறலாமா?

மாலினி:— அப்பா. வேண்டாம். இப்போது நான் தெரிந் திருக்குமளவிலேயே அமைதியடைகிறேன். அதிகம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில் நான் ஆசைகொள்ளவில்லை.

சயசீலன்:— மாலினி. உன்னிடத்திலிருந்து நான் இதைத் தெரிந்துகொண்டேன். என்றாலும் உன் வரலாற்றைப் பற்றி மட்டும் சிறிது சொல்வேன். கவனமாய்க் கேள். அருகில் வா. சரி கண்களைத் துடைத்துக்கொள். கப்பல்; நீ கண்ட கப்பல் உண்மையில் அழியவில்லை. அது உனது அளவற்ற கருணையை வெளிப்படுத்தியது. ஒருவருக்கும் சிறிதளவுகூடக் கெடுதல் இல்லை. துன்பமும் கவலையும் அவரவர் மனத்தைப் பொறுத் தவை. உண்மையில் ஒருவரும் அழியவில்லை. நீ கண்டது ஒன்று. நிகழ்ந்ததோ மற்றொன்று. அவற்றைக் கூறலாமா?

மாலினி:— அப்பா, என் வரலாற்றைக் கூறத் தொடங்கி னீர்கள். அதைக் கேட்குமுன் என் மனம் வேறொன்றைக் கேட்கவிரும்பவில்லையே. முதலில் அதைக் கூறுங்கள்.

சயசீலன்:— நாம் இங்கு வருவதற்குமுன் நீ கண்டது கேட்டது ஏதாவது உனக்கு நினைவுக்கு வருகின்றதா? (வர

முடியாது, அப்போது உனக்கு மூன்று வயதுதான் முடிந்திருந்தது)

மாலினி:— நினைவில் இருக்கிறது.

சயசீலன் — என்ன இடமா? உருவமா? ஆணா? பெண்ணா?

மாலினி:— தெரிகிறது ஆனால் தெளிவில்லை. என் நினைவுக்கு வருகிற செய்தி உண்மையில் நிகழ்ந்ததா அல்லது என் கனவின் தோற்றமா என்பதாக ஐயத்தைத் தருகிறது. நாலைந்து பெண்கள் என்னை மார்பிலும் தோளிலும் மாற்றி மாற்றி வைத்து விளையாடினார்கள்.

சயசீலன்:— சரி. இதைத் தவிர வேறு ஏதாவது? அதைத் தொடர்ந்த நினைப்புக்கள் வருமாயின் புதைபொருள் ஒவ்வொன்றாக அகப்படுவதுபோல நீ இங்கு வந்தவிதம் வளர்ந்த யாவும் அறியக்கூடும் என்று நான் நம்புகிறேன்.

மாலினி:— வேறு எனக்கு ஒன்றும் நினைவில்லை.

சயசீலன்:— மாலினி, பதினான்கு ஆண்டுகட்குமுன் உனது தந்தையார் வஞ்சி அரசனாக இருந்தவர்.

மாலினி:— அப்படியானால் தாங்கள், தாங்கள் யார்? எனது தந்தையல்லவா?

சயசீலன்:— (புன்னகையுடன்) உனது தாய் கற்புடைய அரசி. அவள் உனது தந்தை நான் என்று அறிவித்தாள். எனக்கு உன்னைத் தவிர வேறு குழந்தையில்லை. நான் வஞ்சி அரசன் நீதான் இளவரசி.

மாலினி:— ஆ, தெய்வமே! யாம் எந்தப் பாவியின் சூழ்ச்சியால் இங்கு வந்தோம். இக் கடலில் அழியாது தப்பியிருப்பதும் உன் செயலால் தானோ? இவ்வாழ்வு எமக்கு நன்மையா? தீமையா? ஒன்றும் விளங்கவில்லையே.

சயசீலன்:— மாலினி, இரண்டும் கலந்தேதான் உளது.

மாலினி:— அப்பா, என்னை வளர்க்கவும், காக்கவும் தாங்கள் எவ்வளவு தொல்லைப் பட்டிருப்பீர்கள். அதை நினைக்கும்போது புதுவகையான வருத்தம் எனக்கு உண்டாகிறது. அவ்வருத்தம் நீங்கத் தங்கள் பொறுமையே எனக்கு அரிய மருந்தாகும்.

சயசீலன்:— மாலினி, நீதான் எனக்கு மருந்து. கடற் பக்கம் பார்க்கவேண்டாம். நான் கூறுவதைக் கவனமாகக் கேள், உன் சித்தப்பன் என் அரிய தம்பி. ஒரே தம்பி. எனது அன்புக்கு உனக்கு அடுத்தபடியில் உள்ளவன். அவனிடம் எனது அரசப் பொறுப்பு முழுவதும் ஒப்பித்திருந்தேன். அக்காலத்தில் வஞ்சிதான் மற்ற எல்லா நாட்டினும் முதன்மை பெற்றிருந்தது. அரசன் சயசீலனும் ஒப்புயர்வற்றவன். அரச நீதிக்கும் அறத்துக்கு மட்டுமல்ல, கலை வளர்ப்பிலும் நிகரற்றவன். என் மனம் கலையறிவில் அதிகம் திளைக்க முனைந்தமையால் அரசியலும் ஆட்சியும் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நூல் நய நுகர்ச்சிக்கு அரசப் பதவியின் நுகர்ச்சி எம்மாத்திரம்? நான் அரசாங்கத்தை மறந்தேன். அதுவும் என்னை மறந்தது. இவ்வமயத்தில் நீ கூறியபடி பாவியாகிய உன் சித்தப்பன் ...நன்றாகக் கேள். கடலில் பார்வை வேண்டாம்.

மாலினி:— இல்லையப்பா நீங்கள் சொல்வதைத்தான் நான் உடனுருகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

சயசீலன்:— செங்கோலாட்சியைக் கைவிட்டான் உன் சித்தப்பன், ஆனால் அரசியல் நுணுக்கங்களை அறிந்தான். பதவியில் சிலருக்கு உயர்வு. துடுமெனச் சிலர்க்கு மாற்றம். சிலரை அடக்கினான். சிலர் பயத்தில், சிலர் சலுகையில் இம்முறையில் எனக்குரியவர்களை - மிக நல்லவர்களாயிருந்தவர்களைக் கூட மாற்றித் தன்னுடையவர்களாகச் செய்து கொண்டான். அவன் மனம்போல அவர்களை ஆட்டிவைக்கத் தொடங்கினான். யாவரையும் எனக்குப் பகைவர்களாக்கினான். மரத்தில் படர்ந்த புல்லுருவி மரத்தையே உறிஞ்சிப் பாழ்படுத்துவதுபோல என்னைத் தொலைத்தான். (உன் கவனம் இங்கில்லையா?)

மாலினி:— நன்ருகக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

சயசீலன்:— கவனி, எனக்கும் உலகுக்கும் இருந்த பற்றினை அறுத்துவிட்டான் என் தம்பி. நானும் கலைஞானத்தில் அளவற்ற பற்றுவைத்து இரண்டறக் கலந்து இன்புற்றிருந்தேன் நான் எங்கும் செல்வதில்லை. உயிரற்ற நூல்கள் என்னுடன் உயிருள்ளனவாக அளவளாவியிருந்தன. ஆனல் நான் பிறருக்கு உயிரற்ற ஒரு கலைப் பிண்டமாகவே எண்ணப்பட்டேன். நான் எனது தம்பியை எவ்வளவுக்கு நம்பினேனே அதைவிட அதிகமாகவே என்னை அவன் மோசம் செய்யத் துணிந்துவிட்டான். அவனிடம் தினையளவாக மறைந்துகிடந்த தீமை பனையளவாக வளர்ந்துவிட்டது. நல்ல தந்தையர்கள் தம் தீய குழந்தைகளிடமும் அன்பும் பரிவும் காட்டுவதில்லையா? முன்னவனுகிய நான் என் பின்னவனிடம் தந்தையார் போலவே நடந்தேன் பொய்யினை நினைத்துப் பேசித் திளைத்த ஒருவர் பின்னர் பொய்யிலே மிகுந்த நம்பிக்கை வைப்பது போல எனது பிரதிநிதியாக ஆண்டுவந்த பழக்கத்தால் ஓர்உறைப்பு ஏற்பட்டு நாளடைவில் தானே அரசனென்று எண்ணிவிட்டான். அரண்மனை முதலிய இடங்களுக்குச் சொந்தமாக்கினுன். ஏவலர் அனைவரும் தனக்கே சொந்தமென உறுதி கொண்டுவிட்டான். அமைச்சர் சேனைத் தலைவர் யாவரும் அவனுடையவர் ஆயினர். வஞ்சி ஆட்சியில் எனக்குச் சிறிதும் உரிமை இல்லையாயிற்று. (நான் சொல்வது கேட்கின்றதா, மாலினி)

மாலினி:— அப்பா, தங்களுடைய நிகழ்ச்சி செவிடர்களையும் கேட்பிக்குமே கொட்டும் இமையையும் கண் கொட்டாது நிறுத்தச் செய்யுமே. மேலும் கூறுங்கள்.

சயசீலன்:— எனது தம்பி உள்ளொன்று புறமொன்ருய் நடப்பதை முழுதும் விட்டான். உள்ளும் புறமும் ஒத்தவனுய் மறைமுகமாகச் செய்துவந்த சூழ்ச்சி அலுவல்களையெல்லாம் வெளிப்படையாகவே செய்யத் தொடங்கினுன். வஞ்சியை நாகைக்குப் பணியவைத்தான். நாகைக்குக் கப்பம் கட்டிவரவும் உடன்பாடு செய்துகொண்டான். வஞ்சித் தாய் அதுகாறும்

யாரையும் வணங்கியறியாத வஞ்சித் தாயை வணங்கவைத்தான், அடிமையாக்கினான். கற்பைக் கெடுத்தான் அப்போது அவன் பிறப்பைப் பற்றிக்கூட எண்ணினேன்.

மாலினி:— அப்பா, உங்கள் தாய் என் பாட்டியைப் பற்றிக் குறைகூறுதல் தகுதியா? அதை நான் கேட்பதுதான் முறையா? நல்ல நிலத்தில் நச்சுப் பூண்டு உண்டாவதில்லையா? அதற்கு நிலம் என்ன செய்யும்? தாயுலகைப் பழிக்கவேண்டாம். மேலே கூறுங்கள்.

சயசீலன்:— நாகையரசனைப் பேரரசனாக்கினான். சிற்றரசனின் குடியாகக்கூட நம்மை அங்கு வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரு நள்ளிரவில் நம்மை வஞ்சியை விட்டு அகற்றினான்.

மாலினி;— பாபிகளே, உங்கள் செயல் என் மனத்தில் தோய்ந்துவிட்டதே. என் கண்ணூற்றில் வெள்ளம் பெருகிக் கொண்டிருக்கும்போல் இருக்கின்றதே. இப்போது குழந்தையாக இருந்தால்கூட நல்லதாகுமே அல்லது அப்போதே பெரியவளாயிருந்திருந்தாலும் அழுது தொலைத்திருப்பேனே?

சயசீலன்:— மாலினி, கேள்! இப்போது நீ கேட்ட கதையின் அவசியத்தைவிட இனி நடக்கவிருக்கும் செயல்தான் மிகவும் இன்றியமையாதது.

மாலினி:— அப்பா, அவர்கள் ஏன் அப்போது என்னை அல்லது நம்மைக் கொல்லவில்லை.

சயசீலன்:— நல்ல கேள்வி, இங்குதான் இரகசியம் இருக்கிறது. வஞ்சி மக்களில் பலர் நமது அழிவை விரும்பாதவராக இருந்தனர். எல்லாம் வெளிப்படையாகச் செய்துவந்த நமது எதிரிகள் இச் செயலைச் செய்யத் துணியவில்லை. நமது விருப்பத்தில் நம்மைக் கப்பலேற்றிக் கடலில் அனுப்புவதாக பாசாங்கு செய்தனர். தாயற்ற உன்னை ஒரு அடியற்ற உளுத்துப் போன படகில் வைத்து என்னுடன் கடலில் தள்ளிவிட்டனர். காற்றுக் குமுறியது. கடல் கொந்தளித்தது. நிலவு அமுதம் பொழிந்தது. நீ அழுதாய்; நான் உளம் கரைந்தேன்.

. . . .

நம் எதிர் விளைவால் காற்றும் நீரும் பெருந் துன்பம் அடைந்தன; அமைதியுற்றன.

மாலினி:— ஐயோ, உங்கள் துன்பத்தை மிகுதிப்படுத்தவா நான் கூட இருந்தேன். என் தாயுடன் நானும் பிரிந்திருக்கக் கூடாதா?

சயசீலன்:— மாலினி, அதனை மறந்துவிடு. நீயொருத்தி இல்லாமல் இருந்தால் இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் வழியேது? நானும் அப்போதே பிரிந்திருப்பேனே. நீயே எனது உயிர்ப்பு நீதான் என்னை வாழவைத்தாய். கடலில் உள்ள உப்புப் போதும். உன் கண்ணீரால் உப்பை அதிகப்படுத்தவேண்டாம். அப்போது உனது புன்முறுவலும், விளையாட்டுமே எனது கவலையைப் போக்கி ஊக்கத்தையும் உறுதியையும் தந்தன. இறுதியில் உனக்கு நன்மையே விளையும் என்ற நம்பிக்கையும் எனக்குப் பிறந்தது.

மாலினி:— நாம் எப்படிக் கடலிலிருந்து இத்தீவை யடைந்தோம்?

சயசீலன்:— கடவுளருளால் கோவிந்தமாறன் என்ற உற்ற நண்பனே நம் பகைவனால் நம்மைக் கடலில் தள்ளும் பணிக்கு ஆளாக்கப்பட்டிருந்தான். அந்நண்பனே அப் படகில் நம் பயணத்துக்குரிய உணவு, உடை, பொருள் முதலிய பொருள் முதலிய பொருள்களுடன் என் உயிரினும், உன்னிலும் சிறந்த சில நூல்களையும் வைத்து அனுப்பினான்.

மாலினி:— அப்பா, அவரை நான் பார்க்க முடியுமா?

சயசீலன்:— இப்போது நாம் காரியம் பார்க்கவேண்டும். அதற்குமுன் கொஞ்சம் கேள். நாம் கரையடைந்த பின்னர் நான்தான் உனக்குத் தாய்மார், ஆசிரியன், தோழிகள், ஆதலால் மற்ற சீனவரசிகளைவிட நீ மிகவும் பாக்கியசாலி. நானே மிகக் கவனமுள்ள வளர்ப்புத் தாயாகவும், மிக மிக அக்கரையுள்ள நல்லாசிரியனாகவும், சிறிதும் வீண்பொழுது போக்க வழியில்லாத தோழியாகவும் உன்னை வளப்படுத்தியிருக்கிறேன்.

மாலினி:— அப்பா, உங்கள் தந்தையார் உங்களை எப்படி வளர்த்தார் என்று நீங்கள் அறிந்திருப்பீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் தாங்கள் எனக்காகப் பட்டபாடு உலகில் எந்தப் பெற்றோருக்கும் ஏற்பட்டிருக்காது. இந்த உண்மையை அறிந்தால் குழந்தை உலகம் தங்களைக் கொண்டாடும். பெற்றோருலகம் உங்களைச் சுற்றிவந்து வணங்கும் என் தெய்வமே புயலைத் தாங்கள் கிளப்பியதற்குக் காரணம் நான் அறியவேண்டாமா?

சயசீலன்:— எல்லாம் அறிந்துகொள்ளலாம். விதியின் போக்குமட்டும் விளக்கபாக அறிவார் யார்? இதுகாறும் எனக்கு மாறாக இருந்த கோள்கள் இப்போதுதான் எனக்கு நேராக அமைந்திருக்கின்றன. எனக்குரிய நல்ல விண்மீனும் உச்சத்தில் அமைந்திருக்கிறான். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். இந்த நல்ல சூழ்நிலையில் ஆகவேண்டியவற்றை ஆக்கிக் கொள்ளாவிட்டால் எனது வாழ்வு குன்றிவிடும். புயலின் தோற்றம் எனது ஆக்கநிலையின் தொடக்கமாகும். இத்தீவுக்குள் எனது நண்பரும், பகைவரும் வந்து சேர்ந்திருக்கின்றனர். (மந்திரச் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு — மாலினி முகத்துக்கு நேரில் கையை நீட்டிக்கொண்டு மேலும் கூறுதல்) இனிக் கேள்விகள் வேண்டாம். உனக்கு இப்போது தூக்கம் வரும். தூங்கு. தூங்கித்தான் ஆகவேண்டும். உன்னால் தூங்காமல் விழித்திருக்க முடியாது. (ஆகாயத்தைப் பார்த்து) தூங்கிவிட்டாள் காத்தவராயா! வா!

காத்தவராயன்:— ஐயா, கட்டளை முடிந்தது. மேலும் ஏதேனும் பணிகள் உண்டோ?

சயசீலன்:— சரியாக நிறைவேற்றினாயா?

காத்தவ:— ஐயா, காற்றில் பரவி, நீரில் கலந்து, தீயில் சூழ்ந்து, முகிலில் இணைந்து, வானில் உலாவி ஒவ்வொன்றையும் என் விருப்பம்போல் வேலை வாங்குவேன். எனது சகாக்களும் எனது உளம்போல் வேலை செய்பவர் ஆதலால் தங்கள் கட்டளையைச் சரியாக நிறைவேற்றினேன்.

சயசிலன்:— எங்கே சுருக்கமாகச் சிறிது கூறு.

காத்தவ:— புயலை உண்டாக்கினேன் அரசன் இருந்த கப்பலில் நுழைந்து முன்னும், பின்னும் இடையிலுமாக அதனைத் தத்தளிக்கச் செய்தேன். பாய், சுக்கான், கொடிமரம், மேல்தளம் ஒவ்வொன்றும் பிய்த்துக்கொண்டு போவதுபோல வும் தீப்பற்றி எரிவதுபோலவும் விளையாண்டேன் யாவரும் நடுங்கினர். இறப்பினை அடைந்துவிட்டதாகவே கருதினர் பலர். சிலர் தீயிலிருந்து தப்ப எண்ணிக் கடலில் குதித்தனர். சிலர் அறிவு பயங்கி அங்குமிங்கும் ஓடித் தண்ணீரில் விழுந்தனர். ஆனல் முதலில் தீக்குப் பயந்து நீரில் குதித்தவர் வீராசேந் திரன்தான். அவர் தீக்குத் தப்புங்கள் என்று அலறிக்கொண்டே குதித்தார். மற்ற இரண்டு கப்பல்களையும் நன்கு குலுக்கிவிட் டேன்.

சயசிலன்:— உயிர்ச் சேதம் நிகழ்ந்திருக்காதே?

காத்தவ:— கரையோரம்தான்; அவர்களுக்குத் தெரிந் திருக்காது. ஒருவர்கூடச் சாகவில்லை. ஒருவருக்கும் தீங்கும் இல்லை. ஒரு பொத்தான் கூட ஒருவரும் இழக்கவில்லை. ஆழ மில்லா இடத்தில் அவர்களின் உடைகளே அவர்களுக்கு மிதவைகளாக இருந்தன. உப்பு நீரால் அவர்களின் உடையழுக் கும் நீங்கி அவர்களும் சுகமாக இருக்கின்றனர். தாங்கள் கூறிய படி வீராசேந்திரனைத் தவிர ஏனையோர் தனித்தனி இடங்க ளில் மும்மூன்றுபேராகப் பிரிந்திருக்கும்படி செய்துள்ளேன். வீராசேந்திரன் மட்டும் தனியாக அண்மையில்தான் உள்ளார். தனியாக இருப்பதால் அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு துன்புறுகிருர். ஆனல் மீகான் மாலுமிகள் யாவரும் களைப்பால் அவரவர் இடத்திலேயே தூங்கி விழித்துத் தத்தம் கப்பல்களை நாகை நோக்கிச் செலுத்திவிட்டனர். ஆனல் அவர்கள் அரசன் கப்பல் முன்னலேயே நாகை சென்றிருக்கும் என்று நம்பியே சென்றுவிட்டனர். நானே அரசனது கப்பலை ஒரு நல்ல முடுக்கில் அடைத்து வைத்திருக்கிறேன். கப்பல் சேதமின்றி இருக்கிறது

சயசிலன்:— கூறியவற்றைச் சரியாகத்தான் செய்து

முடித்திருக்கிறாய். ஆனால் இன்னும் செய்யவேண்டியன பல உண்டு. மணியென்ன?

காத்தவ:— நடுப்பகல்தான். இருந்தாலும் இனி இறங்கு பொழுதுதான்.

சயசீலன்:— மணி இரண்டிருக்கலாம். ஆறு மணிக்குள் இன்னும் அருமையான காரியங்கள் பல முடித்தாகவேண்டியுள்ளன. என்ன காத்தவா! தெரிகிறதா?

காத்தவ:— இன்னும் அதிகமான வேலையா? மிகவும் கஷ்டமானதாகக்கூட இருக்குமோ? ஐயா, எனக்கு எப்போது விடுதலை? (தனக்குள் முணுங்குகின்)

சயசீலன்:— வேலையில் சலிப்பா? செய்யவேண்டிய அலுவல்கள் இன்னும் இருக்கும்போது அதற்குள் விடுதலையா? வேலையில் ஊக்கமும் உவப்பும் தோன்றி உனது திறமையை நீ உணர்வதற்கு முன் விடுதலை கேட்கலாமா?

காத்தவ:— மன்னியுங்கள். தங்களை நம்பித்தான் நான் வேலைகளைச் செய்து வருகிறேன். தங்கள் மனதுக்குத் தெரியும் என் வேலைகளில் பிசகில்லை என்பது. பொய் சொன்னதில்லை, தங்களுக்கு இரண்டகம் நினைக்கவில்லை, முணுமுணுத்ததில்லை. வேலையில் ஒரு ஆண்டுக்கு முன்னரே விடுதலை தருவதாக வாக்குத் தந்தீர்களல்லவா? அதை நினைவூட்டுகிறேன்.

சயசீலன்:— நான் குறித்த காலம் ஆய்விட்டதா? அதனை நீ மெய்ப்பிக்க முடியுமா? அதற்குள்ளவா விடுதலை? நான் வருவதற்கு முன் நீ எப்படியிருந்தாய் என்பது மறந்துவிட்டாயா? இத் தீவில் குளிர் காற்று - சுற்றி உப்புநீர் இவையெல்லாம் உனக்கு எப்படிப் பிடிக்கும் அட்டையைப் பிடித்து மெத்தையில் வைத்தால் சுகம்பற்றிச் சொல்லவேண்டுமா? இப்போது நீ என்ன பனிக்கட்டியை உடைக்கிறாயா? பூமியைக் குடைகிறாயா? என் வேலைக்குச் சோம்புகிறாய்?

காத்த:— எனக்கு அவையெல்லாம் பெரிதல்ல. எளிதாகச் செய்து முடிப்பேன். விடுதலையில்லாக் குறையை என்னால் சுமக்க முடியவில்லை. சுமை இறங்கி விடுதலை பெற்றால் எதையும் இலகுவாகவும், இன்பமாகவும் செய்வேன்.

சயசீலன்:— காத்தவா, இந்த ஊரில் இருந்தாளே கூனி, வயதாலும், பொறாமையாலும் வளைக்கப்பட்ட உடம்புடன் அவளை எண்ணிப்பார். அவள் எங்கே பிறந்தவள்? உன்னை என்ன செய்திருந்தாள் என்பதைச் சொல்லு.

காத்தவ:— அவள் நேபாளத்தில் பிறந்தவள்.

சயசீலன்:— உனக்கு நினைவிருக்கிறது. அவள் உன்னை என்ன செய்தாள் என்பதற்குமுன் இங்கு எப்படி வந்தாள் என்பதை நினைவுகொள். இவள் அங்கு ஒரு சூனியக்காரியாய்த் தீச்செயல்களையே செய்துவந்தாள். மக்கள் இனம் வாழும் இடத்தில் அவள் இருத்தல் தகாதென்றே மக்களற்ற இத்தீவில் அவள் விடப்பட்டாள். இது உண்மைதானே?

காத்தவ:— ஆமாம் முழுதும் உண்மைதான்.

சயசீலன்:— அந்தப் பாபி; பூனைக்கண்ணி இங்கு வந்தபோது கர்ப்பிணி. அவள் உன்னை அடிமைப்படுத்தி வேலை வாங்க முயன்றாள். முடியவில்லை. இருவரது இயல்பும் எந்த வகையிலும் பொருந்தவில்லை. பொருந்தாக இருவரும் ஒன்றி வாழ முடியவில்லை. மக்கள் விரும்பாத கீழ்த்தரச் செயல் கொண்ட அவளுடன்; பருவுடலும் நுண்ணுடலும் பெற்று மக்களினும் மேற்பட்ட சக்தி பெற்றிருப்பினும் எண்ணுதல், செய்தல் முதலிய மனத்திறனும், வினைத்திறனும் பிற பண்பாடும் அற்ற நீ கூடியிருக்க முடியவில்லை. உனது போக்கு அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளது கட்டளையை நீ நிறைவேற்றவில்லை. அவளுக்குக் கோபம் வந்தது. மக்கள் கோபம் அவளை இங்கு அனுப்பியதுபோல அவளது கோபம் உன்னை ஒரு வயிரம் பாய்ந்த மரத்தினுள் மூடிவைத்தது. மரப் பிளவில் அகப்பட்டுக்கொண்டு வலிபொறாது பன்னிரண்டு ஆண்டுகள்

நீ துன்புற்றாய். அப்போதுதான் நான் இங்கு வந்தேன். அதற்கு முன் இத்தீவில் அச்சூனியக்காரி, அவள் போட்ட குட்டி, நீ மூவரும்தான் இருந்தீர்கள் சில பொழுதுகளில் அவள் இறந்துவிட்டாள். நினைவிருக்கிறதா?

காத்தவ:— நன்றாக நினைவிருக்கிறது எனக்கு. அந்தக் கலியன்கூட மறந்திருப்பான் அவன் தாயை. எனக்கு நினைவிருக்கிறது.

சயசீலன்:— அந்தக் கூனியின் மந்திரமெல்லாம் தீமை செய்தலைத் தவிர நன்மை செய்யும் ஆற்றல் இல்லாதது. அவளே உன்னை மரத்திலிருந்து மீட்க நினைத்திருந்தாலும் முடியாது. அவள் கோனாயை உறுமும்படியும், கரடியை ஊளையிடும்படியும் செய்துவிடுவாள். ஆனால் அதை முன்போல் மாற்றவோ பிறருக்கு நல்லன செய்யவோ அவள் மந்திர சக்தி உபயோகப்படுவதில்லை. ஆதலால் அவள் எப்படி உன்னை மீட்கமுடியும்? நான் தான் மரத்திலிருந்து விடுவித்தேன். நான் சொல்வது சரி தானே?

காத்தவ:— முற்றிலும் சரிதான். நான் ஒருநாளும் மறவேன். எனது நன்றி.

சயசீலன்:— ஏதாவது பிணக்கு செய்தால் பூவரசல்ல அசல் புளிய மரம்தான். பிறகு எத்தனை மகாமகங்களோ? முணுமுணுப்புவேண்டாம். தெரிகிறதா?

காத்தவ;— இல்லை ஐயா, தாங்கள் இடும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிப்பேன்.

சயசீலன்:— இன்னும் இரண்டு நாட்கள்தான். பிறகு உனது பெயருக்கேற்ப உன் விருப்பம்போல் விடுதலைபெற்றுத் திரியலாம்..

காத்தவ:— ஐயா, எனது தலைவரே இப்போது என்ன செய்யவேண்டும்? தங்கள் உத்தரவு எனக்குத் தெரியவில்லையே? கூறுங்கள் உடனே செய்வேன்.

சயசீலன்:— வேறு ஒரு உருவம் பெண்ணுருவம்கொள். கலைமகளாய் - மலர்மகளாய் வரவேண்டாம். அலைமகளாய் வா. பிறர் கண்ணில் படாதே. எனக்காக உன்னை அவ்வாறு அழைத்ததாகவும் எண்ணாதே. போ.

(காத்தவராயன் போகிறான்.)

சயசீலன்;— (மாலினியைப் பார்த்து) மாலினி விழி. தூக்கம் விட்டுவிட்டதா? நன்றாய் விழித்துக்கொள். கலியனைப் போய்ப் பார்ப்போம். மூதேவிப் பயல். நாம் சொன்னால்தான் ஏதாவது செய்வான்

மாலினி:— அப்பா, தாங்கள் சொன்னகதை எனக்குத் தூக்கத்தை வளர்த்து விட்டது. விழித்துக்கொண்டேன். அக் கலியனைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை.

சயசீலன்:— மாலினி, அவனைப் பிடிக்காவிட்டாலும், அவன் செய்யவேண்டிய வேலை நமக்கு அதிகம் உண்டு. அவன் இல்லாமல் முடியாது. அவனால் நமக்கு இலாபமே தவிர இழப்பு ஒன்றுமில்லை. வீடு மெழுகல். திண்ணை கழுவல், விறகு வெட்டல் இக் காரியங்களை வேறு யார் செய்வர்? ஏ, கலியா! கலியா! ஆமைபோல் ஊறுகிறாயா? மண்ணோடாவது மாறிடிக்கலாம். உன்னோடு போர் எடுக்க யாரால் முடிகிறது.

கலியன்:— வீட்டுக்குள் சிதையடுக்குவதுபோல விறகெல்லாம் அடுக்கிவிட்டேன். இன்னும் நான் வேறென்ன செய்யவேண்டும்?

சயசீலன்:— மடையா வேறு வேலையிருக்குதடா. (அதற்குள் பெண்ணுருவுடன் வந்த காத்தவராயன் காதோடு ஏதோ சொல்லியனுப்பினான்.) இப்படி வா சைத்தான் குட்டி உன்னையொருத்தி போட்டாளா வேலையற்றுப்போய். வீட்டு வேலைகள் அப்படியே கிடக்குதடா.

கலியன்:— (தனக்குள் சயசீலனை வைகிறான்.) என் ஆத்தாள் கூனி பிழைத்துவந்து பாழுங் குளத்திலுள்ள பாசிகளையெல்லாம் உன் தலையில் கொட்டட்டும். உன் உடம்பு இடி

விழுந்து விரியட்டும். மின் ஒளி உன் கண்ணைக் கெடுக்கட்டும். நான் இப்போது ஒரு வேலையும் செய்யப் போவதில்லை.

சயசீலன்:— என்னடா ஆலோசனை? இன்று இரவு இதற்கெல்லாம் பலன் கிடைக்கும். கை கால்கள் இழுத்துக் கொள்ளும். மூச்சுவிடத் திணறும். கிள்ளுப்படுவாய். கொட்டுப்படுவாய்.

கலியன்:— இரவில் எது நடந்தாலும் சரி. நான் இப்போது சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். எனது அம்மாள் கூனி இத் தீவை என்னிடம்தான் ஒப்பித்துச் சென்ருள். உம்மிடம் இல்லை. அவள் இத் தீவை என்னிடம் தந்து எத்துணையோ மந்திரங்களையும் எனக்குக் கற்பித்துச் சென்ருள். ஆனல் நீர் இத் தீவில் என்னை முதலில் சந்தித்தபோது என்னை அணைத்து முதுகில் தட்டிக்கொடுத்து புகழ்ந்து பேசினீர்கள். நீரில் பழச்சாறு கலந்து குடிக்கச் செய்தீர். பெரிய வெளிச்சத்துக்கு சூரியன் என்றும் சின்ன வெளிச்சத்துக்குச் சந்திரன் என்றும் இன்னும் பல செய்திகளை எனக்குக் கற்பித்தீர். அதனல் நான் உம்மை மிகவும் மதித்தேன். இத் தீவின் இரகசியங்களையும், மூலை முடுக்குகளில் இருந்த சுனைகள், உப்பளங்கள், நஞ்சை நிலங்கள் யாவற்றையும் காட்டினேன்... இன்னும் என் தாய் கூறிப்போன பல மந்திரங்களையும் உமக்குக் கூறினேன். தேரை, வண்டு, எலி யாவும் உம் மந்திரத்தால் உமக்குத் தொண்டு செய்யும். உம்மை நான் ஒரு சூனியக்காரராகவே ஆக்கிவிட்டேன். அதற்குப் பலனுக நீர் என்னை அடிமையாக்கி வேலை வாங்குகிறீர். மந்திரம் தெரிந்தும் அறிவில்லாததனல்தான் எனது நிலை இப்படி இருக்கிறது. இருந்தாலும் உமக்கென்ன பெருமை இருக்கிறது. இச் சிறு தீவுதான் உமது அரசாங்கம். நான் ஒருவன்தான் குடிமகன். ஒரு அரசனுக்கு ஒரு குடிமகன். ஒரு குடிமகனுக்கு ஒரு அரசன். இதில் உமக்கென்ன சிறப்பு. எனக்கென்ன குறைவு. நீர் வருவதற்கு முன் நானே அரசனுய் நானே குடிமகனுய் இருந்தேன். நான் சுவை பார்த்த – ஆண்ட தீவில் தான் நீர் இன்று அரசனுக இருக்கிறீர். இப் பாராங்கல்லில் சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு பிறகுதான் சாப்பிடப்போகவேண்டும். நீர் என்ன செய்தாலும் ஓய்வெடுத்துத்தான் தீருவேன்.

சயசீலன்:— எனது இரக்கம் உனக்கும் நல்லது செய்யாது எனக்கும் நல்லது செய்யாது உன்னைப் பொறுத்தவரையில் இச் சாட்டைதான் உனக்குக் கடமை கீழ்ப்படி நலைக் கற்பிக்கும் நல்லாசிரியன். உன்னை நான் மனிதனை நடத்துவதுபோல் நடத்த எண்ணி, எனது வீட்டிலே இடம் தந்து நன்கு நடத்தினேன். நீ அதன் கைம்மாறாக என் மகளைக் கற்பழிக்க முயன்றாய். கடமையை உணரவில்லை.

கலியன்;— ஐயா, அந்தக் காரியம் நடந்திருந்தால் இத் தீவில் என்னைப்போன்ற குட்டிக் கலியன்கள் தங்கள் குடிமக்களாக விளங்குவார்கள். நீர் உண்மையரசனாக அரசு செலுத்தலாம் அல்லவா?

சயசீலன்:— சீ உனது இயல்பு சிறிதும் மாறவில்லையே. உனக்கு நல்லனவே மனதில் படியவில்லையே. உன்னைக் கண்டு நான் முதலில் இரங்கினேன். பேசக் கற்றுக்கொடுத்து நல்ல பொருள்களையும் கற்பித்தேன். உன் குரலும் உன் பொருளற்ற ஒலியும் எனது முயற்சியால் மாற்றியமைத்தேன் எனினும் உன் இயற்கைக் குணத்தை என்னால் மாற்றமுடியவில்லையே?

கலியன்:— ஆமாம் நீர் எனக்குப் பேசக் கற்றுக்கொடுத்தீர். எனக்கு நன்றாக உம்மை வையத் தெரிகிறது. உமக்குக் காளியருள் செய்யட்டும்; களிச்சல் வரட்டும்; உமக்கு ஆயிரம் கண்ணாள் அருளட்டும்; அம்மை போடட்டும். மொழி சொல்லிக் கொடுத்தாராம். இல்லாவிட்டால் நான் செத்துப் போயிருப்பேனோ?

சயசீலன்:— சீ வாயை மூடு. ஓய்வு, சாப்பாடெல்லாம் வேலை முடிந்தபிறகுதான். அதிக வேலைகள் இருக்கின்றன. ஓடு முதலில் பாக்கி விறகையும் எடுத்து அடுக்கு. வேலை பாக்கியிருந்தாலும், விருப்பமில்லாமல் செய்தாலும் உடம்பு புண்ணாகிவிடும். இதோபார் சாட்டை.

கலியன்:— ஐயோ, வேண்டாம். எல்லாம் செய்து தொலைக்கிறேன். (மனத்துள் - என் நெஞ்சைவிட இவன் நெஞ்சம் வலியுடையது. என் சாமியைவிட இவன் சாமியும் வலிமை

யுடையதுதான் போல் இருக்கிறது. இவன் சாமியையும் இவனை யும் அடிமைபாக்கக் கூடிய வேறொரு கொடிய சாமியை நாம் கண்டுபிடித்துக்கொள்ளவேண்டும்.

சயசீலன்:— ஏண்டா, இன்னும் போகவில்லையா? என்ன சிந்தனை?

(கலியன் போதல் – காத்தவராயன் பாட்டின் ஒலி மட்டும் கேட்கும்படி பாட்டுடன் தோன்றுதல்) (வீரராசேந்திரன் பாட்டின் ஒலியைக் கேட்டு அவ்வொலியின் பின்னே தொடர்கிறான்)

பாடல்:—

செய்த பாவம் தீர்ந்ததென்று சேர்ந்து நேர்ந்து ஆடுவோம்
கையைக் கோர்த்துக் கொள்ளுவோம் கடைக்கண் பார்வை கொள்ளுவோம்
மரங்களோட அலைகளாட மாருதங்கள் கூடப்பாட
சுற்றிச் சுற்றி ஆடுவோம் சுழற்றி மாலை வீசுவோம்.

(வீரராசேந்திரன் வருகைக்கு இப் பாடல் நுழைவுப் பாட்டாகவும் ஆகிறது – மாலினி இருக்குமிடத்துக்கு அவ்வொலி வருகிறது.)

வீரராசே:— ஆ, இந்த இனிய ஒலி – பொருள் நிறைந்த பாடல் எங்கிருந்து வருகிறது? வானவீதியிலிருந்தா? பூமியிலிருந்துதானா? நின்றுவிட்டதே. பெண் குரல்தான். இத்தீவின் தெய்வம் பெண்தான். அவளது பாடலாகவே இருக்கலாம். அல்லது அவள் சக்தியால் அவளை வழிபடும் பாடலாகவும் இருக்கலாம். நாகையை - என் தந்தையை எண்ணிக்கொண்டிருந்த என் துக்க வுள்ளத்துக்கு இவ்விசை மருந்தா? மாற்றா? கொந்தளித்த கடல் இப்போது அமைதியாகத் தோன்றுகிறது. துக்கத்தால் குழம்பிய என் உள்ளமும் இப்போது அமைதியாக உள்ளது. நான் எங்கிருந்து எங்கு வந்தேன். இசையொலி என்னை இங்கு இழுத்துவந்து நிறுத்தியதா? நானே அதனைத் தொடர்ந்து வந்தேனோ தெரியவில்லையே? ஒலி கேட்கவில்லையே? இதோ! இதோ கேட்கிறது. [தொடரும்]

சென்னை தண்டையார்பேட்டை 'பழனி விலாச' மாளிகையில்
வாழ்வாங்கு வாழ்ந்து சிவபெருமான் திருவடி
நிழல் எய்தியவரும்,
கரந்தைத் தமிழ்ச் சங்க அன்பருமான

திருவாளர் ப. இராமசாமிப் பிள்ளையவர்கள்

மேற்பாடிய

பாடாண் பாமாலை.

பண்விரும்பும் மொழிபுகலவான் நடுநகத்துப்
பகல்போன்ற நடுநிலைமை பதிந்த நெஞ்சான்
மண்விரும்பும் பொறுமையொடு பிறகு ணங்கள்
வாய்ந்திருந்தான் மலர்முகத்தான் காண்போர் தங்கள்
கண்விரும்பும் வடிவழகன் கனிந்த சொல்லன்
கம்பன்மொழி காவியத்துத் தலைவ னாகும்
எண்விரும்பும் இனிமைநிறை இராம சாமி
எனும்பெயரால் எல்லோரும் அழைக்க வாழ்ந்தான்.

காவிந்து தொடுநடுக்கா விரிநா வல்லைவேங்
கடசாமி நாட்டார்பின் கலைம லிந்த
கோவிந்த ராயரு ணாசலத்தைக்
கொஞ்சுதமிழ் மொழிநாக ராசு தம்மை
பூவந்த பெண்மக்கட் கொடையால் நல்ல
பொற்பமர்ந்த மருமகராய்க் கவினப் பெற்றுத்
தேன்வந்த சொல்லினிமைப் பேரர் சொற்கள்
செவியேற்கும் பாக்கியமும் சிறக்கப் பெற்றான்.

அவநெறியில் நீங்கியுயிர் அறத்தில் வாழ
அன்றெடுத்த கோயில்கட்கும் பொருளளித்தான்
சிவனடியை மறவாது சிந்தை வைத்தான்
செழும்பொருள்கள் தேடிவைத்த தந்தைவைத்த

தவம்லிந்த நாகூரரண் டவர்க்காய்க் கண்ட
தருமத்தில் தளராத அன்பு வைத்தான்
உவமையிலா மெய்கண்ட நூல்கள் கண்ட
ஒளிர்தமிழ்ச்சங் கங்கட்குப் பொருள்கள் தந்தான்.

நேரிசை—வெண்பா.

சருவசித் தாண்டுச் சமத்தலாத் திங்கள்
ஒருதேதி ஞாயிற் றுதயம்;—பிரிவு
சயபுரட் டாசிஎண் நாள்மகம் வெள்ளி
வியவேல் இராமசா மி.

வீ. உலக ஊழியர்,
தமிழ் விரிவுரையாளர்,
சேலம் கல்லூரி.

திருபுவ னம்வரு திருவன் திறலோன்.
திரைகட லோடித் திரவியங் கொணர்ந்த
திருவளர் மார்பன் தருநிகர் கொடையோன்,
பெரும்புகழ் பரப்பிய பீடுடைக் குரிசில்,
பழநியாண் டிப்பெயர் படைத்தோ னவர்க்கும்
குழந்தையம் மாளெனுங் குலமுதல் விக்கும்
பராவருஞ் சீர்த்திப் பண்புடன் தோன்றிய
இராமசா மிப்பெய ரமைந்த ஏந்தால்,
வாதுசேர் வாழ்க்கை வையத் தீதொரீஇ
மாதுல, மாமணி, வாழ்வாங் குவாழ்ந்தனை!
தீய கனவிலும் கருதாச் சிந்தை
தூய வாழ்க்கைச் சுடர்விடு மணியே!
பொற்புடைத் தெய்வப் புண்ணிய வடிவாம்
கற்புடை மனையாள் கனகாம் புயமும்
நடரா சப்பெயர் நலமுறப் பெற்றுத்
திடராச னெனத் திகழும் தம்பியும்
மைந்தர் இருவரும் மகளிர் மூவரும்

வந்தனே செய்நின் மருகர் மூவரும்
மருகியும் மஞ்சர் முதலாம் சுற்றமும்
அருகிற் பணிபுரி பெயரார் அனைவரும்
நட்டோர் பலரும் நலிந்துநு கியழ
விட்டுச் சென்றனே, விதிமுறை யீதோ!
உயர்ந்த தோற்றமும் ஒளிதிகழ் முகமும்
நிவந்த மீசையும் நிமிர்ந்த புருவமும்
சரிகை திகழ்தரு தலைப்பா வினழகும்
வயிரவொ ளிகாலும் தோட்டின் வனப்பும்
எண்ணில் உறவினர் இலையிலர் நொதுமலர்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தன ஐயா!
'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு'வெனும் பெருமகன்
பொய்யில் பொருளுரை யின்விரி வுரையாய்
எய்ப்பில் எடுத்துக் காட்டாய் இயங்கினை,
அற்றோர்க் களித்தாய் அறவோர்க் களித்தாய்,
உற்றோர்க் களித்தாய் கற்றோர்க் களித்தாய்,
உறவோர்க் களித்தாய் யுற்றுழி யுதவும்
அறநிலை யங்களுக் களித்தாய் அருந்தமிழ்ச்
சங்கங் களுக்கு மான்ற தமிழ்பயில்
துங்கப் புலவர் களுக்கு மளித்தாய்,
பாடகச் சேரிப் பண்பா ரடிகள்
தாடலை கொண்டு தவமியற் றிவந்தாய்,
தந்தை நிறுவிய ஆண்டவர் தருமம்
வந்தனை யுடனே வளர்த்து வந்தனை,
இன்னன சீரெலாம் இயம்புதற் கெளிதோ,
மன்னவ, மாதுல, மறைந்தனை ஐயா,
என்னினிச் செய்தும்! இறைவன் திருவடி
பொன்னணி நீழல் புக்கிருந் தனையே.

ந. மு. கோவிந்தராயன்,

தஞ்சை.

தாரணி குவவுத் தோளினன், சாந்தம்
ததும்பு புன்னகை முகத் தழகன்,
கூரறிவு ஆண்மை கருணையோ டன்பும்
குடியிருந் தொளிர் மலர்க் கண்ணன்,
நேர்மையிற் குழைந்து கனிமனப் பான்மை
நிலவிய பரந்த நோக்கத் தோன்,
சீரறம் படர்த்த நெஞ்சினன், மதியின்
திட்பமும் நுட்பமும் படைத் தோன்.

எண்ணிய எண்ணி யாங்கினி தெய்தி
ஈட்டிய விழு நிதிக் குவியல்
அண்ணிய ஏழை எளியவர், உற்றார்,
அயலவர் கலை பயில் மைந்தர்,
மண்ணியல றவோர் முதலியோர்க் கென்றும்
வழங்கு வோன், தாரதரம் அறிவோன்,
புண்ணியம் கரந்தைச் சங்கம், நற்கோயில்,
புகழ் மடம் முதல்வயிற் புரிந்தோன்.

கைம்மாறு கருதாது வலக்கைதரல் இடக்கரமும்
காணுவாறே
அம்மா நல்லறம் வளர்த்தோன், அடியர் சிவபத்தியினில்
அகலா நண்பன்,
செம்மாந்து சிவனடியை வழிபடுவோன், பாடகச்சீர்
சேரி மேவும்
மெய்ம்மாசித் திராமலிங்க நற்றவத்தோன் சேடனென
மேன்மை யுற்றோன்.

பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளை.

வித்தகர் என்பவர் - - - ?

[நா. கோவிந்தராசன், இரண்டாம் யாண்டு.]

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தாங்கள் மேற்கொண்ட அம்மக்கட் பிறப்பின் கண்ணே தாங்கள் பெறவேண்டிய பேறுகள் பலவேறு இருப்பினும் சிறப்பாக தாங்கள் தங்களுக்கே உரிமையாகச் செய்துகொள்ளவேண்டியது புகழேயன்றி வேறொன்றுமன்று; அறம் செய்து அதனாற் பெருமைபெற்றவர்க்கும் நீதிமுறைகளிலே சிறந்து அவைகளினாலே பெருமை பெற்றவர்களுக்கும் ஈற்றில் அன்னோர் பெறவேண்டி நிற்பது அப்புகழேயாம். எனவே வள்ளுவரும், இல்லறம் இனிது நடாத்தி இறுதியிற் பெறும் பேறும் அன்னோன் இம்மண்ணுலகின்கண் நிலைபெறச் செய்துவிட்டுப் போகும்படியான பொருளாறு புகழேயாதலின் அத்தன்மையாகிய புகழை இல்லற இயலின் இறுதியின் வைத்தார் போலும்!

மக்களால் பெறும் பேறுகளுள் புகழே சிறந்ததாகக் கூறுவது என்னையோவெனின் காரணம் வள்ளுவரே தனது வாக்கால்

> "நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
> போற்றாது புத்தேள் உலகு",

என்று கூறுகிறார். அதாவது ஒருவன் இம்மையின்கண் புகழொடு நீண்டு வாழ்பவன் இம்மையின் இன்பமாகிய புகழை அனுபவிப்பதோடு, மறுமையின்கண் தேவனாய் வாழ்வான் என்று புகழின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுகின்றார். இவ்வுலகின்கண் வாழும் ஒவ்வொருவரும், இருமை இன்பமும் ஒருங்கே பயக்கக்கூடிய புகழை பெறவேண்டுமென்று வலியுறுத்தற் பொருட்டு வள்ளுவனார்,

> "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலிற் றோன்றாமை நன்று;

என்று கூறுகின்றார்; அஃதாவது உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் புகழோடு கூடிய குணங்களோடு தோன்றி விளங்கவேண்

டும். அன்றேல் மனிதனுய்ப் பிறத்தலினும் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்று புகழோடு தோன்றுக மக்களை விலங்கோடு ஒப்பிட்டு இழித்துக் கூறுகின்றார். எனவே அத்தன்மையாகிய பெருமை வாய்ந்த புகழை பெறுபவன் யார்? என்று வினய வழி புகழ் என்னும் அதிகாரத்தில்,

"நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது"

என அப்புகழை உரிமைபாக்கிக்கொள்பவன் யாவன் என்று கூறுவதோடு அத்தன்மைபாகிய புகழை அடைபவன் வித்தகன் என்றும் கூறுகிறார். புகழை அடைபவரை ஏன் வித்தகர் என்று சொல்ல வேண்டும் என்றால் மனித யாக்கை நிலைபற்றது.

அம்மக்களது யாக்கையின்கண் உயிரானது ஐவகை குற்றத் தான்வரும் இருவகை வினையும் உள்ள துணையும் உயிர் யாக்கையோடும் கூடி நின்று அவ்வினைகளாலாகிய நல்வினை, தீவினையது இருவகைப் பயனையும் அனுபவிக்கும் ஆதலினும், அவ்வாழ்நாள் இவ்வளவு அளவையுடையது என்று வரையறுக்கப்படாமையாலும் அதனது உண்மையை மக்கள் உணர முடியாதென்பதையும்பற்றித் தெய்வப் புலவர் வள்ளுவனார் உலகின்கண் வாழும் மக்கள் நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் அளவில் உவமையை யெடுத்தாண்டுள்ளனர். (1) முட்டைக்கும் முட்டைக்குள்ளிருக்கும் பார்ப்புக்கும் (2) நேற்றைப்பொழுதிருந்தவன் இன்று இல்லாததையும். (3) ஒருவன் துயில்கொண்டு விழிப்பதுபோல், இறப்பதையும் பிறப்பதையும் ஆடியிற் எதிரே காணும் உருவம்போல்தான் செய்த குறட்பாவில்

"குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" எனக் கூறுகின்றார்.

எனவே நிலையாதனவாகிய கட்புலனுக்குக் காணக்கூடிய பூத வுடம்பைக்கொண்டு நிலையுள்ளனவாகிய கட்புலனால் காணமுடியாத புகழுடம்பைப் பெறுதல், நிலையாதனவற்றைக்கொண்டு நிலையுற்றவற்றைத் தேடிக்கொள்வது சதுரப்பாடுடையார்க்கன்றி முடியாமையின் அத்தன்மையுடையோரை வித்தகர் என வியந்து கூறினர் போலும்!

இத்தன்மை வாய்ந்த வித்தகச் செயலை ஆற்றியுள்ளோர்களும் புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற சங்க காலத்து நூல்களால், புகழ்ந்து போற்றப்பட்டவர்களுமான. மனு ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், சிபிச்சக்கரவர்த்தி ஆகியோரின் அருஞ்செயலையும், நீதி முறைகளையும் நாம் அறியலாம்.

மனுநீதிச் சோழ மன்னன் மகனாகிய வீதிவிடங்கன் தேரூர்ந்து செல்லும்போது தனது பரிவாரங்களின் பேரொலியால் மருளப்பட்ட ஆவின் கன்றானது தேர்க்காலின்கண் பட்டு இறந்துவிட, அத்துயரைப் பொறுக்கமாட்டாத தாய்ப் பசுவானது மன்னனது தலைவாயிலின்கண் தொங்கவிடப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை அடிக்க அதை அறிந்த மனுநீதிச்சோழன் அமைச்சர்களின் பதிலை மறுத்துத் தன் ஒரே மகனை அதே தேர்க்காலின்கண் கிடத்தித் தன்னுயிர்போல் மன்னுயிரென்று உலகத்தார்க்கு உண்மையை வெளிப்படுத்தினான் என்பதை இளங்கோவடிகள்

வாயில் கடைமணி நடுநா நடுங்க,
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடதான்தன்
அரும்பெறும் புதல்வனை ஆழியின் மடித்தோன்

என அவனது நீதியை எடுத்துக் கூறியுள்ளனர்.

மனைவியின் காற்சிலம்பைக் கையிலேந்தி வணிகஞ் செய்தற் பொருட்டு மதுரைக்குச் சென்ற கோவலனை அரண்மனைப் பொற்கொல்லன் சூழ்ச்சியால், அரசியின் காற்சிலம்பைத் திருடியவன் கோவலனே என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். பின் கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்று மெய்ப்பித்துக்காட்டியபோது, பாண்டியன் நெடுஞ்செழியன் தன் குற்றத்திற்குத் தானே வருந்தித் தன் இன்னுயிரை நீத்தான் என்பதை,

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதைக் காக்கும் தென்புலங்காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே

என்ற இளங்கோவடிகளின் வாக்கால் அறியலாம். தமிழ் மன்னர்கள் தன் உயிரையும் பேணுது பிற உயிர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைப்பான் வேண்டியே அரசு செலுத்தி ஆண்டு வந்தனர் என்பதனை புறநானூற்றில் அறியலாம்.

ஓர் வேடன் ஒரு புறவினைத் துரத்திவர அப்புறவானது சிபி என்னும் சோழ மன்னனிடம் சரணடைய அவ்வேடனின் வேண்டுகோளின்படி அப்புறவுக்குத் துன்பம் ஏற்படாவண்ணம் தன் உடலை அரிந்து துலையின்கண் வைத்து இறுதியில் தன்னுடலே துலையின்கண் இருக்கும்படி வேடனுக்கு அருளினுன் என்பதை,

உருகிற் பருந்தி னேறு குறித்தொரீஇ
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதி யஞ்சி சீரை புக்கோன்
வரையா ஈகை உரவோன் மருக

எனக் கூறப்பட்டுள்ளது. இதன் கருத்தினையே தெய்வப்புலவர்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" எனக் கூறியுள்ளனர்.

முடிவு :-

எனவே நிலையில்லா உடம்பைக்கொண்டு நிலையுள்ளன வாகிய புகழைத்தேடிக்கொண்டனர் ஆகலின் இன்னோரன்னோரே வித்தகராவர்.

தமிழ்ப்புலவர், " நேரியனுர் "

ஆக்கியோன் :
வித்துவான். த. சுப்பையா, (கரந்தை மாணவர்)
உத்தமபாளையம், மதுரை (Dt.,)

ஆசிரியம்.

வானுயர் தருக்களும் வளமார் கதலியும்
தேன்புரை கன்னலும் தெங்குமா பலாவும்
கானிடைத் தோன்றிடும் கனியுதிர் மரங்களும்
இன்னும் பல்லினத் தாவர இனங்களும்,
ஓங்கி வளர்ந்திடும் பாங்குடைக் காவினில்,
வண்ண மயில்சேர் வடிவுடை அழகனின்
பொன்னுர் திருவடி புகன்றிடும் புனிதன்
எண்ணில் பன்னூல் எண்ணி ஆய்ந்தோன்
நேரியில் வாழ்ந்திடும் நேயன் நாமமும்
அருவியங் குன்றினில் அமர்ந்திடும் சீலனின்
நாமமாம், தண்ட பாணியாம் என்றே
மண்டிடும் காதலால் மாநிலத் தோரும்
விண்டிடக் கேட்டு மகிழ்ந்திடும் சுதனும்
இளையோன் நல்லோன் இரங்கிடும் குணத்தன்
அன்புடன் கண்டேன் அன்னவன் தனையே.

கற்பனைக் கடிதங்கள்.

[சிவ. நாகராசன்.]

காதலர்களின் உள்ள வெள்ளத்தை உருவாக்கி ஓடும் கடிதங்கள் — அவர்களின் அன்பென்னும் செடியை வளர்க்க உதவும் தண்ணீர். இயற்கையின் எழிலிலே ஈடுபட்ட தலைவன், தலைவியை நினைக்கிறான் - பழைய எண்ணங்களுடன், காணு கிறான் கனவுகள், புதிய கற்பனையில்.

என் கற்பனை என்னும் குதிரைக்கு கால்கள் ஓய்ந்த நேரம் அது. நான் நின்றுகொண்டிருந்த இடம் மலைப்பாங்கான நிலம். பருந்துகள் வானிலே பறந்தவண்ணமிருந்தன. மலையின் ஒரு புறத்திலே மரணத்தோடு வாதாடும் இரண்டு புறாக்கள், தன் கடைசி ஒலிகளை எழுப்பின. என் கால்கள் என்னை அறியாமலே அங்கு ஓடின. முட்புதரிலே இருந்து மீளப்பெறாமல், செந்நீரைச் சிந்தியபடியே சீவன் பிரியும் தருவாயில் இருந்தன புறாக்கள். அந்தப் புறாக்களை காப்பதற்கு எண்ணிப் புதரில் இறங்கினேன். வானத்திலே பறவைகளின் பெரு ஒலியைக் கேட்டு, ஆகா யத்தைப் பார்த்தேன். பறந்துவந்த புறா ஒன்றைப், பருந்துக் கூட் டம் வேட்டையாடின. புறாவின் உடல் உதிரத்தைச் சிந்தியபடியே புதரில் வந்து விழுந்தது. மூன்று புறாக்களின் உடல்களையும் விட்டு உயிர்கள் பிரிந்தன. இரக்கத்துடன் அவைகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்த என் கண்ணில் கடிதங்கள் தென் பட்டன.

மூன்று புறாக்களும் தம் கடமைகளைச் செய்யமுடியாமல் இறந்தன. கடிதம் அனுப்பியவர்கள், பதிலை எதிர்பார்த்து ஏமாறுவார்கள். கடிதமே வரப்பெறாமல், ஏங்கியவண்ணம் தம் எண்ணங்களை மாற்றிக்கொள்ளும் - இளம் உள்ளங்கள். அந்தச் சேராத கடிதங்களே இந்தக் கற்பனைக் கடிதங்களாகும்! கடி தத்தைப் படியுங்கள்.

அன்புள்ள தென்றல்,

உன் இயற்கையாய் அமைந்த எழில்மேனி என்னை ஒரு பைத்தியக்காரனாக்கிவிட்டது. காலையில் கோழி கூவும்முன்னே எழுந்துவிட்டேன். தோட்டத்தின் பக்கம் சென்றேன். வாடைக் காற்று வீசியது. உடலில் குளுமை எழுந்து வாட்டியது.

எதிரே, செடி கொடிகள் பசுமை நிறத்தை எடுத்துக் காட்டின. காலைக் கதிரவன் உலகை அப்பொழுதுதான் எட்டிப் பார்த்தான். இலைகள் தோறும் முத்து முத்தாய் மழைநீர் நின்று ஒளி செய்தன. ஆதனுள் நின் கொவ்வைச் செவ்விதழும், கண்ணாடிக் கன்னங்களும் குவளை மலர் கண்களும், அலை அலையாய் நெகிழ்ந்தோடும் உன் கருங்கூந்தலும் காட்சியளித்தன. உன் செவ்விதழ் ஏதோ செப்பியது.

“அத்தான் அன்றொருநாள் மாலையிலே, இளந் தென்றல் வீசையிலே, பசுமை நிறத் தரைமீது நானும் நீங்..........” இத்தோடு நீ நிறுத்திவிட்டாய். என் மனம், “தென்றல் தீங் கனியே, பேசு, பேசு” என்றது. நீ பேசாமடந்தையாகவே இருந்தாய். பொய்யுருவம் எனவும் எண்ணாது, கட்டியணைத்து முத்தமிட எண்ணித் தலை குனிந்தேன். நின் உருவம் மறைந்து விட்டது. “தென்றல், தென்றல்” என்று கத்தினேன். தென்றலைக் காணோம். வாடைக் காற்றுதான் வீசிக்கொண்டிருந்தது. என் உடலெல்லாம் தண்ணீரால் நனைந்துவிட்டது. உணர்வு பெற்றேன், கண்ணே,

கடிதம் வரைக, வணக்கம்.

“பூச்சோலை”

என் இதய எழிலரசி,

நம்மை, நம் கடிதங்கள்தான் காணுக ஓர் இன்பப் பூங்கா விற்கு அழைத்துச் செல்லும். பாண்டிவள நாட்டிலே வைகைக் கரை ஊற்றிலே நாம் விளையாடிக்கொண்டிருந்தோம் - நினைவிருக் கலாம். மணல் வீடுகள் பல கட்டினோம், அவை நம் கண் முன்னேயே சரிந்தன. இன்னலிலாது பழகினோம், இங்கிதமாய்ப் பேசிப் பெருமகிழ்ச்சி கொண்டோம். இதையெல்லாம் நினைத் துக்கொண்டு ஒருநாள் படுத்திருந்தேன். கண்ணை மூடி விட்டேன். கனவுகள் பலகண்டேன்.

காலை நேரத்திலே, கதிரவன் ஒளியிலே, மலர்கள் இதழ் களை விரித்தன. வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டே மலர் களை வட்டமிட்டன. ஒரு ஓரத்திலே இருந்த 'போது' மலராது இருந்தது. "எல்லாம் மலர்ந்தன. இது மலரும் 'போது' புலர்ந்த பொழுதினை நோக்கியதில்லையோ" என எண்ணினேன். சிறிது நேரத்தில் ஒரு கருவண்டு பறந்து வந்தது. அதன் ஒலியைக் கேட்ட மாத்திரத்தில் மலர் தன் இதழ்களை விரித்தது வண்டும் மலரும் இணைந்தன. தமிழறிந்த வண்டும் மலரும் ஏதோ பேசின. ஒரு சில பொன்மொழியையே கேட்டேன்.

"இம்மா நேரம் எங்கிருந்தனையோ? என்று மலர் கேட்டது.

" வரும் வழி ஒன்றில், வண்ண மலர் ஒன்று, பொன்வண்டு பலவற்றால் மூடப்பட்டது. மது சிந்தியது. இதழ்களை மலர் இழந்தது. எழிலிழந்த மலரை விட்டு வண்டுகள் சென்று விட்டன." என்றது வண்டு.

வண்டுகளே........என்று கூறி முடிக்காத மலரின் எண் ணத்தை "இப்படித்தான்" என்று வண்டு கூறி முடித்தது.

" தங்களை அந்தக் கூட்டத்தில் சேர்க்கவில்லை என்றது மலர்

"நாம் இருவரும் என்றுமே இணைபிரியாது இருப்போம் என்று கூறியது வண்டு.

பின் தேன் மாந்திக்கொண்டிருந்த வண்டு திகிலடைந்தது. கூட்டமான வண்டுகள் அந்த மலரையும் சூழ்ந்தன. ஒரு கரு வண்டுக்கும் பல பொன் வண்டுகளுக்கும் போர் நிகழ்ந்தது. மலர் குவிந்துவிட்டது. கருவண்டு தன் சிறகுகளை இழந்தது. பலத்த காயத்தால் கீழே விழுந்தது. மலரின் இதழ்கள் கிழித் தெறியப்பட்டன. மது சிந்த சிதற சீரழிக்கப்பட்டது. பொன் வண்டுகள் பறந்து மறைந்தன. கருவண்டு எழுந்து நடக்க முயன்றது. கீழே விழுந்துவிட்டது. கட்டாயமாய் கற்பழிக்கப் பட்ட மனைவி தன் கணவன் முன் தலைகுனிந்தாள்.

செடியிலிருந்து கசங்கிய மலர் வண்டின்மேல் விழுந்தது. வண்டும் மலரும் ஒன்றாக உயிர் நீத்தன. இதுதான் நான் கண்ட கனவு. உண்மைக் காதல் அழிக்கப்பட்டது.

எழிலரசி, என் வாழ்விலே நீ ஒரு பாலைவனத்திலே கண்ட பசுமரச்சோலை, கடலின் நடுவே கிடைத்த நன்னீர். இந்தக் கனவு நம் வாழ்விலே...... குறுக்கிடாமலே போகட்டும். என்றைக்கும் எழுப்பாத புயலை என் மனத்தில் இது எழுப்பிவிட் டது. காதலர் இருவர் கருத்தொருமித்தோம், ஆதரவுபட் டோம், அன்பும் கொண்டோம், பண்பாய் வளர்ந்தோம், எத் தனை எண்ணங்கள், நித்தம் நித்தம் நினைத்திடுவேன்! அத்தனை யும் சித்திரைக் கனவிலே நிகழ்ந்திடுதே!! உன் கதுப்புக் கன்னங்கள் என் கண்முன்னே நிற்கின்றன. உன் சொல்லோ செந்தமிழ் நூலாய் என் செவியில் ஒலிக்கிறது. உன் நுடங்கு கொடியிடை உணர்ச்சியைக் கிள்ளிக் கிளறுகிறது. அஞ்சன மின்றியே அழகுடன் ஈர்க்கும் வதனமே என்னை வாட்டுகிறது. நீண்டுவிடாவண்ணமே நிறுத்துகிறேன். நின்னையே என் நினை வில் நிறுத்தினேன்.

இன்னணம்,

"எழிலோன்"

அன்பு மறவா வெண்முகிலோய்,

விண்ணின் மீன் (மின்னுவது) உன் அழகின் முன் நிற்க அஞ்சியே கண்சிமிட்டுகிறது போலும்! வெண்முகில், விண்ணில் நீயும் மண்ணில் நானுமா? நாம் ஒன்றுசேரும் நாளே ஓர் திருநாள்.

ஒரு பசும் புற்றரைக்குச் சென்றேன். அங்கு என் உடல் என்னை அறியாமலே தரையில் சாய்ந்தது. அது ஒரு மாலை நேரம்; கதிரவன் தன் வேலையிலிருந்து விலகினான். தொடர்ந்து அவன் வேலையை ஏற்க திங்கள் விண்ணில் திகழ்ந்தது. பறவைகள் கூட்டம், கூட்டமாக கூட்டினை நோக்கிப் பறந்தன. மேய்ச்சலுக்குப்பின் ஆடுமாடுகள் கொட்டத்தை நோக்கி நடந்தன. பகல் முழுதும் பார் முழுதையும் தன் ஏர் முனையிலே வைத்துச் சுழற்றிப் பின் இருளிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றான் உழவன். அவனுடன் ஒத்துழைத்து பார் முழுவதையும் இழுத்து சுழற்றிய எருதுகள் கழுத்தில் ஏர் கலப்பை தொங்கிவர கம்பீர நடை நடந்தன. எறும்புகள் சாரைசாரையாய்த் தம் வலையினுள் நுழைந்தன. மலர்கள் குவிந்தன. இந்த நிகழ்ச்சிகளைக் கண்டுகொண்டிருந்த நான் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

எவ்வளவு நேரம் தூங்கினேனோ, அறியேன். கண் விழித்துப் பார்த்தேன். ஒரு குடிசையுனுள் கட்டிலில் படுத்திருந்தேன். ஒரு குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

"வெண்முகில், வெண்முகில்" என்று கூப்பட்டேன் நீதான், அத்தான் என்று ஆவலுடன் ஓடிவந்தாய். "நாம்..." என்று ஆரம்பித்து நான் முடிக்கவில்லை நீதான் சொல்லத் தொடங்கிவிட்டாய், "காட்டின் நடுவே ஒரு குடிசையில் உள்ளோம், நாம் இருவர் மட்டுமே" என்றாய்.

குடிசையைச் சுற்றிப் பூந்தோட்டங்கள் இருந்தன. வண்ண மலர் பலவும் நறுமணம் எழுப்பின. இரவிலே, பட்டை மரப் பூச்சிகள் இனிமையான குரலெழுப்பின. மரங்கொத்திகள் "டொக் டொக்" என அதற்குத் தாளமிட்டன. இந்தச் சூழ்நிலையிலே சிலிர்த்த காற்று வீசிக்கொண்டிருந்தது. நிதானத்

துடன் உணர்ச்சியற்ற நிலையில் உன்னைப் பார்த்தேன். நீ எழிலே உருவாய் இருந்தாய். நாணேற்றப்பட்ட வில்லைப்போல் வளைந்த உன் நெற்றியில் அழகுற தீட்டிய பொட்டும், குவளை மலர்க் கண்ணின் கருமணிகளும், என் உணர்ச்சியைத் தூண்டின. "அத்தான்" என்று உன் உணர்ச்சிப் பெருக்கை ஒரு வார்த்தையில் வெளியிட்டாய்; நீயும் என்மேல் சாய்ந்தாய், உன் உடலின் வெட்ப தட்ப, மென்மையான நிலை என் கருத்தைக் களைத்தது, என் உணர்ச்சியைக் கிள்ளியும், கிளறியும் விட்டன. நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம். பார்த்த நேரத்தில் திடீரென்று விளக்கு அணைந்தது. பெரும் சப்தம் கூரையின் மேல் கேட்டது. பயத்தால் நாம் நம் உணர்ச்சிகளை மறந்தோம். வெளியே இரண்டு குரங்குகள் ஒன்றை ஒன்று கடித்து விளையாடின. அவை தம் காதல் விளையாட்டில் நம்மை கேலி செய்வது போல் இருந்தது. சிறிது நேரத்தில் அவை பேரொலி எழுப்பின.

மந்தியும், கடுவனும் போட்ட பெரும் சப்தத்தில் பயந்து நீ என்மேல் விழுந்தாய். நானும் "வெண்முகில் என்று" கட்டி அணைத்தேன். வெறும் கைகளைத்தான். நீயும் மறைந்து விட்டாய். குடிசையைக் காணோம். குரங்கின் ஒலிகள் கேட்கவில்லை. குத்துவிளக்கின் ஒளியும், மலரின் மணமும் காணோம்.

பழைய பசும்புற்றரையிலே படுத்திருந்தேன் நிலவு - ஒளி வீசியது. முழு நிலா முகிலை முறியடித்து முன்னேறி வந்தது.

எழுந்து காலத்தை கணக்கிட்டேன். பொழுது விழுந்து இரண்டு நாழிகை சென்றிருந்தது. விரைந்தோடினேன் வீட்டிற்கு. கண்டதும், கேட்டதும், உணர்ந்ததும் ஒரு கடிதமாக எழுத முடிந்தது — உனக்கு.

வெண் முகில், இந்த வேதனை நிரம்பிய கனவுகளை இன்னும் எத்தனை நாட்களுக்கு அனுபவிக்க வேண்டுமோ! விரை

விலேயே சந்திப்போம் கண்ணே. உன் அன்பும், பண்பும் எல்லையில்லா இன்பமும் நிறைந்த உன் முகங்களையே எந்நேரமும் எதிர்பார்த்து இருக்கின்றேன்.

இங்ஙனம்

வெண்முகிலை மறவாத

“இளமதி”

இம் மூன்று கடிதங்களையும் படித்து முடித்தேன். எப்படியும் நான் புறாக்களின் கடமையைச் செய்துமுடிக்க வேண்டும் என்று எண்ணினேன். போகும் வழி கேட்க பறவைகள் உயிருடன் இல்லையே! புறாக்களின் துணையே இல்லாது கொண்டு செல்ல முகவரி இல்லையே கடிதத்தில்!

180ம் பக்கத் தொடர்ச்சி

தலைவன் தலைவியருடைய அன்பை ஆசிரியர் கேண்மை; தொடர்பு; காமம்; நட்பு என்னுஞ் சொற்களால் சிறப்பித்துக் கூறினர். தலைவி தலைவனுடைய நட்பின் பெருமையைக்கூறும் போது

"நிலத்திலும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே" எனக் கூறுகிறாள். தலைவ

னுடைய நட்பு நிலத்தைவிடப் பெரியது; வானைவிட உயர்ந்தது; நீரைவிட ஆழமுடையது; எனக்கூறும் நட்பின் சிறப்புத்தான் என்னே!

தலைவன் தலைவியரிடையேதோன்றும் அன்பு பிறவிதோறும் தொடர்ந்துவரும் என்பது சான்றோர் கொள்கையாம். "பயி லியது கெழீஇய நட்பு" என்று கூறுவதும்,

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே"

என்ற பாட்டில் இப்பிறவி நீங்கி மறுபிறவியடையினும் நீயே என் கணவன், நானே நின் நெஞ்சு பொருந்திய மனைவி ஆகுக" என்று கூறுவதும்; அன்பு ஊழின் பயனால் தொடரும் என் பதை விளக்கும்.

இளமையிற் பகைவர்களாக இருப்பினும் பின்பு, ஊழின் அன்பு விடாது ஒன்றிவிடும்.

"இவனிவ ளைம்பால் பற்றவும் மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது
ஏதில் சிறு செரு வுறுப மன்னே
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணைய லன்ன விவர்
மணமகழ் இயற்கை காட்டி யோயே"

தலைவனும் தலைவியும் பாலை நிலத்தில் செல்லுகின்றனர். அவ் விருவரையும் இளமைப் பருவத்தில் பகைவர்களாகக் கண்டவர்

கள்; இன்று இவர்கள் பாலையின் வெம்மையும் கொடுமையும் மறந்து இணைந்து செல்வதைப் பார்க்கின்றனர். இளமைப் பருவத்தில் கலாம் விளைப்பான் வேண்டி இவன் இவளுடைய தலைமயிரைப் பிடித்திழுப்பான். இவளும் அவ்வாறே பிடித்திழுத்து ஓடுவாள். செவிலியர் தடுத்தாலும் நில்லாது இவர்கள் சண்டை செய்வார்கள். இன்று மெல்லிய இரட்டை மாலைபோல் மணம் புரிந்து மகிழ்தற்குரியரானார்கள். இவ்வாறு செய்த ஊழ்வினையே! நீ மிக நல்லை, எனக்கண்டோர் வாழ்த்துகிறார்கள். இவ்வன்பின் தொடர்பை அறாமல் இணையச் செய்வது ஊழாகும்; அதனைத் தெய்வமென்றும் பாலென்றும் கூறுப.

காலையில் கதிரவன் செங்கதிர் சொரிந்தால், மாலையிற் மதியம் வெண்கதிர் பொழிகின்றது. பகலில் தாமரை மலர்ந்து விளங்கினால்; இரவில் குமுதம் அலர்ந்து வருகின்றது. ஓரிடத்தில் மான் ஓடிக் காட்டினால், மற்றோரிடத்தில் அன்றில் கூடிக் காட்டுகின்றது. ஓரிடத்தில் மயில் ஆடிக் காட்டினால் மற்றோரிடத்தில் குயில் பாடிக் காட்டுகின்றது. இவ்வாறு இன்ப நினைவுக்கு ஏதுவானவையே, இலக்கியங்களாகக் காட்சியளிக்கும். இலக்கியம் இல்லா நாட்டில் இன்பமிராது. ஞாலத்தில் அகப்பொருள் இலக்கியங்களில் சிறந்து விளங்கும் நாடு தமிழ் நாடேயாம்.

[356-ம் பக்கத் தொடர்ச்சி]

தாவிப் பாய்கின்றான். தங்கச் சிலைபோன்ற அவளின் திங்கள் முகத்தைத் தனது சொந்தக் கைகளிலே தாங்கிக்கொள்கிறான். அப்போது அவளின் முல்லைப் பற்களிடையே ஒரு புன்னகை தோன்றி மலர்கிறது,

இவ்வாறு ஏமாற்றுகிறவர்களைத் திருத்த அந்த ஏமாற்றுதலாகிய துப்பறியும் இலாகாவிலேயே புகுந்தால்தான் முடியும்; அல்லவா? எப்படித் தோழியின் "**சூழ்ச்சித் திறன்**"!

[குறிப்பு :— இதில் தோழி கூறும் அத்தனைக் கருத்தும் கபிலர் பாடிய 'குறிஞ்சிக் கலி' யின் முதற் செய்யுளாகும்.]

சூழ்ச்சித் திறன்.

[கு. ந. நாகலிங்கம், புலவர் மூன்றாம் யாண்டு.]

உலகில் ஒவ்வொருவருக்கும் திறமை என்பது ஒன்று உண்டு. ஆராய்ச்சித் திறன், கலைத்திறன் இன்னும் எத்தனையோ திறன்கள். அவற்றுள் ஒன்று சூழ்ச்சித் திறனுமாகும். என்றாலும் இவற்றிற்கெல்லாம் அடிப்படை அவரவர்கள் அறிவுத் திறன்தான் காரணம். இவற்றுள் சூழ்ச்சித் திறனைப்பற்றி நம் நாட்டின் பண்டைக்கால நிகழ்ச்சி ஒன்றால் அறியலாம்.

குறிஞ்சி நிலப்பகுதி மலையும் மலைசார்ந்த இடமும் அல்லவா? அங்குத் தினைப்புனம், மலையருவி முதலியவை குறிப்பிடத் தக்தவை, அங்கில மக்கள் தினைப்புனத்தைக் கதிர் முற்றிய காலத்தில் யானை முதலிய கொடிய விலங்கினின்றும் காப்பது வழக்கம். அப்போது இரவும், பகலும் காவலிருப்பார்கள். அந்நிலைமையில் தலைவியும் சில பகற் காலங்களில் தன் தோழியோடுகூடி காவலுக்கு வருவாள். அப்போது நீராடல், பூக்கொய்தல் முதலிய விளையாட்டுக்களைத் தன் தோழியோடு விளையாடி மகிழ்வாள்.

அவ்வாறு விளையாடிவரும் நாளில் தன் தோழியினின்றும் பிரிந்து சிறிதுநேரம் கழித்து வருவாள். நாளடைவில் அப்பழக்கம் மிகுதியாக அது தோழிக்கு அச்சத்தையும், ஐயத்தையும் எழுப்பிவிடும். தன்னோடு விளையாடிக்கொண்டிருக்கும்போதுள்ள மகிழ்ச்சியைப் பிரிந்து சென்று வருவதால்தான் தலைவி அடைகிறாள்—என்பதைத் தோழி உணருகிறாள். அது நாளடைவில் தோழிக்குப் பெரிய ஐயத்தை எழுப்பிவிடுகிறது.

அதோடு தன்னுடன் விளையாடிக்கொண்டிருக்கும்போது காணும் அவளுடைய தோற்றம்: பிரிந்து சிறிது நேரம் கழித்து வந்தால் அவ்வளவும் மாறுபட்டிருக்கும் அவளுடைய முகத்திலேயே எவ்வளவோ வேறுபாடுகள்! இயல்பான கண்கள் சிவந்திருக்கும்? சிவந்த கொவ்வைக் கனிபோன்ற இதழ்கள்

வெளுத்திருக்கும்; கொண்டையிலே தோழியால் சூட்டப்படாத மலர்கள் சூட்டப்பட்டிருக்கும்; அவளிடம் ஒரு தனிப்பட்ட மணங்கூட வீசும். அவள் தோற்றமே ஏதோ மயக்கமடைந்தவள்போல் காணப்படும். இத்தனை வேறுபாடுகள் ஐயத்தை எழுப்பாமலா இருக்கச்செய்யும்? தன்னுடன் இருக்கும்போது ஒன்றுமில்லை? தன்னைவிட்டுப் பிரிந்துசென்று வந்தால் பேச்சு, நடை, உடை அத்தனையிலும் வேறுபாடு? இதை அறிந்துகொள்வது தோழியின் இன்றியமையாத கடமையல்லவா? பின்னல் ஏதவாது தீமை நேர்ந்தால் யார் பொறுப்பு? தலைவியைக் கேட்டுப் பார்க்கிறாள். முடியவில்லை. வெளிப்படையாகவும் கேட்டுவிடுகிறாள்.

"ஏண்டி சொல்லமாட்டாய்? உண்மையைச் சொல். நீ அங்கு சென்றாயே தனியாக அப்போது யார் வந்தது உன்னோடு?"

"என்னடி, என்னை ஏமாற்றுகிறாய். என்னோடு யார் வருவார்கள். நான்தான் போனேன். திரும்பி வந்துவிட்டேன். இனிமேல் இம்மாதிரி கேட்டால்..........போடி என்னோடு பேசாதே என்ன நினைத்துக்கொண்டாய் என்னை?" இவ்வாறு அன்றும் கோபங்கொண்டவள்போல் ஏமாற்றிவிட்டாள். என்ன செய்வாள் தோழிமட்டும்.

"கண்ணம்மா. பார்த்தாயா? நான் ஏதோ சொன்னேன். நீ ஏதோ தவறாகப் புரிந்துகொண்டாயே. தவறிருந்தால் என்னை மன்னித்துவிடு கண்ணம்மா". ஆம், அத்தலைவியின் பெயர் இந்த காலத்தில் கண்ணம்மாதான். அப்போதே ஆசிரியரும் தோழியின் வாயிலாக "உண்கண்)ணாய்" என அழைக்கின்றார். இதில் தலைவிக்கு ஏதோ ஒருவகை அமைதி ஏற்படுகிறது.

"போடி முதலில் செய்வது தவறு; பிறகு மன்னிப்பு" என்று முகத்தை அப்பால் திருப்பிக்கொள்கிறாள். தமது களவை மறைத்துவிட்டோம் என்ற பெருமிதம். ஆனால் தோழி ஏமாற்றுகின்றவர்களை ஏமாற்றித்தான் உண்மையை உணர்த்த வேண்டும் என்பதை அப்போதுதான் உணருகிறாள். உடனே சூழ்ச்சித் திறம் பிறக்கிறது.

அன்றும் இதே இடந்தான். ஆனல் இன்று அச்சோலை யின் நீர்நிலை உள்ள பக்கம் வந்துவிட்டார்கள். பார்க்கிருள் தோழி. அந்த நேரம் நல்ல நேரம் என்பதை உணருகிருள். கூப்பிடுகிருள் தலைவியை; அவளும் வந்தாள். பாவம் அவளுக்கு என்ன தெரியப்போகிறது இவளுடைய சூழ்ச்சியெல்லாம்.

' கண்ணம்மா, விளையாடியது போதும். நான் ஒன்று சொல்கிறேன் கேட்கிருயா ?"

"என்டி கேட்பதற்குக்கூடவா பஞ்சம் ?"

"அப்படியென்ருல் சொல்வதற்குத்தான் உண்மையைச் சொல்லமாட்டாய் "?

"போடி. மறுபடியும் வருகிருய் பார்த்தாயா வழிக்கு.

"நான் என்ன சொன்னேன். இதற்குள் ஏதோ நினைத்துக் கொண்டாயே. சரி கண்ணம்மா, நான் சொல்வதைக் கேளிப் போது".

"சரி, சொல்லடி".

"நமது தினைப்புனம் இருக்கிறதல்லவா ?"

'ஆமாம்".

"அதில் நீ இல்லாதபோது ஒருநாள் நான் தனித்திருந் தேன். அப்போது ஒருவன் ஒரு பெரிய யானையைத் தேடிக் கொண்டு வருபவன்போல வந்தான். அப்போது அந்த யானை யும்......"

"உன்னிடம் வந்ததா ?"

"இல்லை. அவனிடமிருந்தது தப்பியதுபோலவும், அது நமது புனத்தயலே போனதுபோலவும் எண்ணுவதாக அவன் காணப்பட்டான்".

"யானை வரவில்லையே. ஊம் அவன் எப்படி இருந்தான் ?"

"அவளு! ஏதோ ஒருவகைக் கண்ணியைத் தலையிலே அணிந்திருந்தான். கையிலே ஒரு வில்லைக்கூட வைத்திருந்தான் கண்ணம்மா".

"உம். அப்புறம் ?"

"அம்மாதிரி வந்தவன் என்னிடம் வருவான்; என்னைப் பார்ப்பான். ஆனால் அப்போது அவனடைந்த துன்பத்தைத் தன் முகக் குறிப்பாலேயே காட்டிவிடுவானே தவிர எதையும் வாய்திறந்து சொல்லவேமாட்டான். சொன்னால்தானே தெரியும்?"

"ஆமாம். சொன்னால்தான் தெரியும்.

"ஆனால் சொல்லவே மாட்டான். இப்படி ஒருநாளா? இருநாளா? பல நாட்கள் வந்துபோவான்".

"உம், அப்புறம் நீ என்ன செய்தாய்?"

"என்ன செய்வது. அவனைப்பற்றி நமக்கு ஏதாவது தெரியுமா? அவனே சொல்லாதபோது எனக்கு மட்டும் என்னவாம். அவனிடம் எந்த ஒரு சிறு தொடர்புமில்லாத நான் மட்டும் அப்போது என்ன செய்யமுடியும்? அவனுடைய அந்த பரிதாப நிலையைக்கண்டு இரவில் தூக்கம்கூட இல்லாமல் மிகவும் வருந்துவேன்".

"அப்புறம்?"

"அப்புறமென்ன? அவனோ என்னெதிரில் நின்று எதையும் சொல்லமாட்டான். நாமாக வலியச்சென்று கேட்கலாமென்றாலோ—எப்படிக் கேட்பது? உன்னுடைய துன்பத்தைக் கண்டு வருந்தினேன் என்று சொல்வது பெண்களாகிய நமக்குரிய தன்மையுமல்ல. இவ்வாறு இருக்கும்போது இவன் ஒருகால் இத் துன்பத்திலேயே மனஞ்சோர்ந்து எதுவொன்றும் நினைக்கவும் முடியாமல் இறந்தும் போய்விடுவானோ என்று அச்சமடைந்து விட்டேன். அதனால் என் தோள்களும் மெலிய அடையாத வருத்தமும் அடைந்துவிட்டேன் கண்ணம்மா".

"ஐயோ பாவம்"

"அந்த வருத்தத்திலே இதுவரை யாரும் செய்யத் துணியாத ஒரு செயலையும் நான் நாணமில்லாமல் செய்துவிட்டேன் கண்ணம்மா".

"ஆ அப்படியா? அது என்ன மங்கை?" ஆம். இந்தத் தோழியின் பெயரும், மங்கைதான். தலைவியைப்போலவே

மங்கைப் பருவத்தவள்தானே. மேலும் கூறுவதைப் பார்க்கலாம்.

"அது என்னவென்றால்—சொல்கிறேன் கேள் கண்ணம்மா". இப்போதுதான் இதுவரை உண்மையைக் கூறிவந்த தோழிக்கு முன்பு தன்னிடம் தலைவி ஏமாற்றிய நிகழ்ச்சியெல்லாம் நினைவுக்கு வருகிறது. இவ்விடங்களிலெல்லாம் தோழி மிகவும் கெட்டிக்காரியல்லவா? உடனே தானும் ஒரு சூழ்ச்சியை மேற்கொள்கிறாள்,

"கண்ணம்மா ஒருநாள் நம் தினைப்புனத்தில் ஊஞ்சல் இருக்கிறதே"

"ஆமாம்".

"அதில் ஏறி ஆடிக்கொண்டிருந்தேன். அப்போது அவன் வந்துவிட்டான். உடனே எனக்கு ஒன்றும் புரியவில்லை: என்ன செய்தேன் தெரியுமா? "ஐயா, இந்த ஊஞ்சலைக் கொஞ்சம் ஆட்டுவாயா?" என்றேன். உடனே அவனும் அருகே வந்துவிட்டான். வந்து, "பெண்ணே நன்றாகச் சொன்னாய்." என்று ஊஞ்சலை வேகமாக ஆட்டவும் ஆட்டினான். அப்போது எனக்கு என்ன செய்வதென்றே புரியாமல் ஊஞ்சலிலிருந்து கீழே விழுவதைப்போல் நடித்து அவன் மார்பின்மேல் அப்படியே விழுந்துவிட்டேன். உடனே அவனும் அது உண்மைதான் என்று எண்ணி என்னை அப்படியே அணைத்துக்கொண்டான். அந்த சமயம் எனக்கு ஓரே மயக்கமடைந்துவிட்டதைப் போலாய் விட்டது. அப்போது அவன், "இவள் மயக்கம் தெளிந்து எழுந்துகொள்வதற்குள் யாராவது பார்த்துவிட்டால் என்னவாகும்?" என்று எண்ணி, அப்போதே "பெண்ணே நீ பயப்படாமல் போ" என்று ஆறுதல் கூறி அனுப்பும் தன்மையிலே என்னை மிக்க இரக்கத்தோடு பார்த்தான். அப்போது அவன் என்மீது எவ்வளவு கருணை உடையவனாயிருந்தான் தெரியுமா?"

"..............."

"அதனால்தான் அவன்மேலே மயக்கமுற்றவள் போல் இருந்துவிட்டேன் கண்ணம்மா?"

"..............."

"ஏன் கண்ணம்மா பேசவில்லை ?"

"மங்கை......" அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. எப்படிப் பேசமுடியும். மறைத்து வைத்திருந்ததெல்லால் வெளிப் படையாகிவிட்டதல்லவா? அப்படியே தலையைக் குனித்துக் கொள்கிருள். குற்றம் புரிந்த உள்ளம் எப்படி வேதனை அடை யாமலிருக்க முடியும்?

"ஏண்டி கண்ணம்மா பேசமாட்டாயா ?"

"மங்கை மன்னித்து விடடி" தோழி 'கொல்' லெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு தலைவிக்குத் தன்னைக் கொன்றுவிடு வதைப்போலிருந்தது. இதோடு விட்டாளா? எமாற்றுதலுக் கேற்ற ஒரு தண்டனை. இப்போது இவர்களிருப்பது அந்தச் சோலையில் நீர்நிலை இருக்குமிடமல்லவா? அந்தத் தடாகத்திலே பல அலைகள் தோன்றுகின்றன. அதைத் தோழி பார்க்கிருள்; செய்தியையும் புரிந்துகொள்கிருள். அப்போது

'இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' என்ற வள்ளுவனின் வாக் கைக் கடைப்பிடிக்கிருள் தோழி. போதுமல்லவா இந்த ஒறுத்தல்?

"கண்ணம்மா உன் மன்னிப்பெல்லாம் என்னிடம் வேண் டாம். நேரமாய்விட்டது. அங்கே பார்! அவரும் வந்து எவ் வளவு நேரம் காத்துக்கொண்டிருக்கின்ருரோ? அவரிடம் வைத் துக்கொள் உன் மன்னிப்பெல்லாம். நான் மலர் பறிக்கவேண் டும். சீக்கிரம் வா" என்று சொல்லிவிட்டு 'சரே' லென்று புறப்பட்டுவிடுகிருள் தோழி. தலைவிக்கு ஒன்றுமே புரியவில்லை.

இவ்வொறுத்தலை ஏற்ற அத்தலைவி நாணத்தால் அப்படியே வாடி நிற்கிருள். அச்சத்தோடு உவகை கலந்த நிலையில் "நம் தோழிக்கு ஏனப்போதே நமது உண்மையைக் கூருமல் மறைத் தோம்" என்ற எண்ணத்தால் பெருமூச்சுகூட விடமுடியாமல் துடிக்கிருள். அப்போது அந்நீர்நிலை அருகேயுள்ள புதரிலி ருந்து ஒரு சலசலப்பு ஏற்படுகிறது, வாடி நிற்கும் இந்த மானை எண்ணித் தேடிவரும் வேடன்போல அவன்தான் — தலைவன் ஓடி வருகின்ருன். தலைவியின் தனித்த நிலையை எண்ணித்

மதிப்புரை.

[மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோர் இரண்டு படிகள் ஆசிரியர் தமிழ்ப் பொழில் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.]

பரத சங்கிரகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு ஆசிரியர்: அறம் வளர்த்தான். பதிப்பாசிரியர். வித்துவான் திரு. க. வெள்ளை வாரணனார். முப்பெரும் பகுதியாக நின்று உலகாண்ட தமிழின் ஒரு பிரிவாகிய நாடகத் தமிழ் நூல்கள் ஊழ்வலியால் பெரிதும் இறந்து பட்டனவெனினும் சிலப்பதிகார உரை அரபத்த நாவலர் பரதசாத்திரம் முதலியன இன்று கிடைத்துள்ளன. ஆயினும் பரதத்தின் தோற்றம், சபை. நட்டுவன், மத்தளம் முழக்குவோன், பாடுவான், பாடும் முறை நடனமாதர் அரங்கு ஆய இலக்கணமும் இசைத்தோற்றம் நிருத்தம் முதலியபற்றிய விளக்கங்களும் செவ்வனே அறிந்துகொள்ள இயலாத நிலையில் உள்ளன. இந்நூல் யாப்பு முதலியவற்றால் புலவர்களால் மேம்படப்பாராட்டத்தக்க நிலையில் இல்லாவிட்டாலும் பரத சாத்திரத்தைப்பற்றிய பல செய்திகளை அறிந்துகொள்ளத் துணை புரிகிறது என்று இதன் பதிப்பாசிரியர் கூறுவது மிகமிக உண்மையாகும். இந்நூல் பல செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாயினும் இந்நூலாசிரியரே அனுபவ முறையில் பரத சாத்திரப் பயிற்சியுடையார் என்பது புலனாகிறது. இனிய எளிய தமிழ்ச் செய்யுள்வகைகளால் இயன்ற இந்நூலுக்குப் பழைய உரையோடு இல்லாத இடங்களுக்குக் குறிப்புரையும் விளங்காத இடங்களுக்கு விளக்கக் குறிப்புரையும் பதிப்பாசிரியரால் எழுதப்பட்டுப் படிப்போர்க்கும், பயிலுவோருக்கும் பெரிதும் துணை புரிகின்றது. உயர்ந்த காகிதத்தில் 200 பக்கங்கள்கொண்டதாகவும் உறுதியான கட்டடமுடையதாகவும் உள்ள இந்நூலின் விலை குறிக்கப்படவில்லை. பாதசாத்திர நாடகக் கலைஞர்களுக்கு மட்டுமன்றி எல்லோரும் கற்றுப் பயனடைய வேண்டியதொரு சிறந்த நூலாகும்.

உலக வரலாறு

(மூன்றாம் பாகம்)

ஆசிரியர் திரு. த. இராமநாத பிள்ளை, B. A. (London) யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திர சாலைப் பதிப்பு, விலை ரூ. 3-0-0. முன்னிரண்டு பாகங்களில் பூமியின் உற்பத்திமுதல் பிரித்தானிய இராச்சியம்வரை எழுதி இப்பகுதியில் மேனாட்டரசுகள் யந்திரகால நிலை, இக்கால உலகம்,

சுதந்திர இந்தியா என்பதுவரை பல மேனாட்டறிஞருரைகளையும் உள்நாட்டுத்தலைசிறந்த நூல்களில் காணப்படும் குறிப்புகளையும் கொண்டு தெளிவான வரலாற்றை வடித்துத் தருகிறார் இவ்வாசிரியர்—வரலாற்று உலகத்திற்குப் பெரிதும் அறிமுகமான இவர் தமிழறிவும் பிற நூலறிவும் சான்றவர் என்பது இவருடைய நூல் விளக்குகின்றது. 170 பக்கங்கொண்ட இந்நூலின் விலை சிறிது கூடுதலாகக் காணப்படினும் நூல் நிலையங்கள், கல்லூரி மாணவர், ஆராய்ச்சித்துறையாளர் வாங்கிப் பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.

தேவாரத் திருவமுதம்.

ஆசிரியர். வே, க. ப. நாதன் கபீர் அச்சகம் சென்னை 5 வெளியீடு. ஈழ நாட்டில் உள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்கிற இரு தலங்களுக்கும் உரிய மூன்று தேவாரப் பதிகங்களுக்குத் தமிழ்மரபு சைவசித்தாந்த மரபு பிறழாமல் இனிய எளிய நடையில் இவ்வாசிரியர் வகுத்துள்ள உரை அருட்பாக்களைப் பயிலுவோர்களுக்குப் பெரிதும்துணைபுரிவதோடன்றிப் பிறரையும் அப்பாக்களில் ஈடுபடச் செய்யும் வன்மையுடையதாக உள்ளமை பாராட்டத்தக்கது. கவர்ச்சியான பதிப்பு. பக்கம் 118. விலை குறிக்கப்படவில்லை. மேலும் இதுபோன்ற உரைகள் வெளிவர வேண்டுமென்று விரும்புகிறோம்.

இதுவோ எங்கள் கோவை

ஆசிரியர்: கோவைகிழார் கோவை நிலையப் பதிப்பகம் 4/89 திருச்சிப் பாதை கோவை. 194 பக்கம் விலை 2-0-0. இந்நூலாசிரியரைத் தமிழ் உலகமும் ஆத்தீக உலகமும் நன்கறியும். சிறந்த கருத்துக்களை எளிமையான அழகிய தமிழ் நடையில் வெளியிடும் ஆற்றல் வாய்ந்த இவ்வாசிரியர் தாம் பிறந்த ஊரைப் பற்றிய, செவிவழிக் கதைகளோடு வரலாற்றுக் கதைகளையும் சுவைபட எழுதியுள்ளார். ஒவ்வொரு மாணவரும் ஏழத்தாளரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

தெய்வப் புலவர் : : : : : : திருவள்ளுவர்.

ஆசிரியர் ஔவை சு. துரைசாமி. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு. விலை 1-0 0 பக்கம் 86. வள்ளுவர் வரலாற்றைப் பலர் பலவகையில் எழுதி வெளிவரும் இக்காலத்தில் அவர் கூறிய அறநலமும் அருள் நலமும் செறிந்த பாக்களைக் கொண்டே வள்ளுவர் வரலாற்றைச் சுவைபட எழுதுகின்றார் ஆசிரியர். அதுமட்டுமின்றிப் பலவாறு கூறப்படும் கதைகளை எடுத்துக் காட்டி அவைகளின் பொருத்தமின்மையைத் தடைவிடைகளோடு விளக்குவது பாராட்டத் தக்கது. தெளிவான நடை, நல்ல பதிப்பு. குறைந்த விலை.

தமிழ்.

ஆசிரியர். எஸ். சதாசிவம் இன்ப வாழ்வுப் பதிப்பகம். கோவை. ஒருகாலத்தில் உலக நாகரிகத்தின் தலைமை நிலையில் இருந்த தமிழ்மொழி தமிழ்நாடு பண்பாடு முதலியவற்றை மீண்டும் பெறவேண்டிய உணர்ச்சிகளைத் தூண்டத்தக்க நூல்கள் பல ஆசிரியர்களால் எழுதப்பட்டுளவாயினும், இவ்வாசிரியர் மேற்கொண்ட முறை பாராட்டத் தக்கது. தமிழ்நாடு என்று தொடங்கி வேண்டுகோள் என்பது முடிய 10 கட்டுரைகளால் மொழியையும் நாட்டையும் பற்றி ஆராய்கிறார் எல்லோரும் படித்துப் பயனடையவேண்டியதொரு நூல். இன்னும் சற்று நல்ல காகிதத்தில் தெளிவாக அச்சிட்டிருந்தால் படிப்பதற்கு எளிமையாயிருக்கும். அடுத்தப் பதிப்பில் இக் குறைகள் இருக்காதென்று எண்ணுகிறோம். 118 பக்கம். கண்கவரும் மேல் அட்டை. விலை 1-0-0.

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி.

ஆசிரியர்: திருவாசகமணி அவர்கள். சொந்த வெளியீடு. அரசியல் உலகமும் சைவ உலகமும் நன்கறிந்த நாவன்மையும் பாவன்மையும் உடைய இவ்வாசிரியர் காரைக்காலம்மையாரைப் பற்றியும் - கண்ணப்ப நாயனாரைப் பற்றியும் அன்பூற்றெடுக்கும் வெண்பாயாப்பில் பாடிய 100 பாடல்கள் இனிய எளியபொருளாம் மிக்கு அமைந்துள்ளன. இச் செய்யுள்களைப் படித்தால் இருமைப் பயனும் எய்தும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை நல்ல பதிப்பு விலை 0 8-0

அன்பு மலர் மாலை.

ஆசிரியர் பண்டித இராம. சுப்பிரமணிய நாவலர். செந்தமிழ் நிலையம் தக்கலை அன்பு சுரக்கும்படியாக வெண்பா, விருத்தப்பாக்களைக் கருவியாகக் கொண்டு இறைவனையும் மக்களையும் பொருளாகவைத்துப் பாடப்பெற்ற நூல். பிற்காலத்து எழுந்த தோத்திரப் பாடல்களை ஒப்ப அழகாகவும், இனிய சந்தங்கள் அமைந்ததாகவும் உள்ளது. பக்கம் 75. விலை 0-12-0

அண்ணுமலை அணி அறுபது.

ஆசிரியர்; பலவான்குடி திரு. மெ. வெ. வை. வேலப்பன் இராசா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் கொடை அளி - குணம் செயல்களைப் பற்றிக் கூறும் வெண்பா யாப்பில் அமைந்ததொரு நூல். அழகான நடையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விலை குறிக்கப்படவில்லை.

திருக்கலம்பகம்.

ஆசிரியர்: உதீசித் தேவர் தஞ்சை ஆ. சக்கரவர்த்தி B. A. அவர்களால் திருமண மணிமலராக வெளியிடப்பட்ட நூல். இந்நூல் அருக பரமேஷ்டியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சைன சமயக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறும் படியான சுவை மிக்கதொரு

சைன சமய நூல். அழகான பதிப்பு. புலவர்கள் வாங்கிப்பயனடைய வேண்டியதொரு நூல். விலை குறிக்கப்படவில்லை.

ஆசியச் சுடர்.

ஆசிரியர்: மீ. உ. கான்முகமது பேபோடி. சர் எட்வின் ஆர்னல்டு எழுதிய புத்தர் சரிதத்தை அழகான சந்தத் தாழிசைகளால் வழிநூலாக ஆக்கித் தருகின்றார் ஆசிரியர். யாப்பு முறை புதியன வாகத் தோன்றினும் புகழேந்தியால் பாடப்பெற்றதாகப் பிற்காலத்தவரானும் அல்லியரசாணி மாலை போன்ற நூல்களில் யாப்பு முறைகளையும் ஒத்ததாகவுள்ளது. முதல் நூல் என்று கூறும் படியாக ஆசிரியர் எழுதிச் செல்லும் சிறப்புப் பாராட்டத் தக்கது இதுவரை 6 காதைகள் வெளியிடப்பட்டுள்ளது. முடிந்து முழு நூலாக வருங் காலத்தை ஆவலோடு எதிர் பார்க்கிறோம்.

அறமும் அறப்போரும்.

ஆசிரியர்: வித்துவான். த. பொ. தண்டபாணி பி. ஏ. பக்கம் 40. விலை 1-0-0. வள்ளுவரின் அற ஒழுக்கப் பகுதியாயுள்ள அத்தனைக் குறள் வெண்பாக்களையும் தொகுத்து அழகாக விரிவுரை செய்கிறார். ஆசிரியர் முறை பாராட்டத் தக்கது. மேலும் பல முகங்களாகத் திருவள்ளுவரை நாம் காணுமாறு இவ்வாசிரியர் துணை புரிவார் என்று நம்புகிறோம் விலை சிறிது கூடுதலாயினும் நல்ல தெளிவான பதிப்பு.

கனவும் காதலும்

ஆசிரியர்: தி ச. வாசுதேவன் அழகான சிறுகதை. பக்கம் 16 அணா 0 2-0 தெளிவான நடை நல்ல கருத்து. கதை எழுதுவோரும் சுவைப்போரும் படிக்க வேண்டிய புத்தகம்.

மணிமொழி

V. கிருட்டினன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு இறைநலமுணர்த்தி வெளிவரும் மாதமிரு முறைப் பத்திரிகை இப் பத்திரிகை நல்ல முறையில் வளர்ந்து சமய, சமுதாய பணிகளைச் செய்யுமென்று எதிர்பார்க்கிறோம். விலை 0-2-0.

செட்டிகுளம்.

எழுதியது அரு. சுப்பிரமணியம் B. Sc., செட்டி குளந்தான் திருவேரகம் என்ற முருகனுடைய தலமாக இருக்கும் என்பதை சுவையுடன் ஆராய்கிறார் ஆசிரியர். விலை 0-1-0

சென்னை வைஷ்ணவ சங்கத்து வெள்ளிவிழா மலர்.

வைணவ நெறிகளைப் பரப்பும் தொண்டில் ஈடுபடும் இச்சங்க வெள்ளி விழாவில் வெளியிடப் பட்டுள்ள இம்மலர் நிகழ்ச்சிகளையும் சமயத் தொண்டாற்றும் பெருமக்களையும் நமக்குத் தெரியப்படுகிறது.

பண்டிதர் வ. சு. இராஜஐயனார் அவர்களின் நினைவு மலர் வரப் பெற்றோம்.